
# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - மே 2023

www.tnpscthervupettagam.com














SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy in India
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 11
தமிழ்நாடு செய்திகள் ........ 24
தமிழ்நாடு – உலக மக்கள் சுகாதாரச் சேவையினைப் பெறும் இடம் ........ 24
நிகர நேரடி வரி வசூல் ........ 24
வங்காள விரிகுடாவில் டாக்டர் கலைஞருக்கான பேனா வடிவிலான நினைவிடம் ........ 24
2034 ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் ........ 25
சென்னையில் மே தினக் கொண்டாட்டத்தின் நூற்றாண்டு விழா ........ 25
வரி சாரா வருவாய் அதிகரிப்பு ........ 26
அதிகக் கடன் பெறும் மாநிலங்கள் ........ 27
பருவநிலை மாற்றம் குறித்த தமிழ் சொற்களஞ்சியம் ........ 27
கல்லூரிகளுக்கான புதிய திட்டம் ........ 28
நில ஒருங்கிணைப்பு (சிறப்பு திட்டங்களுக்கான) சட்டம் ........ 28
அதிக எண்ணிக்கையிலான உயிரிழந்த நபர்களின் உடலுறுப்புத் தானம் ........ 28
உலக முதலீட்டாளர் சந்திப்பு ........ 29
‘நம்ம ஊரு சூப்பரு’ பிரச்சாரம் ........ 29
திடக்கழிவு மேலாண்மையில் முன்மாதிரி நகரப் பஞ்சாயத்து ........ 30
தமிழகத்தின் உச்சகட்ட மின்சாரத் தேவை ........ 30
2023 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மாநில வாரியத்தின் 12 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் ........ 31
தமிழக அமைச்சரவை மாற்றம் ........ 31
தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை ........ 32
மறைந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் சிலைகள் ........ 32
தமிழ்நாட்டில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளின் முக்கியப் பணியிட மாற்றம் ........ 33
i-தமிழ்நாடு தொழில்நுட்ப (iTNT) மையம் ........ 33
2023 ஆம் நிதியாண்டில் தமிழகத்தின் நிதிப் பற்றாக்குறை ........ 34
ஜல்லிக்கட்டு தொடர்பான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு ........ 35
மூன்று சிறிய டைடல் தகவல் தொழில்நுட்ப நிறுவனப் பூங்காக்கள் ........ 36
ஜான் சுலிவனின் பிறந்தநாள் ........ 36
காசநோய் தடுப்புச் சிகிச்சைக்கான புதிய குறுகியகால சிகிச்சை முறை ........ 37
பொற்பனைக் கோட்டையில் அகழாய்வு ........ 37
தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு உருவாக்கம் 2022-23 ........ 38
TuTr ஹைப்பர்லூப் புத்தொழில் காப்பு ........ 38
தமிழ் - கட்டாய கூடுதல் மொழி ........ 39
மாவட்டங்களுக்குப் புதிய அமைச்சர்கள் பொறுப்பு ........ 39
eVTOL விமானங்கள் ........ 39
இருவாட்சிப் பறவைகளுக்கான சமூகம் சார்ந்த முன்னெடுப்பு ........ 40

2023ஆம் நிதியாண்டில் கடன் வாங்குவதில் தமிழ்நாடு முதலிடம் ..... 41
தேசியச் செய்திகள் ..... 42
இந்தியாவிற்கான தேசிய சுகாதாரக் கணக்கு மதிப்பீடுகள் (2019-20) ..... 42
இரயில் விகாஸ் நிகாம் லிமிடெட் நிறுவனத்திற்கு நவரத்னா அந்தஸ்து ..... 43
சிறுதானியங்களை ஊக்குவிப்பது தொடர்பான நிதி ஆயோக் அறிக்கை ..... 43
தேசிய மருத்துவச் சாதனங்கள் கொள்கை 2023 ..... 43
SUPREME முன்னெடுப்பு ..... 44
உலகின் முதல் நுண்திரவ DAP உரம் ..... 45
அஜெயா வாரியர் – 2023 ..... 45
தேசிய உற்பத்தித் தொழில்துறைப் புத்தாக்க ஆய்வு 2021-22 ..... 46
இந்தியாவின் முதல் கம்பிவடந்தாங்கி இரயில் பாலம் ..... 46
கவிதாயினி ஷிலாபட்டாரிகா ..... 47
ஒருமித்த விவாகரத்து குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ..... 47
இணைய வெளி நடவடிக்கைகள் படைப் பிரிவு மற்றும் உதவிப் பிரிவுகள் ..... 48
தேசிய உற்பத்தித் துறைப் புத்தாக்கம் தொடர்பான ஆய்வு ..... 49
பணமோசடி தடுப்புச் சட்டத்தின் விதிகளை மாற்றியமைப்பதற்கான அறிவிப்பு ..... 49
பருவநிலை மாற்றம் குறித்த இந்திய மக்களின் மனநிலை - 2022 ..... 50
உணவு தானிய உற்பத்தி இலக்கு ..... 51
இந்தியாவில் இணையம் அறிக்கை 2022 ..... 51
சிட்வே துறைமுகத்தில் சரக்குக் கப்பல் ..... 52
ஸ்டார்ட் திட்டம் ..... 52
2029-30 ஆம் ஆண்டுக்கான தகுந்த உற்பத்தித் திறன் கலவை ..... 53
பூச்சிக்கொல்லித் தேக்க வரம்பு ..... 54
8 ஆண்டுகள் நிறைவு செய்த பிரதம மந்திரித் திட்டங்கள் ..... 54
டீசல் வாகனங்களின் பயன்பாடுகளுக்கு முழுத் தடை ..... 55
இராணுவத்தின் மூத்த அதிகாரிகளுக்கு ஒரே சீருடை ..... 56
சமூகநலத் துறையில் சிறந்த நடைமுறைகள்: ஒரு தொகுப்பு - 2023 ..... 57
தொற்றாத நோய்களுக்கான தேசியத் திட்டம் ..... 57
சஞ்சய் திட்டம் ..... 58
ஜஎன்எஸ் மகர் ஓய்வு ..... 59
முன்னேற்றக் கண்காணிப்பு மதிப்பீட்டு அறிக்கை ..... 59
துங்கநாத் ஆலயம் ..... 60
கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கசடுகளை உரமாகப் பயன்படுத்துதல் ..... 61
டெல்லி அரசு தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ..... 62
யானைகளின் எண்ணிக்கையின் முதலாவது ஒத்தியக்கக் கணக்கெடுப்பு ..... 62
ஹரித் சாகர் வழிகாட்டுதல்கள் 2023 ..... 63
மகாராஷ்டிரா தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ..... 64
பொக்ரான் II சோதனையின் 25 வது ஆண்டு நிறைவு ..... 65
தரவு ஆளுமைத் தரக் குறியீடு ..... 65

ஐஎன்எஸ் கருடா விமானத் தளத்தின் 70வது ஆண்டு நிறைவு........ 66
இந்தியக் கடற்கரையில் உருவாகும் தீவிரப் புயல்கள் ........ 67
திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமம் பிளஸ் அந்தஸ்து ........ 67
அனைத்து மருத்துவர்களுக்கும் தனித்துவ அடையாள எண் ........ 68
2035 ஆம் ஆண்டிற்குள் பசுமை ஹைட்ரஜன் கிடங்குகள்........ 68
ஐஎன்எஸ் மோர்முகோவா கப்பலில் பிரம்மோஸ் சோதனை........ 69
மாதிரி சிறைச்சாலைகள் சட்டம் 2023........ 70
மத்தியச் சாதனங்கள் அடையாளப் பதிவு ........ 71
இந்தியாவின் பிராந்தியக் கட்சிகளுக்கான நிதி மூலங்கள் 2021-22........ 71
டெல்லி நிர்வாகத்திற்கான அவசரச் சட்டம் ........ 72
2000 ரூபாய் தாள்கள் வாபஸ் ........ 73
2016 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் அமலாக்கம் ........ 73
மகிளா சம்மான் சேமிப்புச் சான்றிதழ்களுக்கான வட்டிக்கு வருமான வரிப் பிடித்தம்........ 74
‘75/25’ முன்னெடுப்பு........ 75
STARS திட்டம் ........ 76
நிலைத்தன்மை மிக்க விமான எரிபொருள் கலவை ........ 76
செங்கோல் அரசுச் சின்னம்........ 77
‘விருப்பப் பட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்தல்' என்ற சொல் ........ 77
சப்ரே குழு அறிக்கை........ 78
டெல்லி-டேராடூன் வந்தே பாரத் விரைவு ரயில் ........ 79
உடான் 5.1........ 79
ஜுகல்பந்தி உரையாடு மென்பொருள்........ 80
மாநிலச் சுகாதாரக் குறியீடு........ 81
மக்களுக்களின் பல்லுயிர்த்தன்மைப் பதிவேடு ........ 81
G20 அமைப்பிற்காக வேண்டி இந்தியாவின் தலைமைத்துவத்திற்கான சின்னம், கருத்துரு மற்றும் இணையதளம் ........ 82
ஐராவத்........ 82
C-KYC தரவுத் தளம்........ 83
இந்தியாவின் எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறையின் குறைவான கார்பன் வெளியீட்டு நுட்ப மாற்றம்........ 83
இந்தியாவின் புதியப் பாராளுமன்றம்........ 84
வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகள் ........ 85
SAMARTH பிரச்சாரம்........ 86
Mig 29 விமானத்தின் இரவு நேரத் தரையிறக்கம் ........ 86
தேசிய மனித உரிமை நிறுவனங்களுக்கான உலகளாவியக் கூட்டணி ........ 87
சர்வதேசச் செய்திகள்........ 88
கருக்கலைப்பு மாத்திரைக்கு ஒப்புதல் ........ 88
2023 ஆம் ஆண்டு சூடான் மோதல்........ 88
பொய்யான சமுக நடைமுறை உறுதியளிப்புச் சந்தைப்படுத்துதல் அதிகரிப்பு ........ 89

புதிய சுகாதார முன்னெடுப்புகள் ........ 90
ஐரோப்பிய ஒன்றியத்தின் "Fit for 55" தொகுப்புத் திட்டம் ........ 90
பொது விமானப் போக்குவரத்திற்கான சர்வதேசப் பருவநிலை நடவடிக்கை ........ 91
லாண்ட்ரோமேட் நாடுகள் ........ 92
உஸ்பெகிஸ்தான் நாட்டின் அரசியலமைப்பிற்கான பொது வாக்கெடுப்பு ........ 93
உலக வங்கியின் வணிகத் தயார்நிலை திட்டம் ........ 93
மூன்றாம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டு விழா ........ 94
அரபு லீக்கில் மீண்டும் சிரியா ........ 94
Title 42 கட்டுப்பாடுகள் நீக்கம் ........ 95
ஏகதா துறைமுகம் ........ 96
உலக சுகாதார அவசர நிலை கோவிட் 19 ........ 96
ஐரோப்பிய ஒன்றியத்தின் கார்பன் எல்லை வரி ........ 97
மரபணு மாற்றியமைக்கப்பட்ட பயிருக்கான பாதுகாப்பு ஒப்புதல் ........ 98
கருணைக்கொலை சட்டப் பூர்வமாக்கம் ........ 98
கேலபேகோஸ் வளங்காப்பிற்கான ஈக்வடார் ஒப்பந்தம் ........ 99
குரங்கம்மை நோய் - பொது சுகாதார அவசரநிலை ........ 100
ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகள் குறித்த சர்வதேச நாணய நிதிய அமைப்பின் அறிக்கை ........ 100
மோச்சா புயல் ........ 101
நக்பா நிகழ்வின் 75வது ஆண்டு நிறைவு ........ 102
அதிக நோய்த் தொற்றுமிக்கப் பறவைக் காய்ச்சல் ........ 102
G7 ஹிரோஷிமா உச்சி மாநாடு ........ 103
புதிய பாக்டீரியா எதிர்ப்புச் சிகிச்சைகள் 2023 ........ 104
ராஷ்ட்-அஸ்டாரா இரயில் சேவை இணைப்பு ........ 104
உலக நீடித்த மற்றும் நிலையானப் போக்குவரத்து தினம் ........ 105
பொது எண்ணிமச் சேவை உள்கட்டமைப்பு ........ 106
76வது உலக சுகாதாரச் சபை ........ 106
ஜெட்டா பிரகடனம் ........ 106
HIV நோய்த் தடுப்பு மருந்து CAB-LA ........ 106
அல்-மொஹெட்-அல் ஹிந்தி 2023 கடற்படைப் பயிற்சி ........ 107
FIPIC உச்சி மாநாடு 2023 ........ 107
சர்வதேச நோய்க்கிருமி கண்காணிப்பு வலையமைப்பு ........ 108
கொலராடோ நதி பாதுகாப்பு ஒப்பந்தம் ........ 108
உலக ஆற்றல் முதலீடு ........ 109
2024 ஆம் ஆண்டில் நேரடிப் பொது வாக்குரிமை ........ 109
துருக்கி அதிபர் தேர்தல் ........ 109
பொருளாதாரச் செய்திகள் ........ 110
ஐரோப்பாவிற்கான மிகப்பெரிய சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் வழங்கீட்டு நாடு ........ 110
நாணயம் மற்றும் நிதி தொடர்பான இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கை ........ 111

சட்டபூர்வ நிறுவன அடையாளங்காட்டி (LEI) ..... 111
OPEC நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு மேற்கொள்ளப்படும் இறக்குமதிகள் ..... 112
'100 நாட்கள் 100 பண வழங்கீடு' பிரச்சாரம் ..... 113
பசுமைக் கண்துடைப்பு தொழில்நுட்பப் போட்டி ..... 113
மூன்றாவது பெரிய ஏற்றுமதி இலக்கு நாடு ..... 113
ஆப்பிள்களுக்கான குறைந்தபட்ச இறக்குமதி விலை ..... 114
அரசாங்கத்திற்கு உபரி பணப் பரிமாற்றம் ..... 114
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 115
சந்திர மண் மாதிரியிலிருந்து ஆக்ஸிஜன் உருவாக்கம் ..... 115
ஷிங்கிரிக்ஸ் தடுப்பு மருந்து ..... 116
குவாசர் மற்றும் அண்டங்களின் மோதல்கள் ..... 116
RHESSI ஆய்வுக் கலம் ..... 117
புவிக் காந்த Pc1 முத்துவடிவ அலைவுகள் ..... 118
மூளை நரம்பு உயிரணுப் புற்றுநோயினைக் கண்டறிவதற்கான கருவி ..... 119
அரெக்ஸ்வி தடுப்பு மருந்து ..... 119
நிலையான அரோரல் சிவப்பு வளைவு (SAR) ..... 120
யுரேனஸின் நான்கு துணைக் கோள்களில் நீர் இருக்க வாய்ப்பு ..... 120
ஸ்கேரி பார்பி கருந்துளை ..... 121
Tu-160 குண்டு வீச்சு விமானம் ..... 122
நீரடி தகவல்தொடர்புச் சேவைக்கான உணர்வி தொழில்நுட்பம் ..... 122
TROPICS ஆய்வுக் கலம் ..... 123
கூகுள் நிறுவனத்தின் பார்டு உரையாடு மென் பொருள் ..... 124
ஃபோமல்ஹாட் ..... 124
புறமண்டல உயிரியல் இருப்பு குறித்த ஆய்வுக் கருவி ..... 125
இந்தியாவின் முதல் C295 போர்த்திறம் சார்ந்தப் போக்குவரத்து விமானம் ..... 125
புதைபடிவத்திலிருந்து டிஎன்ஏவைப் பிரித்தெடுப்பதற்கான ஊடுருவல் சாராத முறை ..... 126
நானோ-QuIC தொழில்நுட்பம் ..... 127
ஹஸ்கி-இச்சோர் சாதனம் ..... 127
ஃப்ளோஹார்ஸ் தீநிரல் ..... 128
பசுமை ஹைட்ரஜன் எரிபொருளுக்கான வினையூக்கி ..... 128
பகுதியளவு கிரையோஜெனிக் எஞ்சின் பரிசோதனைகள் ..... 129
புதிய பல்முனையோட்ட மின்பகுளி மின்கலத் தொழில்நுட்பம் ..... 129
செயற்கை நுண்ணறிவு மற்றும் முக அடையாளம் காணல் தொழில்நுட்பம் மூலமான தகவல் சரிபார்ப்பு ..... 130
கால்சியம்-41 கதிரியக்க கரிம காலக் கணிப்பு ..... 131
பான் ஜீனோம் வரைபடம் ..... 132
செயற்கை இலை ..... 132
யுரேனஸில் துருவ சூறாவளி ..... 133
டோபாஷ் ..... 133

அசினெட்டோபாக்டர் பாமன்னிக்கான நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து ..... 134
சுற்றுச்சூழல் செய்திகள் ..... 135
W12+ செயல்திட்டம் ..... 135
HydroSOS ..... 135
சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்கள் தொடர்பான தீர்ப்பு ..... 136
கலேசர் தேசியப் பூங்காவில் புலி ..... 137
முள்ளுடைய வெள்ளை இறாலின் புதிய இனங்கள் ..... 137
சௌரோனா வகுப்பு ..... 138
மத்திய ஆசிய வலசைப் போக்கு வழித்தடம் ..... 139
பீட்டர்ஸ்பெர்க் பருவநிலை பேச்சுவார்த்தை ..... 139
பந்தவ்கர் புலிகள் காப்பகத்தில் சதுப்புநில மான் ..... 140
புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டிற்குத் தடை ..... 140
பாகிஸ்தானில் கரியல் (மீன் உண்ணும் முதலை) ..... 141
அயலின விலங்குகளின் காப்பினப் பெருக்க ஒழுங்குமுறை ..... 142
கெக்கோ மிசோரமென்சிஸ் ..... 143
நவேகான் நக்சிரா புலிகள் வளங்காப்பகம் ..... 143
உலக நாடுகளில் உள்ள ஏரிகளின் நீர் சேமிப்பு கொள்ளளவுகளில் குறைவு ..... 144
ஆப்பிரிக்கப் புளூம் வெப்ப அலை ..... 145
ஐரோப்பிய ஒன்றிய உமிழ்வுப் பட்டியலில் நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் முதலிடம் ..... 145
பக்கமலை மலையில் புதிய இனம் கண்டுபிடிப்பு ..... 146
சர்வதேசப் போக்குவரத்து மன்றத்தின் போக்குவரத்துக் கண்ணோட்ட அறிக்கை 2023 ..... 147
உலகப் பசுமை இல்ல வாயுக் கண்காணிப்பு (G3W) ..... 147
2023-2033 ஆம் ஆண்டு அமலாக்கத் திட்டம் ..... 148
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ..... 149
பொருளாதாரச் சுதந்திரக் குறியீடு ..... 149
உலக மேம்பாட்டு அறிக்கை 2023: புலம்பெயர்ந்தோர், அகதிகள் மற்றும் சமூகங்கள் ..... 149
முதன்மை கண்காணிப்பு பட்டியல் 2023 ..... 150
உலகப் பொருளாதார மன்றம்: “வேலைவாய்ப்புகளின் எதிர்காலம்” அறிக்கை ..... 151
எண்ணிம உலகில் நிலவும் பாலின இடைவெளியை நிரப்புதல் ..... 151
உலகப் பத்திரிகைச் சுதந்திரக் குறியீடு 2023 ..... 153
சமயச் சுதந்திரம் குறித்த வருடாந்திர அறிக்கை 2023 ..... 153
உணவு நெருக்கடிகள் பற்றிய உலக அறிக்கை 2023 ..... 154
"சுழிய அளவு உமிழ்தலை நோக்கிய பந்தயம்" அறிக்கை ..... 155
உலக நிலங்கள் கண்ணோட்ட அறிக்கை ..... 155
Defending Creative Voices அறிக்கை ..... 156
தலைமைப் பொருளாதார நிபுணர்கள் கண்ணோட்ட அறிக்கை ..... 157
உலகளாவிய உள்நாட்டு இடப்பெயர்வு பற்றிய அறிக்கை 2023 ..... 158
ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் அறிக்கை : Turning off the Tap ..... 159
திறன்பேசிகள் பயன்பாட்டுப் பழக்கங்களுக்கு அடிமையாதல் ..... 160

வருடாந்திர வீட்டு விலை உயர்வு ........ 160
உலக சுகாதாரப் புள்ளிவிவரங்கள் 2023 ........ 161
தரவு மையத்தின் காலாண்டு அறிக்கை 2023 ........ 162
WMO அமைப்பின் இயற்கை அபாயங்கள் தொடர்பான புள்ளிவிவரங்கள் ........ 162
நகரங்களைத் தட்பவெப்பநிலைக்குத் தயார்படுத்துதல் ........ 163
மாநிலச் செய்திகள் ........ 164
ராஜஸ்தானில் புதிய வனவிலங்கு வளங்காப்பகங்கள் ........ 164
முத்தரப்பு தீர்வுசார் ஒப்பந்தம் ........ 165
பெண்களுக்கான சிறப்பு விடுமுறை ........ 165
ODF பிளஸ் தரவரிசை ........ 166
மெய்தே சமூகத்தினரின் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் அந்தஸ்து ........ 166
355வது சட்டப்பிரிவின் செயலாக்கம் ........ 167
இந்தியாவின் முதல் கடலடி இரட்டைச் சுரங்கப்பாதை ........ 168
பிற்படுத்தப்பட்டச் சமுகத்தின் மீதான சமூகம் மற்றும் கல்வி நிலை மீதான கணக்கெடுப்பு ........ 169
ராஜஸ்தானின் தேகானாவில் லித்தியம் இருப்பு ........ 169
ஒரு நிமிடப் போக்குவரத்து விளக்குத் திட்டம் ........ 170
கேரளக் கல்வி நிறுவனங்களின் தரவரிசைக் கட்டமைப்பு ........ 171
பிஹான் மேளா ........ 171
இந்தியாவின் முதல் பெட்டக வடிவ வாடகை வாகனச் சேவை ........ 171
டவ்கி நிலம் சார்ந்த துறைமுகம் ........ 172
மாநில எந்திரனியல் கட்டமைப்பு ........ 172
பஞ்சாப் - நடப்பதற்கான உரிமை ........ 172
குழந்தைகளுக்கான எண்ணிம சுகாதார அட்டைகள் ........ 173
நிலையான மேம்பாட்டு இலக்குகளின் உள்ளூர்மயமாக்கல் - போபால் ........ 173
அதிக எண்ணிக்கையிலான புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகளைக் கொண்ட இரண்டாவது மாநிலம் ........ 174
இந்தியத் தொல்லியல் துறையின் கீழ் கபிலேஸ்வரர் ஆலயம் ........ 174
குக்கிலாந்திற்கான கோரிக்கை ........ 175
MGNREGS தொழிலாளர்களுக்கான நல சேவை நிதி ........ 175
குடும்பஸ்ரீ அமைப்பின் 25வது ஆண்டு நிறைவு ........ 176
கர்நாடக மாநிலத்தின் புதிய முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ........ 176
பஹல் முன்னெடுப்பு ........ 176
காசியாபாத்-அலிகார் விரைவுச்சாலை (உத்தரப் பிரதேசம்) ........ 176
அதிக சர்க்கரை உற்பத்தி ........ 177
முதல் நியோ மெட்ரோ ........ 177
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ........ 178
பஞ்சாப் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் பிரகாஷ் சிங் பாதல் ........ 178
1959 ஆம் ஆண்டு ரமோன் மகசேசே விருது ........ 178
ரணஜித் குஹா மறைவு ........ 179

பத்திரிகைச் சுதந்திரத்திற்கான ஐக்கிய நாடுகளின் முதன்மைப் பரிசு ...... 179
50வது கேப் டு ரியோ பந்தயம் ...... 179
புலிட்சர் பரிசுகள் 2023 ...... 179
அதிக ஊதியம் பெறும் விளையாட்டு வீரர்கள் 2023 ...... 180
ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் ராட்கிளிஃப் புத்தாய்வு அங்கத்தினர் அந்தஸ்து ...... 181
எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் முதல் தமிழ் பெண் ...... 181
அபிலாஷ் டோமி - கோல்டன் குளோப் பந்தயம் ...... 181
ரய்யானா பர்னாவி ...... 181
பிஜியின் உயரியக் குடிமை விருதுகள் ...... 182
சர்வதேச புக்கர் பரிசு 2023 ...... 182
ஹரி புத்த மகர் ...... 182
ஜஸ்வந்த் சிங் பேர்டி ...... 183
டாக் ஹம்மர்ஸ்க்ஜோல்ட் பதக்கம் ...... 183
57வது ஞானபீட விருது ...... 183
கேன்ஸ் திரைப்பட விழா 2023 ...... 183
விளையாட்டுச் செய்திகள் ...... 184
உலக ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டி ...... 184
மும்முறை தாண்டுதல் போட்டியில் தேசியச் சாதனை ...... 184
லாரஸ் விருதுகள் ...... 184
தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கட்கா தற்காப்புக் கலை ...... 185
ஐபிஎல் போட்டி 2023 ...... 185
முக்கிய தினங்கள் ...... 186
சர்வதேச தொழிலாளர் தினம் – மே 01 ...... 186
குஜராத் மற்றும் மகாராஷ்டிரா தினம் – மே 01 ...... 186
உலக துனா மீன் தினம் – மே 02 ...... 187
உலக ஆஸ்துமா தினம் - மே 02 ...... 187
உலகப் பத்திரிகைச் சுதந்திரத் தினம் - மே 03 ...... 187
நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் தினம் - மே 04 ...... 188
சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் - மே 04 ...... 188
சர்வதேச மருத்துவத் தாதிகள் தினம் - மே 05 ...... 188
உலக கை சுகாதார தினம் - மே 05 ...... 189
உலக கேலிச் சித்திர வரைவோர்களின் தினம் - மே 05 ...... 189
உலகப் போர்த்துகீசிய மொழி தினம் - மே 05 ...... 189
கட்டுப்பாடான உணவுமுறை சர்வதேச இல்லாத தினம் - மே 06 ...... 190
உலகத் தடகள தினம் - மே 07 ...... 190
சர்வதேச சிறுத்தை தினம் - மே 03 ...... 190
உலக செஞ்சிலுவை தினம் - மே 08 ...... 191
உலக தலசீமியா தினம் - மே 08 ...... 191
வெற்றி தினம் - மே 09 ...... 192

சர்வதேச ஆர்கானியா தினம் - மே 10 ... 192
தேசிய தொழில்நுட்ப தினம் - மே 11 ... 193
சர்வதேச செவிலியர் தினம் - மே 12 ... 193
சர்வதேச தாவர ஆரோக்கிய தினம் - மே 12 ... 193
உலக வலசைப் போக்குப் பறவைகள் தினம் - மே 13 ... 193
சர்வதேச குடும்பங்கள் தினம் - மே 15 ... 194
ஐக்கிய நாடுகள் சபையின் உலக சாலைப் பாதுகாப்பு வாரம் - மே 15 முதல் 21 வரை ... 194
அன்னையர் தினம் - மே 15 ... 194
சர்வதேச ஒளி தினம் - மே 16 ... 195
அமைதியுடன் ஒன்றிணைந்து வாழ்வதற்கான சர்வதேச தினம் - மே 16 ... 195
தேசிய டெங்குக் காய்ச்சல் தினம் – மே 16 ... 195
ஹோமோஃபோபியா, பைபோபியா மற்றும் டிரான்ஸ்ஃபோபியா ஆகியவற்றுக்கு எதிரான சர்வதேச தினம் – மே 17 ... 196
உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் – மே 17 ... 196
சர்வதேச அருங்காட்சியக தினம் – மே 18 ... 196
உலக உயர் இரத்த அழுத்தம் தினம் - மே 17 ... 196
உலக எய்ட்ஸ் தடுப்பு மருந்து தினம் - மே 18 ... 197
உலகத் தேனீ தினம் - மே 20 ... 197
உலக அளவியல் தினம் - மே 20 ... 197
பேச்சுவார்த்தை மற்றும் மேம்பாட்டிற்கான கலாச்சார பன்முகத்தன்மைக்கான உலக தினம் - மே 21 ... 198
சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினம் - மே 22 ... 198
உலக ஆமை தினம் - மே 23 ... 198
தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினம் - மே 21 ... 199
மகப்பேறின் போது பிறப்புறுப்பில் ஏற்படும் காயத்தினைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - மே 23 ... 199
காணாமல் போன குழந்தைகளுக்கான சர்வதேச தினம் - மே 25 ... 200
இந்திய காமன்வெல்த் தினம் 2023 - மே 24 ... 200
உலக மனச்சிதைவு தினம் - மே 24 ... 201
உலக தைராய்டு விழிப்புணர்வு தினம் - மே 25 ... 201
உலக மாதவிடாய் சுகாதார தினம் 2023 - மே 28 ... 202
உலகப் பட்டினி தினம் - மே 28 ... 202
ஐக்கிய நாடுகளின் அமைதிப்படை வீரர்களுக்கான சர்வதேச தினம் - மே 29 ... 202
சர்வதேச எவரெஸ்ட் தினம் - மே 29 ... 203
உலகப் புகையிலை எதிர்ப்புத் தினம் - மே 31 ... 203
இதரச் செய்திகள் ... 204
பட்டணம் மர்மம் ... 204
ஆரோக்கியமான உணவு முறைகளில் இறைச்சி ... 205
விஸ்தாரா - நிலைத்தன்மை மிக்க விமான எரிபொருள் ... 206
இங்கிலாந்தில் ப்ளியோசர் எச்சங்கள் கண்டுபிடிப்பு ... 206

கூகுள் கடவுக் குறியீட்டு விசைகள் ........ 207
ஆசியாவின் முதல் ஆழ்கடல் ஆய்வுக் கூடம் ........ 207
5,000 ஆண்டுகள் பழமையான ‘பழம்பெரும் முது’ மரங்கள் ........ 208
இந்தியாவின் அதி உயர் நிகர சொத்து மதிப்பு கொண்ட தனி நபர்கள் ........ 208
ஓநாய்-நாய் கலப்பினம் ........ 209
திப்பு சுல்தானின் வாள் ஏலம் ........ 210

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (TNERC) ஆனது, திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள டாலர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு நான்கு மெகா வாட் மணி நேரம் (MWhr) என்ற மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பினை (BESS) அமைப்பதற்காக முதன்முறையாக அனுமதி அளித்துள்ளது.
- ஆற்காடு நவாப் முகமது அப்துல் அலிக்கு சென்னை அமீர் மஹாலில் நடைபெற்ற விழாவில் மகத்தானச் சேவைக்கான இந்தோ-ஆஸ்திரேலிய விருது வழங்கப்பட்டது.
- காரைக்குடியில் அமைந்துள்ள 100 ஆண்டுகள் பழமையான வருமான வரித்துறைக் கட்டிடமானது, புதுப்பிக்கப் பட்டு இந்தியாவிலேயே முதன்முறையாக வரி அருங் காட்சியகமாக மாற்றப் படவுள்ளது.
- சென்னை மேயர் R.பிரியா, மே 03 ஆம் தேதியன்று சென்னை ராயபுரத்தில் இருந்து 'மக்களைத் தேடி மேயர்' என்ற திட்டத்தினைத் தொடங்கி வைக்க உள்ளார்.
  - இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு 15 நாட்களுக்கும் ஒருமுறை நகரத்திலுள்ள 15 மண்டலங்களுக்கும் மேயர் சென்று, அந்த மண்டலத்தில் உள்ள குடிமைப் பிரச்சனைகள் தொடர்பான மனுக்களைப் பெற அங்கு வசிப்பவர்களைச் சந்திக்க உள்ளார்.
- இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் சென்னை கிண்டியில் புதிதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளப் பல்நோக்கு மருத்துவமனையினை ஜூன் 05 ஆம் தேதியன்று திறந்து வைக்க உள்ளார்.
- சச்சின் டெண்டுல்கரின் 50வது பிறந்தநாளை முன்னிட்டு, ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் உள்ள மேற்குப் புற பார்வையாளர் மேடைக்கு 'சச்சின் டெண்டுல்கர் மேடை' என்று பெயரிடப் பட்டுள்ளது.
- புது டெல்லியில் நடைபெற்ற 6வது 'ஒரு பூமி ஒரு சுகாதாரம் – நன்மை பயக்கும் இந்திய சுகாதார நலன் – 2023' என்ற ஒரு நிகழ்ச்சியினைப் பிரதமர் தொடங்கி வைத்து உரை ஆற்றினார்.
- இந்திய மின் கட்டமைப்புக் கழக லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு (PGCIL), கிரீன் ஆர்கனைசேஷன் என்ற அமைப்பினால் குளோபல் கோல்டு என்ற விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- ஜடன் பரியாட், கடந்த ஆறு ஆண்டுகளில், பிரிட்டிஷ் F4 சாம்பியன்ஷிப் கார் பந்தயத்தில் வெற்றி பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- ரிலையன்ஸ் பொதுக் காப்பீட்டு நிறுவனமானது தனது தவணைகளை செலுத்தச் செய்வதற்காக வேண்டி இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட மத்திய வங்கியின் எண்ணிம நாணயமான இணைய வழி-ரூபாயினை ஏற்றுக் கொண்ட முதல் காப்பீட்டு நிறுவனம் ஆகும்.
- 2022 ஆம் ஆண்டில் ஆசிய மேம்பாட்டு வங்கியின் (ADB) நிதியளிப்புத் திட்டங்களை அதிகளவில் பெற்ற நாடாக பாகிஸ்தான் மாறியுள்ளது.
  - ஆசிய மேம்பாட்டு வங்கியின் 2022 ஆம் ஆண்டு வருடாந்திர அறிக்கையின் படி, 40 நாடுகளுக்கான 31.8 பில்லியன் டாலருக்கும் அதிகமான அளவில் நிதித் தொகை வழங்கீட்டில், பாகிஸ்தான் மட்டும் 5.58 பில்லியன் டாலர் கடனைப் பெற்றுள்ளது.

- ஆஸ்திரேலியா, மூன்றாவது நேரடி குவாட் உச்சி மாநாட்டினை சிட்னியில் மே 24 ஆம் தேதியன்று நடத்த உள்ளது.
  - நாற்கரப் பாதுகாப்புப் பேச்சுவார்த்தை அமைப்பானது இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கியது.
- ரத்தன் டாடாவுக்கு ஆஸ்திரேலியாவின் மிக உயரியக் குடிமை விருதான ஆர்டர் ஆஃப் ஆஸ்திரேலியா விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியத் தொழில்முறை மலையேறும் வீரரான அர்ஜுன் வாஜ்பாய், அன்னபூர்ணா 1 என்ற சிகரத்தின் உச்சியினை அடைந்த முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்று உள்ளார்.
  - இது நேபாளத்தில், கடல் மட்டத்திலிருந்து சுமார் 8,091 மீட்டர் (26,545 அடி) உயரத்தில் அமைந்துள்ள உலகின் 10வது உயரமான சிகரமாகும்.
- WYLD எனப்படும் விசா நிறுவனத்தின் ஆதரவினைப் பெற்ற உலகின் முதல் சமூகப் பயன்பாட்டுப் பண வழங்கீட்டு அட்டையானது மும்பையில் அறிமுகப் படுத்தப் பட்டு உள்ளது.
- கொலம்பிய நாட்டுப் பாடகி ஷகிரா, பில்போர்டு இதழின் 'ஆண்டின் சிறந்த இலத்தீன் பெண்மணி' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளார்.
- துபாய் நாட்டினைச் சேர்ந்த விமான நிறுவனமான எமிரேட்ஸ் ஆனது, சாரா எனப்படும் உலகின் முதல் எந்திர மனிதச் செயல்பாடு சார்ந்த ஒரு உள்நுழைவு வசதியினைத் தொடங்கியுள்ளது.
  - சாரா என்பது வாடிக்கையாளர்களின் முகங்களை ஊடறிந்து செய்யப்பட்ட கடவுச் சீட்டுகளுடன் ஒப்பிட்டு, பயணிகளின் பட்டியலைச் சரிபார்த்து, பின் அவர்களைச் சுமைகளை உள்ளிடும் முனையப் பகுதிக்கு அவர்களை வழிநடத்தும்.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்றைய நிலவரப்படி, தமிழக அரசின் நிதிநிலை அறிக்கைக் கணக்கின் வரவு சாரா கடன் ஆனது 27,669.88 கோடி ரூபாயாக உள்ளது.
  - 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில், இந்தத் தொகை 15,368.91 கோடி ரூபாயாக இருந்தது.
- குறிப்பிட்டத் தொழிற்சாலைகளில் வேலை நேரத்தை நீட்டிக்கும் வகையிலான, 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தினை திருத்தியமைக்கும் தமிழ்நாடு மாநில அரசின் சமீபத்திய சர்ச்சைக்குரிய மசோதா திரும்பப் பெறப்பட்டது.
- இந்தியாவின் மொத்த சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் ஏப்ரல் மாதத்தில் 1,87,035 கோடி என்ற அதிகபட்ச அளவினை எட்டியது.
  - கடந்த ஆண்டு இதே மாதத்தில் வசூலான அதிகபட்ச வரித் தொகையான 1.67 லட்சம் கோடியை விட இது 12% அதிகமாகும்.
- பிரதமர் மோடி அவர்களின் பிரபலமான வானொலி நிகழ்ச்சியான மன் கி பாத் 100 அத்தியாயங்களை நிறைவு செய்துள்ளது.
- 'ஜன சக்தி' என்ற தலைப்பிலான ஒரு கண்காட்சியானது, புது டெல்லியில் உள்ள தேசிய நவீன கலைக் கூடத்தில் (NGMA) சமீபத்தில் தொடங்கப்பட்டது.
  - இந்தக் கண்காட்சியில் பன்னிரண்டு புகழ்பெற்ற நவீன கால மற்றும் சமகால இந்தியக் கலைஞர்களின் கலைப் படைப்புகளைக் காட்சிப் படுத்தப் படுகிறது.

- ITC நிறுவனமானது ஒரு பெரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனமான இன்ஃபோசிஸ் நிறுவனத்தினைப் பின்னுக்குத் தள்ளி, தற்போது சந்தை மூலதனத்தின் அடிப்படையில், இந்தியாவின் ஆறாவது பெரிய நிறுவனமாக மாறியுள்ளது.
- தமிழ்நாடு காவல்துறையின் உளவுப் பணிப் பிரிவில் 380 பணியாளர்களைக் கொண்ட 'தீவிரவாத எதிர்ப்புப் படைப்பிரிவானது' 57.51 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.
- மத்திய அரசானது, புது டெல்லியில் இந்தியாவின் முதல் "சிறுதானியங்கள் அனுபவ மையத்தினை (MEC)" நிறுவியுள்ளது.
- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது திறன்மிகு நகரங்கள் திட்டத்திற்கான காலக்கெடுவினை 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை நீட்டிக்க முடிவு செய்துள்ளது.
- மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி அவர்களின் பேரன் அருண் காந்தி சமீபத்தில் காலம் ஆனார்.
- சித்தார்த்த மொகந்தி, 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலான காலக்கட்டத்திற்கு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் (LIC) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய ஒலிம்பிக் சங்கமானது, இந்திய மல்யுத்தக் கூட்டமைப்பின் அன்றாட விவகாரங்களை மேற்கொள்வதற்காக, பூபேந்தர் சிங் பஜ்வா மற்றும் சுமா ஷிரூர் ஆகியோரை உள்ளடக்கிய இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட தற்காலிகக் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- டிங் லிரன், ரஷ்யாவின் இயன் நெபோம்னியாச்சி என்பவரை வீழ்த்தி, சீனாவின் முதல் ஆடவர் உலக செஸ் சாம்பியன் ஆனார்.
- முதலாவது ஆசியான்-இந்திய கடல்சார்ப் பயிற்சி (AIME) சமீபத்தில் தென் சீனக் கடலில் தொடங்கியது.
- சமீபத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் பழங்குடியினர் பிரச்சினைகள் தொடர்பான நிரந்தர மன்றத்தின் 22வது அமர்வு நியூயார்க் நகரில் நடைபெற்றது.
    - இந்த நிகழ்வின் கருத்துரு: "பழங்குடி மக்கள், மனித சுகாதாரம், கிரகங்கள் மற்றும் பிராந்திய ஆரோக்கியம் மற்றும் பருவநிலை மாற்றம்: உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை" என்பதாகும்.
- சுமார் 35,000 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்க்கும் தொழில்துறை சார் திட்டங்களுக்குத் தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.
- 2023 முதல் 2033 ஆம் ஆண்டு வரையில், ஆடவர் மற்றும் மகளிர் இந்திய ஹாக்கி அணிகளுக்கு (மூத்தப் பிரிவினர் மற்றும் இளையோர்) தனது நிதியளிப்பினை மேலும் பத்து ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கு ஒடிசா அரசாங்கமானது முடிவு செய்துள்ளது.
- கோ ஏர்லைன்ஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனமானது (Go First), தேசிய நிறுவனங்கள் சட்டத் தீர்ப்பாயத்தில் (NCLT) தன்னார்வ திவால் நடவடிக்கைகளுக்காக தாக்கல் செய்து உள்ளது.
- "செயற்கை நுண்ணறிவின் ஞானப் பிதா" என்று அழைக்கப்படும் ஜெஃப்ரி ஹிண்டன் கூகுள் நிறுவனத்தில் வகித்த தனது பொறுப்பில் இருந்து விலகியுள்ளார்.
- வோடபோன் குழுமமானது இத்தாலி நாட்டினைச் சேர்ந்த மார்கெரிட்டா டெல்லா வாலேவை அதன் தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) நியமித்துள்ளது.
- அரை நூற்றாண்டுக்கும் மேலாக கர்நாடக இசை உலகில் ஒரு மிருதங்க வாசிப்பாளராக ஆதிக்கம் செலுத்தி வந்த காரைக்குடி R.மணி சமீபத்தில் சென்னையில் காலமானார்.

- தாத்ரா மற்றும் நகர் ஹவேலி ஒன்றியப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள NAMO மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமானது சமீபத்தில் திறந்து வைக்கப் பட்டது.
- இந்திய இராணுவமானது, ஆயுதப் படைகளில் பெண்களின் பங்கினை விரிவுபடுத்தும் நடவடிக்கையில் "ஐந்து பெண் அதிகாரிகள்" அடங்கிய முதல் படைத் தொகுதியினை பீரங்கிப் படையில் சேர்த்துள்ளது.
- புகழ்பெற்ற இயற்பியலாளரும், பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் (BARC) இயக்குநருமான அஜித் குமார் மொஹந்தி அணுசக்தி ஆணையத்தின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- ரஷ்யாவின் ஸ்பெர்பேங்க் என்ற நிறுவனமானது, மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ChatGPT மற்றும் கூகுள் நிறுவனத்தின் பார்டு ஆகியவற்றிற்குப் போட்டியாக GigaChat என்ற தனது சொந்த செயற்கை நுண்ணறிவு மென்பொருளினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- புது டெல்லியில் அமைந்துள்ள இந்திய வெளிநாட்டு வர்த்தகக் கல்வி நிறுவனம் (IIFT) ஆனது, அதன் 60வது நிறுவன தினத்தில் தனது வைர விழாவைக் கொண்டாடியது.
  - இது 1963 ஆம் ஆண்டில் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் ஒரு தன்னாட்சி அமைப்பாக நிறுவப்பட்டது.
- உத்தரப் பிரதேச அரசானது, டிஸ்னிலேண்டின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு "ராமாலேண்ட்" என்ற கருத்துரு சார்ந்த ஒரு கேளிக்கைப் பூங்காவினை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.
  - இராமர் மற்றும் இராமாயணத்தின் புராணக் கதைகளை விவரிப்பதை இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பானது சமீபத்தில் கோவாவில் நடைபெற்றது.
  - ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 2023 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்திற்கான கருத்துரு 'SECURE-SCO' என்பதாகும்.
- டாக்டர் B.R. அம்பேத்கர் என அதிகாரப்பூர்வமாக பெயரிடப்பட்ட தெலுங்கானா மாநில அரசின் தலைமைச் செயலக வளாகமானது சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது.
  - இந்தக் கட்டிடமானது, பொதுவாக இந்தோ-இஸ்லாமியக் கட்டிடக்கலை அம்சமான குவிமாடங்களுடன் கூடிய இந்தோ-சார்செனிக் பாணியில் காணப்படும் ஒரு தனித்துவமான கட்டிடக் கலையைக் கொண்டுள்ளது.
- இரு நாடுகளுக்கும் இடையிலான ஒரு வலுவான பிணைப்பினைக் குறிக்கும் வகையில் மொரீஷியஸ் நாட்டில் அமைந்துள்ள மகாராஷ்டிர பவனில் அமைக்கப்பட்டுள்ள மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் 12 அடி உயரச் சிலையானது திறக்கப் பட்டுள்ளது.
- இந்திய இராணுவமானது சமீபத்தில் புலந்த் பாரத் என்று பெயரிடப்பட்ட ஒரு பிரிவுசார் ஒருங்கிணைந்தப் பயிற்சியினை அருணாச்சலப் பிரதேசத்தில் மேற்கொண்டது.
- அசாமில் உள்ள ஜோகிகோபா எனுமிடத்தில், பாரத்மாலா திட்டத்தின் கீழ் இந்தியாவின் முதல் சர்வதேசப் பல்முனைத் தளவாடங்கள் பூங்கா உருவாக்கப்பட உள்ளது.
- தேசிய அனல் மின் கழகமானது, வங்காளதேசத்தில் அதன் முதல் வெளிநாட்டுத் திறன் உற்பத்தி மையத்தினை நிறுவியுள்ளது.
  - இந்தப் புதிய உற்பத்தி மையமானது, தேசிய அனல் மின் கழகத்தின் நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறனை 72304 MW ஆக உயர்த்தியுள்ளது.

- அஜய் பங்கா உலக வங்கியின் அடுத்த தலைவராகப் பொறுப்பேற்பார் என்றும், 2023 ஆம் ஆண்டு ஜூன் 02 ஆம் தேதி முதல் ஐந்தாண்டுக் காலத்திற்கு அதன் தலைவர் பொறுப்பினை வகிப்பார் என்றும் அதன் நிர்வாகம் உறுதி செய்துள்ளது.
- உலக சிரிப்புத் தினம் என்பது சிரிப்பு மற்றும் அதன் பல குணப்படுத்தும் நன்மைகள் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக ஆண்டுதோறும் மே மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று கொண்டாடப் படுகிறது.
- இந்திய இராணுவத்தின் தெற்குப் படைப்பிரிவின் தலைமையகமானது குடிமைப் பணிச் சேவை அமைப்புகள் 32 உள்ளிட்ட 56 தீயணைப்பு அமைப்புகளுடன் இணைந்து, 'அக்னி தமன் – 23' என்ற ஒரு நாள் அளவிலான பயிற்சியினை மேற்கொண்டது.
- இரயில்வே அமைச்சகமானது, பொதுமக்களின் புகார்கள் மற்றும் குறைகளை வெகு விரைவாக நிவர்த்தி செய்வதற்காக என்று முதன்முறையாக டெல்லியில் புதிய அவசர நடவடிக்கை அணுகல் அறையினை அமைத்துள்ளது.
- 1929 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட, 94 ஆண்டுகள் மிகப் பழமையான இந்திய வேளாண் ஆராய்ச்சிச் சபையினை மறுசீரமைப்பதற்காக, சஞ்சய் கார்க் தலைமையிலான 11 பேர் கொண்ட உயர்மட்டக் குழுவினை மத்திய அரசு அமைத்துள்ளது.
- மும்பையில் ஆசியாவின் மிகப்பெரிய உயிரி எரிவாயு உற்பத்தி ஆலையினை அமைப்பதற்காக பிரிஹன் மும்பை மாநகராட்சிக் கழகம் மற்றும் மஹாநகர் கேஸ் லிமிடெட் நிறுவனம் ஆகியவை கை கோர்த்துள்ளன.
- மத்திய எல்லைச் சாலைகள் அமைப்பானது, "ஏக்தா ஏவம் ஷ்ரதாஞ்சலி அபியான்", என்ற ஒரு பெயரில், தேசத்தினைக் கட்டியெழுப்பச் செய்வதில் அதன் கர்மயோகிகளின் (பணியாளர்களின்) தியாகங்கள் மற்றும் பங்களிப்பினை நினைவு கூரும் வகையில் ஒரு பல்முனைப் பயணத்தினை ஏற்பாடு செய்துள்ளது.
- முன்னதாக அகில இந்திய வானொலி (AIR) என்று அழைக்கப்பட்ட பொது ஒலிபரப்பு நிறுவனமானது அனைத்து ஒலிபரப்பு மற்றும் நிகழ்ச்சிகளில் ஆகாஷ்வானி என்று பிரத்தியேகமாக குறிப்பிடப்பட வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
    - ஆகாஷ்வானி என்ற பெயர் 1956 ஆம் ஆண்டில் அகில இந்திய வானொலி நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- Love in 90's என்ற ஒரு திரைப்படத்தின் டிரெய்லர் (முன்னோட்டத் தொகுப்பு) ஆனது புது டெல்லியில் வெளியிடப்பட்டது.
    - அருணாச்சலப் பிரதேசத்தின் டேகின் சமூகத்தினர் குறித்த முதல் திரைப்படம் இது ஆகும்.
- ஐக்கிய அரபு அமீரக அரசாங்கமானது, துபாயில் செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்பான சர்வதேச மாநாடான 'Machines Can See 2023' என்ற உச்சி மாநாட்டினைத் தொடங்கியுள்ளது.
- திருவள்ளூர் மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா என்ற தொழிற்சாலைக்குத் தமிழக முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.
- மூத்த ஹாலிவுட் நட்சத்திர நாயகரான மைக்கேல் டக்ளஸ், 76வது கேன்ஸ் திரைப்பட விழாவில் கௌரவ பாம் டி'ஓர் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளார்.
- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) மற்றும் பாங்க் ஃபார் இண்டர்நேசனல் (BIS) ஆகியவை உலகளாவியப் புத்தாக்கக் கண்டுபிடிப்பாளர்களுக்காக நான்காவது G20 TechSprint என்ற ஒரு ஹேக்கத்தானைத் தொடங்கியுள்ளன.

- தெலுங்கானாவில் அமைக்கப்பட்டுள்ள ஒரு புத்தாக்க ஊக்குவிப்பு ஆராய்ச்சி மற்றும் தொழில் முனைவு மையம் (C-i2 RE) சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது.
- மத்திய அரசானது, SAKSHAM (நிலையான சுகாதார மேலாண்மைக்கான மேம்பட்ட தகவல் திறனைத் தூண்டுதல்) எனப்படும் ஒரு கற்றல் மேலாண்மைத் தகவல் அமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இது நாட்டில் உள்ள அனைத்து சுகாதார நிபுணர்களுக்கும் வேண்டி இயங்கலை வழிப்பயிற்சி மற்றும் மருத்துவக் கல்வியை வழங்கச் செய்வதற்கான ஒரு பிரத்தியேகமான மற்றும் ஒருங்கிணைந்தத் தளமாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் தங்கக் கையிருப்பானது ஆண்டிற்கு 34.22 டன் என்ற வீதத்தில் அதிகரித்து 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 794.64 டன் என்ற அளவினை எட்டியது.
    - இந்திய ரிசர்வ் வங்கியானது 2022 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 760.42 மெட்ரிக் டன் தங்க இருப்பினை (11.08 மெட்ரிக் டன் தங்க வைப்புகள் உட்பட) கொண்டிருந்தது.
- உலகின் மிகப்பெரிய மற்றும் முதலாவது முகமை அடிப்படையிலான சதுரங்க லீக் போட்டியானது துபாயில் நடைபெற உள்ளது.
- ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனமானது, தமிழ்நாட்டில் சென்னை அருகே உள்ள இருங்காட்டுக்கோட்டை எனுமிடத்தில் அமைந்த தனது ஆலையில் புதிய மின்சார வாகன (EV) வடிவ மாதிரிகளை அறிமுகப் படுத்துவதற்காகவும், அந்த ஆலையின் உற்பத்தி அளவினை அதிகரிப்பதற்காகவும் வேண்டி அடுத்த 10 ஆண்டுகளில் 20,000 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளதாக உறுதியளித்துள்ளது.
- பரந்தூரில் நிறுவப்பட உள்ள சென்னையின் இரண்டாவது விமான நிலையத்திற்கான மாபெரும் திட்டம் மற்றும் விரிவான தொழில்நுட்பப் பொருளாதார அறிக்கையினை உருவாக்குவதற்கான ஒரு ஆலோசனை நிறுவனமாக லூயிஸ் பெர்கர் தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- முதல்வர் யோகி ஆதித்யநாத் அவர்களுக்கு இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பாரத ரத்னா டாக்டர் அம்பேத்கர் விருதினை வழங்கிக் கௌரவித்தார்.
- நோபல் பரிசு பெற்ற ரவீந்திர நாத் தாகூர் அவர்களின் இல்லமான மேற்கு வங்கத்தில் உள்ள சாந்தி நிகேதனை யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்ப்பதற்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- ஒலிம்பிக் வில்வித்தை வீரர் அதானு தாஸ், இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் (MYAS) ஒலிம்பிக் போட்டி இலக்குத் திட்டத்தில் (TOPS) மீண்டும் சேர்க்கப்பட்டார்.
- இந்தியாவின் மிகப்பெரிய வங்கி சாரா நிதி நிறுவனமான, ஆற்றல் நிதிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனராக (CMD) பர்மிந்தர் சோப்ரா நியமிக்கப் பட்டு உள்ளார்.
    - மகாரத்னா நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனராக நியமிக்கப் படும் முதல் பெண்மணி சோப்ரா ஆவார்.
- GMR ஹைதராபாத் சர்வதேச விமான நிலையம் ஆனது 90.43 சதவிகிதம் வரையில் மிகவும் சரியான ஒரு நேரத்தில் செயல்படுவதனால் உலகிலேயே மிகவும் சரியான நேரத்தில் செயல்படும் விமான நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- வாரணாசியில் அமைந்துள்ள லால் பகதூர் சாஸ்திரி சர்வதேச விமான நிலையமானது, இந்தியாவிலேயே முதன்முதலாக வாசிப்பு அறையை நிறுவியுள்ளது.

- "Droupadi Murmu: From Tribal Hinterlands to Raisina Hills" என்ற தலைப்பிலான ஒரு புத்தகத்தினை கஸ்தூரி ரே எழுதியுள்ளார்.
- 'The Indian Metropolis: Deconstructing India's Urban Spaces' என்ற புத்தகத்தினை ஃபெரோஸ் வருண் காந்தி எழுதியுள்ளார்.
- காஷ்மீர் பல்கலைக்கழகம் ஆனது பருவநிலை மாற்றம் குறித்த இரண்டு நாட்கள் அளவிலான இளையோர் 20 என்ற நிகழ்ச்சியினை (Y20) நடத்தவுள்ளது.
    - இந்த இளையோர் 20 நிகழ்வின் கருத்துரு, "பருவநிலை மாற்றம் மற்றும் பேரிடர் அபாயக் குறைப்பு: நிலைத்தன்மையை வாழ்க்கை முறையாக்குதல்" என்பதாகும்.
- வங்காளதேச அரசானது சமீபத்தில் 6வது இந்தியப் பெருங்கடல் மாநாட்டினை (IOC) நடத்தியது.
- சீன அதிபர் ஜி ஜின்பிங் ஐந்து மத்திய ஆசிய நாடுகளின் (கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான்) தலைவர்களுடன் இணைந்து இரண்டு நாட்கள் அளவிலான உச்சி மாநாட்டினை நடத்த உள்ளார்.
- 5வது உலக ஆயுர்வேத திருவிழாவானது (GAF-2023) கேரளாவின் திருவனந்தபுரம் மாவட்டத்தில் நடைபெற உள்ளது.
- இந்திய வானியல் சங்கத்தினால் (ASI) நிறுவப்பட்ட முதல் கோவிந்த் ஸ்வரூப் வாழ்நாள் சாதனையாளர் விருதானது மூத்த வானியலாளர் ஜெயந்த் நராலிகருக்கு வழங்கப் பட்டு உள்ளது.
- மத்தியத் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை அமைச்சகம் ஆனது கொச்சின் துறைமுக ஆணையத்திற்கு (CPA), 2022-23 ஆம் ஆண்டில் கொள்கலன் சாராத சரக்குப் போக்குவரத்துப் பிரிவில் சிறந்த செயல்முறை நேர மேலாண்மைக்கான சாகர் ஷ்ரேஷ்த சம்மான் விருதினை வழங்கியுள்ளது.
- இந்தியக் கால்பந்து ஜாம்பவான் மற்றும் 1960 ஆம் ஆண்டு ரோம் ஒலிம்பிக் போட்டியில் அணித் தலைவராக இருந்த பிரதீப் குமார் பானர்ஜியின் பிறந்த நாள் (ஜூன் 23) ஆனது, அகில இந்தியக் கால்பந்துக் கூட்டமைப்பு (AIFF) அடித்தளத்தின் தினமாக கொண்டாடப் பட உள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் காடுகளுக்கான மன்றத்தின் 18வது அமர்வு (UNFF18) ஆனது நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்றது.
- வர்த்தக அமைச்சகமானது சமீபத்தில் மூன்றாவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) புத்தொழில் மன்றத்தினை முதலாவது நேரடி நிகழ்ச்சியாக புது டெல்லியில் ஏற்பாடு செய்தது.
- நடிகை ஆலியா பட், குஸ்ஸி எனப்படும் இத்தாலிய ஆடம்பரப் புதுநடைப் பாணியிலான பொருட்கள் தயாரிப்பு நிறுவனத்தின் முதல் இந்திய உலக விளம்பரத் தூதராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- வேலூர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் வேந்தரான G. விஸ்வ நாதனுக்கு, சர்வதேச அளவிலான கல்விக்கு அவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக வேண்டி வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.
    - இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் பாராளுமன்றத்ததின் பொது மக்கள் சபையில் உலகத் தமிழ் கழகம் இதனை வழங்கியுள்ளது.

- சென்னையில் அமைந்துள்ள இந்திய இரயில்வே உணவு வழங்கீடு மற்றும் சுற்றுலாக் கழகத்தின் தென் மண்டல நிர்வாகமானது, ஷீரடி சாய்பாபா கோயில், நாசிக், பந்தர்பூர் மற்றும் மந்திராலயம் ஆகியப் பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்ளும் பாரத் கௌரவ் சுற்றுலா இரயிலினை இயக்க உள்ளது.
    - இதற்கு "ஷீரடி சாய் தரிசனம்" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- கர்நாடகக் காவல்துறைத் தலைமை இயக்குநரான பிரவீன் சூட் மத்தியப் புலனாய்வுத் துறையின் புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய-ஐரோப்பிய ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பச் சபையின் முதலாவது அமைச்சர்கள் கூட்டமானது பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸ் நகரில் நடைபெறுகிறது.
- அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் குடும்ப நபர் சார்ந்த ஓய்வூதியம் பெறுவோருக்கான அகவிலைப் படியை 38 சதவீதத்தில் இருந்து 42 சதவீதமாக தமிழக அரசு உயர்த்தியுள்ளது.
- விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பெருங்குடல் புற்றுநோய் பற்றியத் தகவல்கள் அடங்கிய சிறு புத்தகத்தினை தமிழக முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ளார்.
- தற்போது தமிழ்நாடு முழுவதும் உள்ள 25 உழவர் சந்தைகளில் செயல்பட்டு வரும் உணவகங்கள் இனிமேல் இயற்கை உணவுப் பொருட்களைப் பிரத்தியேகமாக விற்பனை செய்ய உள்ளன.
- கல்வியாளரான மனோஜ் சோனி மத்தியக் குடிமை பணிகள் ஆணையத்தின் (UPSC) தலைவராகப் பதவியேற்றுள்ளார்.
- பிரணீத் வுப்பலா தெலுங்கானாவின் ஆறாவது மற்றும் இந்தியாவின் 82வது கிராண்ட் மாஸ்டர் ஆனார்.
- இந்தியா மற்றும் இந்தோனேசியா நாடுகளுக்கு இடையேயான சமுத்திர சக்தி-23 எனப் படும் இருதரப்புப் பயிற்சியானது சமீபத்தில் இந்தோனேசியாவில் தொடங்கியது.
- நேபாள மலையேறும் நிபுணரான பசாங் தாவா ஷெர்பா 26வது முறையாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார் என்பதோடு, இந்தச் சாதனையினைப் படைத்த உலகின் இரண்டாவது நபர் என்ற பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.
- ட்விட்டரின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக லிண்டா யாக்காரினோ நியமிக்கப் பட்டுள்ளார்.
- ஐக்கிய நாடுகள் சபையின் புலம்பெயர்வு முகமையானது, அதன் அடுத்தத் தலைமை இயக்குநராக திருமதி எமி E.போப் என்பவரைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- திருநெல்வேலி மாவட்டத்தில் 33.02 கோடி செலவில் கட்டமைக்கப்பட உள்ள பொருநை அருங்காட்சியகத்திற்குத் தமிழக முதல்வர் அவர்கள் காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.
- தமிழக அரசானது, ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி V. பழனிக்குமாரை மீண்டும் இரண்டும் ஆண்டுகளுக்கு மாநிலத் தேர்தல் ஆணையராக மீண்டும் நியமித்து உள்ளது.
- தியாகராய நகரில் அமைக்கப்பட்டுள்ள 570 மீட்டர் நீளமும் 4.2 மீட்டர் அகலமும் கொண்ட இந்தியாவின் மிக நீளமான ஆகாய நடைபாதை மேம்பாலமானது பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப் பட்டுள்ளது.

- இது சென்னையில் மாம்பலம் இரயில் நிலையத்தையும் தியாகராய நகர் பேருந்து நிலையத்தையும் இணைக்கிறது.

❖ ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான நீதிபதி பிரசாந்த் குமார் மிஸ்ரா மற்றும் மூத்த வழக்கறிஞர் கல்பாத்தி வெங்கடராமன் விஸ்வநாதன் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தின் புதிய நீதிபதிகளாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

❖ அர்ஜூன் ராம் மேக்வால், சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் இணை அமைச்சராகவும், கிரண் ரிஜிஜு புவி அறிவியல் துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

❖ ஹிந்துஜா குழுமத்தின் தலைவரான ஸ்ரீசந்த் பர்மானந்த் எனப்படும் SP ஹிந்துஜா (87) சமீபத்தில் லண்டனில் காலமானார்.

❖ HDFC சொத்து மேலாண்மை நிறுவனமானது, பாதுகாப்புத் துறையில் கவனம் செலுத்தும் வகையிலான நாட்டின் முதல் பரஸ்பர நிதியைத் தொடங்க உள்ளது.

- இது இத்துறையின் வளர்ச்சித் திறனில் பங்கேற்க முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பு அளிக்கும்.

❖ ஒரே ஆண்டில் டெஸ்ட், ஒருநாள், சர்வதேச டி20 மற்றும் இந்தியன் பிரீமியர் லீக் போட்டி ஆகியவற்றில் சதம் அடித்த ஒரே கிரிக்கெட் வீரர் என்ற ஒரு பெருமையை இந்திய நாட்டினைச் சேர்ந்த ஷுப்மன் கில் பெற்றுள்ளார்.

❖ எண்ணிம அணுகல் தன்மையின் பெரு முக்கியத்துவத்தைப் பற்றி ஒரு பெரும் விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தின் மூன்றாவது வியாழக் கிழமை அன்று (மே 18) உலகளாவிய அணுகல் விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப் படுகிறது.

❖ தேயிலையின் நிலையான உற்பத்தி, நுகர்வு மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்தச் செய்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் மே 21 தேதியானது சர்வதேசத் தேயிலை தினமாக ஐக்கிய நாடுகள் சபையினால் அனுசரிக்கப் படுகிறது.

❖ இந்திய அரசானது, மோச்சா புயலால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மர் நாட்டிற்கு உதவச் செய்வதற்காக 'கருணா நடவடிக்கையினை' தொடங்கியுள்ளது.

❖ இந்தியாவின் பாதுகாப்புத் துறை சார்ந்த உற்பத்தியின் மதிப்பானது, முதன்முறையாக 1 லட்சம் கோடி ரூபாயினை (1,06,800 கோடி) தாண்டியுள்ளது.

❖ இந்திய ராணுவமானது பல்வேறு கூட்டுப் பயிற்சிகளை மதிப்பிடச் செய்வதற்கு என்றும், பல்வேறு நிறுவனங்களின் வெள்ள மீட்பு அமைப்புகள் மூலம் ஒரு தயார்நிலையை நன்கு ஒருங்கிணைக்கச் செய்வதற்காகவும், கூட்டு வெள்ள நிவாரண 'ஜல் ரஹத்' என்ற கூட்டுப் பயிற்சியினை நடத்தியது.

❖ 2022-23 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் பாரத் ஸ்டேட் வங்கியின் நிகர இலாபமானது 83 சதவீதம் உயர்ந்து அதிகபட்சமாக 16,694.51 கோடி ரூபாயாக உயர்ந்து உள்ளது.

❖ இந்தியப் போட்டித் திறன் ஆணையத்தின் தலைவராக ரவ்னீத் கௌர் என்பவரை அரசாங்கம் நியமித்துள்ளது.

❖ 2023 ஆம் ஆண்டு சர்வதேச அருங்காட்சியக கண்காட்சியின் ஒரு அதிகாரப்பூர்வச் சின்னமான சிந்து சரஸ்வதி சப்யாதா எனப்படும் வெண்கலத்தாலான நடனப் பெண் சிலையின் பாணியினால் ஈர்க்கப்பட்டு, சன்னப் பட்டினப் பாணியில் அமைக்கப்பட்ட 5 அடி உயர பொம்மையின், பகட்டான மற்றும் சமகாலத்திய ஒரு முழு அளவிலான வடிவத்தினைப் பிரதமர் டெல்லியில் திறந்து வைத்தார்.

- மோர்கன் ஸ்டான்லி நிறுவனத்தின் கூற்றுப்படி, 2023-24 ஆம் ஆண்டில் உலக நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் இந்தியா 16 சதவீதப் பங்கினை அளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- மத்திய அரசானது, நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள ஓய்வூதியம் தொடர்பான பல வழக்குகளைத் தீர்ப்பதற்காக வேண்டி டெல்லியில் 8வது அகில இந்திய ஓய்வூதிய அதாலத்தினைத் தொடங்கி வைத்துள்ளது.
- உலக சுகாதார அமைப்பானது, (WHO) சர்க்கரை சாராத இனிப்பேற்றிகள் (NSS) குறித்த ஆலோசனைகள் அடங்கிய அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
    - உடல் எடையைக் கட்டுப்படுத்துவதற்காக அல்லது தொற்றா நோய்களின் (NCDs) அபாயத்தினைக் குறைப்பதற்காக வேண்டி சர்க்கரை சாராத இனிப்பேற்றிகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அணித்தலைவர் பிரதிமா புல்லர் மால்டோனாடோ நியூயார்க் காவல் துறையில் உயர் நிலைப் பதவியில் உள்ள (NYPD) தெற்காசியப் பெண்மணி என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- R. சக்திவேல், P. தனபால், C. குமரப்பன் மற்றும் K. ராஜசேகர் ஆகிய நான்கு நீதிபதிகளை சென்னை உயர் நீதிமன்றக் கூடுதல் நீதிபதிகளாக குடியரசுத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார்.
    - இதன் மூலம் 75 என்ற உயர் நீதிமன்றத்தின் ஒரு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கையில் பணியில் உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கையானது 65 ஆக உயரும்.
- மாநிலத்தில் உள்ள 48 முக்கியக் கோயில்களின் பிரசாதங்களை முன்பதிவு மூலம் பக்தர்களின் வீடுகளுக்கே அனுப்பும் திட்டத்தைத் தமிழக அரசு தொடங்கியுள்ளது.
- பிரித்தானிய பாதுகாப்புச் சபையானது, திருச்சி சர்வதேச விமான நிலையத்தின் புதிய முனையக் கட்டமைப்புத் திட்டத்திற்கு முதல் தர தகுதிப் பிரிவில் சர்வதேசப் பாதுகாப்பு விருதினை வழங்கியுள்ளது.
- மத்திய அரசானது இளையோர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காகவும், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் அவர்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்காகவும் "Meri LiFE" (எனது வாழ்க்கை) எனப்படும் கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அமேசான் வலைதளச் சேவை வழங்கீட்டு நிறுவனமானது (AWS), 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் மேகக் கணிமம் சார்ந்த உள்கட்டமைப்பில் 12.7 பில்லியன் அமெரிக்க டாலர்களை முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது.
- இமாச்சல பிரதேசத்தின் காங்க்ரா தேயிலையானது, பாதுகாக்கப்பட்ட புவிசார் குறியீடு பெற்ற தயாரிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் நிறுவப்பட்டுள்ள மகாத்மா காந்தி அவர்களின் மார்பளவுச் சிலையை இந்தியப் பிரதமர் திறந்து வைத்தார்.
- மங்களூரு மாநகராட்சிக் கழகமானது, பொதுமக்களிடமிருந்துப் பயன்படுத்தப்படாத அல்லது பயன்படுத்தப்பட்ட நெகிழிப் பொருட்கள், உடைகள், காலணி, புத்தகங்கள், செய்தித் தாள்கள் மற்றும் பொம்மைகளை சேகரிப்பதற்காக 'மேரி லைஃப், மேரா ஸ்வச் ஷேஹர்' என்ற பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.

- நூலாசிரியர் ரஸ்கின் பாண்ட் "The Golden Years: The Many Joys of Living a Good Long Life" என்ற தலைப்பிலான ஒரு புத்தகத்தினை எழுதியுள்ளார்.
- வரலாற்றில் முதன்முறையாக, அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகளில் நடைபெற உள்ள 2026 ஆம் ஆண்டிற்கான FIFA உலகக் கோப்பை போட்டியின் சின்னத்திற்காக, உண்மையான FIFA உலகக் கோப்பை மற்றும் போட்டி நடத்தப்படும் ஆண்டு ஆகியவற்றை உள்ளடக்கிய வகையிலான ஒரு படம் உருவாக்கப்பட்டுள்ளது.
- டாடா குழுமத்தின் தலைவர் N.சந்திரசேகரன் அவர்களுக்கு, இந்தியா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள் இடையேயான வர்த்தக உறவினை வலுப்படுத்துவதற்காக என்று அவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக பிரான்சு நாட்டின் உயரிய குடிமை விருதான செவாலியர் டி லா லெஜியன் டி'ஹானர் விருது வழங்கப்பட்டுள்ளது.
- உதகமண்டலத்தில் உள்ள தாவரவியல் பூங்கா அதன் 125வது ஆண்டு மலர் கண் காட்சியைக் கொண்டாடுகிறது.
- முக்கிய மந்திரி தீர்த்த-தர்ஷன் யோஜனாவின் கீழ் யாத்திரை மேற்கொள்ளும் (புனித யாத்திரை) மூத்தக் குடிமக்களுக்கு (முதியோர்) இலவச விமானப் பயண வசதிகளை வழங்கும் முதல் மாநிலமாக மத்தியப் பிரதேசம் மாறியுள்ளது.
- மத்திய அரசானது, பெருநிறுவனங்களின் பெயரகற்றச் செயல்முறையினை துரிதப் படுத்துவதற்கான மையத்தை (C-PACE) அமைத்துள்ளது.
    - நிறுவனங்களின் பதிவினைப் பதிவேடுகளில் இருந்து சரியான நேரத்தில் மற்றும் செயல்முறைக்கு உட்பட்ட வகையில் நீக்கச் செய்வதை இது உறுதி செய்து, பங்கு தாரர்களுக்கு சரியான தரவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்திய மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் பர்சோத்தம் ரூபாலா மகாராஷ்டிராவின் ராய்காட் மாவட்டத்தில் உள்ள கரஞ்சாவில் சாகர் பரிக்ரமா என்ற யாத்திரையின் ஐந்தாம் கட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- தொழிலதிபர் கருமுத்து T.கண்ணன் சமீபத்தில் மதுரையில் காலமானார்.
    - இவர் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் தக்கர் ஆகவும் தியாகராஜர் மில்ஸின் தலைவராகவும் செயல்பட்டார்.
- G20 அமைப்பின் மூன்றாவது சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை நிலைத்தன்மை செயற்குழு (ECSWG) கூட்டமானது மகாராஷ்டிராவின் மும்பை நகரில் நடைபெற்றது.
- தேசிய விசாரணை அமைப்பானது, 'த்வஸ்த் நடவடிக்கை' என்ற பெயரிலான ஒரு இயக்கத்தினை நாடு முழுவதும் மேற்கொண்டது.
- 2022-23 ஆம் ஆண்டில், அரசுக்குச் சொந்தமான கடன் வழங்கீட்டு நிறுவனங்களில், GeM தளத்தில் மொத்தமாக 592.82 கோடி ரூபாய் கொள்முதல் செய்ததையடுத்து கனரா வங்கி மிகப்பெரிய கொள்முதல் செய்த நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- குஜராத்தில் உள்ள ஓகா எனுமிடத்தில் அமைக்கப்பட உள்ள தேசியக் கடலோரக் காவல் துறையின் (NACP) நிரந்தர வளாகத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் அடிக்கல்லினை நாட்டினார்.
- 2023 ஆம் ஆண்டில் முடிவடைந்த நிதியாண்டில் பொதுத்துறை வங்கிகளின் ஒட்டு மொத்த இலாபமானது 1 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டியது.

- ❖ உலகளாவிய தனியார் பங்கீட்டு நிறுவனமான பிளாக்ஸ்டோன், சர்வதேச மணிகற்கள் ஆய்வு நிறுவனத்தில், சீனாவில் அமைந்துள்ள முதலீட்டு நிறுவனமான ஃபோசன் மற்றும் ரோலண்ட் லோரி கொண்டிருந்த 100% பங்குகளை வாங்கியுள்ளது.
- ❖ ஐஐடி மெட்ராஸ் கல்வி நிறுவனம் இஸ்ரேல் அரசாங்கத்துடன் கை கோர்த்து ‘இந்தியா - இஸ்ரேல் நீர் தொழில்நுட்ப மையத்தை’ நிறுவியுள்ளது.
- ❖ தமிழக அரசு 2023 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் தேதி முதல் குட்கா மீதான தடையை ஓராண்டுக் காலத்திற்கு நீட்டித்துள்ளது.
    - ○ தமிழகம் இத்தடையை 2016 ஆம் ஆண்டு அமல்படுத்தியது.
- ❖ சமீபத்தில் உலகத் தடகள அமைப்பினால் வெளியிடப்பட்ட ஆண்கள் ஈட்டி எறிதல் தர வரிசையில் ஒலிம்பிக் சாம்பியனான நீரஜ் சோப்ரா தனது வாழ்நாளில் முதல் முறையாக உலகின் நம்பர் 1 வீரர் ஆனார்.
- ❖ சீனா ஜப்பானைப் பின்னுக்குத் தள்ளி உலகின் முன்னணி கார் ஏற்றுமதியாளராக மாறி உள்ளது.
- ❖ பிக்ரம் சம்வத் நாட்காட்டியின் படி 2080 ஆம் ஆண்டை 'நேபாளத்திற்கு வருகை தரும் தசாப்தம்' என்றும், 2025 ஆம் ஆண்டைச் சுற்றுலாவுக்கான ஒரு சிறப்பு ஆண்டு என்றும் நேபாளம் அறிவித்துள்ளது.
- ❖ அயர்லாந்து நாடு மதுபானங்களின் முகப்புச் சீட்டில் புற்றுநோய் எச்சரிக்கைகள் மற்றும் கலோரி அளவு குறித்து அச்சிடப் பட வேண்டும் எனப் புதிய விதிகளை வகுத்து உள்ளது.
    - ○ இதுவே உலகில் முதல் முறை ஆகும்.
- ❖ இந்தியக் குடியரசுத் தலைவர் சென்னை உயர்நீதிமன்றத்தின் தற்காலிகத் தலைமை நீதிபதியாக நீதிபதி எஸ் வைத்தியநாதனை நியமித்து உள்ளார்.
    - ○ தற்போதையத் தற்காலிகத் தலைமை நீதிபதியான டி ராஜா ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இந்த நியமனம் செய்யப் பட்டுள்ளது.
- ❖ சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் மாநாட்டில், தமிழ்நாடு அரசு நிறுவனங்களுக்கும் சிங்கப்பூரில் உள்ள பல்வேறு அமைப்புகளுக்கும் இடையே ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) கையெழுத்தாகின.
- ❖ இந்தியக் குடியரசுத் தலைவர் ராஞ்சியில் புதிய ஜார்க்கண்ட் உயர் நீதிமன்ற வளாகத்தைத் திறந்து வைத்தார்.
- ❖ இந்தியா வானிலை முன்னறிவிப்பிற்காக 18 புதிய பெட்டா ஃப்ளாப் திறன் கொண்ட மீத்திறன் கணினிகளை அறிமுகப்படுத்த உள்ளது.
    - ○ வானிலை முன்னறிவிப்புகளின் துல்லியம் மற்றும் உறுதித் தன்மையினை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இ-செவ்வனம் தளம் என்னும் ஒற்றைச் சாளர அமைப்பில் 900க்கும் மேற்பட்டச் சேவைகளை வழங்குவதன் மூலம் கேரளா இந்தியாவின் முதல் முழு மின்-ஆளுமை கொண்ட மாநிலமாக மாறியுள்ளது.
- ❖ நெய்வேலி அனல் மின் நிலையத்தின் இரண்டாம் உற்பத்தி அலகுகள் முதல் முறையாக நிலக்கரியை லிக்னைட்டுடன் கலந்து மின் உற்பத்தி செய்யும் ஒரு செயல்முறையைத் தொடங்கியுள்ளன.

- ❖ இணை அதிகாரம் பெற்ற 11 கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ் வழிக் கட்டிடப் பொறியியல் மற்றும் இயந்திரப் பொறியியல் படிப்புகளை நிறுத்தும் ஒரு முடிவினை அண்ணா பல்கலைக்கழகம் திரும்பப் பெற்றுள்ளது.
  - ○ அண்ணா பல்கலைக்கழகமானது, 2010 ஆம் ஆண்டில் தமிழ் வழியில் இளங்கலைத் தொழில்நுட்பக் கல்விப் படிப்புகளை அறிமுகப்படுத்தியது.
- ❖ முன்னாள் அமைச்சரும், ஐந்து முறை காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினருமாக இருந்த U.T. காதர் என்பவர் கர்நாடக சட்டப் பேரவையின் புதிய சபாநாயகராக என்று ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
  - ○ காதர் (53) கர்நாடகச் சட்டசபையின் சபாநாயகராகப் பணியாற்ற உள்ள முதல் முஸ்லீம் தலைவர் ஆவார்.
- ❖ மதராஸ் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக சஞ்சய் விஜய்குமார் கங்காபூர்வாலா என்பவருக்குத் தமிழக ஆளுநரால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப் பட்டது.
- ❖ வேகூல் ஃபுட்ஸ் நிறுவனம் விவசாயிகளுக்கான (IITM's RASA) நிலையான மீளுருவாக்க வேளாண்மை தொழில்நுட்பக் கட்டமைப்பை விரிவுபடுத்த மதராஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்துடன் கை கோர்த்துள்ளது.
  - ○ வேகூல் ஃபுட்ஸ் இந்தியாவின் மிகப்பெரிய உணவு மற்றும் வேளாண் தொழில்நுட்பத் தளம் ஆகும்.
- ❖ தமிழகப் பால் வளத்துறை அமைச்சர் கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கும் விவேகானந்தர் பாறைக்கும் இடையே கண்ணாடிப் பாலம் அமைக்கும் பணியைத் தொடங்கி வைத்தார்.
- ❖ நிதி ஆயோக் அமைப்பின் 8வது ஆட்சிமன்றக் குழுக் கூட்டம் புதுதில்லியில் நடத்தப் பட்டது.
- ❖ ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் ஒரு உறுப்பினராக சுமன் சர்மா சமீபத்தில் நியமிக்கப்பட்டு உள்ளார்.
- ❖ சமீபத்தில் ராக் 'என்' ரோல் வகை பாடலின் ராணி என அழைக்கப்படும் பாப் பாடகி டினா டர்னர் சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் காலமானார்.
- ❖ அடுத்து நிகழவுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர், பௌத்தம், சீக்கியர் மற்றும் சமணம் ஆகிய சில சமயங்கள் மட்டுமே ஒரு விருப்பத் தெரிவாக எடுத்துக் கொள்ளப் படும்.
- ❖ 'சுய ஆட்சி கொண்டிராத பிரதேச மக்களுடனான சர்வதேச ஒற்றுமை வாரம்' மே 25 ஆம் தேதி முதல் மே 31 ஆம் தேதி வரை அனுசரிக்கப் படுகிறது.
- ❖ பாங்க் ஆஃப் மகாராஷ்டிரா வங்கியானது, 2023 ஆம் நிதியாண்டின் போது, நிகர வாராக் கடன்கள் மேலாண்மையில் 0.25% குறைவான நிகர வாராக் கடன்களுடன் முதலிடம் வகிக்கிறது.
- ❖ நேபாளத்தில் இரண்டாவது நீர்மின் நிலையத்தினை உருவாக்குவதற்கு இந்தியாவின் சட்லஜ் ஜல் வித்யுத் நிகாம் (SJVN) லிமிடெட் நிறுவனத்திற்கு நேபாளம் ஒப்புதல் அளித்து உள்ளது.
- ❖ இந்திய இராணுவத்தின் சப்த சக்தி படைப் பிரிவானது, ராஜஸ்தான் மற்றும் பஞ்சாபில் அமைந்த நாட்டின் மேற்கு எல்லையில் 'சுதர்சன் சக்தி 2023' என்றப் பயிற்சியினை மேற் கொண்டது.

# தமிழ்நாடு செய்திகள்


## தமிழ்நாடு – உலக மக்கள் சுகாதாரச் சேவையினைப் பெறும் இடம்

- முதல்வர் அவர்கள், இரண்டு நாட்கள் அளவிலான ஒரு மருத்துவ மதிப்பு சார் பயண மாநாட்டினைத் தொடங்கி வைத்தார்.
- இந்த நிகழ்ச்சி, 'தமிழ்நாடு - உலக மக்கள் சுகாதாரச் சேவை பெறும் இடம்' என்று அழைக்கப் படுகிறது.
- இந்த நிகழ்ச்சியினை சுற்றுலா மற்றும் சுகாதாரத் துறைகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.
- இது 21 மூல ஆதார நாடுகளில் உள்ள மருத்துவமனைகளை தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனைகளுடன் ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஏற்கனவே தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவச் சுற்றுலாவின் மையம் எனக் கருதப் படுகின்றது.

## நிகர நேரடி வரி வசூல்

- 2022-23 ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பிராந்தியங்களின் நிகர நேரடி வரி வசூலானது ஒரு லட்சம் கோடியைக் கடந்தது.
- இந்த ஆண்டு பதிவான நிகர வரி வசூல் 1,08,364 கோடி ரூபாய் மற்றும் வளர்ச்சி விகிதம் 20.20% ஆகும்.
- நிதிநிலை அறிக்கையில் விதிக்கப்படும் இலக்கு எட்டப் படுவது இது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகும்.

## வங்காள விரிகுடாவில் டாக்டர் கலைஞருக்கான பேனா வடிவிலான நினைவிடம்



- மத்தியச் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் நிபுணர் மதிப்பீட்டுக் குழுவானது (EAC) பேனா வடிவ நினைவிடத்தை அமைப்பதற்கான முன்மொழிதலுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது கிட்டத்தட்ட சுமார் 15 நிபந்தனைகளுடன் கடலோர ஒழுங்காற்று மண்டலத்தின் அனுமதியினைப் பெறுவதற்கு (CRZ) பரிந்துரைத்துள்ளது.
- எனினும் கடலோர ஒழுங்காற்று மண்டலத்தின் அனுமதியானது தெற்கு மண்டலத்தின் தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் இறுதி உத்தரவிற்கு உட்பட்டது ஆகும்.
- 'முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் பேனா' நினைவகம் என்ற இந்தத் திட்டமானது 81 கோடி ரூபாய் செலவில் கட்டமைக்கப்பட உள்ளது.

## 2034 ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம்

- இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பின் (FICCI) தேசிய செயற்குழுக் கூட்டத்தினை தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- '2030-31 ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் கொண்ட ஒரு பொருளாதாரமாக மாற்றச் செய்யும் முயற்சியில் தமிழகத்தின் முன்னேற்றத்தை விரைவுபடுத்துதல்' என்ற இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பு - டெலாய்ட் இணைந்து உருவாக்கிய தகவல் கட்டுரையையும் அவர் வெளியிட்டார்.
- இந்தியாவில் மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய மாநிலப் பொருளாதாரமாக தமிழ்நாடு உள்ளது.
- குஜராத் மற்றும் மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக இந்தியாவின் (மதிப்பு அடிப்படையில்) மூன்றாவது பெரிய சரக்கு ஏற்றுமதியாளராக தமிழ்நாடு மாநிலம் விளங்குகிறது.
- தமிழ்நாடு அதன் தற்போதைய 10% சராசரி வளர்ச்சியைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்பதைக் கருத்தில் கொண்டால், 2034 ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கினை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இருப்பினும், 2031 ஆம் நிதியாண்டில் இந்த இலட்சிய இலக்கினை அடைவதற்குத் தமிழக மாநிலம் ஆண்டிற்குச் சராசரியாக 16.5% வளர்ச்சியினைக் கொண்டிருக்க வேண்டும்.

## சென்னையில் மே தினக் கொண்டாட்டத்தின் நூற்றாண்டு விழா

- மதராஸ் மாகாணத்தில் (தற்போதைய சென்னை) முதலாவது மே தினமானது, 1923 ஆம் ஆண்டில் தொழிற்சங்கத் தலைவர் M.சிங்காரவேலு அவர்களால் கொண்டாடப்பட்டது.
- தொழிலாளர் கிசான் கட்சியானது மதராஸ் மாகாணத்தில் மே தினக் கொண்டாட்டங்களை அறிமுகப் படுத்தியது.
- இந்தக் கூட்டத்திற்கு தோழர் சிங்காரவேலர் தலைமை தாங்கினார்.
- 'சிந்தனைச் சிற்பி' என்று அறியப்பட்ட இவர், தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் ஆவார்.
- 1925 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், கான்பூர் நகரில் நடைபெற்ற முதல் கம்யூனிஸ்ட் மாநாட்டிற்கு அவர் தலைமை தாங்கினார்.
- தமிழகத்தில் 1967 ஆம் ஆண்டில், மே தினத்தினை முதன்முதலில் விடுமுறை நாளாக அறிவித்தது தி.மு.க. அரசாகும்.




## வரி சாரா வருவாய் அதிகரிப்பு

- 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் வரி சாரா வருவாயில் 32% அதிகரிப்பு பதிவாகி உள்ளது.
- இது நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகபட்சமாகும்.
- முன்னதாக, 2018-19 ஆம் ஆண்டில் தமிழக அரசின் வரி சாராத வருவாயில் 30% அளவு அதிகரிப்பானது பதிவானது.
- மாநிலத்தின் வருவாய் ஆதாரங்கள் பின்வருமாறு:
  - வரி வருவாய் (சொந்த வரி வருவாய் மற்றும் மத்திய அரசு வரிகள்/கட்டணங்களில் உள்ள மாநில அரசின் பங்கு);
  - வரி சாராத வருவாய்; மற்றும்
  - இந்திய அரசின் மானியங்கள்
- வரி சாராத வருவாய் ஆனது பின்வருவனவற்றை உள்ளடக்கியது;
  - வட்டி வருவாய்;
  - ஈவுத் தொகை மற்றும் இலாபம்;
  - சுரங்கம் மற்றும் பிற துறை சார்ந்த வருவாய்கள்.

### Four-year high figure


Tamil Nadu's own non-tax revenue has been put at ₹20,223.51 crore in the budget estimates for 2023-24

- This is a 32.10% increase from the revised estimates for 2022-23
- For 2022-23, the estimates had been revised to ₹15,309 crore. Based on this, the State will see an increase of 26.3% in this revenue from ₹12,117 crore in 2021-22
- In 2021-22, the State's non-tax revenue increased by 16.26% from ₹10,422 crore in 2020-21
- The State had seen over 30% growth in its non-tax revenue in 2018-19
- The State had posted a lower non-tax revenue than the budget estimates in 2017-18, 2019-20, 2020-21 and 2021-22, according to a CAG report



## அதிகக் கடன் பெறும் மாநிலங்கள்

- இந்திய ரிசர்வ் வங்கியின் தகவலின் படி, தமிழ்நாடு தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக கடன் பெறும் மாநிலங்களில் முதலிடத்தில் உள்ளது.
- கடந்த 2022-23 ஆம் நிதியாண்டின் முதல் 11 மாதங்களில் தமிழகம் சுமார் ரூ.68 ஆயிரம் கோடிகள் அளவிற்குக் கடனைப் பெற்றுள்ளது.
- தமிழகத்திற்கு அடுத்தபடியாக ஆந்திரா ரூ.51,860 கோடியும், மகாராஷ்டிரா ரூ.50 ஆயிரம் கோடியும் கடனாகப் பெற்றுள்ளன.
- கடந்த 2 நிதியாண்டுகளிலும் அதிகக் கடன் பெற்ற மாநிலமாக தமிழ்நாடு இருந்தது.
- இந்த இரண்டு நிதியாண்டுகளுடன் ஒப்பிடும்போது, 2022-23 ஆம் நிதியாண்டில் தமிழகத்தின் கடன் சற்று குறைந்துள்ளது.
- அதே நேரத்தில், மத்திய நிதிக் குழு பரிந்துரைத்தக் கடன் தொகையை விட, தமிழகம் குறைவாகவே கடன் பெற்றுள்ளது.




## பருவநிலை மாற்றம் குறித்த தமிழ் சொற்களஞ்சியம்

- பருவநிலை மாற்றம் குறித்த தமிழ்ச் சொற்களஞ்சியத்தினை தமிழக அரசு வெளியிட்டு உள்ளது.
- இது வேகமாக அதிகரித்து வரும் பருவநிலை சார்ந்த பல்வேறு நிகழ்வுகளின் சொற் களஞ்சியத்தினை விரிவுபடுத்த உதவும்.
- இது பருவநிலை மாற்றம் தொடர்பான பல தகவல்களைப் பிராந்திய மொழிகளில் அணுகுவதற்கான வாய்ப்பினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கல்லூரிகளுக்கான புதிய திட்டம்

- தமிழ்நாடு மாநில உயர்கல்வி சபையானது புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்கு கல்லூரிகளை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022-23 ஆம் கல்வியாண்டிற்கான 'பகுதியளவு நிதி உதவி' திட்டத்தின் கீழ், மே 22 ஆம் தேதிக்கு முன்னதாகப் பயிலரங்கங்களை நடத்துமாறு பல்கலைக்கழகங்கள், அரசு மற்றும் உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு இந்தச் சபை அழைப்பு விடுத்துள்ளது.
- இந்த இரண்டு நாட்கள் அளவிலான சர்வதேச மாநாட்டினை நடத்துவதற்கு கல்லூரிகளுக்கு 40,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

## நில ஒருங்கிணைப்பு (சிறப்பு திட்டங்களுக்கான) சட்டம்

- தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்புத் திட்டங்களுக்கான) சட்டத்தினை இயற்றச் செய்வதற்கான ஒரு மசோதாவினை தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் ஏற்றுக் கொண்டு உள்ளது.
- பெரிய திட்டங்களுக்காக அரசின் நில ஒருங்கிணைப்பு செயல்முறையை நெறிமுறைப் படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நீர்நிலைகளை உள்ளடக்கிய நிலங்களின் பரிமாற்றச் செயல்முறை மற்றும் அத்தகைய நீர்நிலைகளின் பாதுகாப்பு ஆகியவற்றை ஒழுங்குபடுத்த இது முயல்கிறது.

## அதிக எண்ணிக்கையிலான உயிரிழந்த நபர்களின் உடலுறுப்புத் தானம்

### Registering an upturn

The table shows the number of donors in the State since the start of the Deceased Donor Organ Transplantation Programme

| Year | Donors | | | Year | Donors | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Govt. | Private | Total | | Govt. | Private | Total |
| 2008 | - | 7 | 7 | 2017 | 29 | 131 | 160 |
| 2009 | 9 | 50 | 59 | 2018 | 27 | 113 | 140 |
| 2010 | 29 | 58 | 87 | 2019 | 22 | 105 | 127 |
| 2011 | 19 | 51 | 70 | 2020 | 5 | 50 | 55 |
| 2012 | 19 | 64 | 83 | 2021 | 5 | 55 | 60 |
| 2013 | 18 | 112 | 130 | 2022 | 51 | 105 | 156 |
| 2014 | 19 | 116 | 135 | 2023 (Jan-April) | 13 | 37 | 50 |
| 2015 | 14 | 141 | 155 | | | | |
| 2016 | 27 | 158 | 185 | | | | |

The table shows the government hospitals that had the most number of donors from Janurary to December 2022

| Hospital | Donors |
|---|---|
| Rajiv Gandhi Government General Hospital, Chennai | 16 |
| Government Rajaji Hospital, Madurai | 5 |
| Mahatma Gandhi Memorial Hospital, Tiruchi | 5 |
| Government Mohan Kumaramangalam Medical College Hospital, Salem | 5 |
| Goverment Kilpauk Medical College Hospital, Chennai | 4 |




Source: Transplant Authority of Tamil Nadu

- தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில், 2022 ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான உயிரிழந்த நபர்களின் உடலுறுப்புத் தானம் (51) பதிவு செய்யப் பட்டுள்ளது.

- தமிழக மாநிலத்தில் உயிரிழந்த நபர்களின் உறுப்பு மாற்றுத் திட்டமானது 2008 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டில் பதிவான உயிரிழந்த நபர்களின் 156 உடலுறுப்புத் தானங்களில் 51 தானங்கள் அரசு மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்பட்டன.
- தமிழகத்தில் இதுவரையில் பதிவான அதிகபட்ச உடலுறுப்புத் தானமானது 2016 ஆம் ஆண்டில் பதிவான 185 என்ற எண்ணிக்கையாகும்.

## உலக முதலீட்டாளர் சந்திப்பு

- தமிழ்நாடு மாநிலத்தின் தொழில்துறைகள் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையானது 2024 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பிற்காகத் திறன்மிக்க முதலீட்டாளர்களை சந்திக்கத் தொடங்கியுள்ளது.
- இது நோர்டிக் பிராந்திய நாடுகளுக்கான தனது முதல் பயணத்தினை மேற்கொண்டு உள்ளது.
- தமிழ்நாடு அரசானது, 2024 ஆம் ஆண்டு ஜனவரி 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் சந்திப்பினைச் சென்னையில் நடத்தவுள்ளது.
- தற்போதைய அரசாங்கம் நடத்த உள்ள முதல் உலக முதலீட்டாளர் சந்திப்பு இதுவாகும்.
- முந்தைய இரண்டு சந்திப்புகளும் முந்தைய மாநில அரசாங்கத்தின் ஆட்சியின் போது 2015 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றன.




## 'நம்ம ஊரு சூப்பரு' பிரச்சாரம்

- கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகமானது, 'நம்ம ஊரு சூப்பரு' என்ற முன்னெடுப்பினைச் செயல்படுத்தி உள்ளது.
- அந்த மாவட்டத்தின் கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் சிறப்பான சுகாதாரச் சூழல்கள் மற்றும் தூய்மை சூழல்கள் ஆகியவற்றினை உறுதி செய்வதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குடிநீர், சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதில் இந்தப் பிரச்சாரம் கவனம் செலுத்தும்.




## திடக்கழிவு மேலாண்மையில் முன்மாதிரி நகரப் பஞ்சாயத்து


- செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கருங்குழி நகரப் பஞ்சாயத்து ஆனது, திடக்கழிவு மேலாண்மையில் ஒரு முன்மாதிரியான நகரப் பஞ்சாயத்து என்ற அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது.
- குடிமக்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தச் செய்யும் வகையில், திடக்கழிவு மேலாண்மையில் ஒரு சிறந்த நடைமுறையினை மேற்கொள்வதற்காக வேண்டி இந்த நகரப் பஞ்சாயத்து தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- இந்த நகரப் பஞ்சாயத்து ஆனது, பல்வேறு கரிமக் கழிவுகளில் இருந்து மாதந்தோறும் 4,000 முதல் 5,000 கிலோ வரை உரத்தினை உற்பத்தி செய்துள்ளது.
- மறுசுழற்சி செய்யப்பட்ட கழிவு நீரானது, சாலையோர மரங்கள், மியாவாக்கி காடுகள் மற்றும் பஞ்சாயத்து நிர்வாகத்தினால் பராமரிக்கப்படும் பல்வேறு பிற தாவரங்களுக்கு பயன்படுத்தப் படுகிறது.

## தமிழகத்தின் உச்சகட்ட மின்சாரத் தேவை

- 2027-28 ஆம் ஆண்டிற்குள் தமிழகத்தின் உச்சகட்ட மின்சாரத் தேவையானது 23,000 மெகா வாட்டாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இது 2022-23 ஆம் ஆண்டில் உள்ள 17,306 மெகாவாட் என்ற அளவிலிருந்து 5.8% என்ற கூட்டு வருடாந்திர விகிதத்தில் உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- 2027-28 ஆம் ஆண்டிற்கான தென் பிராந்தியத்தின் உச்சகட்ட மின்சாரத் தேவையானது 61 ஜிகாவாட்டிலிருந்து (GW) சுமார் 87 GW ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இப்பகுதியின் நிறுவப்பட்ட உற்பத்தித் திறன் 122 ஜிகாவாட்டிலிருந்து சுமார் 228 GW ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- தென் மாநிலங்களில் அதிகபட்ச உச்சகட்ட மின்சாரத் தேவை கொண்ட ஒரு மாநிலமாக தமிழ்நாடு விளங்கும்.
- ஆந்திரப் பிரதேச மாநிலமானது அதிகபட்சமாக ஆண்டிற்கு சுமார் 7.7% வளர்ச்சியைக் காணும்.

## 2023 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மாநில வாரியத்தின் 12 ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள்

- இந்த ஆண்டு தமிழ்நாட்டில் 12 ஆம் வகுப்பு தேர்வெழுதிய 8,03,385 மாணவர்களில் 7.5 லட்சம் மாணவர்கள் தேர்ச்சி அடைந்து உள்ளனர்.
- திண்டுக்கல்லைச் சேர்ந்த தினக்கூலி தொழிலாளியின் மகள் எஸ்.நந்தினி 12 ஆம் வகுப்பு தமிழ்நாடு மாநிலக் கல்வி வாரியத்தின் +2 தேர்வில் 600க்கு 600 மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிந்து உள்ளார்.
- 2023 ஆம் ஆண்டில்  மொத்தத் தேர்ச்சி சதவீதம்: 94.03 சதவீதம் ஆகும்.
- மாணவிகளின் தேர்ச்சி சதவீதம்: 96.38 சதவீதம் ஆகும்.
- மாணவர்களின் தேர்ச்சி சதவீதம்: 91.45 சதவீதம் ஆகும்.
- 97.85 சதவீதத்துடன் விருதுநகர்  மாவட்டம் மாவட்ட வாரியாக முதலிடம் பிடித்துள்ளது.
- இதில் விருதுநகர் மாவட்டத்திற்கு அடுத்தபடியாக திருப்பூர் மாவட்டம் (97.79%) மற்றும் பெரம்பலூர் மாவட்டம் (97.59%) இடம் பெற்று உள்ளது.
- தமிழ்நாடு +2 தேர்வு முடிவுகள் 2023 அறிக்கைகளின்படி, தமிழ்நாட்டில் மொத்தம் 326 பள்ளிகள் 100 சதவீத தேர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.
- ஒன்றியப் பிரதேசமான புதுச்சேரியில் தமிழ்நாடு மாநிலக் கல்வி வாரியம் நடத்தும் பள்ளிகள்  93.45 சதவீதம் தேர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.
- 2022 ஆம் ஆண்டில்  93.80% மாணவர்கள் தேர்வில் தேர்ச்சி பெற்றனர்.




## தமிழக அமைச்சரவை மாற்றம்

- தமிழக பால் மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசருக்குப் பதிலாக மனோ தங்கராஜ் நியமிக்கப்பட்டார்.
- பழனிவேல் தியாகராஜனின் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை இலாகாக்கள் தங்கம் தென்னரசுவுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன.
- திரு. பழனிவேல் ராஜன் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகளுக்கான புதிய அமைச்சராக இனி இருப்பார்.
- இது வரை திரு.தென்னரசு வசமிருந்த தொழில்துறை இலாகாவை இனி டி.ஆர்.பி.ராஜா நிர்வாகிப்பார்.

- திரு.தென்னரசு வசமிருந்த தமிழ் வளர்ச்சித் துறையானது செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் எம்.பி.சாமிநாதனுக்கு கூடுதலாக ஒதுக்கப் பட்டது.



| Ministry | Previous Minister | New Minister | Ministry | Previous Minister | New Minister |
|---|---|---|---|---|---|
| Industries | Thangam Thennarasu | T.R.B. Rajaa | Information Technology and Digital Services | T. Mano Thangaraj | Palanivel Thiaga Rajan |
| Finance and Human Resources Management | Palanivel Thiaga Rajan | Thangam Thennarasu | Milk and Dairy Development | S.M. Nasar | T. Mano Thangaraj |
| Tamil Development | Thangam Thennarasu | M.P. Saminathan | Tamil Nadu cabinet reshuffle - May 11, 2023 | | |

## தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை

- குடிமக்கள் மற்றும் பெரு நிறுவனங்களுடன் இணைந்து மாநிலத்தில் விளையாட்டுத் துறையினை மேம்படுத்துவதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்த அறக்கட்டளையின் பணியானது, விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு, மேம்படுத்துதல் மற்றும் ஆதரித்தல் ஆகியவையாகும்.
- இது அதிநவீன விளையாட்டு உள்கட்டமைப்பு மற்றும் பல விளையாட்டு வசதிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மறைந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் சிலைகள்

- மறைந்த சுதந்திரப் போராட்ட வீரர் V.O. சிதம்பரனார், மறைந்த சமூக சீர்திருத்தவாதி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் மற்றும் மறைந்த மருத்துவர்-சட்டமன்ற உறுப்பினர் முத்துலட்சுமி ரெட்டி ஆகியோரின் சிலைகளைத் தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- V.O. சிதம்பரனார் அவர்களின் சிலையானது கோவையில் உள்ள V.O.C. பூங்காவில் நிறுவப் பட்டுள்ளது.
- மூவலூர் ராமாமிர்தம் அம்மையாரின் சிலை மயிலாடுதுறையில் நிறுவப் பட்டுள்ளது.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் சிலையானது புதுக்கோட்டையில் நிறுவப் பட்டுள்ளது.
- மேலும் அவர், மதராஸ் மாகாணத்தின் முன்னாள் முதல்வர் P.சுப்பராயன் அவர்களின் நினைவு மண்டபத்தினைக் கட்டமைப்பதற்கான அடிக்கல்லையும் நாட்டினார்.

## தமிழ்நாட்டில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளின் முக்கியப் பணியிட மாற்றம்

- T.உதயச்சந்திரன் நிதித்துறையின் முதல் நிலைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தற்போதைய நிதிச் செயலாளரான N.முருகானந்தம் முதலமைச்சரின் முதன்மைச் செயலாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளரான J. ராதாகிருஷ்ணன் தற்போது சென்னைப் பெருநகர மாநகராட்சியின் புதிய ஆணையராகச் செயல்படுவார்.
- P.அமுதா, தற்போது உள்துறை, மதுவிலக்கு மற்றும் கலால் துறையின் முதன்மைச் செயலாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்தப் பதவியை வகிக்கும் நான்காவது பெண் திருமதி அமுதா ஆவார்.
- சாந்தா ஷீலா நாயர் தமிழ்நாட்டின் உள்துறைச் செயலாளராகப் பதவியேற்ற முதல் பெண்மணி ஆவார்.




## i-தமிழ்நாடு தொழில்நுட்ப (iTNT) மையம்





- தமிழ்நாடு முதலமைச்சர் i-தமிழ்நாடு தொழில்நுட்ப (iTNT) மையத்தினை காணொளி வாயிலாக திறந்து வைத்தார்.

- iTNT மையமானது, இந்த மாநிலத்தில் உள்ள சிக்கலான சவால்களைத் தீர்ப்பதற்காக செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல் மற்றும் தொடர்சங்கிலித் தொழில் நுட்பங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை ஒருங்கிணைக்கும்.
- இந்த மையமானது சென்னை அண்ணாப் பல்கலைக்கழக வளாகத்தில் 54.61 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசானது இதற்கு 50% நிதியை அளித்துள்ளது.
- இதற்கு தமிழக அரசாங்கமானது 37 சதவீதமும் மற்றும் தொழில்துறைகள் 13 சதவீதமும் பங்களித்துள்ளன.

## 2023 ஆம் நிதியாண்டில் தமிழகத்தின் நிதிப் பற்றாக்குறை

- 2022-23 ஆம் நிதியாண்டில் தமிழகத்தின் நிதிப் பற்றாக்குறையானது 72,418.99 கோடி ரூபாயாக இருந்தது.
- நிதிப் பற்றாக்குறை என்பது மொத்த வருவாய்க்கும் மொத்தச் செலவினத்திற்கும் உள்ள வித்தியாசமாகும்.
- மாநில அரசானது 2023-24 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்யும் போது, அதன் நிதிப் பற்றாக்குறை மதிப்பீட்டினை 2022-23 ஆம் ஆண்டிற்கான 74,524.64 கோடியாகத் திருத்தியமைத்தது.
- 2022-23 ஆம் ஆண்டில் 27,549.09 கோடியாக இருந்த வருவாய்ப் பற்றாக்குறையானது, வரவுகளை விட செலவினம் அதிகமாக இருப்பதைக் குறிக்கிறது.
- 2022-23 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த வரவினங்கள் (வருவாய் ரசீதுகள் மற்றும் மூலதன ரசீதுகள் உட்பட) 2,43,133.76 கோடி ரூபாயாக இருந்தது.
- 2022-23 ஆம் ஆண்டில் மொத்தச் செலவினங்கள் (வருவாய் மற்றும் மூலதனச் செலவு, நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் உட்பட) 3,15,552.75 கோடி ரூபாய் ஆகும்.
- 2022-23 ஆம் ஆண்டில் மொத்த வருவாய் வரவினங்கள் 2,42,013.85 கோடி ரூபாயாக இருந்தது.
- மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR), மத்திய வரிகளில் பங்கு, வரி அல்லாத வருவாய், உதவி மானியங்கள் மற்றும் பங்களிப்புகள் ஆகியவை இதில் அடங்கும்.
- 2022-23 ஆம் ஆண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 1,4,1196.22 கோடி ரூபாயாக இருந்தது.
- மாநிலத்தின் மொத்த வருவாயில் 70 சதவிதத்துக்கு அதிகமாக மாநிலத்தின் சொந்த வரி வருவாய் உள்ளது.
- மாநில சரக்கு மற்றும் சேவை வரி (GST), முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணங்கள், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் மதுபானம் மீதான மதிப்பு கூட்டப்பட்ட வரிகள் (VAT), மதுபானம் மற்றும் நில வருவாய் மீதான கலால் வரி ஆகியவை மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் முக்கியக் கூறுகளாக உள்ளது.
- வருவாய்ச் செலவினங்களில் அரசு ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதியம் மற்றும் ஓய்வு காலப் பலன்கள், செயல்பாடுகள் மற்றும் பராமரிப்புக்கானச் செலவுகள், நிலுவையில் உள்ள கடன்களுக்கான வட்டி, மானியங்கள் மற்றும் துணை மானியங்கள், ஊக்கத்தொகைகள், பங்களிப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரப் பகிர்வு உட்பட ஆகியவை அனைத்தும் இதில் உள்ளடங்கும்.




## ஜல்லிக்கட்டு தொடர்பான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு

- காளைகளை அடக்கும் விளையாட்டான ஜல்லிக்கட்டு, மாட்டுவண்டிப் பந்தயம் மற்றும் எருமைப் பந்தய விளையாட்டான கம்பாலா போன்றவற்றை அந்தந்தப் பகுதிகளில் நடத்துவதற்காக தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் இயற்றியச் சட்டங்களின் செல்லுபடித் தன்மையை உச்சநீதிமன்றம் உறுதி செய்து உள்ளது.
- 1960 ஆம் ஆண்டு விலங்குகள் வதை தடுப்புச் சட்டத்தினை மீறுவதாகக் கூறி இந்த விளையாட்டுகளை 2014 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் தடை செய்தது.
- விலங்குகள் வதை தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு திருத்தம்) 2017 மற்றும் விலங்குகள் வதை தடுப்பு (ஜல்லிக்கட்டுப் போட்டிகளை நடத்துதல்) விதிகள் 2017 ஆகியவற்றை தமிழ்நாடு நிறைவேற்றியது.



**TWISTS IN BULL TALE**

➤ SC **bans jallikattu in 2014.** In 2016, it stays notification by Centre reversing the ban

➤ **Widespread protests** in TN centred around Chennai's Marina beach. In 2017, TN assembly **amends Prevention of Cruelty to Animals Act to allow jallikattu** on grounds of 'cultural heritage'

➤ On Thursday, **constitution bench of SC holds amendments valid.** PETA India says it's **exploring legal remedies to protect bulls** after the verdict

- விலங்கு வதையினைத் தடுப்பதற்கான சட்டங்கள் அரசியலமைப்பில் உள்ள ஏழாவது அட்டவணையின் பொதுப் பட்டியலின் (பட்டியல் 3) 17வது உள்ளீடுடன் தொடர்புடையப் பிரிவாகும்.
- "ஏறு தழுவுதல்" என்றும் அழைக்கப்படும், "ஜல்லிக்கட்டு" போட்டியானது பொங்கல் அறுவடைத் திருவிழாவின் ஒரு பகுதியாக தமிழகத்தில் நடத்தப்படும் காளைகளை தழுவும் விளையாட்டுப் போட்டியாகும்.
- கர்நாடகாவில் நவம்பர் மற்றும் மார்ச் மாதங்களில் நடத்தப்படும் கம்பாலா என்ற பந்தயமானது ஒரு ஜோடி எருமை மாடுகளை ஒரு கலப்பையில் கட்டி, ஒருவரால் நடத்தி உழப்படும் போட்டியாகும்.

## மூன்று சிறிய டைடல் தகவல் தொழில்நுட்ப நிறுவனப் பூங்காக்கள்

- சேலம், தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் அமைக்கப்பட உள்ள 'சிறிய டைடல் தகவல் தொழில்நுட்ப நிறுவனப் பூங்காங்களுக்கான' அடிக்கல் நாட்டு விழாவினை தமிழக முதல்வர் அவர்கள் காணொளி வாயிலாக தொடங்கி வைத்தார்.
- சேலம் மாவட்டத்தின் ஓமலூர் தாலுக்காவிலும், தஞ்சாவூர் மாவட்டத்தின் பிள்ளையார் பட்டியிலும், தூத்துக்குடி மாவட்டத்தின் மீளவிட்டான் என்ற இடத்திலும் இந்த மூன்று டைடல் தகவல் தொழில்நுட்ப நிறுவனப் பூங்காக்கள் அமைக்கப்பட உள்ளன.




## ஜான் சுலிவனின் பிறந்தநாள்



- முன்னாள் பிரிட்டிஷ் அரசின் நிர்வாகியான ஜான் சுலிவனின் 234வது பிறந்தநாள் ஆனது ஊட்டியில் கொண்டாடப்பட்டது.
- 1820 ஆம் ஆண்டுகளில் நீலகிரி மலைச்சரிவுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு சார்ந்த காலனித்துவப் பயணத்தினை அவர் தலைமையேற்று வழிநடத்தினார்.
- இவர் 1815 மற்றும் 1830 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் கோவை ஆட்சியாளராக இருந்தார்.
- ஊட்டி ஏரியை உருவாக்கும் முயற்சியில் இவர் முன்னோடியாக திகழ்ந்தார்.

## காசநோய் தடுப்புச் சிகிச்சைக்கான புதிய குறுகியகால சிகிச்சை முறை

- தமிழ்நாடு காசநோய் உச்சி மாநாடானது சமீபத்தில் நடைபெற்றது.
- இந்த உச்சி மாநாட்டில், சுகாதார அமைச்சர் காசநோய் தடுப்புச் சிகிச்சைக்கான 3HP எனப்படும் புதிய குறுகிய கால சிகிச்சை முறையை அறிமுகப் படுத்தினார்.
- மாநில உத்திசார் திட்டம் 2.0 மற்றும் காசநோய் விழிப்புணர்வு ஒளிப்படக்காட்சியையும் அவர் வெளியிட்டார்.
- காசநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் வீடுகளுக்கு வழங்கச் செய்வதற்காக என்று மருந்துகளைக் கொள்முதல் செய்த இந்தியாவின் முதல் மாநிலம் தமிழகமாகும்.

## பொற்பனைக் கோட்டையில் அகழாய்வு



- தமிழக மாநிலத் தொல்லியல் துறையானது, பொற்பனைக்கோட்டையில் அகழாய்வுப் பணிகளைத் தொடங்கியது.
- இது கிராமத்தில் உள்ள ஒரு பழமையான கோட்டை குறித்தத் தகவல்களைக் கண்டறிய முயல்கிறது.
- இத்தளமானது புதுக்கோட்டை நகருக்கு கிழக்கே 6.5 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.
- தமிழக மாநிலத் தொல்லியல் துறையானது இந்த ஆண்டில் அகழ்வாராய்ச்சிகளைத் தொடங்கியப் புதிய தளங்களில் இதுவும் ஒன்றாகும்.
- இந்த பழங்கால நிலப்பரப்பில், 3 - 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நினைவு (நடுகல்) கல் வடிவில் உள்ள பழமையான கற்காலச் சான்றுகள் இந்தத் தளத்தில் கண்டறியப் பட்டு உள்ளன.
- இது பூலாங்குறிச்சி கல்வெட்டின் சமகாலத்தியக் கல்வெட்டாக அறியப்படுகிறது.

- இந்த நடுகல்லானது, மாவீரன் கனங்குமரனுக்காக எழுப்பப்பட்டது.
- இவர் பொன்கொங்கர் விண்ணகோன் என்பவரால் இந்தக் கிராமத்தின் மீது நடத்தப் பட்ட கால்நடை வேட்டைத் தாக்குதலில் இறந்தச் சுற்றுப் படை வீரர் ஆவார்.
- இந்தச் சிதிலமடைந்தக் கோட்டையானது கி.பி. 13-14 ஆம் நூற்றாண்டில் கட்டப் பட்டு இருக்கலாம்.

## தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு உருவாக்கம் 2022-23

- 2022-23 ஆம் நிதியாண்டில் (FY) தமிழ்நாட்டின் முறைசார் தொழில் துறையில் 14,05,171 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- இது 2021-22 நிதியாண்டில் உருவாக்கப்பட்ட 12,84,986 வேலைவாய்ப்புகளை விட சுமார் 9.4% அதிகரித்துள்ளது.
- தமிழ்நாட்டில், 2022-23 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட 3,76,872 வேலை வாய்ப்புகளில் 18 முதல் 21 வயதுக்குட்பட்டவர்களின் சேர்க்கையானது அதிகபட்சமாக காணப்பட்டது.
- 22 முதல் 25 வயதுப் பிரிவில், 2022-23 ஆம் ஆண்டில் 3,6,8981 வேலைவாய்ப்புகள் சேர்க்கப் பட்டுள்ள நிலையில் அதைத் தொடர்ந்து 35 வயதுக்கு மேற்பட்டவர் பிரிவில் 2,44,891 வேலை வாய்ப்புகள் சேர்க்கப்பட்டன.
- மகாராஷ்டிரா, தமிழ்நாடு, கர்நாடகா, ஹரியானா மற்றும் குஜராத் ஆகியவை மார்ச் மாதத்தில் நிகர ஆட்சேர்க்கையில் முன்னணியில் உள்ள முதல் ஐந்து மாநிலங்களாகும்.
- ஒட்டு மொத்த நிகர ஆட்சேர்க்கையில் இந்த மாநிலங்களின் பங்கானது 58.68% ஆக இருந்தது.
- 2021-22 ஆம் ஆண்டில் 10.5% ஆக இருந்த ஒட்டுமொத்த நிகர ஆட்சேர்க்கையில் தமிழகத்தின் பங்கானது 2022-23 ஆம் ஆண்டில் 10.1% ஆகக் குறைந்துள்ளது.

## TuTr ஹைப்பர்லூப் புத்தொழில் காப்பு




- TuTr ஹைப்பர்லூப் எனப்படும் புத்தொழில் நிறுவனத்திற்கு சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் வழங்கியுள்ளது.
- இது ஹைப்பர்லூப் தொழில்நுட்பத்தில் அறிவுசார் சொத்துக்களை மேம்படுத்துவதற்கு அந்த நிறுவனத்திற்கு உதவும்.
- TuTr என்ற தொழில்நுட்பத்தினை மேம்படுத்தவும் செயல்படுத்துவதற்கும் டாட்டா எஃகு நிறுவனத்துடன் கை கோர்த்துள்ளது.

- TuTr நிறுவனத்தின் நோக்கமானது, வாடிக்கையாளர்களுக்கு விரைவான மற்றும் மிக நம்பகமான "தேவைக்கு ஏற்ற" வகையில் மலிவு விலையிலான ஒரு போக்குவரத்தினை வழங்குவதாகும்.
- TuTr ஹைப்பர்லூப், இந்தியா மற்றும் ஐரோப்பா இடையே இயங்கக்கூடிய ஹைப்பர்லூப் தொழில்நுட்பத்திற்காக ஐரோப்பிய நிறுவனமான ஹர்தட் ஹைப்பர்லூப் டன் என்ற ஒரு நிறுவனத்துடன் கை கோர்த்துள்ளது.

## தமிழ் - கட்டாய கூடுதல் மொழி

- தமிழ்நாடு தனியார் பள்ளிகள் இயக்குனர், பல்வேறு வாரியங்களுடன் இணைக்கப்பட்ட அனைத்துத் தனியார் பள்ளிகளிலும் பயிலும் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களில், அவரவரின் வாரியத் தேர்வுக்கான விருப்பத் தெரிவுகளில், தமிழை ஒரு மொழியாக தேர்வு செய்யாத மாணவர்களுக்கு இது பொருந்தும் என்று அறிவித்துள்ளார்.
- 2024-25 ஆம் கல்வியாண்டில் தமிழ் மொழியானது ஒரு கூடுதல் கட்டாய மொழியாக கட்டாயமாக கற்பிக்கப்பட வேண்டும்.
- இந்த அரசாணையானது 2006 ஆம் ஆண்டு தமிழ் மொழி கற்றல் என்ற ஒரு சட்டத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டது.
- பாடத்திட்டம் மற்றும் தேர்வு முறை ஆகியவை தனியார் பள்ளிகளின் இயக்குனரால் தீர்மானிக்கப் படும்.

## மாவட்டங்களுக்குப் புதிய அமைச்சர்கள் பொறுப்பு

- தமிழக மாநிலத்தில் நலத் திட்டங்களை ஒருங்கிணைக்கவும், திட்டங்களை விரைவுப் படுத்தவும், அவை செயல்படுத்தப் படுவதைக் கண்காணிக்கவும் வேண்டி குறிப்பிட்ட சில மாவட்டங்களுக்குப் பொறுப்பான சில அமைச்சர்களை மாநில அரசு மாற்றி அமைத்து உள்ளது.
- 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19 ஆம் தேதி அன்று ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தின் போது நலத் திட்டங்களைக் கண்காணிக்கவும், அவசரகாலப் பணிகளை மேற்கொள்ளச் செய்வதற்காகவும் வேண்டி 14 குறிப்பிட்ட மாவட்டங்களுக்குப் பொறுப்பாளராக தனது அமைச்சரவை சகாக்களை மாநில அரசாங்கம் நியமித்தது.
- தற்போது இதில் சில மாற்றங்கள் செய்யப்பட்டப் பிறகு அந்த 16 மாவட்டங்களுக்குப் பொறுப்பாளர்களாக பல்வேறு அமைச்சர்கள் பொறுப்பேற்பர்.

## eVTOL விமானங்கள்

- மின்சாரச் செங்குத்து பறக்குதல் மற்றும் தரையிறங்குதல் (eVTOL) வகை விமானங்களை மேம்படுத்தும் ஒரு நிறுவனமான ePlane நிறுவனம் பயணிகள் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தின் (DGCA) வடிவமைப்பு அமைப்பின் ஒப்புதலைப் பெற்றுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு முதல் சென்னை ஐஐடியில் ஆரம்பிக்கப் பட்டுள்ள ePlane நிறுவனம் சத்தியநாராயணன் சக்ரவர்த்தி என்பவரால் நிறுவப் பட்டது.
- ePlane நிறுவனம் இந்தியாவின் முதல் சிறிய பறக்கும் மின்சார டாக்ஸியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

- இது நகரங்களுக்குள் பயணிக்கவும் மற்றும் சரக்குப் போக்குவரத்துக்காகவும் வேண்டி வடிவமைக்கப் பட்டு ள்ளது.
- நகர்ப்புறங்களில் இயக்கப் படுவதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள ePlane e200 என்பது இரண்டு இருக்கைகள் கொண்ட ஒரு விமானமாகும்.




## இருவாட்சிப் பறவைகளுக்கான சமூகம் சார்ந்த முன்னெடுப்பு



- காடர் என்ற ஒரு பழங்குடிச் சமூகத்தினை உள்ளடக்கிய ஒரு சமூகம் சார்ந்த பாதுகாப்பு முன்னெடுப்பானது, குறைந்து வரும் இருவாட்சிப் பறவைகளின் எண்ணிக்கையினை மீண்டும் உயர்த்தியுள்ளது.
- இருவாட்சிப் பறவைகள் கூடுகட்டும் மரங்களின் கண்காணிப்பு திட்டமானது 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இருவாட்சிப் பறவைகளின் எண்ணிக்கை குறைந்து வரும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதையும் வெகுவாக மறைந்து வரும் அவற்றின் கூடு கட்டும் வாழ்விடங்களை மீட்டு எடுப்பதையும் இது நோக்கமாகக் கொண்டது.
- இது வழச்சல் என்ற வனப் பிரிவில் உள்ள ஒரு பழங்குடியினச் சமூகமான காடர்களை உள்ளடக்கியதாகும்.
- இது தனது வளங்காகாப்புச் செயல்முறைகளுக்காக வேண்டி மேற்குத் தொடர்ச்சி மலை இருவாட்சிப் பறவைகள் அறக்கட்டளையின் தொழில்நுட்ப ஆதரவைப் பெற்றுள்ளது.
- தென்னிந்தியாவின் மிகவும் சிறியப் பழங்குடியினரான காடர் இனத்தவர், கேரளாவின் கொச்சிக்கும் தமிழ்நாட்டின் கோயம்புத்தூருக்கும் இடையே உள்ள மலைப்பாங்கான எல்லைப் பகுதிகளில் வசிக்கின்றனர்.
- காடுகளில் வாழ்கின்ற இந்த காடர் இனத்தவர் வேளாண்மையினை மேற்கொள்வது இல்லை.

## 2023ஆம்  நிதியாண்டில் கடன் வாங்குவதில் தமிழ்நாடு முதலிடம்


- இந்திய ரிசர்வ் வங்கியின் தரவுகளின் படி, தமிழ்நாட்டின் மொத்த சந்தைக் கடன்கள் 2021-22 ஆம் ஆண்டில் இருந்த அதே அளவில் உள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில்  அதிகக் கடன் வாங்கும் மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், ஆந்திரா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- இம் மாநிலத்தின் வரி வருவாய் 2021-22 ஆம் ஆண்டில்  ரூ.1,60,324.66 கோடியிலிருந்து 2022-23 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 18 சதவீதம் அதிகரித்து ரூ.1,88,953.57 கோடியாக உயர்ந்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் இம் மாநிலத்தின் மொத்த வருவாய் வரவினங்கள் 2,42,013.85 கோடி ரூபாயாக இருந்தது.
- 2022-23 ஆம் ஆண்டில் அதன் மொத்த வரவினங்கள் 2,43,133.76 கோடி ரூபாயாக இருந்தது.
- 2022-23 ஆம் ஆண்டில்  மொத்தச் செலவினங்கள் 3,15,552.75 கோடி ரூபாயாக இருந்தது.
- 2022-23 ஆம் ஆண்டில் வருவாய் செலவினங்கள் 2,69,562.94 கோடி ரூபாயாக இருந்தது.
- பற்றாக்குறையின் தரம் என்பது (வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக் குறை ஆகியவற்றுக்கு இடையேயுள்ள ஒரு விகிதம்) குறிப்பிடத்தக்க அளவில் பெரு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் 38.02% ஆக இருந்த இந்த விகிதமானது, 2017ஆம் நிதியாண்டில் 22.52% ஆக இருந்த அளவுடன் ஒப்பிடப் படும் போது ஆறு ஆண்டுகளில் மிக அதிக அளவாகும்.



# தேசியச் செய்திகள்

## இந்தியாவிற்கான தேசிய சுகாதாரக் கணக்கு மதிப்பீடுகள் (2019-20)

- இந்த ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.35 சதவீதத்தினைச் சுகாதாரப் பாதுகாப்பிற்காக அரசாங்கம் செலவிட்டுள்ளது.
- இது 2014-15 ஆம் ஆண்டில் 1.13 சதவீதமாக இருந்தது.
- அதே காலகட்டத்தில், பொது அரசு செலவினத்தில் (GGE) 3.94 சதவீதமாக இருந்த அரசின் சுகாதாரச் செலவினமானது 5.02 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- 2014-15 மற்றும் 2019-20 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், மொத்த சுகாதாரச் செலவினத்தில் (GGE) 29 சதவீதமாக இருந்த அரசின் சுகாதாரச் செலவினமானது 41.4 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டில் 1,108 ரூபாயாக இருந்த ஒரு நபருக்கான மருத்துவச் செலவானது 2019-20 ஆம் ஆண்டில் 2,014 ரூபாயாக இரட்டிப்பாகியுள்ளது.
- இதே காலக்கட்டத்தில் 5.7 சதவீதமாக இருந்த சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான செலவினமானது 9.3 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் சுகாதாரச் செலவினங்களில் 55.9 சதவீத அளவினை ஆரம்ப நிலை சுகாதாரப் பிரிவுகள் பெற்றுள்ளன.
- இரண்டாம் நிலை சுகாதாரப் பிரிவுகள் 29.6 சதவீதமும், மூன்றாம் நிலை சுகாதாரப் பிரிவுகள் 6.4 சதவீதமும் அதில் பெற்றுள்ளன.
- 2019-20 ஆம் ஆண்டில் மொத்த சுகாதாரச் செலவினங்களில் சொந்த செலவினங்களின் பங்கானது 47.1 சதவீதம் என்ற அளவில் நிலையான சரிவினைக் கண்டுள்ளது.
- இது 2014-15 ஆம் ஆண்டில் 62.6 சதவீதமாக இருந்தது.



## இரயில் விகாஸ் நிகாம் லிமிடெட் நிறுவனத்திற்கு நவரத்னா அந்தஸ்து

- இரயில் விகாஸ் நிகம் லிமிடெட் (RVNL) நிறுவனமானது, நவரத்னா மத்தியப் பொதுத் துறை நிறுவனமாக (CPSE) மேம்படுத்தப் பட்டுள்ளது.
- இது தற்போது 13வது நவரத்னா மத்தியப் பொதுத்துறை நிறுவனமாக மாறியுள்ளது.
- முதன்முதலில் 1997 ஆம் ஆண்டில், இந்திய அரசினால் ஒன்பது பொதுத் துறை நிறுவனங்களுக்கு நவரத்னா அந்தஸ்து வழங்கப்பட்டது.




## சிறுதானியங்களை ஊக்குவிப்பது தொடர்பான நிதி ஆயோக் அறிக்கை

- நிதி ஆயோக் அமைப்பானது, ‘உணவில் சிறுதானியங்களின் பெரும் பயன்பாட்டினை ஊக்குவித்தல்: இந்தியாவின் மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களின் சிறந்த நடைமுறைகள்’ என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- சிறுதானிய பெருமதிப்புச் சங்கிலியின் பல்வேறு அம்சங்களில் குறிப்பாக உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் நுகர்வு ஆகியவற்றில் மாநில அரசுகள் மற்றும் பல்வேறு உற்பத்தி அமைப்புகளால் பின்பற்றப்பட்ட நல்ல முறையிலான மற்றும் புதுமையான நடைமுறைகளின் தொகுப்பினை இந்த அறிக்கை முன்வைக்கிறது.
- இந்த அறிக்கையானது மூன்று கருத்துருக்களைக் கொண்டுள்ளது
    - சிறுதானியங்களின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கான மாநில அரசின் பல திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகள்;
    - ஒருங்கிணைந்த சிறார் மேம்பாட்டுத் திட்டத்தில் சிறுதானியங்களைச் சேர்த்தல்;
    - ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் புத்தாக்கம் மிக்க நடைமுறைகளுக்காக தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல்.
- இந்த அறிக்கை நமது உணவில் சிறுதானியங்களின் பயன்பாட்டினைப் புத்துயிர் பெறச் செய்வதற்கும் அதனை நன்கு நெறிமுறைப்படுத்தச் செய்வதற்குமாக வேண்டி ஒரு வழி காட்டும் களஞ்சியமாக இருக்கும்.

## தேசிய மருத்துவச் சாதனங்கள் கொள்கை 2023

- 2023 ஆம் ஆண்டிற்கான தேசிய மருத்துவச் சாதனங்கள் கொள்கைக்குச் சமீபத்தில் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- நோயாளிகளுக்கான அதிகரித்து வரும் சுகாதார நலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, மருத்துவச் சாதனங்கள் துறையினை நோயாளிகளின் நலனை

மையமாகக் கொண்ட ஒரு அணுகுமுறையுடன் விரைவான மேம்பாட்டுப் பாதையில் கொண்டு செல்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- பொது சுகாதார நல நோக்கங்களான அணுகல், மலிவு விலை, தரம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றினைப் பூர்த்தி செய்யும் வகையில், மருத்துவ சாதனத் துறையின் முறையான மேம்பாட்டிற்கு இது வழிவகை செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- தற்போது 11 பில்லியன் டாலர் மதிப்பீட்டினைக் கொண்டிருக்கும் இந்தத் துறையானது அடுத்த ஐந்து ஆண்டுகளில் 50 பில்லியன் டாலர் மதிப்பு கொண்டதாக வளர்ச்சி பெற இது உதவும்.




## SUPREME முன்னெடுப்பு

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது, உபகரணங்களின் மேம்பாடு, தடுப்பு முறையிலான (முன்கூட்டிய) பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பிற்கான (SUPREME) ஆதரவு என்ற முன்னெடுப்பினைச் சமீபத்தில் தொடங்கியது.
- இது அந்த அமைச்சகத்தின் ஆதரவின் கீழ் உருவாக்கப்பட்டப் பகுப்பாய்வுக் கருவி மையங்களை (AIFs) மேம்படுத்தச் செய்தல் மற்றும் பராமரிப்பதற்கான நிதி உதவி போன்றவற்றை வழங்க முயல்கிறது.
- இது பழுதுபார்த்தல், மேம்படுத்துதல், பராமரித்தல், மறுசீரமைப்பு செய்தல் அல்லது கூடுதல் இணைப்புகளைப் பெறுதல் ஆகியவற்றிக்கு நிதி உதவியை விரிவு படுத்தச் செய்வதற்கான ஒரு முதல்-வகையான திட்டமாகும்.
- இதில் அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு நிதி உதவி வழங்கப்படும்.
- அனைத்துத் தனியார் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களும் இத்திட்டத்தில் நிதியளிப்பதற்கான முறைமை 75:25 என்ற வீதத்தில் இருக்கும்.

## உலகின் முதல் நுண்திரவ DAP உரம்

- மத்திய உள்துறை அமைச்சர், டெல்லியில் "உலகின் முதல் நுண்திரவ DAP (டை-அமோனியா பாஸ்பேட்) உரத்தினை" அறிமுகம் செய்தார்.
- இது இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு லிமிடெட் (IFFCO) நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டது.
- விவசாயிகளுக்கு ஆகும் உற்பத்திச் செலவைக் குறைக்கவும், இரசாயன உரங்களைத் தவிர்க்கவும் உதவும் என்பதால் இது ஒரு புரட்சிகரப் பொருளாகப் புகழப்படுகிறது.
- ஒரு 500 மில்லி அளவு கொண்ட கொள்கலனில் உள்ள திரவ DAP உரத்தில் 8% நைட்ரஜன் மற்றும் 16% பாஸ்பரஸ் உள்ளது.
- இது வழக்கமாகப் பயன்படுத்தப் படுகின்ற 50 கிலோ எடை கொண்ட DAP உர மூட்டைக்கு ஈடானதாக அமையும்.
- இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு லிமிடெட் நிறுவனமானது அதன் நுண் யூரியா மற்றும் நுண் DAP மீது காப்புரிமையினைப் பெற்றுள்ளது.
- இந்தக் கூட்டுறவு நிறுவனமானது அடுத்த 20 ஆண்டுகளுக்கு வேண்டி இந்தத் தயாரிப்புகளுக்கான பங்கு வீத உரிமையினைக் கொண்டிருக்கும்.




## அஜெயா வாரியர் – 2023




- இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகளின் இராணுவப் படைப்பிரிவுகள் 7வது 'அஜெயா வாரியர் 2023' என்ற பயிற்சியினைத் தொடங்கியுள்ளன.
- அஜெயா வாரியர் என்பது ஐக்கியப் பேரரசில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, இரு நாடுகளிலும் மாறி மாறி நடத்தப்படுகின்ற ஒரு பயிற்சியாகும்.

- இதற்கு முந்தையப் பயிற்சியானது, 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்தியாவில் உத்தரகாண்டின் சௌபாதியா என்னுமிடத்தில் நடைபெற்றது.

## தேசிய உற்பத்தித் தொழில்துறைப் புத்தாக்க ஆய்வு 2021-22

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது, "தேசிய உற்பத்தித் தொழில்துறைப் புத்தாக்க ஆய்வு 2021-22: கொள்கை வகுப்பாளர்களுக்கான தொகுப்பு" என்ற அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
- இது இந்திய உற்பத்தித் தொழில்துறையின் போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் பங்கை அதிகரிப்பதற்கும் முன்னுரிமையை அளித்துள்ளது.
- இது நிறுவன அளவிலான ஆய்வு மற்றும் துறைசார் புத்தாக்க அமைப்புகள் (SSI) சார்ந்த ஆய்வு ஆகிய இரண்டு முக்கியக் கூறுகளைக் கொண்டுள்ளது:.
- நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்கம் மற்றும் புத்தாக்கம் மிக்க நடவடிக்கைகள் தொடர்பான தரவுகளை நிறுவன அளவிலான ஆய்வு சேகரித்துள்ளது.
- துறைசார்ப் புத்தாக்க அமைப்புகள் (SSI) சார்ந்த ஆய்வானது, உற்பத்தித் தொழில்துறை சார்ந்தப் புத்தாக்க அமைப்பு மற்றும் நிறுவனங்களில் புத்தாக்கங்களை அடைவதில் அதன் பங்கு ஆகியவற்றினை மதிப்பிட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் கம்பிவடந்தாங்கி இரயில் பாலம்

- "அஞ்சி காட் பாலம்" என்றழைக்கப்படும் நாட்டின் முதல் கம்பி வடந்தாங்கி இரயில் பாலமானது தற்போது கட்டி முடிக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கம்பி வடந்தாங்கி இரயில் பாலமானது 96 கம்பிவடங்களைக் கொண்டுள்ள நிலையில் இதில் கம்பிவட இழைகளின் மொத்த நீளம் 653 கி.மீ. ஆகும்.
- இது ஜம்மு காஷ்மீர் பகுதியில் உள்ள கத்ரா மற்றும் ரியாசி ஆகிய பகுதிகளை இந்திய இரயில்வே சேவை மூலம் இணைக்கும்.
- இந்தப் பாலமானது, "உதாம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா இரயில் இணைப்பு (USBRL) திட்டம்" என்ற தேசியத் திட்டத்தின் ஒரு பகுதியாக கட்டமைக்கப் பட்டது.



## கவிதாயினி ஷிலாபட்டாரிகா

- பண்டார்கர் கிழக்கத்திய நாடுகள் ஆராய்ச்சி நிறுவனமானது (BORI) சமீபத்தில் கவிதாயினி ஷிலாபட்டாரிகாவின் இலக்கியப் பங்களிப்பினை பறைசாற்றுகின்ற வகையில் பல்வேறு வரலாற்றுச் சான்றுகளைப் பெற்றுள்ளது.
- இவர் சாளுக்கிய ஆட்சியாளர் இரண்டாம் புலிகேசியின் மகள் ஆவார்.
- சமஸ்கிருத மொழியில் பிராமி எழுத்து வடிவில் எழுதப்பட்ட 60க்கும் மேற்பட்ட சொற்றொடர்களைக் கொண்ட ஐந்து செப்புத் தகடுகளில் ஒன்றிலிருந்து இந்த ஆதாரங்கள் பெறப் பட்டுள்ளன.
- ஷிலாபட்டாரிகா, 8 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த இராஷ்டிரகூட ஆட்சியாளரான துருவனின் மனைவியாக தற்போதைய வரலாறுகளில் குறிப்பிடப்படுவதற்குப் பதிலாக, கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்ற ஆதாரத்தினை முன் வைப்பதன் மூலம் பாதாமி சாளுக்கியர்களின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினைப் பதிவு செய்து உள்ளது.
- கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமஸ்கிருதக் கவிஞர்-விமர்சகர் மற்றும் குர்ஜரா-பிரதிஹாராக்களின் அரசவைக் கவிஞராக திகழ்ந்தவரான இராஜசேகர் என்பவர் இவரது நேர்த்தியான மற்றும் அழகுமிக்கப் பாடல்களுக்காக ஷிலாபட்டாரிகாவைப் பாராட்டியுள்ளார்.



## ஒருமித்த விவாகரத்து குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- உச்ச நீதிமன்றமானது, அரசியலமைப்பின் 142வது சட்டப் பிரிவின் கீழ் அதன் சிறப்பு அதிகாரங்களைச் செயல்படுத்துவதன் மூலம் "மீள முடியாத திருமண முறிவு" அடிப்படையிலான திருமண உறவினை முறிப்பதற்கான தீர்ப்பினைத் தான் வழங்க முடியும் என்று தீர்ப்பளித்துள்ளது.
- நீதிபதி S.K. கௌல் தலைமையிலான அமர்வானது, 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் கீழ் கூறப்பட்ட விவாகரத்திற்கான கட்டாய ஆறு மாதக் காத்திருப்புக் காலத்தினை நீதிமன்றம் தள்ளுபடி செய்யலாம் என்று தீர்ப்பளித்தது.
- இந்து திருமணச் சட்டத்தின் 13Bவது சட்டப் பிரிவானது, "பரஸ்பர சம்மதத்துடன் விவாகரத்திற்கான" வழிமுறைகளை வழங்குகிறது.
- கட்டாய ஆறுமாத காத்திருப்பு காலம் என்பது விவாகரத்திற்குப் பதிவு செய்த தரப்பினர் தங்கள் மனுவைத் திரும்ப பெறுவதற்கு அவகாசம் அளிக்கும் வகையில் வழங்கப் படுகிறது.

- அரசியலமைப்புச் சட்டத்தின் 142வது சட்டப்பிரிவு, உச்ச நீதிமன்றமானது, அதன் முன் நிலுவையில் உள்ள எந்தவொரு விவகாரங்களுக்கும் "முழுமையான நீதி" வழங்கச் செய்வதற்காக தனது ஆணைகள் மற்றும் உத்தரவுகளை அமலாக்குவதுடன் தொடர்பு உடையதாகும்.
- 142(1)வது சட்டப்பிரிவின் படி, உச்ச நீதிமன்றத்தினால் இயற்றப்பட்ட ஆணை அல்லது உத்தரவு இந்தியா முழுவதும் செயல்படுத்தப்படக் கூடியது.





## இணைய வெளி நடவடிக்கைகள் படைப் பிரிவு மற்றும் உதவிப் பிரிவுகள்

- இராணுவத் தளபதிகள் மாநாடு (ACC) ஆனது, இணைய வெளி நடவடிக்கைகள் படைப் பிரிவு மற்றும் உதவிப் பிரிவுகளை (CCOSWs) விரைவில் செயல்படுத்துவதற்கு முடிவு செய்துள்ளது.
- நமது எதிரி நாடுகளின் இணையவெளி போர்த் திறன்களின் விரிவாக்கமானது இணைய வெளியினை முன்பை விட அதிக போட்டித் தன்மை மிக்கதாகவும், பெரும் போட்டியாளர்கள் நிறைந்ததாகவும் மாற்றியுள்ளது.
- இராணுவத்தின் இணையப் பாதுகாப்பு நிலைப்பாட்டினை வலுப்படுத்த செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட சில கட்டாய இணையவெளிப் பாதுகாப்புச் செயல்பாடுகளை மேற் கொள்வதற்குப் பல்வேறு அமைப்புகளுக்கு இந்தப் பிரிவுகள் உதவும்.



## தேசிய உற்பத்தித் துறைப் புத்தாக்கம் தொடர்பான ஆய்வு

- இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST) மற்றும் ஐக்கிய நாடுகளின் தொழில் துறை மேம்பாட்டு அமைப்பு ஆகியவற்றினால் இணைந்து மேற்கொள்ளப் பட்ட ஒரு ஆய்வாகும்.
- ஒட்டு மொத்த மாநிலங்களில் மிகவும் "புத்தாக்கமிக்க" மாநிலமாக கர்நாடகா தேர்ந்து எடுக்கப் பட்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து தாத்ரா மற்றும் நகர் ஹவேலி, டாமன் மற்றும் டையூ (DNH&DD), தெலுங்கானா மற்றும் தமிழ்நாடு ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- தெலுங்கானா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகியவை முறையே 46.18%, 39.10% மற்றும் 31.90% என்ற அதிக அளவிலான புத்தாக்க நிறுவனங்களின் பங்கினைக் கொண்டுள்ளன.
- ஒடிசா, பீகார் மற்றும் ஜார்க்கண்ட் ஆகியவை முறையே 12.78%, 13.47% மற்றும் 13.71% என்ற குறைந்த அளவிலான புத்தாக்க நிறுவனங்களின் பங்கினைக் கொண்டுள்ளன.




## பணமோசடி தடுப்புச் சட்டத்தின் விதிகளை மாற்றியமைப்பதற்கான அறிவிப்பு

- மத்திய அரசின் மாற்றியமைக்கப்பட்ட பணமோசடித் தடுப்புச் சட்ட விதிகள் ஆனது, இரண்டு அரசிதழ் அறிவிப்புகளின் ஒரு பகுதியாக வெளியிடப்பட்டுள்ளன.
- இந்த விதிகளானது, அரசு சாரா நிறுவனங்கள் (தன்னார்வம்) மற்றும் "அரசியல் ரீதியான பிரபல நபர்களை" கடுமையான ஆய்வுக்கு உட்படுத்துகின்றன.
- இது அமலாக்க இயக்குநரகம் போன்ற முகமைகளின் நிதிப் பரிவர்த்தனைகளை ஆய்வு செய்வதற்கான அணுகல் அதிகாரமானது, எந்த எந்த நபர்கள் மற்றும் எந்த நிறுவனங்களுக்குப் பொருந்தும் என்ற வரம்பினைக் கணிசமாக விரிவுபடுத்துகிறது.
- இந்த விரிவுபடுத்தப்பட்ட வரையறைகளினுள், சட்டவிரோத நிதிப் பரிவர்த்தனைகளை கண்காணிக்கும் விதிகளின் கீழ் இணைய சங்கேதப் பணங்களும் அடங்கும்.

- இந்தப் புதிய விதிகள் ஆனது, வங்கி/நிதி நிறுவனங்களுக்கு பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் பரிவர்த்தனைகளைப் பதிவு செய்வதனை கட்டாயமாக்குகிறது.
- அவை முன்னதாக பணமோசடி தடுப்புச் சட்டத்தில் சேர்க்கப்படவில்லை.
- இந்த விதிகளானது, பிட்காயின் மற்றும் ஈத்தேரியம் போன்ற இணைய சங்கேதப் பணங்கள் மூலம் மற்றொரு நபருக்காக "அல்லது அவர் சார்பாக" மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளையும் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்துள்ளன.
- அமலாக்க இயக்குநரகம் (ED) எனபது பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச் சாட்டுகளை விசாரிக்கும் முக்கிய நிறுவனமாகும்.


## பருவநிலை மாற்றம் குறித்த இந்திய மக்களின் மனநிலை - 2022

- பருவநிலை மாற்றம் தொடர்பு குறித்த யேல் திட்டத்தால் இந்தக் கணக்கெடுப்பானது நடத்தப் பட்டது.
- இதில் 54 சதவிகிதம் பேர் 'எச்சரிக்கை மிகுந்தவர்கள்', 20 சதவிகிதம் பேர், 'கவலை மிக்கவர்கள்', 11 சதவிகிதம் பேர், 'கவனம் மிக்கவர்கள்', மற்றும் 7 சதவிகிதம் பேர் 'தொடர்பற்றவர்கள்' என இந்தக் கணக்கெடுப்பில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியாவில் சுமார் 81% மக்கள் புவி வெப்பமடைதல் குறித்து கவலை கொண்டுள்ளனர்.
- 64% இந்தியர்கள் புவி வெப்பமடைதலை நிவர்த்தி செய்ய அரசாங்கம் இன்னும் அதிக அளவில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று எண்ணுகின்றனர்.
- இந்தியாவில் குறைந்தபட்சம் 84% மக்கள் புவி வெப்பமடைதல் நிகழ்ந்துக் கொண்டு இருக்கிறது என்று எண்ணுகின்றனர்.
- 74% பேர் அதன் விளைவுகளை அனுபவித்ததாகக் கூறுகின்றனர்.
- 57% மக்கள், பூமி பெரும்பாலும் மனித நடவடிக்கைகளால் வெப்பமடைகிறது என்று எண்ணுகின்றனர்.
- பருவநிலை மாற்றம் ஆனது தாவரங்கள் மற்றும் விலங்கு இனங்கள் (80%), இந்தியாவில் உள்ள மக்கள் (77%), வருங்காலத் தலைமுறை சார்ந்த மக்கள் (77%), தங்கள் சொந்தச் சமூகத்தில் உள்ளவர்கள் (72%) மற்றும் தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் (69%) தீங்கு விளைவிக்கும் என்று இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்றுப் பதிலளித்த நபர்கள் கருதுகின்றனர்.



## உணவு தானிய உற்பத்தி இலக்கு


- மத்திய வேளாண் அமைச்சகமானது, 2023-24 ஆம் ஆண்டில் 3,320 லட்சம் டன்கள் (332 மில்லியன் டன்கள்) உணவு தானியங்களை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது.
- சமீபத்திய மதிப்பீட்டின்படி, முந்தைய ஆண்டில் 3,235 லட்சம் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டில் 278.1 லட்சம் டன்னாக நிர்ணயிக்கப்பட்ட பருப்பு உற்பத்திக்கான ஒரு இலக்கானது, 2023-24 ஆம் ஆண்டில் 292.5 லட்சம் டன்னாக நிர்ணயம் செய்யப் பட்டு உள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 400 லட்சம் டன்னிலிருந்து 440 லட்சம் டன்னாக உயர்த்தப்படும்.
- 2022-23 ஆம் ஆண்டில் 159.1 லட்சம் டன்னாக இருந்த சிறு தானியங்களின் உற்பத்தி இலக்கானது 2023-24 ஆம் ஆண்டில் 170 லட்சம் டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




## இந்தியாவில் இணையம் அறிக்கை 2022

- இந்த அறிக்கையின்படி, இந்திய மக்கள்தொகையில் 52% அல்லது 759 மில்லியன் மக்கள் 2022 ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது இணைய வசதியினை அணுகுகிறார்கள்.
- அவர்களில், 399 மில்லியன் பேர் கிராமப்புறங்களையும், 360 மில்லியன் பேர் நகர்ப் புறங்களையும் சேர்ந்தவர்கள் ஆவர்.
- 2022 ஆம் ஆண்டில் தோராயமாக 71% இணைய வசதி ஊடுருவலானது 6% வளர்ச்சியைக் கண்டது.
- பீகார் (32%) மாநிலமானது, முன்னணி மாநிலமான கோவாவை விட (70%) இணைய வசதி ஊடுருவலின் அளவில் பாதி அளவினைக் கொண்டுள்ளது.
- செயலில் உள்ள இணையப் பயனர்களில் 54% ஆண் பயனர்களாக உள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டில் பதிவான அனைத்துப் புதியப் பயனர்களில் 57% பெண்கள் ஆவர்.

- 2025 ஆம் ஆண்டிற்குள், பதிவு செய்யப்பட உள்ள புதியப் பயனர்களில் 65% பேர் பெண்களாக இருப்பார்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட எண்ணிமப் பண வழங்கீடானது, 2021 ஆம் ஆண்டினை விட 13% அதிகரித்து 338 மில்லியன் பயனர்களை எட்டியது.




## சிட்வே துறைமுகத்தில் சரக்குக் கப்பல்

- மியான்மரில் உள்ள சிட்வே துறைமுகத்தினை வந்தடைந்த முதல் இந்தியச் சரக்குக் கப்பலை மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் வரவேற்றார்.
- இது இந்தியாவின் கொல்கத்தாவின் சியாமா பிரசாத் முகர்ஜி துறைமுகத்திலிருந்து, மியான்மரின் ரக்கைன் மாநிலத்தில் உள்ள சிட்வே துறைமுகம் வரையிலான சரக்குக் கப்பல்களின் வழக்கமானப் போக்குவரத்து வசதியினை இது துவக்கி வைத்துள்ளது.
- சிட்வே துறைமுகமானது, கலாடான் பல்முனைச் சரக்குப் போக்குவரத்துத் திட்டத்தின் (KMTTP) ஒரு பகுதியாகும்.




## ஸ்டார்ட் திட்டம்


- விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விழிப்புணர்வுப் பயிற்சி (START) என்ற ஒரு புதிய அறிமுக-நிலை இணைய வழிப் பயிற்சித் திட்டத்தை இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) அறிவித்துள்ளது.
- இயற்பியல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் முதுகலை மற்றும் இறுதி ஆண்டு இளங்கலை பயிலும் மாணவர்களை இலக்காக START கொண்டு உள்ளது.

- இந்தத் திட்டம் மாணவர்களுக்கு விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஒரு அறிமுக-நிலைப் பயிற்சியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## 2029-30 ஆம் ஆண்டுக்கான தகுந்த உற்பத்தித் திறன் கலவை

- மத்திய மின்சார ஆணையம் (CEA) 2029-30 ஆம் ஆண்டுக்கான தகுந்த உற்பத்தித் திறன் கலவை பற்றிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2029-30 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிறுவப்பட உள்ள திறனின் அளவு 777,144 மெகாவாட்டாக இருக்கும்.
- 2029-30 ஆம் ஆண்டில் மொத்த மின் உற்பத்தி 2,440.7 பில்லியன் அலகுகளாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- 2029-30 ஆம் ஆண்டில் மொத்த மின் உற்பத்தியில் புதைபடிவமற்ற எரிபொருள்கள் உற்பத்திப் பங்களிப்பு 44 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.



## பூச்சிக்கொல்லித் தேக்க வரம்பு

- ‘பூச்சிக்கொல்லிகள் மற்றும் இரசாயனங்கள் அனுமதிக்கப்பட்ட வரம்புகளுக்கு அப்பாற் பட்டு இருப்பதாக’ கூறி பல சர்வதேச கொள்முதலாளர்கள் தொடர்ந்து தேயிலைச் சரக்குகளை நிராகரித்ததால் இந்தியத் தேயிலை தொழில்துறை கடும் பாதிப்பினைச் சந்தித்தது.
- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) ஆனது, தேயிலைத் தோட்டங்களில் பயன்படுத்தப்படும் ஐந்து பூச்சிக்கொல்லிகளுக்கான ஒரு அதிகபட்ச பூச்சிக் கொல்லித் தேக்க வரம்பினை (MRL) விதித்துள்ளது.
- இதில் எமாமெக்டின், பென்சோயேட், ஃபென்பைராக்சிமேட், ஹெக்ஸகோனசோல், ப்ரோபிகோனசோல் மற்றும் குனால்ஃபோஸ் ஆகியவை அடங்கும்.
- தேயிலைக் கொசுப் பூச்சிக்கு (ஹீலோபெல்டிஸ் தெய்வோரா) எதிரான பூச்சிக் கொல்லியாக அவை பயன்படுத்தப் படுகின்றன.
- நாட்டின் தெற்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகள் இந்தப் பூச்சிகளால் அதிக அளவிலான சேதங்களை எதிர்கொள்வதாக தரவுகள் உள்ளன.
- தேயிலை உற்பத்தியாளர்கள் தேயிலையில் உள்ள இரசாயனங்களின் அதிகபட்ச பூச்சிக் கொல்லித் தேக்க அளவிற்கான வரம்பினை (MRL) தற்போதைய நிலையிலேயே பராமரிக்கப் பட வேண்டும் என்றும் சில சமயங்களில் மட்டுமே அவை உயர்த்தப்பட வேண்டும் என்றும் விரும்புகிறார்கள்.
- பயிரிடுபவர்களின் கூற்றுப்படி, வழக்கமான பூச்சிக்கொல்லிகளுடன் ஒப்பிடும் போது டைமெத்தோயேட் மற்றொரு மலிவான மற்றும் மிகவும் செயல்திறன் மிக்க பூச்சிக் கொல்லியாகும்.

| S. No. | Name of Pesticide | Maximum Residue Limit (MRL) mg/kg |
|---|---|---|
| 1 | Emamectin Benzoate | 0.06 |
| 2 | Fenpyroximate | 6.0 |
| 3 | Hexaconazole | 5.0 |
| 4 | Propiconazole | 6.0 |
| 5 | Quinalphos | 0.7 |

## 8 ஆண்டுகள் நிறைவு செய்த பிரதம மந்திரித் திட்டங்கள்


- பிரதான் மந்திரி சுரக்சா பீமா யோஜனா (PMSBY), பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY) மற்றும் அடல் பென்ஷன் யோஜனா (APY) ஆகியவை எட்டு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளன.
- இத்திட்டங்களானது, மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் மலிவு விலையில் காப்பீடு ஆகியவற்றினை வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- இந்த மூன்று திட்டங்களும் 2015 ஆம் ஆண்டில் மேற்கு வங்காளத்தில் உள்ள கொல்கத்தா நகரில் தொடங்கி வைக்கப்பட்டன.
- பிரதான் மந்திரி சுரக்சா பீமா யோஜனா மற்றும் பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா ஆகியவை முறைசாரா தொழில்துறைப் பிரிவைச் சேர்ந்த மக்களை நிதி ரீதியாகப் பாதுகாப்பு மிக்கப் பிரிவினராக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

- அடல் பென்ஷன் யோஜனா என்பது முதுமைக் காலத்திற்குத் தேவையான தேவைகளை ஈடு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## டீசல் வாகனங்களின் பயன்பாடுகளுக்கு முழுத் தடை

- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சகத்தினால் அமைக்கப்பட்ட ஒரு குழுவானது, 2027 ஆம் ஆண்டிற்குள் டீசல் எரிபொருளில் இயங்கும் நான்கு சக்கர வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்குப் பரிந்துரைத்துள்ளது.
- அதற்குப் பதிலாக மின்சார மற்றும் எரிவாயு ஆற்றலில் இயங்கும் வாகனங்களுக்கு அது மாறுமாறு பரிந்துரைக்கப் பட்டுள்ளது.
- 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட பல்வேறு நகரங்களுக்கு இது பொருந்தும்.



- 2070 ஆண்டிற்குள் நிகரச் சுழிய உமிழ்வு என்ற தனது ஒரு இலக்கினை அடைவதற்காக இந்தியா தனது 40% மின்சார உற்பத்தியினைப் புதுப்பிக்கவல்ல ஆற்றல்களிலிருந்துப் பெற வேண்டும்.
- இந்தியாவின் ஆற்றல் பயன்பாட்டுச் சேர்க்கையில் தற்போது 6.2% ஆக உள்ள எரிவாயுவின் பங்கினை, 2030 ஆம் ஆண்டிற்குள் 15% ஆக உயர்த்துவதை இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இராணுவத்தின் மூத்த அதிகாரிகளுக்கு ஒரே சீருடை

- இந்திய இராணுவமானது படைப்பிரிவுத் தலைவர் (பிரிகேடியர்) மற்றும் அதற்கு மேலான பதவிகளை வகிக்கும் அதிகாரிகளுக்கு அவர்களின் பணித் தொகுதி மற்றும் நியமனம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் பொதுவான ஒரே சீருடையை வழங்கச் செய்வதற்கு முடிவு செய்துள்ளது.
- பல்வேறு வகையான சீருடைகள் மற்றும் கருவிகள் இந்திய இராணுவத்தில் உள்ள அந்தந்த ஆயுதங்கள், படைப்பிரிவுகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றுடன் குறிப்பிட்டத் தொடர்புகளைக் கொண்டுள்ளன.
- ஆயுதங்கள் அல்லது படைப்பிரிவு அல்லது சேவைகளுக்குள் இந்தத் தனித்துவமான அடையாளம் வழங்கப் படுவது என்பது, இளைய தலைமை மற்றும் தரவரிசை மற்றும் அதிகாரத்தில் ஒருங்கிணைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கு அவசியமாகும்.
- இந்த மாற்றங்களானது 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் தேதி முதல் செயல்படுத்தப் படும்.



## சமூகநலத் துறையில் சிறந்த நடைமுறைகள்: ஒரு தொகுப்பு - 2023

- நிதி ஆயோக் அமைப்பின் இந்தத் தொகுப்பறிக்கையானது, 14 முக்கிய சமூகநலத் துறைகளில் மேற்கொள்ளப்பட்ட 75 நேர்வு ஆய்வுகளை உள்ளடக்கியது.
- இந்த "சிறந்த நடைமுறைகளில்" 14 நடைமுறைகள் மத்திய அமைச்சகங்களால் தொடங்கப் பட்டவையாகும்.
- இதில் இரண்டு நடைமுறைகள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முன்னெடுப்புகளாகும்.
- இதில் மீதமுள்ள நடைமுறைகள் 26 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களால் மேற்கொள்ளப் பட்டவையாகும்.
- அடிமட்ட நிலையில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை விரிவுபடுத்துவது, வளப் படுத்துவது மற்றும் மேம்படுத்துவது ஆகியவை இதன் நோக்கமாகும்.
- தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரச் சிகிச்சை முன்னெடுப்பின் (TAEI) ST மேம்படுத்தப் பட்ட இதயத் தசை செயலிழப்பு நோய் தடுப்புத் திட்டம் (STEMI) சிறந்த நடைமுறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**BEST SCHEMES IN SOCIAL SECTOR**


**NUMBER OF PRACTICES**

| | |
|---|---|
| Centre | 14 |
| Karnataka | 6 |
| Assam, MP | 5 each |
| Delhi, UP | 4 each |
| Jharkhand, Odisha, Rajasthan | 3 each |
| Centre & State jointly | 2 |
| Andaman and Nicobar, Chhattisgarh, Gujarat, Maharashtra, Manipur, Punjab, Telangana & Uttarakhand | 2 each |
| Andhra Pradesh, Arunachal Pradesh, Bihar, Chandigarh, Haryana, J&K, Kerala, Nagaland, TN & Tripura, | 1 each |

## தொற்றாத நோய்களுக்கான தேசியத் திட்டம்

- சுகாதாரத் துறை அமைச்சகமானது புற்றுநோய், நீரிழிவு நோய், இருதய நோய்கள் மற்றும் பக்கவாதம் (NPCDCS) ஆகியவற்றின் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான ஒரு தேசியத் திட்டத்தில் புதிய நோய்களைச் சேர்த்துள்ளது.
- பல புதிய நோய்கள் அல்லது நோய்க் குழுக்களின் சேர்க்கை மற்றும் புதிய சுகாதார முயற்சிகள் ஆனது, NPCDCS திட்டத்தினை விரிவுபடுத்துவதற்கு மத்திய அரசினைத் தூண்டியுள்ளது.
- எனவே இந்த 'NPCDCS' திட்டத்தினை, 'தொற்றாத நோய்களுக்கான தடுப்பு மற்றும் அதன் கட்டுப்பாட்டுக்கான தேசியத் திட்டம் [NP-NCD] என மறுபெயரிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- NPCDCS திட்டமானது, தேசிய சுகாதாரத் திட்டத்தின் (NHM) கீழ் நாடு முழுவதும் செயல் படுத்தப் படுகிறது.

- இந்தியாவில் 1990 ஆம் ஆண்டில் 37.9% ஆக இருந்த தொற்றாத நோய்களால் ஏற்படும் இறப்பு விகிதம் ஆனது 2016 ஆம் ஆண்டில் 61.8% ஆக அதிகரித்துள்ளது.
- இருதய நோய்கள் (CVDs), புற்றுநோய்கள், நாள்பட்ட சுவாச நோய்கள் (CRDs) மற்றும் நீரிழிவு நோய் ஆகியவை நான்கு முக்கிய தொற்றாத நோய்கள் ஆகும்.




## சஞ்சய் திட்டம்

- சஞ்சய் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு புதிய போர்க்களக் கண்காணிப்பு அமைப்பு (BSS) ஆனது படையில் நிலை நிறுத்தப் படுத்தப் படுவதற்கான ஒரு செயல் முறையில் உள்ளது.



- ஆயிரக்கணக்கான உணர்விகளை ஒருங்கிணைக்கச் செய்யும் இது அனைத்துப் பணி நிலைகளிலும் உள்ள படைத்தளபதிகள் மற்றும் ஊழியர்களுக்கு ஒரு ஒருங்கிணைந்தக் கண்காணிப்புத் திட்டத்தினை வழங்க உதவும்.
- உணர்விகள், செயற்கைக்கோள்கள், ஆளில்லா வான்வழி வாகனங்கள் மற்றும் ரோந்துகள் உட்பட, எல்லைகளில் மேற்கொள்ளப்படும் இந்தியாவின் எதிரிகளின் நடவடிக்கைகள் குறித்த பல்வேறுக் கண்காணிப்புகளில் இருந்து பெறப்பட்டத் தரவுகளையும் இந்த அமைப்பு ஒருங்கிணைக்கிறது.

## ஐஎன்எஸ் மகர் ஓய்வு

- இந்தியக் கடற்படையின் பழமையான, கடற்கரையில் நிலை நிறுத்தும் வகையிலான (ஆயுதந்தாங்கி) கப்பலான ஐஎன்எஸ் மகர் சமீபத்தில் படையிலிருந்து நீக்கப்பட்டது.
- இது 36 ஆண்டுகளாக நாட்டுக்கு மதிப்பு மிக்கச் சேவையினை வழங்கி வந்தது.
- 1984 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் தேதியன்று ஐஎன்எஸ் மகர் படையில் இணைக்கப் பட்டது.
- நிலம்-நீர் சார்ந்தப் பயிற்சிகள் மற்றும் மனிதாபிமான உதவி நடவடிக்கைகள் மற்றும் சமுத்திர சேது உள்ளிட்ட நடவடிக்கைகளில் இந்தக் கப்பல் பங்கேற்றுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில், இந்தக் கப்பல் பயிற்சிக் கப்பலாக மாற்றப்பட்டு, கொச்சியில் உள்ள முதல் பயிற்சிப் படையில் இணைந்தது.




## முன்னேற்றக் கண்காணிப்பு மதிப்பீட்டு அறிக்கை

- உலக சுகாதார அமைப்பு, யுனிசெஃப் மற்றும் UNFPA ஆகியவற்றின் முன்னேற்றக் கண்காணிப்பு மதிப்பீட்டு அறிக்கையானது, சமீபத்தில் நடைபெற்ற 'சர்வதேச பேறு கால பச்சிளம் குழந்தைகள் சுகாதார மாநாட்டில்' (IMNHC 2023) வெளியிடப் பட்டது.
- 2020-2021 ஆம் ஆண்டில் மொத்தம் 4.5 மில்லியன் இறப்புகள் பதிவானதாக இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- இது பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு (0.29 மில்லியன்), இறந்து பிறந்த குழந்தைகள் (1.9 மில்லியன்) மற்றும் பச்சிளம் குழந்தைகளின் இறப்புகள் (2.3 மில்லியன்) ஆகியவற்றை உள்ளடக்கியது.
- உலக அளவில் பதிவான பேறுகாலத் தாய்மார்கள் இறப்புகள், இறந்து பிறந்த குழந்தைகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் இறப்புகளில் 60 சதவீதத்தினைக் கொண்டுள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா முன்னணியில் உள்ளது.

- மேலும், உலகளவில் உயிருடன் பிறந்த குழந்தைகள் எண்ணிக்கையில் இந்தியா 51 சதவீதத்தினைக் கொண்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் உலகளவில் பதிவான 4.5 மில்லியன் என்ற மொத்த இறப்புகளில் இந்தியா 7,88,000 பேறுகாலத் தாய்மார்கள் இறப்புகள், இறந்து பிறந்த குழந்தைகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் இறப்புகளைப் பதிவு செய்துள்ளது.
- பேறுகாலத் தாய்மார்கள் இறப்புகள், இறந்து பிறந்த குழந்தைகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் இறப்புகளின் பதிவில் இந்தியாவினைத் தொடர்ந்து நைஜீரியா, பாகிஸ்தான், காங்கோ ஜனநாயகக் குடியரசு, எத்தியோப்பியா, வங்காளதேசம் மற்றும் சீனா ஆகிய நாடுகள் உள்ளன.
- ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகள் மற்றும் மத்திய மற்றும் தெற்கு ஆசியா ஆகியவை அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் பதிவாகியுள்ளப் பகுதிகளாகும்.

Table 1: Countries with the largest numbers of deaths in 2020

| Country | Total maternal deaths, stillbirths and neonatal deaths (thousands) | Share of total maternal deaths, stillbirths and neonatal deaths | Share of total live births | Maternal deaths (thousands) | Stillbirths (thousands) | Neonatal deaths (thousands) |
|---|---|---|---|---|---|---|
| India | 788 | 17% | 17% | 24 | 297 | 468 |
| Nigeria | 540 | 12% | 6% | 82 | 181 | 277 |
| Pakistan | 474 | 10% | 5% | 10 | 207 | 257 |
| Democratic Republic of the Congo | 241 | 5% | 3% | 22 | 113 | 106 |
| Ethiopia | 196 | 4% | 3% | 10 | 83 | 104 |
| Bangladesh | 121 | 3% | 2% | 4 | 66 | 51 |
| China | 108 | 2% | 9% | 3 | 63 | 42 |
| Indonesia | 103 | 2% | 3% | 8 | 42 | 53 |
| Afghanistan | 96 | 2% | 1% | 9 | 38 | 49 |
| United Republic of Tanzania | 94 | 2% | 2% | 5 | 43 | 46 |


## துங்கநாத் ஆலயம்



- பாண்டவர்களால் கட்டமைக்கப்பட்ட துங்கநாத் ஆலயம் ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் ருத்ரபிரயாக் மாவட்டத்தில் உள்ள ஐந்து பஞ்ச கேதார் ஆலயங்களில் துங்கநாத் ஆலயம் மிக உயரமானதாகும்.
- பாண்டவர்கள் சிவனை வழிபடச் செய்வதற்காகவும், தங்கள் பாவங்களைப் போக்கச் செய்வதற்காகவும் என்று இந்த ஐந்து இடங்களிலும் ஆலயங்களைக் கட்டியதாக நம்பப் படுகிறது.

## கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கசடுகளை உரமாகப் பயன்படுத்துதல்

- இந்தியக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STP) ஆனது, பெரும்பாலான கசடுகளை உரமாகப் பயன்படுத்துவதற்கு "அதிக சாத்தியக் கூறுகள்" இருப்பதைக் கண்டறிந்து உள்ளன.
- வேளாண் நிலங்களில் அவற்றைத் தடையின்றிப் பயன்படுத்துவதற்கு அல்லது மிக திறன்மிக்க உயிரி எரிபொருளாக அவற்றைப் பயன்படுத்துவதற்கு முன்பு அவற்றைச் சுத்திகரிப்பது அவசியமானதாகும்.
- கங்கையில் இருந்து மாசுபட்ட நீரைச் சுத்திகரிப்பதற்காக அமைக்கப்பட்ட கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்களில் காணப்படும் கசடு பற்றிய முதல் பகுப்பாய்வு மேற் கொள்ளப் பட்டது.
- ரூர்க்கியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது, அதைப் உலர்த்திய பிறகு பகுப்பாய்வு செய்யப்படும் பெரும்பாலான கசடுகள் B வகுப்பிற்குள் உள்ளடங்குவதாக கண்டறிந்துள்ளது.
- இதில் உள்ள நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ் ஆகியவற்றின் அளவுகள், இந்தியாவின் உரத் தர நிர்ணய அமைப்புகளால் (உரக் கட்டுப்பாட்டு ஆணை, 2009) பரிந்துரைக்கப் பட்ட அளவை விட அதிகமாக உள்ளது.
- இருப்பினும், சில கசடுகளில் உள்ள பொட்டாசியம் அளவானது பரிந்துரைக்கப்பட்டதை விட குறைவாக இருந்தது.
- மொத்தக் கரிம கார்பன் அளவானது, உரக் கட்டுப்பாட்டு ஆணையின் பரிந்துரைகளை விட அதிகமாக உள்ள நிலையில், 16%க்கும் அதிகமாக இருந்தது.
- ஆனால் நோய்க் கிருமிகளின் அளவு மற்றும் கன உலோக மாசுக் கலப்பு ஆகியவை பரிந்துரைக்கப்பட்ட உரத் தரத்தை விட அதிகமாக உள்ளன.
- அமெரிக்கச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமையின் தரநிலைகளின்படி, சுத்திகரிக்கப் பட்ட கசடுகளை A வகுப்பு அல்லது B வகுப்பு என வகைப்படுத்தலாம்.
- A வகுப்பு கசடுகளை திறந்தவெளியில் அப்புறப் படுத்தப் படுவதற்குப் பாதுகாப்பானது மற்றும் கரிம உரமாகப் பயன்பட வல்லது.
- B வகுப்பு கசடானது "வரையறுக்கப்பட்ட" வேளாண் பயன்பாடுகளில் மட்டுமே மிகவும் பயன்படுத்தக் கூடியது.
- இந்தியாவில் கசடுகளை A அல்லது B வகுப்பு என வகைப்படுத்துவதற்கான தரநிலைகள் இன்னும் உருவாக்கப்படவில்லை.




## டெல்லி அரசு தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு


- இந்தியத் தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட ஒரு அரசியல் அமர்வானது, டெல்லி அரசு தொடர்பாக 8 ஆண்டுகளாக நீடித்து வந்த ஒரு சர்ச்சையினை முடித்து வைத்துள்ளது.
- தேசியத் தலைநகரப் பிரதேசத்தின் (NCT) சட்டமியற்றும் அதிகாரங்களுக்கு அப்பாற் பட்ட பகுதிகளைத் தவிர்த்து, ஆட்சியை நிர்வகிப்பதில் ஆட்சிப் பணி அதிகாரிகள் மீது டெல்லி சட்டமன்றம் தனது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது என உச்ச நீதிமன்றம் கூறி உள்ளது.
- டெல்லி அரசின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட மூன்று பகுதிகள் பொது ஒழுங்கு, காவல் மற்றும் நிலம் ஆகியனவாகும்.
- மத்திய அரசின் சார்பாக டெல்லியில் செயல்படும் துணைநிலை ஆளுநர், ஆளுகை குறித்த பல்வேறு விவகாரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தின் முடிவிற்கு கட்டுப்பட்டவர் ஆவார்.




## யானைகளின் எண்ணிக்கையின் முதலாவது ஒத்தியக்கக் கணக்கெடுப்பு

- தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய வனப்பகுதிகளில் யானைகளின் எண்ணிக்கை ஒத்தியக்கக் கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.
- தமிழகத்தில் 25 வனக் கோட்டங்களில் உள்ள சுமார் 465 தொகுதிகளில் இந்தக் கணக்கெடுப்பானது நடத்தப்பட உள்ளது.

- 2017 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில், தமிழக மாநிலத்தில் 2,761 யானைகள் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பானது, பொதுவாக நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப் படுகிறது.




## ஹரித் சாகர் வழிகாட்டுதல்கள் 2023

- மத்திய அரசானது, சமீபத்தில் 'ஹரித் சாகர்' எனப்படும் 2023 ஆம் ஆண்டு பசுமைத் துறைமுக வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்தியது.
- இது இந்தியத் துறைமுகங்களின் சுற்றுச்சூழல் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் கடல்சார் துறையின் நிலையான மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்குமான ஒரு விரிவான வழிகாட்டுதல்களின் தொகுப்பாகும்.
- சுழியக் கார்பன் உமிழ்வு இலக்கை அடைவதற்கான பெரிய இலக்கை அடைவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.



## மகாராஷ்டிரா தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு

- மகாராஷ்டிரா மாநிலச் சச்சரவில் அப்போதைய ஆளுநர் மற்றும் சட்டப் பேரவையின் சபாநாயகரின் பங்கு குறித்து உச்ச நீதிமன்றமானது தனது வலுவான கருத்துகளை வெளியிட்டுள்ளது.
- ஏக்நாத் ஷிண்டே தரப்பினர் மற்றும் உத்தவ் தாக்கரே தரப்பினர் உள்ளிட்ட சிவசேனாவின் போட்டித் தரப்பினர் அந்த மாநிலத்தில் நிலவும் அரசியல் நெருக்கடி தொடர்பாக கடந்த ஆண்டு உச்ச நீதிமன்றத்திடம் மனு அளித்தனர்.
- ஷிண்டே தரப்பினரின் மனுவில் அவர் மீதும் அவருக்கு ஆதரவான 15 சட்டமன்ற உறுப்பினர்கள் மீதும் விதிக்கப்பட்ட தகுதி நீக்க அறிவிப்புகளை எதிர்த்து மனு தாக்கல் செய்யப் பட்டது.
- கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பினை எதிர்கொள்ளாமல் ராஜினாமா செய்த உத்தவ் தாக்கரே தலைமையிலான அப்போதைய மகா விகாஸ் அகாடி அரசாங்கத்தினை மீண்டும் நியமிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.
- உட்கட்சிப் பூசல்களைத் தீர்ப்பதற்கான ஒரு ஊடகமாக நம்பிக்கை வாக்கெடுப்பினைப் பயன்படுத்த முடியாது.
- ஆளுநருக்கு அரசியல் களத்தில் தலையிடவும், உட்கட்சி முதல் கட்சிகளுக்கு இடையே உள்ள பூசல்களில் பங்கு வகிக்கவும் அதிகாரம் இல்லை.
- மேலும் உச்ச நீதிமன்றமானது ஒரு அரசியல் கட்சியால் முறையாக அங்கீகரிக்கப் பட்ட கட்சித் தலைவர் மற்றும் கொறடா ஆகியோரை மட்டுமே அங்கீகரிக்க வேண்டும்.
- மேலும் உச்ச நீதிமன்றம் தற்போது முதல்வர் ஏக்நாத் ஷிண்டே உள்ளிட்ட 16 சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதி நீக்க விசாரணை நடைமுறைகளில் தலையிடவும் மறுத்து விட்டது.
- மேலும் உச்ச நீதிமன்றமானது, தாக்கரே நம்பிக்கை வாக்கெடுப்பிற்கு முன்பாகவே தனது முதல்வர் பதவியினை ராஜினாமா செய்து விட்டதால், புதிய அரசினை அமைக்க ஷிண்டேவை ஆளுநர் அழைத்தது என்பதில் தவறேதும் இல்லை எனக் கூறி விட்டது.
- மேலும் உச்ச நீதிமன்றமானது, தகுதிநீக்க விசாரணை நடைமுறைகளை சில சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர் கொள்ளும் ஒரு காரணத்தினாலேயே அவர்கள் பங்கு பெற்ற சபா நாயகரின் தேர்தலை ரத்து செய்ய மறுத்து விட்டது.





- வாக்கெடுப்பின் மீதான ஒரு கட்சிக் கொறடாவின் ஒரு உத்தரவானது அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு நிலையினை விட அந்தக் கட்சியின் நிலையினை மட்டுமே பிரதிபலிக்கச் செய்கிறது.

- தனது கொறடாவினையும் தனது சட்டமன்ற அவைத் தலைவரையும் ஒரு கட்சி மட்டுமே நியமனம் செய்கிறது.
- இதன்படி ஒரு முக்கியப் படிப்பினை என்பது ஒரு கட்சியின் சட்டமன்றப் பிரிவை விட அந்தக் கட்சியே மேன்மையானது ஆகும்.

## பொக்ரான் II சோதனையின் 25 வது ஆண்டு நிறைவு

- 1998 ஆம் ஆண்டு மே 11 ஆம் தேதியன்று, இந்திய இராணுவத்தின் பொக்ரான் சோதனைத் தளத்தில் இந்தியா மூன்று அணுகுண்டு சோதனை வெடிப்புகளை நடத்தியது.
- இரண்டு நாட்களுக்குப் பிறகு, மே 13 ஆம் தேதியன்று, மேலும் இரண்டு குண்டுகள் சோதனை செய்யப்பட்டன.
- ஆபரேஷன் ஷக்தி என்ற குறியீட்டுப் பெயரில் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சோதனைகள் ஆனது அணுக்கருப் பிளவு மற்றும் வெப்ப அணுசக்தி ஆயுதங்களை உருவாக்கும் இந்தியாவின் திறனை வெளிப்படுத்தியது.
- 1974 ஆம் ஆண்டு மே 18 ஆம் தேதியன்று, இந்திரா காந்தி அவர்களின் ஆதரவுடன், இந்தியா தனது முதலாவது அணுகுண்டு சோதனையை பொக்ரான் சோதனை தளத்தில் நடத்தியது.
- பொக்ரான்-I சோதனைக்கு ஆபரேஷன் ஸ்மைலிங் புத்தர் (சிரிக்கும் புத்தர் நடவடிக்கை) என்ற குறியீட்டுப் பெயர் வழங்கப் பட்டது.




## தரவு ஆளுமைத் தரக் குறியீடு

- தரவு ஆளுமைத் தரக் குறியீட்டில் தரவரிசைப் படுத்தப்பட்ட(DGQI) 66 அமைச்சகங்களில் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை அமைச்சகம் (MoPSW) ஆனது இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- இது நிதி ஆயோக் அமைப்பின் மேம்பாட்டுக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலகத்தினால் (DMEO) மேற்கொள்ளப் பட்டது.

- இது நிர்வாகத் தரவு அமைப்புகளின் முழு நிறைவு நிலை மற்றும் மத்திய அரசின் திட்டங்கள் (CS) மற்றும் மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றினைச் செயல்படுத்துவதில் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் முடிவெடுக்கும் செயல்முறைகளில் அவற்றின் பயன்பாடு ஆகியவற்றை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.





## ஐஎன்எஸ் கருடா விமானத் தளத்தின் 70வது ஆண்டு நிறைவு

- தெற்குக் கடற்படைப் பிரிவின் முதன்மையான கடற்படை விமானத் தளமான ஐஎன்எஸ் கருடா இந்தியக் கடற்படைக்கான தனது 70 ஆண்டுகாலச் சேவையை நிறைவினைக் கொண்டாடுகிறது.
- இது 1953 ஆம் ஆண்டு மே 11 ஆம் தேதியன்று படையில் இணைக்கப் பட்டது.
- இது கடற்படை விமானப் பிரிவின் தொடக்கத்துடன் தொடர்புடைய பழமையான கடற் படை விமானத் தளமாகும்.
- இது இந்தியக் கடற்படையின் முதல் நிலம் நீர் சார்ந்த விமானமான சீலண்டர்ஸின் ஒரு முதன்மைத் தளமாக இருந்தது.



## இந்தியக் கடற்கரையில் உருவாகும் தீவிரப் புயல்கள்

- "வட இந்தியப் பெருங்கடலில் உருவாகும் வெப்பமண்டலப் புயல்களின் இருப்பு குறித்த நிலையை மாற்றுதல்" என்ற தலைப்பில் சமீபத்தில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது.
- பருவநிலை மாற்றமானது இந்தியக் கடற்கரையின் இருபுறங்களிலும் உருவாகும் சில புயல்களை எவ்வாறு மேலும் தீவிரமடையச் செய்கிறது என்பதை இந்த ஆய்வு வெளிப் படுத்தியுள்ளது.
- புயல்களின் நகர்வு வேகமானது அரபிக்கடலில் குறைந்துள்ளது.
- 1982-2019 ஆகிய ஆண்டுகளில், அரபிக் கடலில் உண்டான சூறாவளிப் புயல்கள் (CS) மற்றும் மிகக் கடுமையான சூறாவளிப் புயல்கள் (VSCS) ஆகியவற்றின் தீவிரம், அடிக்கடி உண்டாகக் கூடியத் தன்மை மற்றும் அதன் கால அளவு ஆகியவற்றில் குறிப்பிடத் தக்க அதிகரிப்புப் போக்கானது காணப்பட்டது.
- அரபிக்கடலில் சமீபத்தியச் சகாப்தத்தில் உண்டாகும் (2001-2019) புயல்களின் அடிக்கடி உண்டாகக் கூடியத் தன்மையானது 52% அதிகரித்துள்ளது.
- வங்கக் கடலில் இது 8 சதவீதம் குறைந்துள்ளது.
- வங்காள விரிகுடாவில் வெப்பநிலையானது 30-32 டிகிரி செல்சியஸ் வரை உள்ளது.
- அதிக வெப்பச் சலனத்தை அவை உட்கொணரச் செய்வதால் சூறாவளிப் புயல்களின் தீவிரமடைவதில் இந்த உயர் வெப்பநிலைகள் மிக முக்கியப் பங்கினை வகிக்கின்றன.




## திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமம் பிளஸ் அந்தஸ்து

- ஸ்வச் பாரத் மிஷன் கிராமின் (SBM-G) திட்டத்தினுடைய இரண்டாம் கட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள பாதி எண்ணிக்கையிலான கிராமங்கள் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமம் பிளஸ் என்ற அந்தஸ்தினைப் பெற்றுள்ளன.
- 2.96 லட்சத்திற்கும் அதிகமான கிராமங்கள் தங்களைத் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமம் பிளஸ் என்று அறிவித்துள்ளன.
- இது 2024-25 ஆம் ஆண்டிற்குள் நாட்டினுடைய SBM-G திட்டத்தின் இரண்டாம் கட்ட இலக்குகளை அடைவதற்கான பாதையில் இட்டுச் சென்றுள்ளது.

- ஒரு ODF பிளஸ் அந்தஸ்து பெற்ற கிராமம் ஆனது திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத (ODF) அந்தஸ்தினைப் பேணுவது மட்டுமல்லாமல் திடக் கழிவு அல்லது திரவக் கழிவு மேலாண்மை அமைப்புகளையும் செயல்படுத்துகிறது.
- தெலுங்கானா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இத்திட்டத்தில் சிறப்பான செயல்பாட்டைக் கொண்டுள்ள மாநிலங்களாகும்.
- இதன் சிறிய மாநிலங்களின் பிரிவில் கோவா மற்றும் சிக்கிம் ஆகியவை முன்னணியில் உள்ளன.
- அனைத்து ஒன்றியப் பிரதேசங்களான அந்தமான் & நிக்கோபார் தீவுகள், தாத்ரா நகர் ஹவேலி & டாமன் டையூ மற்றும் லட்சத்தீவுகள் ஆகியவை முழு அளவிலான ODF பிளஸ் அந்தஸ்தினைக் கொண்ட மாதிரி கிராமங்களைக் கொண்டுள்ளன.





## அனைத்து மருத்துவர்களுக்கும் தனித்துவ அடையாள எண்

- இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மருத்துவர்களுக்கும் தனித்துவ அடையாள எண் (UID) வழங்குவதை அரசாங்கம் கட்டாயமாக்கியுள்ளது.
- தற்போது இந்தப் புதிய விதிமுறைகளின்படி, இந்தியாவில் மருத்துவத் தொழிலினை மேற்கொள்வதற்கு மருத்துவர்கள் தனிப்பட்ட அடையாள அட்டையினை கொண்டிருக்க வேண்டும்.
- தனித்துவ அடையாள எண் ஆனது தேசிய மருத்துவ ஆணையத்தின் (NMC) நெறிமுறை வாரியத்தினால் உருவாக்கப்படும்.

## 2035 ஆம் ஆண்டிற்குள் பசுமை ஹைட்ரஜன் கிடங்குகள்

- 2035 ஆம் ஆண்டிற்குள் முக்கியத் துறைமுகங்களில் பசுமை ஹைட்ரஜன் கிடங்குகள் மற்றும் எரிபொருள் நிரப்பும் மையங்களை நிறுவுவதற்கு இந்தியா காலக்கெடு விதித்து உள்ளது.
- உலகிலேயே அதிகளவில் பசுமை இல்ல வாயுக்களை வெளியேற்றும் நாடுகளில் ஒன்றான இந்தியா, 2070 ஆம் ஆண்டிற்குள் உமிழ்வு அளவினை நிகரச் சுழியமாகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- துறைமுகங்களில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கானது 2030 ஆம் ஆண்டில் 60% ஆகவும், 2047 ஆம் ஆண்டில் 90% ஆகவும் இருக்க வேண்டும்.
- COP 26வது பங்குதாரர்கள் மாநாட்டில் பருவநிலை நடவடிக்கைக்கான அதன் உறுதிப் பாட்டின் ஒரு பகுதியாக, 2030 ஆம் ஆண்டிற்குள் 2005 ஆம் ஆண்டிலிருந்த அளவை விட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஓர் அலகிற்கு உமிழ்வு தீவிரத்தை 45% வரை குறைக்க உள்ளதாக இந்தியா உறுதியளித்துள்ளது.
- வர்த்தக அளவில் 95% பங்கு மற்றும் வர்த்தக மதிப்பில் 65% பங்குடன் ஒட்டு மொத்த வர்த்தகம் மற்றும் வளர்ச்சியில் நாட்டின் கடல்சார் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது.




## ஐஎன்எஸ் மோர்முகோவா கப்பலில் பிரம்மோஸ் சோதனை

- இந்தியக் கடற்படையின் ஐஎன்எஸ் மோர்முகோவா என்ற கப்பலில் இருந்து பிரம்மோஸ் மீயொலி சீர்வேக ஏவுகணையானது வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.
- ஐஎன்எஸ் மோர்முகோவா என்பது சமீபத்தில் கடற்படையில் இணைக்கப்பட்ட, வழி காட்டுதலுடன் கூடிய ஒரு ஏவுகணை அழிப்புக் கப்பலாகும்.
- பிரம்மோஸ் ஏவுகணையானது 2.8 மேக் வேகத்தில் அல்லது ஒலியை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு வேகத்தில் பறக்கக் கூடியது ஆகும்.



## மாதிரி சிறைச்சாலைகள் சட்டம் 2023

- உள்துறை அமைச்சகமானது '2023 ஆம் ஆண்டு மாதிரி சிறைச்சாலைகள் சட்டம்' என்ற ஒரு சட்டத்தினைத் தயாரித்துள்ளது.
- சிறைச்சாலை சீர்திருத்தம் மற்றும் கைதிகளின் மறுவாழ்வு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வகையிலான இந்தச் சட்டமானது சிறைச்சாலை நிர்வாகத்தை நன்கு மாற்றி அமைப்பதற்காக பிரிட்டிஷ் காலச் சட்டத்திற்குப் பதிலாக உருவாக்கப்பட்டுள்ளது.
- 1894 ஆம் ஆண்டின் சிறைச்சாலைகள் சட்டம் சுதந்திரத்திற்கு முந்தைய காலத்தில் இயற்றப் பட்ட, கிட்டத்தட்ட 130 ஆண்டுகள் பழமையானதாகும்.
- இதனுடன் தொடர்புடைய மற்ற இரண்டு சட்டங்களான - 1900 ஆம் ஆண்டு கைதிகள் சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டு கைதிகள் இடமாற்றுச் சட்டம் - ஆகியவையும் பல்லாண்டுகள் பழமையானவையாகும்.
- நாட்டில் உள்ள சிறைகளும், 'அதில் காவலில் வைக்கப்பட்டுள்ள நபர்களும்' இந்திய அரசியலமைப்பின் படி மாநிலப் பட்டியலில் உள்ள ஒரு கூறாகும்.
- மாநில அரசுகள் மற்றும் ஒன்றியப் பிரதேச நிர்வாகங்கள் இந்தச் சட்டத்தினைத் தமது தேவைகளுக்கு ஏற்ற வகையிலான மாற்றங்களுடன் தங்களது அதிகார வரம்பிற்குள் ஏற்றுக் கொள்ளலாம்.




## மத்தியச் சாதனங்கள் அடையாளப் பதிவு

- இந்திய அரசாங்கமானது, சஞ்சார் சாதி இணைய தளம் எனப்படும் இந்திய அளவிலான மத்தியச் சாதனங்கள் அடையாளப் பதிவுக் கண்காணிப்பு அமைப்பினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- சஞ்சார் சாதி இணைய தளமானது, தொலைத் தொடர்புத் துறையின் ஒரு முன்னெடுப்பு ஆகும்.
- இது கைபேசி சந்தாதாரர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதன் மூலமும், அரசாங்க முயற்சிகள் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் அவர்களுக்கான அதிகார வழங்கலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த இணைய தளமானது, மத்தியச் சாதனங்கள் அடையாளப் பதிவுக் கண்காணிப்பு என்றும் அழைக்கப்படுகிறது.
- இது இந்தியா முழுவதும் உள்ள திறன்பேசி பயனர்கள் தொலைந்து போன அல்லது திருடப் பட்ட தமது கைபேசிகளின் பயன்பாட்டினை முடக்கச் செய்யவும் அவற்றின் பயன்பாட்டுத் தடமறிந்து அதனைக் கண்காணிக்கவும் உதவும்.




## இந்தியாவின் பிராந்தியக் கட்சிகளுக்கான நிதி மூலங்கள் 2021-22





- மக்களாட்சிச் சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ADR) ஆனது "2021-22 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பிராந்திய அரசியல் கட்சிகளின் நிதி மூலங்களின் பகுப்பாய்வு" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2021-22 நிதியாண்டில் இந்தியாவின் 27 பிராந்திய அரசியல் கட்சிகளின் வருமானத்தில் 75%க்கும் அதிகமான வருமானமானது, அதாவது 887.55 கோடி ரூபாயானது அறியப் படாத மூலங்களிலிருந்துப் பெறப்பட்டுள்ளது.

- முந்தைய ஆண்டு அறியப்படாத மூலங்களிலிருந்துப் பெறப்பட்ட இந்த வருமானத்தின் விகிதம் சுமார் 50% ஆகும்.
- தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான தி.மு.க., 96.01% என்ற அளவில் அதிக அளவு வருவாய்ப் பங்கினை அறியப் படாத மூலங்களிலிருந்துப் பெற்றுள்ளது.


## டெல்லி நிர்வாகத்திற்கான அவசரச் சட்டம்

- குடியரசுத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரச் சட்டமானது, 1991 ஆம் ஆண்டு டெல்லி தேசியத் தலைநகரப் பகுதி அரசாங்கச் சட்டத்தினை (NCT) திருத்தியமைக்க முயல்கிறது.
- இது துணைநிலை ஆளுநரை டெல்லி அரசின் நிர்வாகியாக நியமிக்கிறது.
- டெல்லி நகர அரசாங்கத்தில் பணியாற்றும் அனைத்து அதிகாரிகளின் பணியிடங்கள் மற்றும் இடமாற்றம் குறித்து அவரே இறுதி முடிவை வழங்குவார்.
- சட்டங்களை இயற்றுவதற்கும், டெல்லி அரசாங்கத்தில் ஆட்பேருரிமையுடன் நியமிக்கப் பட்ட அதிகாரிகள் மீதான தனது அதிகாரக் கட்டுப்பாட்டைப் பயன்படுத்துவதற்கும் அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கிய மே 11 ஆம் தேதியன்றைய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினை இது மாற்றுகிறது.
- கருத்து வேறுபாடு ஏற்பட்டால், துணைநிலை ஆளுநரின் முடிவே இறுதியானது என்றும் இந்த அவசரச் சட்டம் கூறியுள்ளது.
- இந்த அவசரச் சட்டமானது, முதன்முறையாக தேசியத் தலைநகர் ஆட்சிப் பணி ஆணையத்தை (NCCSA) நிறுவ முயல்கிறது.
- டெல்லி முதலமைச்சர் அவர்கள், டெல்லியின் தலைமைச் செயலாளர் மற்றும் முதன்மை உள்துறைச் செயலாளர் ஆகிய இரு உறுப்பினர்களைக் கொண்ட இந்த ஆணையத்தின் தலைவராக செயல்படுவார்.



## 2000 ரூபாய் தாள்கள் வாபஸ்

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) 2000 ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெற முடிவு செய்துள்ளது.
- 2000 ரூபாய் தாள்கள் தான் இந்தியாவில் புழக்கத்தில் உள்ள அதிக மதிப்புக் கொண்ட பணத் தாள் ஆகும்.
- 2000 மதிப்புள்ள ரூபாய் தாள்கள் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 1934 ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 24(1) வது பிரிவின் கீழ் அறிமுகப் படுத்தப்பட்டது.
- 2018-19 ஆம் ஆண்டில் 2000 ரூபாய் தாள்களை அச்சிடுவதை இந்திய ரிசர்வ் வங்கி நிறுத்தியது.
- 2023 ஆம் ஆண்டு மே 12 ஆம் தேதியன்றைய நிலவரப்படி, புழக்கத்தில் உள்ள நிலுவைத் தொகை 34,88,610 கோடி ரூபாயாக இருந்தது.
- எனினும், 2000 மதிப்பிலான ரூபாய் தாள்கள் அதிகாரப்பூர்வமாக தொடர்ந்து செப்டம்பர் 30 தேதி வரை செல்லுபடி ஆகும்.




## 2016 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் அமலாக்கம்

- மத்திய சுகாதார அமைச்சகம் பொது மற்றும் தனியார் சுகாதார நிறுவனங்களின் தர நிலைகளை அறிவித்துள்ளது.
- மாற்றுத் திறனாளிகள் (PwDs) சுகாதார வசதிகள் மற்றும் சேவைகளை அணுகுவதை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டமானது, நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் வசதிகள் மற்றும் பல்வேறு சேவைகளுக்கான அணுகல் தன்மைக்கானத் தரநிலைகளை வகுக்கும் பல விதிகளை உருவாக்க வேண்டும் மத்திய அரசினை வலியுறுத்துகிறது.

- மாற்றுத் திறனாளிகளுக்கான உடல் மற்றும் கட்டமைப்புச் சார்ந்தத் தடைகள், தகவல் தொடர்பு தடைகள், மனப்பான்மைத் தடைகள் மற்றும் சமூக மற்றும் பொருளாதாரத் தடைகள் உள்ளிட்ட தடைகளை அகற்றச் செய்வதை நோக்கமாகக் கொண்ட 'சுகாதார பாதுகாப்புக்கான அணுகல் தரநிலைகள்' என்ற கருத்துருவில் இந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளது.





## மகிளா சம்மான் சேமிப்புச் சான்றிதழ்களுக்கான வட்டிக்கு வருமான வரிப் பிடித்தம்

- மகிளா சம்மான் சேமிப்புச் சான்றிதழ்கள் மூலம் பெறப்படும் வட்டி மீதான வரிவிதிப்பு பற்றிய ஒரு தெளிவான அறிவிப்பினை மத்திய நேரடி வரிகள் வாரியம் சமீபத்தில் வெளியிட்டு உள்ளது.
- இந்த அறிவிப்பின்படி, ஒரு நிதியாண்டில் இந்தச் சான்றிதழ்கள் மூலம் பெறப்பட்ட வட்டி 40000 ரூபாய்க்கு மிகாமல் இருந்தால் வருமான வரிப் பிடித்த விதி இதற்குப் பொருந்தாது.
- இது பெண்களை அதிகளவில் முதலீட்டில் ஈடுபடுவதற்கு ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- இது வட்டி வருவாய் மீதான வருமான வரிப் பிடித்த விலக்கினைப் பெற்றுள்ளது.
- மகிளா சம்மான் சேமிப்புச் சான்றிதழ் திட்டமானது, 2023 ஆம் நிதியாண்டில் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கான பிரத்தியேக சேமிப்புத் திட்ட வாய்ப்பாக அறிமுகப் படுத்தப் பட்டது.
- இது 7.5% என்ற முதலீட்டினை ஈர்க்கும் வகையிலான வருடாந்திர வட்டி விகிதத்தினை வழங்குகிறது.
- இது தனிநபர்கள் தங்கள் பெயரில் ஒரு கணக்கைத் திறப்பதற்கான வாய்ப்பினை அளிக்கிறது.
- இந்தத் திட்டத்திற்கான அதிகபட்ச வைப்புத் தொகை வரம்பு 2 லட்சம் ரூபாயாகும்.

| Mahila Samman Savings Certificate 2023 | |
|---|---|
| Eligible Period | 1st April 2023 to 31st March 2025 |
| Who can invest? | Women or girls |
| Minimum Investment | Rs.1,000 |
| Maximum Investment | Rs.2,00,000 |
| Interest Rate | 7.50% |
| Compounding Frequency | Quarterly |
| Effective Rate | 7.71% |
| Tenure of the investment | 2 Yrs |
| How many times you can invest | As many times as you wish subject to the maximum limit of Rs.2 lakh. |
| Premature withdrawal | 40% after a year |
| Premature closure | Eligible with certain restrictions |
| Tax Benefits | There is no such tax benefits while investing and at maturity. |
| Where to open? | At Post Office or at authorized Banks |

## '75/25' முன்னெடுப்பு




- இந்திய சுகாதாரத் துறை அமைச்சகமானது உயர் இலட்சியமிக்க "75/25" என்ற ஒரு முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட 75 மில்லியன் நபர்கள் 2025 ஆம் ஆண்டிற்குள் தரமுறைப்படுத்தப்பட்ட சிகிச்சையைப் பெறுவதை உறுதி செய்வதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பெருமளவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHCs) மூலம் வழங்கப் படுகிறது.

- இது தொற்றாத நோய்களின் (NCDs) அதிகரித்து வரும் எண்ணிக்கையை குறைக்கச் செய்வதற்கான போராட்டத்தினை மேற்கொள்வதற்கான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நடவடிக்கையாகும்.

## STARS திட்டம்

- STARS திட்டத்திற்கு 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாநிலங்களில் உள்ள மாணவர்களின் தேர்வு முடிவுகளை மேம்படுத்துதல் மற்றும் இந்தியாவில் பள்ளிக் கல்வியின் நிர்வாகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இது அங்கீகரிக்கப்பட்டது.
- STARS என்பது உலக வங்கியால் மாநிலங்களுக்கான கற்பித்தல்-கற்றல் மற்றும் தேர்வு முடிவுகளை வலுப்படுத்துதல் என்பதைக் குறிக்கிறது.
- இது இமாச்சலப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் கேரளா உட்பட ஆறு மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டது.




## நிலைத்தன்மை மிக்க விமான எரிபொருள் கலவை

- AIX கனெக்ட் (முன்னாள் ஏர்ஏசியா இந்தியா) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட நிலைத் தன்மை மிக்க விமான எரிபொருளை (SAF) பயன்படுத்தி மேற்கொண்ட தனது முதல் உள்நாட்டு விமானச் சேவையினை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- விமானத்தினால் உற்பத்தி செய்யப்படும் உமிழ்வைக் குறைப்பதற்காக 1 சதவிகிதம் நிலைத் தன்மை மிக்க விமான எரிபொருளுடன் விமான எரிபொருளைக் கலந்து உபயோகித்தது.
- ஜெட் எரிபொருளில் 1% நிலைத்தன்மை மிக்க விமான எரிபொருள் கலவையைச் கலப்பதற்கான இலக்கினை நிர்ணயித்தால், இந்தியாவிற்கு ஆண்டிற்கு 14 கோடி லிட்டர் நிலைத் தன்மை மிக்க விமான எரிபொருள் தேவைப்படும்.
- மேலும் அதிக இலட்சியமிக்க இலக்காக, 5% நிலைத்தன்மை மிக்க விமான எரிபொருள் கலவையை இலக்காகக் கொண்டால், இந்தியாவிற்கு ஆண்டுக்கு 70 கோடி லிட்டர் SAF தேவைப்படும்.



## செங்கோல் அரசுச் சின்னம்

- 'செங்கோல்' எனப்படுகின்ற தங்கத்திலான ஒரு அரசுச் சின்னம் புதியப் பாராளுமன்றக் கட்டிடத்தில் ஒரு முக்கிய இடத்தில் நிறுவப்பட உள்ளது.
- இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவிற்கு ஆங்கிலேயர்களிடம் இருந்து அதிகாரம் மாற்றப் பட்டதை அடையாளமாகப் படுத்துவதற்காக இது வழங்கப்பட்டது.
- 'செங்கோல்' என்ற சொல் தமிழ்ச் சொல்லான 'செம்மை' என்பதிலிருந்து பெறப்பட்டதாக மற்றும் செம்மை என்பது சிறப்பைக் குறிப்பதாக நம்பப் படுகிறது.
- இதற்காக வேண்டி இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலாக இருந்த சி ராஜ கோபாலாச்சாரியாரிடம் நேரு ஆலோசனை கேட்டார்.
- இதற்காக ராஜாஜி 'செங்கோலை' பயன்படுத்தப் பரிந்துரைத்தார்.
- சோழ வம்சத்தில் அரசர்களிடையே அதிகாரத்தை மாற்றுவதற்கு இது போன்ற விழா நடத்தப் பட்ட வகையில் அவர் சோழ வம்சத்தால் ஈர்க்கப்பட்டார்.
- இந்த 'செங்கோல்' சென்னையைச் சேர்ந்த வும்மிடி பங்காரு செட்டி என்பவரால் வடிவமைக்கப் பட்டது.




## 'விருப்பப் பட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்தல்' என்ற சொல்

- சமீபத்தில் இந்தியத் தலைமை நீதிபதி சந்திரசூட் தமக்கு 'விருப்பப் பட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்தல் ' என்ற முறையினைக் கண்டித்துள்ளார்.
- மனுதாரர்கள் அல்லது வழக்கறிஞர்கள் வேண்டுமென்றே தங்கள் வழக்கை ஒரு குறிப்பிட்ட நீதிபதி அல்லது நீதிமன்றம் மூலம் விசாரிக்க முயற்சிக்கும் போது, அந்தத் தீர்ப்பு

அவர்களுக்கு மிகவும் சாதகமாக இருக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்பதை அந்த வார்த்தை விவரிக்கிறது.

- உச்ச நீதிமன்றம் 1988 ஆம் ஆண்டு 'சேதக் கன்ஸ்ட்ரக்சன் லிமிடெட் எதிர் பிரகாஷ்' என்ற வழக்கின் தீர்ப்பில், "ஒரு வழக்குரைஞர் தனக்கு விருப்பப் பட்ட நீதிமன்றத்தைத் தேர்வு செய்ய அனுமதிக்க முடியாது" என்றது.




## சப்ரே குழு அறிக்கை

- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் தேதி அன்று உச்ச நீதிமன்றத்தால் இந்தக் குழு உருவாக்கப் பட்டது.
- ஹிண்டன்பர்க் மீதான அறிக்கையை அடுத்து, அதானி குழுமத்தின் பங்குப் பத்திரச் சட்டத்தின் விதிமுறை மீறல்கள் குறித்து விசாரணை செய்வதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி அபய் மனோகர் சப்ரே ஆவர்.




- இந்த அறிக்கையானது அதானி குழுமத்தில் உள்ள அனைத்து ஆதாயம் பெறும் உரிமையாளர்களையும் பற்றி குறிப்பிட்டுள்ளது.

- இந்த ஆதாயம் பெறும் உரிமையாளர்களின் கருத்துக்களை செபி நிராகரித்ததாக என்று எந்தவிதக் குற்றச்சாட்டும் இல்லை.
- ஹிண்டன்பர்க் அறிக்கைக்குப் பிறகு அதானியின் சில்லறைப் பங்குகளின் விலை அதிகரித்துள்ளது.
- தற்போதுள்ள விதிகள் அல்லது இந்தச் சட்டத்தில் மீறல்கள் எதுவும் முதல் கட்டத்தில் கண்டறியப் படவில்லை என்று இந்த அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.

## டெல்லி-டேராடூன் வந்தே பாரத் விரைவு ரயில்




- பாரதப் பிரதமர் டெல்லி-டேராடூன் இடையேயான வந்தே பாரத் விரைவு ரயிலை மூலம் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- இது உத்தரகாண்டின் முதல் 'வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் விரைவு ரயில்' ஆகும்
- இந்த ரயில் நாட்டின் தலைநகரை உத்தரகாண்டின் தேவபூமியுடன் இணைக்கிறது.
- கவசத் தொழில்நுட்பத்துடன் கூடிய மேம்படுத்தப் பட்ட பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ள இந்த ரயில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது ஆகும்.

## உடான் 5.1

- சமீபத்தில் பயணியர் விமானப் போக்குவரத்து அமைச்சகமானது உடான் 5.1 என்ற திட்டத்தினை அறிமுகப் படுத்தியது.
- இது ஹெலிகாப்டர் வழித்தடங்களுக்காக வடிவமைக்கப்பட்ட பிராந்திய இணைப்புத் திட்டத்தின் (RCS) புதிய பதிப்பாகும்.
- இந்தத் திட்டம் விமானப் பயணத்தை வெகுஜனப் படுத்துவது, சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் உள்ளூர்ப் பொருளாதாரங்களை மேம்படுத்தச் செய்வது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ஹெலிகாப்டர் பயணத்தை மலிவு விலையாக மாற்ற விமானக் கட்டண வரம்புகளை 25% வரை இது குறைக்கிறது.





## ஜுகல்பந்தி உரையாடு மென்பொருள்

- மைக்ரோசாப்ட் நிறுவனம் கிராமப்புற இந்தியாவிற்காக வேண்டி ஜுகல்பந்தி என்ற பன்மொழிச் செயற்கை நுண்ணறிவு உரையாடும் மென்பொருளை அறிமுகப்படுத்தி உள்ளது.
- AI4Bharat என்ற நிறுவனத்துடன் மதராஸ் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் இணைந்து இதனை உருவாக்கியுள்ளது.
- பல மொழிகளில் பேசினாலும் தட்டச்சு செய்தாலும் பயனர் வினவல்களைப் புரிந்து கொண்டு தனிப் பயனாக்கப்பட்ட ஒரு உதவியை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த சாட்பாட் ஏப்ரல் மாதம் அறிமுகப்படுத்தப் பட்டது.
- இந்தியாவின் தலைநகரான புது தில்லிக்கு அருகிலுள்ள பிவான் என்ற கிராமத்தில் இது சோதிக்கப் பட்டது.



## மாநிலச் சுகாதாரக் குறியீடு

- இது 2020-21 கோவிட் ஆண்டிற்கான நிதி ஆயோக்கின் வருடாந்திர 'மாநிலச் சுகாதாரக் குறியீட்டின்' 5வது பதிப்பு ஆகும்.
- இது நிதி ஆயோக்கால் 2017 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் மற்றும் உலக வங்கியுடன் இணைந்து நிதி ஆயோக் ஆண்டுதோறும் இந்தக் குறியீட்டை வெளியிடுகிறது.
- பெரிய மாநிலங்களில் கேரளா, தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளன.
- பெரிய மாநிலங்களில் பீகார், உத்தரப் பிரதேசம், மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இதில் கடைசி மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.
- 2019-20 ஆம் ஆண்டு முதல் 2020-21 ஆம் ஆண்டு வரை செயல்திறன் அதிகரித்த முதல் மூன்று மாநிலங்கள்: ராஜஸ்தான், உத்தரகாண்ட் மற்றும் ஒடிசா ஆகியனவாகும்.
- சிறிய மாநிலங்களில் திரிபுரா, சிக்கிம் மற்றும் கோவா ஆகிய மாநிலங்கள் இதில் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.
- சிறிய மாநிலங்களில் அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்கள் இதில் கடைசி மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.
- ஒன்றியப் பிரதேசங்களில் ஒட்டு மொத்தச் செயல்திறனின் அடிப்படையில் லட்சத்தீவு முதலிடத்தைப் பெற்றுள்ள அதே நேரத்தில் டெல்லி இதில் கடைசி இடத்தில் உள்ளது.


Among the 'Larger States', in terms of annual incremental performance, Uttar Pradesh, Assam and Telangana are the top three ranking states.

| Incremental Performance | Overall Performance: Aspirants | Achievers | Front-runners |
|---|---|---|---|
| Not Improved (0 or less) | Rajasthan | Chhattisgarh<br>Haryana<br>Himachal Pradesh<br>Karnataka | - |
| Least Improved (0.01-2.0) | Bihar<br>Odisha<br>Uttarakhand | Gujarat<br>Punjab | Andhra Pradesh<br>Kerala<br>Tamil Nadu |
| Moderately Improved (2.01-4.0) | Jharkhand<br>Madhya Pradesh | - | Maharashtra |
| Most Improved (more than 4.0) | Assam<br>Uttar Pradesh | - | Telangana |

## மக்களுக்களின் பல்லுயிர்த்தன்மைப் பதிவேடு

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சகமானது, கோவாவில் மக்களுக்கான பல்லுயிர்த்தன்மைப் பதிவேட்டினைப் புதுப்பித்தல் மற்றும் அதனைச் சரி பார்த்தலுக்கான தேசியப் பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.
- விரிவான மக்களுக்கான பல்லுயிர்த்தன்மை பதிவேட்டினை உருவாக்கிய இந்தியாவின் முதல் பெரிய பெருநகரமாக கொல்கத்தா மாறியுள்ளது.

- இது இந்தியாவின் நன்கு வளமான உயிரியல் பல்லுயிர்த் தன்மையை ஆவணப் படுத்தச் செய்வதையும் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒரு குறிப்பிட்டப் பகுதி அல்லது ஒரு கிராமத்தின் நிலப்பரப்பு மற்றும் மக்கள்தொகை உள்ளிட்ட உள்ளூரில் கிடைக்கும் உயிரியல் சார் வளங்களின் விரிவான பதிவாக இது விளங்குகிறது.
- இது பல்லுயிர்த்தன்மை மேலாண்மைக் குழுக்களால் (2002 ஆம் ஆண்டு பல்லுயிர்ச் சட்டத்தின் கீழ்) உள்ளூர்ச் சமூகங்களுடன் கலந்தாலோசித்து தயாரிக்கப் படுகிறது.

## G20 அமைப்பிற்காக வேண்டி இந்தியாவின் தலைமைத்துவத்திற்கான சின்னம், கருத்துரு மற்றும் இணையதளம்

- G20 அமைப்பிற்காக வேண்டி இந்தியாவின் தலைமைத்துவத்திற்கான ஒரு சின்னம், கருத்துரு மற்றும் இணையதளத்தினைப் பிரதமர் வெளியிட்டார்.
- G20 சின்னமானது, இந்தியாவின் தேசியக் கொடியின் துடிப்பூட்டும் நிறங்களான காவி, வெள்ளை, பச்சை மற்றும் நீலம் போன்றவற்றை கொண்டு வடிவமைக்கப் பட்டு உள்ளது.
- சவால்களுக்கு மத்தியிலான வளர்ச்சியினைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தியாவின் தேசிய மலரான தாமரையின் மீது புவி அமைந்தாற் போல் இது வடிவமைக்கப்பட்டு உள்ளது.
- G20 சின்னத்தின் கீழே “பாரத்” என்ற சொல் தேவநாகரி எழுத்து வடிவில் எழுதப் பட்டு உள்ளது.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்திற்கான கருத்துரு "வாசுதேவக் குடும்பகம்" அல்லது "ஒரு பூமி ஒரு குடும்பம் ஒரு எதிர்காலம்" என்பதாகும் .
- இது மகா உபநிடதம் எனப்படும் பண்டைய கால சமஸ்கிருத உரையிலிருந்து எடுக்கப் பட்டது.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்திற்கான இணையதளமான www.g20.in தொடங்கி வைக்கப்பட்டது.

## ஐராவத்




- ஜெர்மனியில் நடந்த சர்வதேச மீத்திறன் கணினி மாநாட்டில் (ISC 2023) 61வது உலகின் 500 சிறந்த மீத்திறன் கணினிப் பட்டியல் வெளியிடப்பட்டது

- இந்தியாவின் ஐராவத் (AIRAWAT) எனப்படும் செயற்கை நுண்ணறிவுக் கணினியானது உலகளவில் 75வது இடத்தைப் பெற்றுள்ளது
- இது புனேவில் உள்ள மேம்பட்ட கணிம மேம்பாட்டு மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## C-KYC தரவுத் தளம்


- இந்திய ரிசர்வ் வங்கியானது, சமீபத்தில் சில மையப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர்கள் பற்றியத் தகவல்களை அறிந்து கொள்ளுதல் (C-KYC) தரவுத்தளத்தினை அதிக ஆபத்து மிக்கதாக வகைப்படுத்தியுள்ள நிலையில், இது நிதி நிறுவனங்களுக்கு ஒரு சவாலானச் சூழலை ஏற்படுத்தியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது, ஒளிப்படக் காட்சி மூலமான KYC அல்லது நேரடி முறை KYC போன்ற வாடிக்கையாளர் அங்கீகாரத்திற்கான மாற்று முறைகள் குறித்து ஒரு ஆய்வு செய்ய வங்கிகளைத் தூண்டியுள்ளது.
- C-KYC என்பது வாடிக்கையாளரின் அனைத்துத் தனிப்பட்ட விவரங்களையும் சேகரித்து அதனைச் சேமித்து வைக்கும் ஒரு மையப்படுத்தப்பட்ட களஞ்சியமாகும்.
- இது அனைத்து KYC செயல்முறைகளையும் ஒரே தளத்தில் கொண்டு வர உதவுகிறது.
- மத்தியக் கையகப்படுத்துதல் மற்றும் சொத்து மறுசீராக்கம் மற்றும் பங்குகள் மீதான வட்டி (CERSAI) பதிவகமானது C-KYC பதிவேட்டினை நிர்வகிக்கிறது.
- 2012-13 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் C-KYC குறித்து அறிவிக்கப் பட்டு, 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்டது.




## இந்தியாவின் எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறையின் குறைவான கார்பன் வெளியீட்டு நுட்ப மாற்றம்

- "பசுமை மாற்றம்: இந்தியாவின் எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறையின் குறைவான கார்பன் வெளியீட்டு நுட்ப மாற்றம்" என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையினை ஆற்றல் மாற்ற ஆலோசனைக் குழு (ETAC) சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் (MoP&NG) ஆனது இந்தியாவின் ஆற்றல் மாற்றத்திற்கான அவசியத்தை வலியுறுத்தியது.
- குறைவான கார்பன் வெளியீடு கொண்ட ஒரு எதிர்காலத்தை அடைவதற்கான பல்வேறு பாதைகளை இது முன்னிலைப் படுத்தியுள்ளது.
- இறக்குமதி செய்யப்பட்ட புதைபடிவ இயற்கை எரிவாயுவிற்கு மாற்றாக வேண்டி உயர் அழுத்தத்திற்கு உட்படுத்தப்பட்ட ஒரு உயிரி எரிவாயுவினை (CBG) பயன்படுத்துவது ஒரு நம்பிக்கைக்குரியத் தீர்வாக இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.




## இந்தியாவின் புதியப் பாராளுமன்றம்




- மத்திய எழில் முற்றத் திட்டத்தின் ஒரு பகுதியான இந்தியாவின் புதிய பாராளுமன்றக் கட்டிடத்தைப் பிரதமர் புது தில்லியில் திறந்து வைத்தார்.

- புதியப் பாராளுமன்றக் கட்டிடம் மூன்று மாடிகளைக் கொண்டு 64,500 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப் பட்டுள்ளது.
- மக்களவை நடைபெறும் பகுதியில் தற்சமயம் 888 இருக்கைகள் உள்ள நிலையில் அதை மேலும் 1,272 இருக்கைகளாக விரிவுபடுத்தி கொள்ளும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது.
- 1993 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலில் நிறுவப்பட்டு இருந்த காந்தி சிலையானது கட்டுமானப் பணியின் போது மாற்றப் பட்டுள்ளது.
- தூரத்தில் இருந்து பார்த்தாலும் தெரியும் வகையில் 9,500 கிலோ எடையும் 6.5 மீட்டர் உயரத்தில் தேசியச் சின்னமான அசோகச் சின்னம் இந்தக் கட்டிடத்தில் நிறுவப் பட்டு ள்ளது.
- புதியப் பாராளுமன்றத் திறப்பு விழாவையொட்டி அதன் நினைவு தபால் தலையும், 75 ரூபாய் சிறப்பு நாணயத்தையும் பிரதமர் வெளியிட்டார்.

## வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகள்




- 2021 ஆம் ஆண்டில் வேளாண்துறை அமைச்சகமானது 10,000 வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்குவதற்கான மத்திய அரசின் திட்டத்தைச் செயல்படுத்தியது.
- இந்தத் திட்டத்தின் கீழ் மேலும் கூடுதலாக 1,100 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை நிறுவச் செய்வதற்கான ஒரு பணியைத் தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்திற்கு (NCDC) வழங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வேளாண் உற்பத்தியாளர் அமைப்புக்கும் 33 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படுகிறது.
- மேலும் தொழில்துறைத் தொகுப்பு வணிக நிறுவனம் (CBBO) சார்ந்த வேளாண் உற்பத்தியாளர் அமைப்பு (FPO) ஒன்றுக்கு 25 லட்சம் ரூபாய் நிதி உதவியாக வழங்கப் படுகிறது.

- இம்முயற்சி விவசாயிகளுக்குத் தேவையானச் சந்தை இணைப்புகளை வழங்குவதன் மூலம் அவர்களின் விளைபொருட்களுக்கு லாபகரமான விலை கிடைப்பதை உறுதி செய்யும்.

## SAMARTH பிரச்சாரம்

- மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் லக்னோவில் 50000 கிராமப் பஞ்சாயத்துகளில் டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதற்கான ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்த அமைச்சகம் 50000 கிராமப் பஞ்சாயத்துகளில் டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதற்கான பிரச்சாரத்தை நடத்தி வருகிறது.
- இந்தப் பிரச்சாரம் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி முதல் தொடங்கி 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி வரை நடைபெறும்.
- இந்தப் பிரச்சாரமானது கிராமப்புறங்களில், குறிப்பாக பெண்களிடையே பல எண்மப் பரிவர்த்தனைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## Mig 29 விமானத்தின் இரவு நேரத் தரையிறக்கம்



- MiG-29K போர் விமானமானது முதன்முறையாக உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட ஒரு விமானம் தாங்கிக் கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த் மீதமைந்தத் தரையிறங்கு தளத்தில் இரவு நேரத்தில் தரையிறக்கப் பட்டது.

- ஐஎன்எஸ் விக்ராந்த் அதிநவீன வான் பாதுகாப்பு வலையமைப்பு மற்றும் கப்பல் எதிர்ப்பு ஏவுகணை அமைப்புகளைக் கொண்டுள்ளது.
- 30 போர் விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களை நிலை நிறுத்தி வைக்கும் வகையில் அமைந்தத் திறனை இது கொண்டதாகும்.
- MiG-29K என்பது ரஷ்யாவின் அனைத்து வானிலையிலும் இயங்கும் பல்பயன்பாட்டுப் போர் விமானமாகும்.

## தேசிய மனித உரிமை நிறுவனங்களுக்கான உலகளாவியக் கூட்டணி

- உலகில் ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவியக் கூட்டணி (GANHRI) ஆனது இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC-இந்தியா) அங்கீகார வழங்கீட்டினை ஒத்தி வைத்து உள்ளது.
- ஏழு மனித உரிமைக் கண்காணிப்பு நிறுவனங்கள்/நிறுவனங்கள் இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையத்திற்கு வழங்கப்பட உள்ள 'A' தரவரிசையை எதிர்த்து GANHRI அமைப்பிற்கு கடிதம் அனுப்பப்பட்ட இரண்டு மாதங்களுக்குப் பிறகு இந்த ஒரு நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- கடந்த பத்தாண்டுகளில் இந்த கையில் ஒரு ஒத்தி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் படுவது இது இரண்டாவது முறையாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் பாரீஸ் கோட்பாடுகள், 1993 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் இந்த ஒரு அங்கீகாரத்தினைப் பெறச் செய்வதற்காகப் பூர்த்தி செய்ய வேண்டிய ஆறு சர்வதேச முக்கியமான அளவுருக்களை அவை வழங்கச் செய்கின்றன.
- தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய கூட்டணியானது அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா-பசிபிக் ஆகிய ஒவ்வொருப் பிராந்தியத்தில் இருந்தும் நான்கு ஆணையங்களுடன் பதினாறு ஆணையங்கள் 'A' தரநிலைப் பெற்ற தேசிய மனித உரிமைகள் ஆணையங்களைக் கொண்டுள்ளது.
- 'A' தரநிலை என்ற ஒரு அங்கீகாரமானது, தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவியக் கூட்டணி மற்றும் மனித உரிமைகள் சபை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பிற அமைப்புகளின் பணி மற்றும் முடிவெடுத்தல் என்ற செயல்முறையில் பங்கேற்பதற்கான வாய்ப்பினை வழங்குகிறது.
- 1993 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப் பட்டது.
- 1999 ஆம் ஆண்டு தேசிய மனித உரிமைகள் ஆணையங்களுக்கான அங்கீகாரச் செயல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இது 'A' தரநிலை பெற்றத் தேசிய மனித உரிமைகள் ஆணையமாக அங்கீகரிக்கப்பட்டது.
- இது 2006, 2011 மற்றும் 2017 ஆகிய சில ஆண்டுகளில் அதன் அங்கீகார வழங்கீடு ஒத்தி வைக்கப் பட்டதற்குப் பின் மீண்டும் தனது அங்கீகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

# சர்வதேசச் செய்திகள்

## கருக்கலைப்பு மாத்திரைக்கு ஒப்புதல்

- ஜப்பானிய சுகாதார அமைச்சரவையின் குழுவானது, ஆரம்ப நிலைக் கர்ப்பத்தினைக் கலைப்பதற்கான ஒரு மாத்திரைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தக் கருக்கலைப்பு மாத்திரையானது முதன்முறையாக அந்த நாட்டில் கிடைக்கப் பெற உள்ளதோடு, அறுவை சிகிச்சை முறைக்கு மாற்றாக அது வழங்கப்படும்.
- ஜப்பானில், 1948 ஆம் ஆண்டு இன மேம்பாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் படியிலான சில நிபந்தனைகளின் பேரில் மட்டுமே கருக்கலைப்பு மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப் படுகிறது.
- இங்கு செயற்கை முறை கருக்கலைப்பு தண்டனைக்குரிய குற்றமாகும்.
- 22 வாரங்கள் வரையிலான ஒரு கருவினைக் கலைப்பது சட்டப் பூர்வமானது ஆனால் அதற்குப் பெரும்பாலும் மனைவி அல்லது கணவரிடம் இருந்து ஒப்புதல் பெறுவது மிக அவசியம் ஆகும்.
- இதுவரை இத்தகையக் கருக்கலைப்பிற்கு அறுவை சிகிச்சை மட்டுமே பயன்படுத்தப் பட்டது.

## 2023 ஆம் ஆண்டு சூடான் மோதல்

- சூடான் நாடானது அதன் இராணுவம் மற்றும் துணை இராணுவப் படைகளுக்கு இடையிலான வன்முறை மோதலில் மூழ்கியுள்ளது.
- அப்தெல் ஃபத்தா அல்-புர்ஹானுக்கும் ஜெனரல் முகமது ஹம்தான் டகாலோவுக்கும் இடையிலான அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியானது மோதலுக்கு வழி வகுத்தது.
- அப்தெல் சூடானின் இராணுவ ஆட்சியாளர் மற்றும் இராணுவத்தின் தலைவர் ஆவார்.
- ஹெமெட்டி என்று பரவலாக அறியப்படும் டகாலோ, நாட்டின் துணை மற்றும் விரைவு நடவடிக்கை ஆதரவுப் படைகளின் (RSF) துணை இராணுவக் குழுவின் தலைவராக உள்ளார்.
- 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் சூடானின் டார்பூர் மோதலின் போது, சூடானின் மோசமான ஜஞ்சவீத் படைகளின் தலைவராக இவர் இருந்தார்.
- 1980 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் சூடான் நாட்டு அரசாங்கத்தினால் ஜான்ஜவீட் போராளிகள் முதன்முதலில் ஆயுதம் ஏந்தியப் படைகளாக ஒழுங்கமைக்கப் பட்டது.
- உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட அண்டை நாடான சாட் பகுதியில் அரசு தனது செல்வாக்கை விரிவுபடுத்த உதவுவதே அக்குழுவின் முக்கிய நோக்கமாக இருந்தது.
- சமீப காலம் வரை, 2019 ஆம் ஆண்டில் பதவி நீக்கம் செய்யப்பட்ட சூடான் அதிபர் ஒமர் அல்-பஷீரின் அதிகாரத்தினைக் கவிழ்ப்பதில் இரு குழுவும் இணைந்துப் பணியாற்றி வந்தன.
- மேலும், 2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற இராணுவப் புரட்சியில் இக்குழுவினர் முக்கியப் பங்கு வகித்தனர்.





## பொய்யான சமுக நடைமுறை உறுதியளிப்புச் சந்தைப்படுத்துதல் அதிகரிப்பு

- நிலையான உணவு அமைப்புகளுக்கான சர்வதேச நிபுணர்கள் குழுவானது (IPES) 'Who's tipping the scales. என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, சர்வதேச உணவு நிர்வாகத்தில் பெருநிறுவனங்களானது நீண்ட காலமாக செல்வாக்கு செலுத்தி வருகின்றதோடு, அவற்றின் ஈடுபாடுகள் என்பது புலப்படும் வகை மற்றும் புலப்படாத வகை எனப் பல வழிகளிலும் வெளிப்படுத்தப் படுகின்றன.
- உணவுப் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் பெருநிறுவனங்களின் கூட்டாண்மைகளை உருவாக்கப்படும் போது நிறுவனங்கள் 'ப்ளூ-வாஷ்' அல்லது 'சோஷியல்-வாஷ்' எனப்படும் பொய்யான சமுக நடைமுறை உறுதியளிப்புச் சந்தைப்படுத்துதலினை மேற்கொள்ள அனுமதிக்கப் படுகிறது.
- பொய்யான சமுக நடைமுறை உறுதியளிப்புச் சந்தைப்படுத்துதல் என்பது, உணவு முறைகள் மற்றும் நீர்நிலைகளின் நிலையான பயன்பாடு மற்றும் பாதுகாப்பை அடையும் வகையில் அவை செயல்படுவதாக நுகர்வோரை நம்ப வைப்பதற்காகப் பெரு நிறுவனங்கள் பயன்படுத்தும் ஒரு சந்தைப்படுத்துதல் தந்திரமாகும்.



## புதிய சுகாதார முன்னெடுப்புகள்


- PRET மற்றும் Big Catch-up எனப்படும் முன்னெடுப்புகள் சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளன.
- அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களுக்கான தயார்நிலை மற்றும் நெகிழ்திறன் (PRET) முன்னெடுப்பு ஆனது உலக சுகாதார அமைப்பினால் தொடங்கப்பட்டது.
- இது சர்வதேச சுகாதார ஒழுங்குமுறைகளின் (IHR) கீழ் செயல்படும்.
- இது நோய்க் கிருமிகளின் மீதான குழுக்களின் பரவும் முறையின் அடிப்படையில் பெருந் தொற்றுகளுக்கான தயார்நிலையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
- Big Catch-up முன்னெடுப்பானது உலக சுகாதார அமைப்பு, யுனிசெஃப், பில்& மெலின்டா கேட்ஸ் அறக்கட்டளை ஆகியவற்றினால் தொடங்கப்பட்டது.
- தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடிய தட்டம்மை, தொண்டை அழற்சி நோய், போலியோ மற்றும் மஞ்சள் காய்ச்சல் போன்ற பெருந்தொற்றுகளிலிருந்து மக்களைப் பாதுகாத்து மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




## ஐரோப்பிய ஒன்றியத்தின் "Fit for 55" தொகுப்புத் திட்டம்


- ஐரோப்பியப் பாராளுமன்றம் ஆனது "Fit for 55" தொகுப்புத் திட்டத்தின் ஒரு பகுதியான பல்வேறு கொள்கைகளை அங்கீகரிப்பதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளது.
- இது போக்குவரத்து, உமிழ்வு சார் வர்த்தகம், ஆற்றல் உற்பத்தி மற்றும் புதைபடிவ எரிபொருள் பயன்பாடு போன்ற தொழில்துறையின் பல்வேறு துறைகளை இலக்காக வைக்கும்.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் ஆற்றல் செயல்திறன் நடவடிக்கைகளை மேம்படுத்த ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டது.

- இவை "Fit for 55" என்ற தொகுப்பில் உள்ள மூன்று முக்கியப் பிரிவுகளின் மீது கவனம் செலுத்துகின்றன:
    - எல்லை சார்ந்த கார்பன் இணக்க முறை (CBAM),
    - சமூகப் பருவநிலை நிதியம் (SCF) மற்றும்
    - ஐரோப்பிய ஒன்றிய உமிழ்வு வர்த்தகத் திட்டம் (EU ETS).





## பொது விமானப் போக்குவரத்திற்கான சர்வதேசப் பருவநிலை நடவடிக்கை

- சர்வதேச விமானப் போக்குவரத்திற்கான கார்பன் ஈடாக்கம் மற்றும் குறைப்புத் திட்டம் (CORSIA) மற்றும் நீண்ட கால உயர் இலட்சிய இலக்குகள் (LTAG) ஆகியவற்றில் 2027 ஆம் ஆண்டு முதல் இந்தியா இணைய உள்ளது.
- இது சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) முன்னெடுப்பாகும்.



- சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து அமைப்பானது அதன் அதிக கவன வழங்கீட்டுப் பிரிவுகளில் ஒன்றாக, சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்துகளில் இருந்து வெளியாகும் கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்குப் பணிக்கப் பட்டுள்ளது.
- சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து அமைப்பின் சில இலக்குகள், 2050 ஆம் ஆண்டிற்குள் இரண்டு சதவீத வருடாந்திர எரிபொருள் செயல்திறன் மேம்பாடு, கார்பன் நடுநிலைத் தன்மை மேம்பாடு மற்றும் 2050 ஆண்டிற்குள் நிகர சுழிய உமிழ்வு நிலையை அடைதல் ஆகியனவாகும்.
- சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து அமைப்பானது இவற்றை CORSIA மற்றும் LTAG ஆகியவற்றின் கீழ் இணைத்துள்ளது.

## லாண்ட்ரோமேட் நாடுகள்





- ரஷ்ய நாட்டிடமிருந்து எண்ணெயை வாங்கி, பின் அந்த சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் விளைபொருட்களை ஐரோப்பிய நாடுகளுக்கு விற்கும் "லாண்ட்ரோமேட்" நாடுகள் (மலிவான கச்சா எண்ணெயை வாங்கி சுத்திகரித்து விற்பனை செய்யும் நாடுகள்) என பட்டியலிடப்பட்ட ஐந்து நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- "லாண்ட்ரோமேட்" என்று அழைக்கப்படும் நாடுகளின் பட்டியலில், இந்தியா தொடர்ந்து ஐந்தாவது மாதமாக ஏப்ரல் மாதத்தில், கடல்வழியே விற்பனை செய்யப் படுகின்ற ரஷ்ய கச்சா எண்ணெயினை அதிகளவில் பெறுகின்ற உலக நாடுகளின் ஒரு பட்டியலில், அவற்றின் அதிகபட்ச நுகர்வு நாடாக இந்தியா இருந்தது.
- கூட்டணி நாடுகளுக்கு கச்சா எண்ணெய்ப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் இந்தியா மற்ற அனைத்து நாடுகளையும் விட முன்னணியில் உள்ளது.
- இந்தியா ஏறக்குறைய 3.8 மில்லியன் டன் எண்ணெய்ப் பொருட்களை விலை வரம்பு நிர்ணயம் செய்யப் பட்ட கூட்டணி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.
- இதில் ஐரோப்பிய ஒன்றியம், G-7 நாடுகள், ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகியவை அடங்கும்.

## உஸ்பெகிஸ்தான் நாட்டின் அரசியலமைப்பிற்கான பொது வாக்கெடுப்பு

- தமது நாட்டின் அரசியலமைப்பை மாற்றி எழுத வேண்டும் என்ற அதிபர் ஷவ்கத் மிர்சியோயேவின் முயற்சிக்கு உஸ்பெகிஸ்தான் நாட்டின் சுமார் 90.21% வாக்காளர்கள் சாதகமாக வாக்களித்தனர்.
- இந்தப் பொது வாக்கெடுப்பானது, முன்னாள் சோவியத் குடியரசினைச் சேர்ந்த நாட்டு மக்களுக்கு அதிகச் சுதந்திரத்தை வழங்கும் என்று உறுதியளித்துள்ளது.
- மேலும், இது அதிபரின் ஆட்சியினை அவரது தற்போதைய இரண்டு முறை என்ற கால வரம்பிற்கு அப்பால் நீட்டிப்பதனையும் உள்ளடக்கியது.
- மேலும், இந்தப் புதிய அரசியலமைப்புச் சட்டமானது அதிகப்படியான ஊடகச் சுதந்திரம் மீதான உறுதியினையும் அளிக்கிறது.




## உலக வங்கியின் வணிகத் தயார்நிலை திட்டம்




- "வணிகத் தயார்நிலை" என்ற புதிய மாற்று வருடாந்திர தொடர் அறிக்கையின் மாதிரிப் பதிப்பு ஆனது 2024 ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் வெளியிடப்படும் என்று உலக வங்கி கூறியுள்ளது.

- இது ஆசியா, லத்தீன் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்காவின் துணை-சஹாராப் பகுதிகளில் உள்ள 54 பொருளாதாரங்களின் தொடக்கக் குழுவை உள்ளடக்கியதாகும்.
- இது உலக நாடுகளுக்கு முதலீட்டினை ஈர்ப்பதற்கும், மேம்பாட்டினை விரைவுபடுத்தச் செய்வதற்காக வேலைவாய்ப்புகள் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஒரு நாட்டின் வணிகம் மற்றும் முதலீட்டுச் சூழலை மதிப்பிடுவதற்கான மிகவும் சம நிலையான மற்றும் வெளிப்படையான அணுகுமுறையைப் பிரதிபலிக்கும்.

## மூன்றாம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டு விழா


- மே 6 ஆம் தேதியன்று, இங்கிலாந்தின் லண்டனில் வெஸ்ட் மினிஸ்டர் அபேய் என்ற மாளிகையில் மூன்றாம் சார்லஸ் மன்னருக்கு நாற்பதாவது அரச ஆட்சியாளராக முடி சூட்டப் பட்டதோடு, அரசி கன்சார்ட் கமிலா அவர்களுக்கும் முடிசூட்டப்பட்டது.
- இது கோல்டன் ஆர்ப் நடவடிக்கை என்றும் அழைக்கப் படுகின்றது.
- இந்த முடிசூட்டுச் விழாவானது 1953 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதன்முறையாகவும், 1937 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒரு மன்னருக்கு நடைபெறும் முதல் விழாவும் ஆகும்.
- 70 வருடங்களுக்கு முன், 1953 ஆம் ஆண்டில் அவரது தாயாரான இரண்டாம் எலிசபெத்தின் முடிசூட்டுச் விழாவானது நடத்தப் பட்டது.
- 1937 ஆம் ஆண்டில் மன்னர் ஆறாம் ஜார்ஜ் என்பவரின் முடிசூட்டுச் விழாவானது நடத்தப் பட்டது.
- முதன்முறையாக, ஐக்கியப் பேரரசின் பிரதமரும், தெற்காசிய நபரும், இந்து சமயத்தைச் சேர்ந்த ஒருவருமான ரிஷி சுனக், வேதாகமத்தில் உள்ள வாசகத்தினைப் படித்தார்.
- தெற்காசிய மற்றும் முஸ்லீம் பிரித்தானியரான ஸ்காட்லாந்து நாட்டின் பிரதான அமைச்சர் ஹம்சா யூசுப், அந்நாட்டின் பாரம்பரிய உடையான கில்ட்டினை அணிந்து இருந்தார்.
- ஒரு வெல்ஷ் பாடலுடன் விழா தொடங்கப்பட்ட இந்த விழாவில் ஒரு கருப்பின நன்னூல் பாடகர் மற்றும் பெண் பேராயர் ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர்.




## அரபு லீக்கில் மீண்டும் சிரியா

- 12 வருட இடைநீக்கத்திற்குப் பிறகு சிரியாவை அரபு லீக் உடன் மீண்டும் இணைய எகிப்தில் நடைபெற்ற கெய்ரோ கூடுகையில் அரபு அரசாங்கப் பிரதிநிதிகள் அனுமதி அளித்துள்ளனர்.

- 12 ஆண்டுகளுக்கு முன்பு கிளர்ச்சியாக இருந்து மாறிய மோதலின் ஆரம்பத்தில் அரபு லீக்கில் இருந்து சிரியாவின் உறுப்புரிமையை நீக்கப் பட்டது.
- 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இதுவரை கிட்டத்தட்ட அரை மில்லியன் மக்கள் கொல்லப் பட்டு உள்ளதோடு அந்த நாட்டில் போருக்கு முந்தைய மக்கள் தொகையான 23 மில்லியனில் பாதி மக்கள் இடம் பெயர்ந்து உள்ளனர்.
- அரபு லீக் என்பது மத்தியக் கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்காவில் உள்ள அனைத்து அரபு நாடுகளின் அரசுகளுக்கிடையேயான அகில அரபு நாடுகளின் ஒரு கூட்டமைப்பு ஆகும்.
- இது 1944 ஆம் ஆண்டு அலெக்ஸாண்டிரியா நெறிமுறையின் படி 1945 ஆம் ஆண்டு மார்ச் 22 தேதியன்று எகிப்தின் கெய்ரோவில் உருவாக்கப்பட்டது.
- தற்போது இது 22 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.




## Title 42 கட்டுப்பாடுகள் நீக்கம்




- அமெரிக்கா-மெக்சிகோ எல்லையில் பிடிபட்டப் புலம்பெயர்ந்தோரைத் தடுத்து வைத்து உள்ள கோவிட்-19 கட்டுப்பாடுகளை நீக்க அமெரிக்கா தயாராகி வருகிறது.
- Title 42 எனப்படும் கோவிட் கட்டுப்பாடுகள், பெருந்தொற்றின் தொடக்கத்தில் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முதன்முதலாக செயல்படுத்தப் பட்டன.


- Title 42 ஆனது புலம்பெயர்ந்த பல மக்களை வெகுவிரைவாக மெக்சிகோவிற்குத் திருப்பி அனுப்ப எல்லை நிர்வாக முகவர்களுக்கு அனுமதி வழங்கியது.
- அதன் தொடக்கத்திலிருந்து, Title 42 கடும் கட்டுப்பாடுகளின் கீழ் 2.7 மில்லியனுக்கும் அதிகமான முறை புலம்பெயர்ந்தோர்கள் வெளியேற்றப் பட்டுள்ளனர்.

## ஏகதா துறைமுகம்

- இந்தியா மற்றும் மாலத்தீவுகளின் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மாலத்தீவு தேசிய பாதுகாப்புப் படைகளின் (MNDF) கடலோரக் காவல்படைத் துறைமுகமான 'ஏகதா துறைமுகத்திற்கு' அடிக்கல் நாட்டினர்.
- சிஃபவாருவில் அமைக்கப்பட உள்ள கடலோரக் காவல்படை துறைமுகம் மற்றும் பழுது பார்க்கும் மையத்தின் உருவாக்கமானது இந்தியாவின் மிகப்பெரிய மானிய உதவித் திட்டங்களில் ஒன்றாகும்.
- 1988 ஆம் ஆண்டில், இலங்கைப் போராளி அமைப்பு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட மாலத்தீவு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியை முறியடிக்க இந்தியா உதவியது.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியா ஒரு டோர்னியர் விமானத்தை மாலத்தீவு அரசிற்குப் பரிசாக வழங்கியது மற்றும் 2019 ஆம் ஆண்டில் ஒரு ரோந்துக் கப்பலை வழங்கியது.




## உலக சுகாதார அவசர நிலை கோவிட் 19



- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது கோவிட்-19 பெருந்தொற்றிற்கு வழங்கிய உலகளாவிய அவசர நிலை என்ற அந்தஸ்தினை மே 05 ஆம் தேதியன்று முடிவுக்குக் கொண்டு வந்தது.
- இந்த வைரசானது மற்ற தொற்று நோய்களுடன் சேர்த்து 6.9 மில்லியனுக்கும் அதிகமான மக்களின் உயிர்களைப் பலி வாங்கியுள்ளது.
- சர்வதேச நாடுகளின் நலன்களைக் கருத்தில் கொண்டு 2020 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதியன்று சுகாதார அவசரநிலை அறிவிக்கப்பட்டது.


## ஐரோப்பிய ஒன்றியத்தின் கார்பன் எல்லை வரி

- 27 உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் ஆனது மற்றொரு இலட்சியமிக்க மற்றும் முதல்-வகையான கார்பன் எல்லை இணக்க முறைமையினை (CBAM) அறிமுகப் படுத்தவுள்ளது.
- இது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் அல்லாத நிலையில் அதனை உற்பத்தி செய்யும் நபர்களுக்கான ஒரு வர்த்தகக் களத்தினைச் சமன் செய்வதோடு, பருவநிலைச் சார்ந்த நடவடிக்கைகளுக்காக முக்கியமான அணுகுமுறையாக கார்பன் விலை நிர்ணய முறைகளை கடைப்பிடிக்க வர்த்தகப் பங்குதாரர்களை ஊக்குவிக்கச் செய்வதனை இலக்காகக் கொண்டுள்ளது.
- ஐரோப்பியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் கார்பன் எல்லை வரி குறித்த அரசியல் ஒப்பந்தத்தினை உருவாக்கினர்.
- ஆனால் ஷர்ம் எல் ஷேக் நகரில் நடைபெற்ற பருவநிலை உச்சி மாநாட்டின் 27வது பங்கு தாரர்கள் மாநாட்டின் (COP27) இந்தியா, சீனா, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளுடன் சேர்ந்து இந்தத் திட்டத்தினை எதிர்த்தது.
- கார்பன் எல்லை இணக்க முறைமையானது தீவிரக் கார்பன் வெளியீடு சார்ந்தப் பொருட்களின் இறக்குமதிகளின் தொகுப்பின் மீது வரி விதிக்கத் திட்டமிட்டுள்ளது.
- இது போன்ற பொருட்களை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் ஐரோப்பிய ஒன்றிய இறக்குமதியாளர்கள் மற்றும் நிறுவனங்கள் இந்த வரியினைச் செலுத்த வேண்டும்.



## மரபணு மாற்றியமைக்கப்பட்ட பயிருக்கான பாதுகாப்பு ஒப்புதல்

- மரபணு மாற்றியமைக்கப்பட்ட சோயா அவரை மிகவும் பாதுகாப்பானது என சீனா அங்கீகரித்துள்ள நிலையில், இது ஒரு பயிர் சார் தொழில்நுட்பத்திற்கு அது வழங்கிய முதல் ஒப்புதலாகும்.
- உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக சீனா மிக அதிகளவில் அறிவியலைச் சார்ந்து வருகிறது.
- இந்த சோயா அவரை வகையானது தனியாருக்குச் சொந்தமான ஷான்டாங் ஷுன்ஃபெங் பயோடெக்னாலஜி கோ லிமிடெட் மூலம் உருவாக்கப்பட்டது.
- இது தாவரத்தில் ஒலிக் அமிலம் என்ற ஆரோக்கியமான ஒரு கொழுப்பின் அளவை கணிசமான அளவில் உயர்த்துகின்ற இரண்டு மாற்றியமைக்கப்பட்ட மரபணுக்களைக் கொண்டுள்ளது.
- ஒரு தாவரத்தில் வேற்று மரபணுக்களை உட்செலுத்தும் மரபணு மாற்றம் போல அல்லாமல், மரபணுத் திருத்தம் என்பது ஏற்கனவே உள்ள மரபணுக்களை மாற்றி அமைக்கிறது.
- அமெரிக்காவைச் சேர்ந்த காலிக்ஷ்ட் என்ற நிறுவனமும் ஆரோக்கியமான எண்ணெயை உற்பத்தி செய்யும் வகையிலான மிக அதிகளவு ஒலிக் அமிலம் கொண்ட ஒரு சோயா அவரையினை உருவாக்கியுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் அங்கீகரிக்கப்பட்ட முதல் மரபணு மாற்றி அமைக்கப் பட்ட உணவு இதுவாகும்.
- ஆரோக்கியமான தக்காளி மற்றும் வேகமாக வளரும் மீன் உள்ளிட்ட மரபணு மாற்றி அமைக்கப்பட்ட உணவுகளுக்கு ஜப்பான் அரசு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது.




## கருணைக்கொலை சட்டப் பூர்வமாக்கம்

- போர்ச்சுகல் நாடானது, கொடிய மற்றும் குணப்படுத்த முடியாத நோய்களால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு கருணைக் கொலை அனுமதியளிப்பதைச் சட்டப் பூர்வமாக்கும் ஒரு சட்டத்தினை இயற்றியுள்ளது.
- 18 வயதுக்கு மேற்பட்டவர்கள், அவர்கள் தீவிர நோய் வாய்ப்பட்டு, தாங்க முடியாத துயரத்தில் இருந்தால், அவர்கள் இறப்பதற்கு உதவி கோர அனுமதிக்கப் படுவார்கள்.

- அத்தகைய முடிவை எடுப்பதற்கு அவர்கள் மனதளவில் தகுதியற்றவர்கள் என்று கருதப் படாவிட்டால், "நீடித்த" மற்றும் "தாங்க முடியாத" வலியினால் பாதிக்கப் படுபவர்களுக்கு மட்டுமே இந்த விதி பொருந்தும்.
- இந்தச் சட்டமானது அந்த நாட்டின் குடிமகன்கள் மற்றும் அந்த நாட்டின் சட்டப்பூர்வக் குடியிருப்பாளர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதோடு தற்கொலை செய்து கொள்வதற்காக அரசு அனுமதியினைப் பெற அந்த நாட்டிற்கு வருகை தரும் வெளி நாட்டினருக்குப் பொருந்தாது.

## THE END-OF-LIFE DICTIONARY

**Suicide** | Impulsive act under severe emotional stress where a person takes own life

**Voluntary death** | Well considered decision by a person if he or she is still able to make medical decisions on how and when they would like to die

**Physician-assisted suicide** | Where a doctor knowingly and intentionally provides a person with the knowledge or means or both required to commit suicide

**Passive euthanasia** | Causing death of a person in a permanent vegetative state with no chance of recovery by withdrawing artificial life support

**Active euthanasia** | Administering patient a lethal drug to cause his or her death

## கேலபேகோஸ் வளங்காப்பிற்கான ஈக்வடார் ஒப்பந்தம்




- ஈக்வடார் உலகின் மிகவும் மதிப்புமிக்கச் சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஒன்றைப் பாதுகாப்பதற்காக ஆண்டுதோறும் மில்லியன் கணக்கான டாலர்களை அடுத்து வரும் 20 ஆண்டுகளில் செலவிட உள்ளதாக உறுதி பூண்டுள்ளது.
- கிரெடிட் சூயஸ் வங்கியானது,1.6 பில்லியன் (€1.45 பில்லியன்) டாலர் மதிப்புள்ள ஈக்வடார் பத்திரங்களை, சுவிஸ் வங்கிக்கு வெறும் 644 மில்லியன் டாலர் மதிப்பிலான செலவினத்தினை உண்டாக்கும் இயற்கைக்கான கடன் மாற்று முறையில் வாங்கச் செய்வதாக அறிவித்துள்ளது.

- முதலீட்டாளர்கள் திருப்பிச் செலுத்தாததைக் கருத்தில் கொண்டு, பத்திரங்கள் அதன் உண்மை மதிப்பினை விட குறைவான மதிப்பில் வர்த்தகம் செய்யப்பட்டன.
- ஈக்வடார் தற்போது கிரெடிட் சூயஸ் வங்கியிலிருந்து ஒரு புதிய கடன் மூலம் அதன் சொந்த கடனை மிகக் குறைவான விலையில் திரும்ப பெற்றுள்ளது.
- அதற்கு ஈடாக, ஈக்வடார் அரசாங்கமானது 20 ஆண்டுகளுக்கு கேலபேகோஸ் தீவுகளில் ஆண்டுதோறும் சுமார் 18 மில்லியன் டாலரைச் செலவழிக்க உள்ளதாக உறுதியளித்து உள்ளது.
- 2030, 2035 மற்றும் 2040 ஆகிய ஆண்டுகளின் பத்திரங்களுக்கான வழங்கீட்டு விலையில் 53.25% முதல் 35.5% வரை கிரெடிட் சூயஸ் வங்கி செலுத்த உள்ளது.

## குரங்கம்மை நோய் - பொது சுகாதார அவசரநிலை




- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது சர்வதேச அளவில் கவலை கொள்ள வைக்கும் நோயாக இருந்த (PHEIC) குரங்கம்மை நோய்க்கான பொது சுகாதார அவசரநிலை என்ற அந்தஸ்தினை முடிவுக்குக் கொண்டு வருவதாக அறிவித்துள்ளது.
- இந்த நோயானது எதிர்பாராத வகையில் சர்வதேச அளவில் பரவியதை அடுத்து 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒரு பொது சுகாதார அவசரநிலையாக அறிவிக்கப் பட்டது.
- 2022 ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்த நோய் உலகளவில் பரவத் தொடங்கியதையடுத்து, 100க்கும் மேற்பட்ட நாடுகளில் பதிவான பெருமளவில் உறுதிப் படுத்தப்பட்ட பல்வேறு பாதிப்புகளைத் தொடர்ந்து இந்த அறிவிப்பானது வெளியிடப்பட்டது.

## ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகள் குறித்த சர்வதேச நாணய நிதிய அமைப்பின் அறிக்கை

- சர்வதேச நாணய நிதியம் 'புவிசார் பொருளாதாரப் பிரிவாக்கம்: ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகள் பிளவுறு நாடுகளுக்கிடையே சிக்கியது' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.


- புதிய பொருளாதாரப் பங்குதார நாடுகளான சீனா, இந்தியா மற்றும் இன்ன பிற நாடுகளுடனான பொருளாதார மற்றும் வர்த்தகக் கூட்டணிகள் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகளுக்குப் பயனளித்துள்ளன.
- தற்போதைய புவிசார் அரசியல் பிரச்சினைகளின் அதிகரிப்பினால், ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகளில் உள்ள நாடுகள் அதிக இறக்குமதி விலைகளால் பாதிக்கப் படும் சூழ்நிலையினை எதிர் கொள்ளச் செய்யலாம் அல்லது முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளுக்கான அணுகலை இழக்க நேரிடலாம்.
- அதாவது பிராந்தியத்தின் சர்வதேச வர்த்தக மதிப்பில் பாதியளவு பாதிக்கப்படலாம்.
- ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியானது, 10 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீடு மற்றும் அதிகாரப் பூர்வ மேம்பாட்டு உதவி வரவுகளை இழக்கக் கூடும்.




## மோச்சா புயல்

- மோச்சா புயல் ஆனது வங்காளதேசத்தில் உள்ள காக்ஸ் பஜார் மற்றும் மியான்மரின் சிட்வே ஆகியவற்றுக்கு இடையே கரையைக் கடந்தது.
- மோக்கா என உச்சரிக்கப் படும் 'மோச்சா' என்ற பெயரை ஏமன் நாடு பரிந்துரைத்தது.
- காபி உற்பத்திக்குப் பெயர் பெற்ற செங்கடல் துறைமுக நகரத்தின் பெயரால் இந்தப் புயலுக்குப் பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த நகரமானது அந்தப் பெயரை தனது பிரபல பானமான கஃபே மோச்சா என்பதற்கும் அளித்துள்ளது.
- சித்ர் என்ற புயலுக்குப் பிறகு, வங்காளதேசத்தினைத் தாக்கிய மிகவும் சக்தி வாய்ந்தப் புயல் மோச்சா ஆகும்.
- 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வங்காளதேசத்தின் தெற்கு கடற்கரையைத் தாக்கிய சித்ர் புயல் 3,000க்கும் மேற்பட்ட மக்களின் உயிரைப் பலி வாங்கி, பில்லியன் டாலர் அளவில் சேதத்தை ஏற்படுத்தியது.

- 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நர்கிஸ் புயல் மியான்மரின் ஐராவதி டெல்டாவினை சேதப் படுத்தி, குறைந்த பட்சம் 138,000 பேரின் உயிரைப் பலி வாங்கியது.





## நக்பா நிகழ்வின் 75வது ஆண்டு நிறைவு

- ஐக்கிய நாடுகள் சபையானது, நக்பா நிகழ்வின் 75வது ஆண்டு நிறைவு விழாவினை நினைவு கூரும் வகையில் உயர்மட்டச் சிறப்புக் கூட்டத்தினை நடத்தவுள்ளது.
- "பேரழிவு" என்பதற்கான அரபு மொழிச் சொல்லான நக்பா என்ற சொல், சுமார் 750,000 பாலஸ்தீனியர்கள் தங்கள் தாயகத்திலிருந்துப் பெருமளவில் இடம் பெயர்ந்ததனைக் குறிக்கிறது.
- 1948 ஆம் ஆண்டு மே 14 ஆம் தேதியன்று, இஸ்ரேல் நாடு தனது சுதந்திரத்தை அறிவித்த நேரத்தில், சுமார் 250,000 முதல் 350,000 பாலஸ்தீனியர்கள் தங்கள் மூதாதையர் வாழ்ந்த பகுதிகளிலிருந்து வெளியேற்றப் பட்டனர்.
- அந்த அறிவிப்பிற்கு அடுத்த நாளான மே 15 ஆம் தேதியன்று நக்பா தினம் என்று அறியப் பட்டது.
- ஒரு சர்வதேச அமைப்பு இத்தினத்தினை நினைவு கூர்வது இதுவே முதல் முறையாகும்.

## அதிக நோய்த் தொற்றுமிக்கப் பறவைக் காய்ச்சல்

- உலகின் ஒரு முன்னணி கோழி இறைச்சி ஏற்றுமதி நாடான பிரேசில், முதன்முறையாக அதிக நோய்த் தொற்றுமிக்கப் பறவைக் காய்ச்சல் (HPAI) பாதிப்பினை உறுதி செய்து உள்ளது.
- பறவைக் காய்ச்சல் வைரஸ் பறவைகளின் மொத்த குழுக்களையும் கொன்று வேளாண் துறைக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடியது ஆகும்.
- மற்ற நாடுகள் இந்த வைரஸின் உலகளாவிய பாதிப்பில் தத்தளித்த சமயத்தில், பிரேசில் நாட்டின் கோழி இறைச்சி ஏற்றுமதியானது, கடந்த ஆண்டு 27% அளவு அதிகரித்து 9.76 பில்லியன் டாலராக இருந்தது.





## G7 ஹிரோஷிமா உச்சி மாநாடு

- 2023 ஆம் ஆண்டில், G7 அமைப்பின் தலைமைத்துவத்தினை ஏற்றுள்ள ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் G7 உச்சி மாநாட்டினை நடத்த உள்ளது.
- G7 என்பது தொழில்மயமாக்கப்பட்ட முன்னணி நாடுகளின் முறைசாராக் குழுவாகும்.
- இது கனடா, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், ஐக்கியப் பேரரசு மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கியது.
- இந்த ஆண்டிற்கான உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்கு என்று ஆஸ்திரேலியா, பிரேசில், கொமரோஸ், குக் தீவுகள், இந்தியா, இந்தோனேசியா, தென் கொரியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
- 1975 ஆம் ஆண்டில் ஆறு நாடுகள் கொண்ட ஒரு குழுவாக இருந்த இந்த அமைப்பின் முதலாவது உச்சி மாநாட்டினைப் பிரான்சு நடத்தியது.



## புதிய பாக்டீரியா எதிர்ப்புச் சிகிச்சைகள் 2023

- உலக சுகாதார அமைப்பானது, புதிய பாக்டீரியா எதிர்ப்புச் சிகிச்சையின் மேம்பாட்டினை ஊக்குவித்தல் 2023 என்ற புதிய அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- நுண்ணுயிர் எதிர்ப்புத்திறன் (AMR) பிரச்சினையினை நிவர்த்தி செய்வது நோக்கிய முன்னேற்ற நடவடிக்கையினை இது எடுத்துரைக்கிறது.
- நுண்ணுயிர் எதிர்ப்புச் சிகிச்சையின் வலுவான செயல்முறையை உறுதி செய்வதில் உள்ள இடைவெளிகளையும் இது அடையாளம் காட்டுகிறது.
- 2019 ஆம் ஆண்டில் உலகளவில் பதிவான சுமார் 5 மில்லியன் உயிரிழப்புகளுக்கு இதுவே காரணமாக இருந்தது.
- இது 2050 ஆம் ஆண்டிற்குள், இந்தியாவில் மட்டும் 2 மில்லியனுக்கும் அதிகமான இறப்புகளை ஏற்படுத்தும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- புதிய நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் உருவாக்கம் இன்னும் குறைவாக உள்ளதோடு, மேலும் தற்போதுள்ள சிகிச்சைகளுக்கான அணுகலும் ஒரு சவாலாகவே உள்ளது.





## ராஷ்ட்-அஸ்டாரா இரயில் சேவை இணைப்பு

- ரஷ்யா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள், சர்வதேச வடக்கு-தெற்குப் போக்குவரத்து வழித் தடத்தினை (INSTC) மேம்படுத்தச் செய்யும் வகையிலான இரயில் சேவை இணைப்பினை உருவாக்குவதற்காக சமீபத்தில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டு உள்ளன.
- இது பால்டிக் கடலில் உள்ள ரஷ்யத் துறைமுகங்களை இந்தியப் பெருங்கடல் மற்றும் வளைகுடாவில் உள்ள ஈரானியத் துறைமுகங்களுடன் இணைப்பதற்கு உதவுகிறது.
- இது இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான வர்த்தக விரிவாக்கத்தை மிகவும் எளிதாக்குகிறது.
- இந்த இரயில் சேவை இணைப்பானது, புவி ரீதியிலான இணைப்பை மேம்படுத்தச் செய்வதற்கும், பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்குமான ஒரு மகத்தான ஆற்றலைக் கொண்டுள்ளது.
- இந்தப் புதிய இரயில் இணைப்பானது பயண நேரத்தில் நான்கு நாட்கள் வரை மிச்சப் படுத்தும்.




## உலக நீடித்த மற்றும் நிலையானப் போக்குவரத்து தினம்

- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது நவம்பர் 26 ஆம் தேதியினை உலக நீடித்த மற்றும் நிலையானப் போக்குவரத்து தினமாக அறிவித்துள்ளது.
- நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்தப் போக்குவரத்தினை மேம்படுத்துவதில் இது ஒரு குறிப்பிடத்தக்கப் படிநிலையினை எடுத்துள்ளது.
- இந்த உலகளாவிய முன்னெடுப்பானது, விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், பொது மக்களுக்குக் கல்வி அளிப்பதையும், போக்குவரத்து நிலைத்தன்மை தொடர்பான மோசமான சிக்கல்களைத் தீர்ப்பதில் சர்வதேச அளவில் பல நாடுகளின் ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.



## பொது எண்ணிமச் சேவை உள்கட்டமைப்பு

- ஆதார், ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம், டிஜிலாக்கர் மற்றும் கோவின், மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற இந்தியாவின் பொது எண்ணிமச் சேவை உள்கட்டமைப்பினை ஏற்றுக் கொள்வதை ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு ஆதரித்துள்ளது.
- இந்த அமைப்பின் உறுப்பினர் நாடுகளிடையே எண்ணிமத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான சரியான வழிமுறையாக பொது எண்ணிமச் சேவை உள் கட்டமைப்பினை (DPI) மேம்படுத்துவதற்கான இந்தியாவின் முன்மொழிதலை அந்த அமைப்பின் உறுப்பினர் நாடுகள் ஒரு மனதாக ஏற்றுக் கொண்டன.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் குழுவில் கஜகஸ்தான், சீனா, கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் அடங்கும்.

## 76வது உலக சுகாதாரச் சபை

- 76வது உலக சுகாதாரச் சபையானது, சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற உள்ளது.
- இந்த நிகழ்வின் கருத்துரு: "75 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பு : உயிர்களைக் காப்பாற்றுதல், அனைவருக்குமான ஆரோக்கிய நலனைக் கொண்டு சேர்த்தல்" என்பது ஆகும்.
- அனைத்து உறுப்பினர் நாடுகளின் பிரதிநிதிகளும் ஒன்று கூடி, உலகெங்கிலும் உள்ள மக்களைப் பாதிக்கும், நெருக்கடி நிலையை உண்டாக்கச் செய்கின்ற பல சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து விவாதிப்பதற்கான ஒரு தளமாக இது செயல்படும்.

## ஜெட்டா பிரகடனம்

- 32வது அரபு கூட்டமைப்பு உச்சி மாநாடானது, சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரில் நிறைவடைந்தது.
- பிராந்தியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரபு நாடுகளின் ஒற்றுமைக்கு அழைப்பு விடுக்கும் ஜெட்டா பிரகடனம் இந்த மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- பிராந்தியத்தின் உறுதித் தன்மைக்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக, பாலஸ்தீனிய பிரச்சினையில் அரபு நாடுகளின் நடுநிலைமையை இது மீண்டும் உறுதிப்படுத்தியது.
- அரபு நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகளின் தலையீட்டை நிறுத்த வேண்டும் என்று இதில் வலியுறுத்தப்பட்டது.
- மேலும், அரச நிறுவனங்களின் வரம்பிற்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் ஆயுதக் குழுக்கள் மற்றும் போராளிகளின் குழுக்களுக்கான அனைத்துவித ஆதரவையும் திட்ட வட்டமாக நிராகரிக்க வேண்டும் என்று இதில் வலியுறுத்தப்பட்டது.

## HIV நோய்த் தடுப்பு மருந்து CAB-LA

- இந்திய மருந்து உற்பத்தி நிறுவனமான சிப்லா, நீண்டகாலமாகச் செயலில் இருக்கும் காபோடெக்ராவிர் (CAB-LA) என்ற நோய்த்தடுப்பு மருந்தின் பொதுப் பெயர் மருந்து வடிவமானது, ஜோகன்னஸ்பர்க் அல்லது டர்பனுக்கு அருகிலுள்ள பெனோனியில் உள்ள அதன் ஆலைகளில் தயாரிக்கப் படும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

- மலிவு விலையில் கிடைக்கப் பெறும் HIV நோய்த் தடுப்பு மருந்தானது முதல் முறையாக தென்னாப்பிரிக்காவில் தயாரிக்கப்பட உள்ளது.
- காபோடெக்ராவிர் ஒரு நபரின் செல்களுக்குள் HIV வைரஸ் நுழைவதைத் தடுக்கிறது.
- இது ஒரு நபர் உடலுறவு மூலம் இந்த வைரசினால் பாதிக்கப்படுவதற்கான பல்வேறு வாய்ப்புகளை முற்றிலும் தடுக்கிறது.
- CAB-LA மருந்தினை உருவாக்கிய ViiV ஹெல்த்கேர் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவு பெற்ற மருந்துகள் காப்புரிமைக் குழு (MPP) ஆகியவை சிப்லா உட்பட மூன்று மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கியுள்ளன.
- அரவிந்தோ மற்றும் வியாட்ரிஸ் ஆகிய அந்த மற்ற இரண்டு நிறுவனங்களும் இந்திய நிறுவனங்கள் ஆகும்.




## அல்-மொஹெட்-அல் ஹிந்தி 2023 கடற்படைப் பயிற்சி

- அல்-மொஹெட்-அல் ஹிந்தி என்பது இந்தியா மற்றும் சவுதி அரேபியா இடையேயான கூட்டுக் கடற்படைப் பயிற்சியாகும்.
- இந்தியாவின் ஐஎன்எஸ் தர்காஷ் மற்றும் ஐஎன்எஸ் சுபத்ரா இந்தப் பயிற்சியில் பங்கேற்றன.
- 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற ரியாத் உச்சி மாநாட்டின் போது இந்த இருதரப்புப் பயிற்சி குறித்த முடிவானது மேற்கொள்ளப் பட்டது.
- இந்தப் பயிற்சியானது இத்தகைய இரண்டாவது கடற்படைப் பயிற்சியாகும்.
- முதலாவது பயிற்சியானது 2021 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

## FIPIC உச்சி மாநாடு 2023

- இந்தியா-பசிபிக் தீவுகள் ஒத்துழைப்புக்கான மூன்றாவது மன்றம் (FIPIC உச்ச மாநாடு) ஆனது போர்ட் மோர்ஸ்பி நகரில் நடைபெற்றது.
- இது இந்தியா மற்றும் பப்புவா நியூ கினியா ஆகிய நாடுகளால் இணைந்து நடத்தப் பட்டது.
- FIPIC என்பது இந்தியாவிற்கும், சுமார் 14 பசிபிக் தீவு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கான ஒரு பன்னாட்டுக் குழுவாகும்.
- 2015 ஆம் ஆண்டில், இந்தியா மற்றும் பசிபிக் தீவு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்தச் செய்வதற்காக இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பில் (FICCI) FIPIC வர்த்தக அலுவலகம் உருவாக்கப்பட்டது.

## சர்வதேச நோய்க்கிருமி கண்காணிப்பு வலையமைப்பு

- ❖ உலக சுகாதார அமைப்பானது இந்த உலகளாவிய அளவிலான வலையமைப்பினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ கோவிட்-19 போன்ற தொற்று நோய்களின் அச்சுறுத்தலை விரைவாகக் கண்டறிந்து, அவற்றின் பரவலைத் தடுக்கும் வகையில் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ சர்வதேச நோய்க் கிருமிக் கண்காணிப்பு வலையமைப்பு (IPSN) ஆனது, மாதிரிகளைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்வதற்கான அமைப்புகளை மேம்படுத்துவதில் நாடுகள் மற்றும் பல்வேறு பிராந்தியங்களை இணைப்பதற்கான ஒரு தளத்தினை வழங்கும் என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.
- ❖ இந்த வலையமைப்பானது வைரஸ்கள், பாக்டீரியாக்கள் மற்றும் இன்ன பிற நோயினை உண்டாக்கும் உயிரினங்களின் மரபணுக் குறியீடுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு நோய்க் கிருமிகளின் மரபியலைச் சார்ந்திருக்கும்.




## கொலராடோ நதி பாதுகாப்பு ஒப்பந்தம்

- ❖ அரிசோனா, கலிபோர்னியா மற்றும் நெவாடா உட்பட ஏழு மாநிலங்கள் கொலராடோ ஆற்றின் நீரைப் பாதுகாப்பதிற்காக ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- ❖ தற்போதைய வறட்சி நிலைமைகளால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் கூட்டு முயற்சியை இந்த ஒப்பந்தம் குறிக்கிறது.
- ❖ நீர் ஆதாரங்களைத் திறமையாக மேலாண்மை செய்வது மிகவும் அவசியமாகும்.



## உலக ஆற்றல் முதலீடு

- உலக ஆற்றல் முதலீடு என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையானது சர்வதேச எரிசக்தி முகமையால் (IEA) வெளியிட்டப்பட்டது.
- உலகளவில் 2023 ஆம் ஆண்டில் சுமார் 2.8 டிரில்லியன் டாலர்களை எரிசக்தியில் முதலீடு செய்யப் பட உள்ளது.
- வருடாந்திரத் தூய்மையான எரிசக்தி முதலீடு 2021 ஆம் ஆண்டு மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கு இடையில் 24 சதவீதம் உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- அதே காலகட்டத்தில் புதைபடிவ எரிபொருள் முதலீடு 15 சதவீதம் மட்டுமே உயரும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

## 2024 ஆம் ஆண்டில் நேரடிப் பொது வாக்குரிமை





- சோமாலியாவின் அரசாங்கமும் அதன் கூட்டாட்சி உறுப்பினர் மாநிலங்களும் 2024 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில் நேரடிப் பொது வாக்குரிமையை அறிமுகப்படுத்த உள்ளன.
- 1969 ஆம் ஆண்டு முதல் இந்த நாட்டில் ஒரு சிக்கலான மறைமுகத் தேர்தல் முறையானது செயல்பாட்டில் உள்ளது.
- இந்த சீர்திருத்தமானது "பல கட்சி அரசியல் அமைப்பை ஊக்குவிப்பதை" நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எனினும், இதற்குப் பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

## துருக்கி அதிபர் தேர்தல்

- துருக்கி அதிபர் ரிசெப் தையிப் எர்டோகன் மீண்டும் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.
- இதன் மூலம் அவர் தனது 20 ஆண்டுகால ஆட்சியை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளார்.
- அவர் ஏற்கனவே துருக்கிக் குடியரசின் ஸ்தாபகர் முஸ்தபா கெமால் அடாதுர்க்கின் 15 ஆண்டு அதிபர் பதவிக் காலத்தினை விஞ்சியுள்ளார்.


- சில உத்தியோகப் பூர்வத் தரவுகளின்படி, துருக்கியின் பணவீக்கம் கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் 85.6 சதவீதமாக இருந்த நிலையில் அது இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் 50.5 சதவீதமாக இருந்தது.




# பொருளாதாரச் செய்திகள்

## ஐரோப்பாவிற்கான மிகப்பெரிய சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் வழங்கீட்டு நாடு

- சவூதி அரேபியாவைப் பின்னுக்குத் தள்ளி இந்தியாவானது ஐரோப்பாவிற்கான மிகப் பெரியச் சுத்திகரிக்கப் பட்ட எண்ணெய் வழங்கீட்டு நாடாக மாறியுள்ளதாக Kpler என்ற பகுப்பாய்வு நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கை கூறுகிறது.
- ரஷ்ய எண்ணெய் மீதான தடையினை அடுத்து இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது.
- இந்தியாவில் இருந்து ஐரோப்பாவிற்கு மேற்கொள்ளப்படும் சுத்திகரிக்கப்பட்ட எரி பொருள் இறக்குமதியானது, ஒரு நாளைக்கு 360,000 பீப்பாய்களுக்கு மேல் அதிகரிக்க உள்ளது.



## நாணயம் மற்றும் நிதி தொடர்பான இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கை


- இந்த அறிக்கையின் முக்கியக் கருத்துருவானது 'பசுமையான மற்றும் தூய்மையான இந்தியாவை நோக்கி' என்பதாகும்.
- இந்தியாவில் நிலையான அதிக வளர்ச்சிக்கான எதிர்காலச் சவால்களை மதிப்பிடச் செய்வதற்காக பருவநிலை மாற்றத்தின் நான்கு முக்கியப் பரிமாணங்களை இந்த அறிக்கை உள்ளடக்கியது.
  - பருவ நிலை மாற்றத்தின் எதிர்பாராத அளவு மற்றும் வேகம்;
  - அதன் பெரும் பொருளாதாரம் சார்ந்த விளைவுகள்;
  - நிதி உறுதித் தன்மை மீதான தாக்கங்கள் மற்றும்
  - பருவநிலை இடர்களைக் குறைப்பதற்கான கொள்கை விருப்பத் தேர்வுகள்.
- 2030 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் பசுமை நிதித் தேவையானது, ஆண்டுதோறும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தது 2.5 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.




## சட்டபூர்வ நிறுவன அடையாளங்காட்டி (LEI)


- மாற்ற முடியாதப் பத்திரங்கள், பத்திரப்படுத்தப்பட்ட கடன் கருவிகள் மற்றும் பட்டியலிடப் பட்ட பாதுகாப்பு ரசீதுகள் போன்றவற்றைப் பட்டியலிடத் திட்டமிட்டுள்ள வழங்குநர்களுக்கு வழங்கிட இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) சட்ட நிறுவன அடையாளங்காட்டி (LEI) எனும் அமைப்பை அறிமுகப்படுத்தி உள்ளது.
- LEI என்பது நிதிப் பரிவர்த்தனைகளில் பங்கேற்கும் சட்ட நிறுவனங்களுக்கான ஒரு தனித்துவமான உலகளாவிய அடையாளங்காட்டியாகும்.
- எந்தவொரு அதிகார வரம்பிலும் உள்ள நிதிப் பரிவர்த்தனைக்கு ஆதரவாக இருக்கும் ஒவ்வொரு சட்ட நிறுவனத்தையும் தனித்துவமாக அடையாளம் காணும் உலகளாவிய குறிப்புத் தரவு அமைப்பை உருவாக்குவதற்காக இது வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இது ஒரு தனித்துவமான 20 எழுத்துக்கள் கொண்ட ஒரு குறியீடாகும் என்பதோடு, நிதிப் பரிவர்த்தனைகளில் ஈடுபடும் பல்வேறு சட்டப்பூர்வ நிறுவனங்களை அடையாளம் காண உதவும்.

- ❖ தற்போது ரிசர்வ் வங்கி (RBI) 25 கோடி ரூபாய்க்கு மேல் உள்ள தனிநபர் அல்லாத கடன் வாங்குபவர்களுக்கு இக்குறியீட்டைப் பெறுவதைக் கட்டாயப்படுத்துகிறது.




## OPEC நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு மேற்கொள்ளப்படும் இறக்குமதிகள்

- ❖ இந்தியாவின் எண்ணெய் இறக்குமதியில் எண்ணெய் உற்பத்தியாளர்களின் சங்கமான பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பின் (OPEC) பங்கு ஆனது, ஏப்ரல் மாதத்தில் எப்போதும் இல்லாத அளவிற்கு 46 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- ❖ பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு நாடுகள், குறிப்பாக மத்தியக் கிழக்கு மற்றும் ஆப்பிரிக்க நாடுகளானது, 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்திய நாட்டினால் இறக்குமதி செய்யப்பட்ட அனைத்துக் கச்சா எண்ணெயில் 72 சதவீதப் பங்கைக் கொண்டிருந்தன.
- ❖ இந்தியாவிற்கு கச்சா எண்ணெய் வழங்கும் மிகப்பெரிய நாடாக ரஷ்யா தொடர்ந்து இருந்து வருகிறது.
- ❖ ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற எண்ணெய் அளவானது, ஈராக் மற்றும் சவுதி அரேபியாவில் இருந்து மொத்தமாக கொள்முதல் செய்யும் அளவினை விட தற்போது அதிகமாக உள்ளது.
- ❖ இந்த இரண்டு நாடுகளும், கடந்தப் பத்தாண்டுகளில் இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் விநியோக நாடுகளாக இருந்தன.



## '100 நாட்கள் 100 பண வழங்கீடு' பிரச்சாரம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது வங்கிகளுக்கான '100 நாட்கள் 100 பண வழங்கீடு' என்ற ஒரு பிரச்சாரத்தினை அறிவித்துள்ளது.
- நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஒவ்வொரு வங்கியிலும் உள்ள உரிமை கோரப்படாத முதல் 100 வைப்புத் தொகைகளை 100 நாட்களுக்குள் கண்டறிந்து அதனை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 10 வருடங்கள் அல்லது அதற்கும் மேலாக வைப்புத் தொகையாளரிடமிருந்து நிதி உட் செலுத்துதல், திரும்பப் பெறுதல் போன்ற எந்தச் செயலும் நடைபெறாத வைப்புத் தொகையானது, செயலற்ற வைப்புத் தொகையாகக் கருதப் படும்.

## பசுமைக் கண்துடைப்பு தொழில்நுட்பப் போட்டி

- ஈடுபாடு மிக்க இந்திய நிறுவனங்களைப் பசுமைக் கண்துடைப்பு தொழில்நுட்பப் போட்டியில் பங்கேற்குமாறு இந்திய ரிசர்வ் வங்கி அழைப்பு விடுத்துள்ளது.
- முதலாவது பசுமைக் கண்துடைப்பு தொழில்நுட்பப் போட்டியில் பங்கேற்கும் 13 சர்வ தேச வங்கிக் கட்டுப்பாட்டு அமைப்புகளில் இந்திய ரிசர்வ் வங்கியும் ஒன்றாகும்.
- இது உலக நிதிசார் புத்தாக்க வலையமைப்பினால் (GFIN) ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- உலக நிதிசார் புத்தாக்க வலையமைப்பு என்பது நிதிசார் புத்தாக்கங்களை ஆதரிக்க உறுதி பூண்டுள்ள 80க்கும் மேற்பட்ட சர்வதேச நிறுவனங்களின் குழுவாகும்.




## மூன்றாவது பெரிய ஏற்றுமதி இலக்கு நாடு

- 2022-23 ஆம் ஆண்டில் அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக நெதர்லாந்து இந்தியாவின் ஒரு மூன்றாவது பெரிய ஏற்றுமதி இலக்கு நாடாக உருவெடுத்துள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் 8 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த நெதர்லாந்துடனான இந்தியாவின் வர்த்தக உபரியானது 2022-23 ஆம் ஆண்டில் 13 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.
- முக்கிய ஏற்றுமதி இலக்கு நாடுகளாக விளங்கிய ஐக்கியப் பேரரசு, ஹாங்காங், வங்காளதேசம் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளை நெதர்லாந்து முந்தியுள்ளது.

- 2021-22 ஆம் ஆண்டில் 12.5 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த நெதர் லாந்து நாட்டிற்கான இந்தியாவின் ஏற்றுமதியானது 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 48 சதவீதம் அதிகரித்து 18.52 பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது.




## ஆப்பிள்களுக்கான குறைந்தபட்ச இறக்குமதி விலை

- ஆப்பிள் இறக்குமதி விலையானது கிலோவிற்கு 50 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால், அவற்றை இறக்குமதி செய்ய அரசு தடை விதித்துள்ளது.
- எனினும் பூடானிலிருந்து மேற்கொள்ளப்படும் ஆப்பிள் இறக்குமதிக்கு இந்த குறைந்த பட்ச இறக்குமதி விலை நிபந்தனை பொருந்தாது.
- 2022 ஆம் ஆண்டில் 385.1 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இந்தியாவின் ஆப்பிள் இறக்குமதி மதிப்பானது 2023 ஆம் ஆண்டில் 296 மில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது.

## அரசாங்கத்திற்கு உபரி பணப் பரிமாற்றம்

- 2023 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டில் பதிவான 87,416 கோடி ரூபாய் உபரித் தொகையை மத்திய அரசுக்குப் பரிமாற்றுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இது முந்தைய ஆண்டில் செலுத்தியதை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாகும்.
- 2021-22 ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகை 30,307 கோடி ரூபாயாக இருந்தது.
- எதிர்பாராத இடருக்கான இடைநிலைத் தொகையினை 6 சதவீதமாக வைத்திருப்பதற்கு இந்திய ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் வாரியமானது, சுமார் 5.50 சதவீதமாக இருந்த எதிர்பாராத இடருக்கான இடைநிலைத் தொகையினை 6 சதவீதமாக உயர்த்தியுள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சந்திர மண் மாதிரியிலிருந்து ஆக்ஸிஜன் உருவாக்கம்

- நாசாவின் அறிவியலாளர்கள் சந்திர மண் மாதிரியில் இருந்து வெற்றிகரமாக ஆக்ஸிஜனைப் பிரித்தெடுத்துள்ளனர்.
- சந்திர மண் என்பது சந்திரனின் மேற்பரப்பில் பரவிக் காணப்படும் நுண்ணியத் தனிமங்களைக் குறிக்கிறது.
- வெற்றிடச் சூழலில் இந்த வகைப் பிரித்தெடுத்தல் செயல்முறை மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இது எதிர்காலத்தில் விண்வெளி வீரர்கள் சந்திரனின் சுற்றுச்சூழலில் வளங்களைப் பிரித்தெடுத்துப் பயன்படுத்த வழி வகுக்கிறது.
- இது இடம் சார்ந்த வளப் பயன்பாடு எனப்படும்.




## ஷிங்கிரிக்ஸ் தடுப்பு மருந்து

- கிளாக்ஸோஸ்மித்க்ளைன் பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட் (GSK) நிறுவனமானது தனது அக்கி அம்மை (ஷிங்கிள்ஸ்) தடுப்பு மருந்தினை இந்தியாவில் அறிமுகம் செய்வதாக அறிவித்துள்ளது.
- ஷிங்ரிக்ஸ் என்று பெயரிடப்பட்ட இந்த தடுப்பு மருந்தானது இந்த நிறுவனத்தின் அதிகம் விற்பனையாகும் தயாரிப்புகளில் ஒன்றாகும்.
- ஒரு வைரஸ் தொற்றான சிங்கிள்ஸ் என்பது ஒரு வலி மிகுந்த தடிப்பினை உண்டாக்கக் கூடியதோடு, மேலும் இது உடலில் எந்தப் பகுதியிலும் ஏற்படக் கூடியதும் ஆகும்.
- இது வெரிசெல்லா-ஜோஸ்டர் வைரஸால் ஏற்படுகிறது.
- ஷிங்ரிக்ஸ் என்பது உலகின் முதல் உயிரற்ற, இனக் கலப்புத் துணைப் பிரிவு தடுப்பு மருந்தாகும் என்பதோடு, இது இரண்டு தவணைகளாக தசைகளுக்குள் உட்செலுத்தப் படுகிறது.




## குவாசர் மற்றும் அண்டங்களின் மோதல்கள்


- வானியலாளர்கள் முதன்முதலில் 60 ஆண்டுகளுக்கு முன்பு பேரண்டத்தின் பிரகாசமான மற்றும் மிக சக்தி வாய்ந்தவையாகக் கருதப்படும் குவாசர்களைக் கண்டுபிடித்தனர்.
- ஆனால் அவற்றின் தோற்றம் பற்றி புரிந்து கொள்ள முடியவில்லை.
- தற்போது, இந்த வானியல் பொருட்கள் உருவாக்கப் படுவதன் பின்னணியில் உள்ள மர்மத்தை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- குவாசர்கள் என்பது செயலில் உள்ள அண்ட உட்கருக்களின் ஒரு வகையாகும்.



- அவை அண்டங்களின் மையத்தில் அமைந்துள்ள மாபெரும் கருந்துளைகளில் அமைந்துள்ளன.
- அண்டங்களின் மோதலே குவாசர்களின் உருவாக்கத்தினைத் தூண்டுகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- குவாசர்களைக் கொண்டுள்ள அண்டங்கள் மற்ற அண்டங்களுடன் மோதுவதற்கு மூன்று மடங்கு அதிக வாய்ப்பு இருப்பதாக அவர்கள் மதிப்பிடுகின்றனர்.
- ஆய்வு செய்யப்பட்ட குவாசர்களைக் கொண்டுள்ள அண்டங்களில் சுமார் 65% அண்டங்கள் முந்தைய காலங்களில் அண்ட இணைப்புகள் அல்லது மோதல்களை எதிர் கொண்ட அறிகுறிகளைக் கொண்டுள்ளதாக சமீபத்திய ஆய்வுகள் கண்டறிந்து உள்ளன.


## RHESSI ஆய்வுக் கலம்

- நாசாவின் ருவன் ரமட்டி உயர் ஆற்றல் கொண்ட சூரியசக்தியில் இயங்கும் நிறமாலை ஆய்வுக் கலம் (RHESSI) ஆனது, சமீபத்தில் பூமியின் வளிமண்டலத்திற்கு கொண்டு வரப் பட்டதன் மூலம் அழிக்கப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப்பட்ட இது எக்ஸ்ப்ளோரர் 81 என்றும் அழைக்கப் படுகிறது.
- இந்த விண்கலமானது சூரியனில் இருந்து வரும் சூரியப் பிழம்புகள் மற்றும் ஒளிவட்ட ஆற்றல் வெளியேற்றங்கள் ஆகியவற்றினை புவி தாழ்மட்டச் சுற்றுப்பாதையில் உள்ள தனது நிலையில் இருந்து ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டது.
- 300 கிலோ எடை கொண்ட இந்த விண்கலமானது, 2018 ஆம் ஆண்டில் செயலிழப்பு செய்யப் பட்டது.
- நாசா அமைப்பானது வளிமண்டலத்தில் அதனை நுழைத்ததன் மூலம் பெரும்பாலான விண்கலங்களை எரித்து அழித்துள்ளது.




## புவிக் காந்த Pc1 முத்துவடிவ அலைவுகள்

- புவிக் காந்த Pc1 முத்துவடிவ அலைவுகள் என்பது வீச்சு-பண்பேற்றப்பட்ட வடிவிலான குறுகிய-பட்டை சமிக்ஞைகள் ஆகும்.
- அவை பூமியின் காந்த மண்டலத்தில் உள்ள எதிரொலிப்பு அலை-துகள் தொடர்புகளால் உருவாக்கப் பட்ட குறைந்த அதிர்வெண் கொண்ட மின்காந்த அயனி சைக்ளோட்ரான் அலைகள் இருப்பதற்கான அடையாளங்கள் ஆகும்.
- இந்த அலைவுகளின் மீதான ஆய்வானது, பூமியின் காந்த மண்டலத்தில் உள்ள துகள் படிவுகளை அளவிடுவதற்கான ஒரு மாற்று ஆகும்.
- இந்த அலைவுகளுக்கானச் சான்றுகள் மத்திய மற்றும் உயர்-அட்சரேகைப் பகுதிகளில் ஏராளமாக உள்ளன.
- மிக தாழ்மட்ட அட்சரேகைப் பகுதிகளில் அடிக்கடி பதிவாவதில்லை.
- இந்த அலைகள் பூமிக்கு அருகிலுள்ள சூழலில் உள்ள விண்வெளி சார் வானிலையின் ஒரு முக்கிய அங்கமாகும்.
- சூரியனின் அதிகபட்ச இயக்க சுழற்சி காலத்தில் பூமத்திய ரேகைக்கான Pc1 என்ற அலைகளின் பரிமாற்ற வீதமானது சூரியனின் குறைந்தபட்ச இயக்க சுழற்சி காலத்தை விட குறைந்தது.
- Pc1 அலைவுகளின் உருவாக்கத்தின் வருடாந்திர மற்றும் பருவகால வடிவங்கள் ஆனது, இந்த இரு பகுதிகளிலும் சூரிய செறிவுப் புள்ளிகளின் எண்ணிக்கையுடன் நேர்மாறான தொடர்பினைக் கொண்டுள்ளன.
- செயலில் உள்ள புவிக் காந்த நிலைகளுடனான இந்த அலைவுகளின் ஒரு தொடர்பானது, புவிக் காந்தப் புயல்களின் மீட்சி நிலைக் கட்டத்தில் Pc1 அலைவுகளின் நிகழ்வானது கணிசமாக அதிகரிப்பதைக் காட்டுகிறது.



## மூளை நரம்பு உயிரணுப் புற்றுநோயினைக் கண்டறிவதற்கான கருவி

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் மூளை மற்றும் முதுகுத் தண்டு வடத்தில் உள்ள வீரியமிக்கப் பரவக் கூடிய கட்டிகளைக் கண்டறிவதற்காக என்று இயந்திர கற்றல் அடிப்படையிலான மதிப்பீட்டுக் கருவியினை உருவாக்கியுள்ளனர்.
- இது மூளை நரம்பு உயிரணுப் புற்றுநோயின் பல்வடிவக் கடத்திகள் (GBMDriver) என்று அழைக்கப் படுகிறது.
- மூளை நரம்பு உயிரணுப் புற்றுநோய் என்பது குறிப்பிட்டச் சிகிச்சை வாய்ப்புகளை மட்டுமே கொண்ட, வேகமாகவும் தீவிரமாகவும் வளரும் ஒருவித கட்டியாகும்.
- இது ஆரம்பநிலையிலேயே நோய் கண்டறியப்பட்டதிலிருந்து இரண்டு வருடங்களுக்கும் குறைவான காலத்திற்கு உயிர் வாழ்வதற்கான வாய்ப்பினைக் கொண்டது.




## அரெக்ஸ்வி தடுப்பு மருந்து



- சுவாச நுண்குழல் அழற்சி வைரசிற்கான (RSV) முதல் தடுப்பு மருந்தினை 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் அங்கீகரித்துள்ளது.

- இது வயது வந்தோர் பிரிவினருக்கான உலகின் முதல் RSV நோய்த் தடுப்பு மருந்து ஆகும்.
- RSV என்பது நுரையீரல் மற்றும் சுவாசப் பாதைகளில் தொற்றுகளை ஏற்படுத்தும் "அதிக தொற்றுமிக்க" வைரஸ் ஆகும்.

## நிலையான அரோரல் சிவப்பு வளைவு (SAR)


- இந்தியாவின் லடாக் பகுதியில் பொதுவாக துருவப் பகுதிகளில் காணப்படும் அரோரா பொரியாலிஸ் அல்லது வடக்கு விளக்குகள் காணப்பட்டது.
- அரோராவைப் பகுப்பாய்வு செய்த பிறகு, அது "நிலையான அரோரல் சிவப்பு (SAR) வளைவு" என்று கணிக்கப்பட்டது..
- வழக்கமாக நிகழும் அரோரா நிகழ்வு போன்று அல்லாமல் SAR என்பது லடாக்கில் நிகழும் மிகவும் அரிதான ஒரு நிகழ்வு ஆகும்.
- SAR ஆர்க் என்பது வானத்தில் காணப்படும் சிவப்பு நிற ஒளியின் பட்டையாகும்.
- நகரும் வடிவங்களில் பல்வேறு வண்ணங்கள் தோன்றும் பல்வேறு அரோராக்கள் போலல்லாமல், (SAR) அரோராக்கள் காட்சிகள் நிலையான மற்றும் ஒரே வண்ணம் உடையதாக உள்ளது.
- சூரியனில் இருந்து வெடித்த மின்னேற்ற அடைந்தப் பொருளால் தூண்டப்பட்ட, புவிக் காந்த அலையின் செயல்பாட்டின் போது இது தோன்றுகிறது.
- ஆனால் இவற்றின் உருவாக்க வழிமுறை சற்று வித்தியாசமானதாக உள்ளது.
- இந்த அலைகள் ஐரோப்பா, சீனா மற்றும் இந்தியாவின் லடாக் ஆகிய இடங்களில் காணப் பட்டன.
- இது போன்ற நிகழ்வு கடந்த 2015 ஆம் ஆண்டு நிகழ்ந்தது.



## யுரேனஸின் நான்கு துணைக் கோள்களில் நீர் இருக்க வாய்ப்பு

- யுரேனஸின் நான்கு பெரிய துணைக் கோள்களில் நீர் இருக்க வாய்ப்புள்ளதாக நாசா அறிவியலாளர்கள் புதிய ஆய்வு ஒன்றில் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் புதிய கண்டுபிடிப்புகளானது, யுரேனஸ் கோளினுடைய 4 துணைக் கோள்கள் என்பவை அவற்றின் பனி மூடிய மேற்பரப்புகளுக்கு அடியில் ஆழமான கடல்களைக் கொண்டிருக்கலாம் என்று கூறுகின்றன.

- யுரேனஸ் கோளின் நான்கு பெரிய துணைக் கோள்களாவன – ஏரியல், அம்ப்ரியல், டைட்டானியா மற்றும் ஒபரான் என்பவை ஆகும்.
- யுரேனஸ் கோளானது, சூரியனில் இருந்து ஏழாவது கிரகம் ஆகும் என்பதோடு, சூரியக் குடும்பத்தில் உள்ள மிகவும் குளிர்ந்தக் கிரகம் இதுவே ஆகும்.
- யுரேனஸ் இதுவரையில் அறியப்பட்ட 27 துணைக் கோள்களைக் கொண்டுள்ளது.




## ஸ்கேரி பார்பி கருந்துளை

- ஒரு நட்சத்திரத்தினை உள்ளிழுக்கின்ற "ஸ்கேரி பார்பி" என்று அழைக்கப்படும் ஒரு மிகப்பெரிய கருந்துளையை வானியலாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- ஒளி என்பது புவியினை அடைவது தொடர்பான ஒரு சார்பு விளைவு காரணமாக இந்த நிகழ்வு ஆனது 800 நாட்களுக்கு மேல் நீடித்தது.
- ஸ்கேரி பார்பி முதன்முதலில் 2020 ஆம் ஆண்டில் கண்டறியப் பட்டது.
- இது ஆரம்பத்தில் கண்டறியப்பட்ட போது, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்துப் பொருட்களையும் போல ஒரு தொடர்பற்ற ஒரு பெயர் வழங்கப்பட்டது.
- இது ZTF20abrbeie என அழைக்கப் பட்டது.




## Tu-160 குண்டு வீச்சு விமானம்

- ❖ உக்ரைன் போரில் Tu-160 எனப்படும் உலகின் மிகப்பெரிய குண்டுவீச்சு விமானத்தினை ரஷ்யா நிலைநிறுத்தியுள்ளது.
- ❖ Tu-160 குண்டுவீச்சு விமானமானது, வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு நாடுகளில் பிளாக் ஜாக் என்றும் அழைக்கப்படுகிறது.
- ❖ இது 1980 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட ஒரு மீயொலி, மாறுநிலை நிலைமாற்ற இறக்கை அம்சம் கொண்ட, ஒரு உத்திசார் குண்டுவீச்சு விமானமாகும்.
- ❖ இதுவரையில் கட்டமைக்கப்பட்ட மிகப்பெரிய மற்றும் மிகவும் கனமான இராணுவ விமானங்களில் இது ஒன்றாகும்.
- ❖ அதன் மாபெரும் அளவின் காரணமாக இது "ஒயிட் ஸ்வான்" என்ற புனைப் பெயரைப் பெற்றது.
- ❖ இதன் அதிகபட்ச வேகம் மணிக்கு 2,200 கிமீ அல்லது மேக் 1.6 ஆகும்.
- ❖ இது 12,000 கி.மீக்கும் அதிகமான தூரம் செல்லக் கூடியது என்பதோடு இதில் பறக்கும் போதே எரிபொருள் நிரப்பும் வகையில் விமானத்தினுள் அதற்கான ஒரு அமைப்பு பொருத்தப் பட்டுள்ளது.
- ❖ இந்தியா தனது உத்திசார் சக்தியை அதிகரிப்பதற்காக ரஷ்யாவிடம் இருந்து குறைந்தது ஆறு Tu-160 குண்டுவீச்சு விமானங்களை வாங்க விருப்பம் தெரிவித்துள்ளது.



## நீரடி தகவல்தொடர்புச் சேவைக்கான உணர்வி தொழில்நுட்பம்

- ❖ சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆகியவை நீரடி தகவல்தொடர்புச் சேவைக்கான ஒரு அதிநவீன உணர்வி தொழில்நுட்பத்தினை உருவாக்கியுள்ளன.
- ❖ புதிதாக உருவாக்கப் பட்டுள்ள இந்த PZT மெல்லிய இழை அடிப்படையிலான ஒலி சார் உணர்வியானது, வழக்கமான PVDF-அடிப்படையிலான ஒலி சார் உணர்வியை விட அதிக செயல்திறனைக் கொண்டுள்ளது.
- ❖ உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தத் தொழில்நுட்பமானது, பல்வேறு சர்வதேச நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் சாதனங்களைத் தயாரிக்க உதவும்.
- ❖ இது அழுத்தப்பட்ட நுண்மின்னியக்க அமைப்புத் தொழில்நுட்பம் என்று அழைக்கப் படுகிறது.





## TROPICS ஆய்வுக் கலம்

- நாசா நிறுவனம் நியூசிலாந்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு தளத்திலிருந்து செயல்படும் வகையில், வெப்பமண்டலச் சூறாவளிகளைக் கண்காணித்து நிகழ்நேர அடிப்படையில் அந்தத் தரவுகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட இரண்டு சிறிய செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியுள்ளது.
- TROPICS ஆய்வுத் திட்டம் என்று அழைக்கப்படும் இந்தத் திட்டமானது, பேரழிவினை உண்டாக்கும் புயல்கள் குறித்த சில வானிலை முன்னறிவிப்புகளை மேம்படுத்தும் திறனைக் கொண்டுள்ளது.
- TROPICS என்பது, மழைப் பொழிவு கட்டமைப்பு மற்றும் புயல்களின் தீவிரத்தினை சிறிய செயற்கைக் கோள் திரள்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட நேரக் கண்காணிப்பு என்பதன் சுருக்கமாகும்.
- இது மழைப்பொழிவு, வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் பற்றிய தகவலை வழங்குவதோடு, புயல்கள் எவ்வாறு உருவாகின்றன என்பதனை மணி நேர அடிப்படையில் வானியல் நிபுணர்கள் கண்காணிக்க உதவுகிறது.
- இந்தப் புதிய புயல் கண்காணிப்புக் கலங்கள் ஒவ்வொரு மணி நேரத்திற்கு ஒருமுறை புயல் உருவான பகுதி மீது பறந்து ஆய்வு செய்யக் கூடியது.
- தற்போதையச் செயற்கைக் கோள்கள் ஒவ்வொரு ஆறு மணி நேரத்திற்கு ஒருமுறை சூறாவளி பகுதி மீது பறக்கக் கூடியது.



## கூகுள் நிறுவனத்தின் பார்டு உரையாடு மென் பொருள்

- ❖ கூகுள் நிறுவனத்தின் பார்டு எனப்படும் ஒரு செயற்கை நுண்ணறிவு உரையாடு மென் பொருள் ஆனது தற்போது 180க்கும் மேற்பட்ட நாடுகளில் கிடைக்கப் பெறுகிறது.
- ❖ பார்டு மென் பொருளில், நமது வினவல்கள் அல்லது சந்தேகங்களைத் தட்டச்சு மூலமாக உள்ளீடு செய்வதன் மூலம் நிகழ்நேரத்தில் இணையத்தில் தேட முடியும்.
- ❖ சில சூழ்நிலைகளில் உபயோகப்படுத்த மிகவும் வசதியாக இருக்கும் வகையில், பார்டு மென்பொருளுடன் நமது குரலைப் பயன்படுத்தித் தொடர்பு கொள்ள முடியும்.
- ❖ பார்டு மென்பொருள் என்பது PDF, Word மற்றும் HTML உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் உரையை உருவாக்கக் கூடியதாகும்.
- ❖ பார்டு மென்பொருள் இணையப் பக்கங்களைச் சுருக்கமாக வழங்கக் கூடிய நிலையில் இது ஒரு நீண்ட அல்லது ஒரு சிக்கலான கட்டுரையின் கருப்பொருளினை விரைவாகப் பெறச் செய்வதற்கான சிறந்த வழியாகும்.




BARD VS CHATGPT

| | Bard | ChatGPT |
|---|---|---|
| Language model | LaMDA | GPT-3 |
| Source of Information | Internet | Data feed |
| Information cutoff | None | 2021 |
| Access | Limited | Unlimited |
| Limitations | Biases of Internet | Biases of data |

## ஃபோமல்ஹாட்

- ❖ 25 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள ஃபோமல்ஹாட் ஆனது இரவு வானில் உள்ள 20 பிரகாசமான நட்சத்திரங்களில் ஒன்றாகும்.
- ❖ நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியானது, அதன் அருகில் உள்ள நட்சத்திரத்தினைச் சுற்றியுள்ள சூடான தூசிப் படலத்தினைப் படம் பிடித்துள்ளது.
- ❖ நமது சூரியக் குடும்பத்தின் குறுங்கோள் மற்றும் குய்பர் தூசிப் பட்டைகளை விட இந்த தூசி நிறைந்த அமைப்புகள் மிகவும் சிக்கலானவையாக உள்ளன.
- ❖ ஒட்டு மொத்தமாக, இந்த நட்சத்திரத்திலிருந்து 14 பில்லியன் மைல்கள் (23 பில்லியன் கிலோ மீட்டர்) வரை மூன்று மூன்று உள்ளமைவு பட்டைகள் உள்ளன.
- ❖ இது சூரியனிலிருந்து பூமி அமைந்துள்ள தொலைவின் 150 மடங்கிற்குச் சமமாகும்.
- ❖ ஃபோமல்ஹாட் என்ற நட்சத்திரத்தின் தூசி வளையம் ஆனது 1983 ஆம் ஆண்டில் நாசாவின் அகச்சிவப்பு வானியல் செயற்கைக் கோள் (IRAS) மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கண்டுபிடிக்கப் பட்டது.
- ❖ இரவு வானில் உள்ள 18வது பிரகாசமான நட்சத்திரமான ஃபோமல்ஹாட், சூரியனின் நிறையில் 1.9 மடங்கினைக் கொண்டுள்ளது.




## புறமண்டல உயிரியல் இருப்பு குறித்த ஆய்வுக் கருவி

- ❖ சனிக்கோளின் பல துணைக் கோள்களில் ஒன்றான என்செலடஸ் குறித்து ஒரு ஆய்வு செய்வதற்காக நாசா ஒரு எந்திரத்தினை உருவாக்கியுள்ளது.
- ❖ இந்தத் துணைக் கோள்களில் தண்ணீர் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்வதன் மூலம், அங்கு உயிர்கள் வாழ வாய்ப்பு உள்ளதா என்பதைக் கண்டறிவதே இதன் குறிக்கோள் ஆகும்.
- ❖ இந்த எந்திரமானது பாம்பைப் போல் சுற்றிச் சுழலக் கூடியது ஆகும்.
- ❖ சனிக்கோளின் ஆறாவது பெரிய துணைக் கோள் என்செலடஸ் ஆகும்.



## இந்தியாவின் முதல் C295 போர்த்திறம் சார்ந்தப் போக்குவரத்து விமானம்


- ❖ புதிய தலைமுறைப் போர்த்திறம் சார்ந்த விமானமான இந்தியாவின் முதல் ஏர்பஸ் C295, தனது முதல் விமானப் பயணத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- ❖ இந்த முதல் விமானச் சோதனையானது முதலாவது இந்தியாவில் தயாரிப்போம் என்ற விண்வெளித் திட்டத்திற்கான குறிப்பிடத்தக்க சாதனையைப் பிரதிபலிக்கிறது.
- ❖ இந்திய விமானப் படையானது C295 என்ற விமானத்தினை இயக்குகின்ற உலகின் ஒரு மிகப்பெரிய அமைப்பாக மாற உள்ளது.

- ❖ முதல் 16 விமானங்கள் ஸ்பெயினின் செவில்லி என்னுமிடத்தில் தொகுக்கப்பட்டு, பிறகு இந்தியாவிற்குப் 'பறக்கும்' நிலையில் வழங்கப்படும்.
- ❖ அடுத்து வழங்கப்பட உள்ள 40 விமானங்கள் இரண்டு நிறுவனங்களுக்கிடையிலான தொழில்துறை கூட்டுறவின் ஒரு பகுதியாக இந்தியாவில் டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் (TASL) நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுத் தொகுக்கப் படும்.




## புதைபடிவத்திலிருந்து டிஎன்ஏவைப் பிரித்தெடுப்பதற்கான ஊடுருவல் சாராத முறை

- ❖ அறிவியலாளர்கள் சிதைவுறா டிஎன்ஏ பிரித்தெடுப்பு முறையை உருவாக்கியுள்ளனர்.
- ❖ இதில், புதைப்படிவப் பொருள்கள் சோடியம் பாஸ்பேட் இடையகக் கரைசலில் மூழ்க வைக்கப் பட்டு, பிறகு அதன் படிப்படியாக வெப்பநிலை அதிகரிக்கப்படுகின்றது.
- ❖ பழங்கால எலும்பு மற்றும் பல் பொருட்களில் சிக்கியுள்ள டிஎன்ஏ கரைசலில் வெளியிடப் பட்டு, மேலும் வரிசைப்படுத்துதல் மற்றும் பகுப்பாய்வு செய்ய உதவுகிறது.
- ❖ கலைப்பொருட்களை 90 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் கழுவுவதன் மூலம், கலைப் பொருட்களை அப்படியே வைத்திருக்கும் வகையில், கழுவும் நீரில் இருந்து டிஎன்ஏவைப் பிரித்தெடுக்க முடியும்.
- ❖ ஆராய்ச்சியாளர்கள் இந்தப் புதிய முறையை டெனிசோவா குகையில் இருந்து பெறப் பட்ட ஒரு மான் பல்லினால் செய்யப்பட்ட ஒரு கலைப் பொருளில் பயன்படுத்தி, ஒரு வாபிடி (மரை காட்டு மான் இனங்கள்) மற்றும் ஒரு பண்டைய மனிதனின் டிஎன்ஏவை மீட்டெடுக்க முடிந்தது.
- ❖ டிஎன்ஏ பகுப்பாய்வுகள் அந்தப் பொருளின் காலத்தினை சுமார் 19,000-25,000 ஆண்டுகள் என மதிப்பிட வழி வகுத்தன.
- ❖ பொதுவாக, பழங்கால எலும்புக் கூடுகளிலிருந்து டிஎன்ஏ பிரித்தெடுத்தல் ஆனது மிகச் சேதாரம் உண்டாக்கக் கூடியதாக இருக்கலாம் அல்லது அந்த மாதிரிகளை வெகுவாக மாற்றி அமைக்கக் கூடியதாக இருக்கலாம்.



## நானோ-QuIC தொழில்நுட்பம்

- மின்னசோட்டா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் நரம்பியக் கடத்தல் குறைபாடு சார்ந்த நோய்களைக் கண்டறிவதற்காக என்று ஒரு புதிய நோய் கண்டறிதல் தொழில் நுட்பத்தினை உருவாக்கியுள்ளனர்.
- நானோ-QuIC- எனப்படும் அந்தத் தொழில்நுட்பமானது நுண் துகள்களால் மேம்படுத்தப் பட்ட அதிர்வினால் தூண்டப்பட்ட மாற்றம் எனப்படும் நுட்பமாகும்.
- இதன் மூலம் உயிரிக் குறிகாட்டிகளை ஆரம்பத்திலேயே கண்டறிய முடிவதால் அல்சைமர், பார்கின்சன் மற்றும் நாட்பட்ட நலிவுறல் நோய் (CWD) போன்ற பல்வேறு நோய்களுக்கான ஆரம்பகட்டச் சிகிச்சை மற்றும் தணிப்பு ஆகியவற்றிற்கு இது வழி வகுக்கும்.




## ஹஸ்கி-இச்சோர் சாதனம்

- CML பயோடெக் லிமிடெட் நிறுவனமானது இரத்தச் சேகரிப்பு குழாய்களை தயாரிக்கச் செய்வதற்காக, 'ஹஸ்கி-இச்சோர்' எனப்படும் உலகின் முதல் ஒருங்கிணைந்த இயந்திரத்தினை நிறுவியுள்ளது.
- இந்த ஒருங்கிணைந்த இயந்திரமானது இயந்திர அச்சு, வெப்பத் திரவங்களை உட் செலுத்தும் அமைப்பு, டவுசர் எனப்படும் அளவீட்டுக் கருவி, ஈரப்பதம் அகற்றும் கருவி, குளிர்விப்பான், வெப்பநிலை கட்டுப்படுத்தி மற்றும் உலர்த்தி ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது.
- பொதுவாக இந்தச் செயல்பாடுகள் வெவ்வேறு இயந்திரங்களில் மேற்கொள்ளப் படச் செய்கின்றன.




## ஃப்ளோஹார்ஸ் தீநிரல்

- ஃப்ளோஹார்ஸ், போலியான ஆண்ட்ராய்டு தீநிரலானது, கிழக்கு ஆசியாவில் உள்ள நுகர்வோரைக் குறி வைத்து, செயலிகளில் பரவலாக பாதிப்பினை ஏற்படுத்தி வருகிறது.
- அவை பயனர் தகவல்கள் மற்றும் இரண்டடுக்கு அங்கீகாரக் குறியீடுகள் உள்ளிட்டத் தகவல்களைத் திருடும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன.
- தகவல் திருடும் நிரல் கொண்ட மின்னஞ்சல்கள் மூலமாக, செயலியினைப் பதிவிறக்கி, நிலுவையில் உள்ள கட்டணச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வகையிலான சேவையாக ஃப்ளூ ஹார்ஸ் தீநிரலானது அதிக வசதி கொண்ட இலக்குப் பயனர்களுக்கு அனுப்பப் படுகிறது.


## பசுமை ஹைட்ரஜன் எரிபொருளுக்கான வினையூக்கி

- குவஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது ஒரு மரத்தின் திரவ வடித்தல் மூலம் பெறப்படும் ஆல்கஹாலில் இருந்து, நிலைத்தன்மை மிக்க பசுமை ஹைட்ரஜன் எரிபொருளை உற்பத்தி செய்யக் கூடிய ஒரு வினையூக்கியை உருவாக்கி உள்ளது.
- மேலும், இது கார்பன் டை ஆக்சைடை ஒரு துணை விளைவுப் பொருளாக உற்பத்தி செய்யாத வகையிலானதாகும்.
- இந்த எளிதான மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பானச் செயல்முறையானது ஒரு பயனுள்ள தொழில்துறை இரசாயனமான ஃபார்மிக் அமிலத்தினை வெகுவாக உற்பத்தி செய்கிறது.
- இது மெத்தனாலை ஒரு நம்பிக்கைக்குரிய திரவக் கரிம ஹைட்ரஜன் கடத்தியாக (LOHC) முன் வைப்பதோடு, ஹைட்ரஜன்-மெத்தனால் பொருளாதாரம் என்ற கருத்தாக்கத்திற்கு குறிப்பிட்டப் பங்கினை அளிக்கிறது.



## பகுதியளவு கிரையோஜெனிக் எஞ்சின் பரிசோதனைகள்


- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது, அதன் பகுதியளவு கிரையோஜெனிக் எஞ்சினின் சோதனையை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது.
- 2000 kN (கிலோ நியூட்டன்) திறன் கொண்ட பகுதியளவு-கிரையோஜெனிக் எந்திரத்தின் இடைநிலைக் கட்டமைப்பிற்கான முதலாவது ஒருங்கிணைந்தச் சோதனையானது மேற் கொள்ளப் பட்டது.
- தமிழ்நாட்டில் மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ உந்துவிசை இயக்க வளாகத்தில் புதிதாக இணைக்கப் பட்டப் பகுதியளவு க்ரையோஜெனிக் ஒருங்கிணைந்த எஞ்சின் மற்றும் நிலைச் சோதனை மையத்தில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது.



## புதிய பல்முனையோட்ட மின்பகுளி மின்கலத் தொழில்நுட்பம்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, 'நீர்மம் சாராதக் கரிம ஆக்சிஜனேற்ற-ஒடுக்கப் பல்முனையோட்ட ஒரு மின்பகுளி மின்கலத்தினை' உருவாக்கி உள்ளது.
- கரிம இரசாயனங்களின் ஒரு வகுப்பான 'பைரிலியம் உப்புகளை' பயன்படுத்தி புதிய வகை மின்பகுளிகளை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- பொருத்தமானக் கட்டமைப்பு மாற்றங்களுடன் அதனால் பெரும் ஆற்றலைச் சேமிக்க முடியும் வகையில் இந்த இரசாயனங்கள் உயர் மின்னழுத்தச் செயல்பாடுகள் நடைபெற வழி வகுக்கின்றன.
- இந்த மின்பகுளிகள் அதிக மின்னோட்ட அடர்த்தி மற்றும் மின்னழுத்தத்தைக் கடத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- வழக்கமான மின்னோட்ட மின்கலங்கள் ஹைட்ரோகுளோரிக் அமிலம், சல்பூரிக் அமிலம் மற்றும் கார உலோக ஹைட்ராக்சைடுகள் போன்ற நீர்மம் சார்ந்த மின் பகுளிகளைக் கொண்டுள்ளது.
- மின்பகுளிகளில் உள்ள நீர், மின்னாற் பகுப்புக்கு உட்படுவதால், அது செயல்பாட்டு மின்னழுத்த வரம்பு மற்றும் ஆற்றல் அடர்த்தியைக் குறைக்கிறது.

- இதில் நீர்மம் இருப்பதால் மின்கல கூறுகளின் மீது அரித்தல் ஏற்பட வழி வகுத்து, அதன் ஆயுட்காலம் மற்றும் செயல்திறனைக் குறைக்கிறது.



## செயற்கை நுண்ணறிவு மற்றும் முக அடையாளம் காணல் தொழில்நுட்பம் மூலமான தகவல் சரிபார்ப்பு




- தொலைத் தொடர்புத் துறை (DoT) ஆனது, தொலைத்தொடர்பு சந்தாதாரர் அடையாள சில்லுகளின் (SIM) சந்தாதாரர் சரிபார்ப்பு (ASTR) செயற்கருவிக்கான செயற்கை நுண்ணறிவு மற்றும் முக அடையாளம் காணல் தொழில்நுட்பம் மூலம் இயங்கும் ஒரு நுட்பத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது மோசடியான கைபேசி இணைப்புகளைக் கண்டறிந்து அவற்றைத் தடுப்பதை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- செயற்கை நுண்ணறிவு மற்றும் முக அடையாளம் காணல் தொழில்நுட்பம் மூலமான தகவல் சரிபார்ப்பு அமைப்பானது, 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் ஜூலை மாதத்திற்கு இடையிலான காலகட்டத்தில் ஹரியானாவில் உள்ள தொலைத்தொடர்புத் துறையின் பிரிவினால் உருவாக்கப்பட்டது.

- இது 1 கோடி புகைப்படங்களைக் கொண்ட தரவுத் தளத்திலிருந்து 10 வினாடிகளுக்குள் சந்தேகத்திற்குரிய முகம் சார்ந்த அனைத்து சந்தாதாரர் அடையாளச் சில்லுகளையும் கண்டறியும் திறன் கொண்டது.


## கால்சியம்-41 கதிரியக்க கரிம காலக் கணிப்பு

- கதிரியக்க கரிம காலக் கணிப்பானது 1947 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டது முதல் ஒரு கரிமப் பொருள் எவ்வளவு கார்பன்-14 என்பதினைக் கொண்டுள்ளது என்பதன் அடிப்படையில் அதன் காலத்தினைக் கணக்கிடுவதற்கு அறிவியலாளர்களுக்கு உதவி வருகிறது.
- கார்பன்-14 என்ற கூறின் அரை ஆயுட்காலம் 5,700 ஆண்டுகள் ஆகும்.
- எனவே, சுமார் 50,000 ஆண்டுகளுக்கு மேல் பழமையான பொருட்களின் காலத்தினை இந்த நுட்பத்தின் மூலம் தீர்மானிக்க முடியாது.
- 1979 ஆம் ஆண்டில், அதற்குப் பதிலாக 99,400 ஆண்டுகள் அரை ஆயுட்காலம் கொண்ட கால்சியம்-41 என்ற கூறினை இதற்காகப் பயன்படுத்துவதற்கு என்று அறிவியலாளர்கள் பரிந்துரைத்தனர்.
- சுமார் 10^15 கால்சியம் அணுக்களுள் ஒன்றில் உருவாகின்ற கால்சியம்-41 மிக அரிதான வகையிலான ஒன்றாகும்.
- கடல்நீரில் 12% அளவிலான துல்லியத்துடன், ஒவ்வொரு 10^16 கால்சியம் அணுக்களிலும் ஒரு கால்சியம்-41 அணுவை ஆராய்ச்சியாளர்களால் கண்டறிய முடிந்தது.



## பான் ஜீனோம் வரைபடம்

- சமீபத்தில் நேச்சர் என்ற இதழில் பான் ஜீனோம் குறிப்பு வரைபடம் பற்றிய ஒரு ஆய்வை வெளியிட்டுள்ளது.
- இது பெயர் அறியப்படாத 47 நபர்களிடமிருந்து (19 ஆண்கள் மற்றும் 28 பெண்கள்) பல்வேறு மரபணுக்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.
- அவர்கள் முக்கியமாக ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவர்கள் என்றாலும் சிலர் கரீபியன், அமெரிக்கா, கிழக்கு ஆசியா மற்றும் ஐரோப்பாவிலிருந்தும் வந்தவர்கள் ஆவார்கள்.
- நமது மரபணு எனபது ஒவ்வொன்றும் நியூக்ளியோடைடுகள் அல்லது தளங்கள் எனப் படும் மில்லியன் கணக்கான அளவில் தனிப்பட்ட கட்டுமானத் தொகுதிகளால் ஆன வகையில் 23 வெவ்வேறு சரங்களைக் கொண்டுள்ளது.
- நமது 23 குரோமோசோம்கள் அனைத்தையும் உருவாக்க நான்கு வகையான கட்டுமானத் தொகுதிகளின் (A, T, G மற்றும் C) பல்வேறு சேர்க்கைகளில் பல மில்லியன் முறைகள் அமைக்கப் பட்டு மீண்டும் மீண்டும் உருவாக்கப்படுகின்றன.
- மரபணுக்களை வரிசைப்படுத்துதல் என்பது நான்கு எழுத்துக்களின் துல்லியமான வரிசையையும் அவை குரோமோசோம்களில் எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தீர்மானிக்கப் பயன்படும் ஒரு முறையாகும்.
- பல்வேறு தனிப்பட்ட மரபணுக்களை வரிசைப்படுத்துவதன் மூலம் மரபணு மட்டத்தில் மனிதனின் பன்முகத் தன்மையைப் புரிந்து கொள்ள மற்றும் சில நோய்களுக்கு நாம் எவ்வளவு ஆளாகிறோம் என்பதை அறிய அது உதவுகிறது.





## செயற்கை இலை

- கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் "செயற்கை இலையை" உருவாக்கி உள்ளனர்.
- சூரிய ஒளியின் சக்தியைப் பயன்படுத்தி கார்பன் டை ஆக்சைடை திரவ எரிபொருளாக இதனால் மாற்ற முடியும்.
- இவை முக்கியமாக உள் எரிப்பு வாகனங்களில் நேரடியாக உள்ளீட்டு எரிபொருளாகப் பயன்படுத்தப் படலாம்.
- அவர்கள் ஒளிச் சேர்க்கைச் செயல்முறையைப் பிரதி எடுத்தல் மூலம் கார்பன் டை ஆக்சைடு, நீர் மற்றும் சூரிய ஒளியை எத்தனால் மற்றும் புரோபனால் என்ற இரண்டு கார்பன் எரிபொருட்களாக மாற்றலாம்.




## யுரேனஸில் துருவ சூறாவளி


- முதன் முறையாக யுரேனஸின் வட துருவத்தில் ஒரு துருவச் சூறாவளி கண்டறியப் பட்டுள்ளது.
- நாசா விஞ்ஞானிகள் யுரேனஸ் கிரகத்தில் இருந்து வெளியாகும் ரேடியோ அலைகளை ஆய்வு செய்வதன் மூலம் இந்தத் துருவச் சூறாவளியைக் கண்டுபிடித்துள்ளனர்.
- 2015, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட தரவு மூலம் கிரகங்களின் வளிமண்டலத்தைப் பற்றி ஆழமாக ஆராய விஞ்ஞானிகளுக்கு இது உதவுகிறது.
- இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் நமது சூரியக் குடும்பத்தில் வளிமண்டலங்களைக் கொண்ட அனைத்துக் கிரகங்களைப் பற்றிய ஒரு பரந்த உண்மையை உறுதிப்படுத்த முடியும்.
- இதன் மூலம் கிரகங்கள், பாறையினையோ அல்லது வாயுவினையோ எதனைக் கொண்டதாக இருந்தாலும் கூட அவற்றின் வளிமண்டலங்கள் துருவப் பகுதிகளில் சுழலும் சுழலின் அறிகுறிகளைக் காட்டுகின்றது.



## டோபாஷ்


- இன்ஃபோசிஸ் நிறுவனமானது, டோபாஷ் என்ற விரிவான சேவைகள், தீர்வுகள் மற்றும் இயங்குதளச் சேவைகளை கொண்ட மென்பொருளினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது மிகவும் ஆக்கம் மிக்கச் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பங்களின் மீதான ஆற்றலைப் பயன்படுத்துகின்றது.
- டோபாஷ் எனப்படுவது, செயற்கை நுண்ணறிவின் முதன்மையான ஒரு கருப்பகுதியின் மேம்பாட்டிற்கு வெகுவாக வழிவகுக்கும் வகையில் அதன் இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் பயன்பாட்டுச் செயற்கை நுண்ணறிவு கட்டமைப்பில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

- அறிவாற்றல் சார்ந்தத் தீர்வுகளை வழங்கச் செய்வதற்கும் ஒரு மதிப்பு உருவாக்கத்தை விரைவுபடுத்துவதற்கும் வேண்டி தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் திறன்களை இது மேம்படுத்துகிறது.




## அசினெட்டோபாக்டர் பாமன்னிக்கான நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து

- செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி குறிப்பாகப் பெருமளவில் ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்ற மருந்து-எதிர்ப்புப் பாக்டீரியாவுக்கு எதிராக செயல்படும் புதிய வகை நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த மருந்து அசினெட்டோபாக்டர் பாமன்னி பாக்டீரியாவின் பாதிப்புகளை எதிர்த்துப் போராட உதவும்.
- இது பெரும்பாலும் மருத்துவமனைகளில் காணப்படுகின்ற மற்றும் நிமோனியா, மூளைக் காய்ச்சல் மற்றும் பிற தீவிர நோய்த் தொற்றுகளுக்கு வழி வகுக்குகின்ற ஒரு வகை பாக்டீரியா ஆகும்.
- சில காயம்பட்ட வீரர்களின் உடலில் தொற்று ஏற்படுவதற்கும் இதே பாக்டீரியா தான் காரணமாகும்.
- நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்திற்கான எதிர்ப்புத் திறனைக் கொண்ட அசினெட்டோ பாக்டர் பாமன்னியின் 41 வெவ்வேறு வடிவங்களுக்கு எதிராக இந்த நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து செலுத்தப்பட்டுச் சோதனை செய்யப்பட்டன.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## W12+ செயல்திட்டம்

- ஐக்கிய நாடுகள் சபையின் 2023 ஆம் ஆண்டு நீர்வள மாநாடானது நியூயார்க் நகரில் நடைபெற்றது.
- 46 ஆண்டுகளுக்குப் பிறகு தண்ணீர் தொடர்பாக நடத்தப்பட்ட முதல் சந்திப்பு இது ஆகும்.
- முன்னதாக 1977 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் நீர்வள மாநாடு நடத்தப் பட்டது
- 2023 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் நீர்வள மாநாட்டில் வெளியிடப்பட்ட W12+ செயல்திட்டமானது நீர் வளப் பாதுகாப்பு தொடர்பான சவால்களுக்கான ஒரு தகவல் பகிர்விற்கான உறுதிப்பாட்டினை வழங்கியது.
- இது நகர்ப்புற நீர்வளப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்கும் ஒரு இயங்கலை தகவல் கருவியாகும்.
- நகர்ப்புற நீர்வளப் பிரச்சினைகளுக்கான W12+ திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.
- எளிதில் ஆய்வு செய்யக் கூடிய நிகழ்வு ஆய்வுகள் மூலம் பொதுவான நகர்ப்புற நீர்வளப் பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றிய நுண்ணறிவை வழங்கும் ஒரு கருவியை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் இருந்து பெங்களூரு மற்றும் சென்னை ஆகிய இரண்டு நகரங்கள் இந்தச் செயல்திட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன.
- நகரங்களின் தகவல் அமைப்புகளைக் கொண்டிருக்கும் இது யுனெஸ்கோவின் ஒரு நடைமுறையாகும்.




## HydroSOS


- உலக வானிலை அமைப்பின் நீரியல் நிலை மற்றும் கண்ணோட்ட அமைப்பு (HydroSOS) ஆனது மாதிரி உருவாக்கத்திற்கான தரவுப் பகுப்பாய்வுச் செயற்கருவிகளை வழங்கி உள்ளது.

- தற்போதைய நீரியல் நிலை மற்றும் உலகின் அனைத்துப் பகுதிகளுக்குமான அவற்றின் சாத்தியமான எதிர்காலக் கண்ணோட்டத்தை மதிப்பிடும் திறன் கொண்ட ஒரு செயல்பாட்டு அமைப்பை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- HydroSOS என்பது தேசிய நீரியல் சேவைகள் ஆகியவற்றிலிருந்து நீரியல் நிலை மதிப்பீடுகள் மற்றும் கண்ணோட்டங்களை ஒருங்கிணைக்கிறது.
- அரசு அமைப்புகள், ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகள், உதவி வழங்கீட்டு முகமைகள் மற்றும் பொது மக்கள் போன்ற பயனர்களுக்கு எளிதான, அணுகக் கூடிய நீரியல் தகவல்களை இந்த அமைப்பு வழங்குகிறது.




## சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்கள் தொடர்பான தீர்ப்பு

- உச்ச நீதிமன்றமானது, பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கான 1 கி.மீ. வரையிலான இடையக (தாங்கு) மண்டலம் தொடர்பான தனது தீர்ப்பினை மாற்றியமைத்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு ஜூன் 03 ஆம் தேதியன்று, நாடு முழுவதும் உள்ள பாதுகாக்கப்பட்ட காடுகள், தேசியப் பூங்காக்கள் மற்றும் வனவிலங்குச் சரணாலயங்களைச் சுற்றி குறைந்த பட்சம் ஒரு கிலோமீட்டர் சுற்றளவிற்கு சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்கள் (ESZ) கட்டாயமாக வரையறுக்கப் பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
- நீதிபதி B.R. கவாய் தலைமையிலான அமர்வானது சுற்றுச்சூழல் உணர்திறன் தாங்கு மண்டலங்கள் நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இருக்க முடியாது என்றும், அது அந்தந்த "பாதுகாக்கப்பட்ட பகுதி சார்ந்ததாக" இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டது.
- மேலும், இது 1 கிலோமீட்டர் சுற்றளவிலான சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்களில் உள்ள பகுதிகளில் சாலைகள் மற்றும் பிற முக்கிய உள்கட்டமைப்புகளை கட்டமைக்கக் கூடாது என அரசாங்கத்திற்கு உத்தரவிட்டது.
- இந்தப் பகுதிகளுக்குள் சுரங்க நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.




## கலேசர் தேசியப் பூங்காவில் புலி

- 110 ஆண்டுகளுக்குப் பிறகு ஹரியானாவின் யமுனா நகரில் உள்ள கலேசர் தேசியப் பூங்காவில் புலி தென்பட்டுள்ளது.
- இங்கு 1913 ஆம் ஆண்டில் கடைசியாகப் புலி தென்பட்டது.
- கலேசர் பூங்கா இமாச்சலப் பிரதேசத்தின் சிம்பல்பரா தேசியப் பூங்காவினை ஒட்டி அமைந்துள்ளது.
- வன நிலப்பரப்பு வழியாக அவை உத்தரகாண்டில் உள்ள ராஜாஜி தேசியப் பூங்காவுடன் இணைக்கப்பட்டுள்ளன.




## முள்ளுடைய வெள்ளை இறாலின் புதிய இனங்கள்

- அறிவியலாளர்கள் கர்நாடகா மற்றும் கோவாவில் முள்ளுடைய வெள்ளை இறால்கள் அல்லது ஸ்பினிகவுடாடன்களின் இரண்டு புதிய இனங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இவை இதுவரை அறியப்பட்ட பிற இந்திய இறால் இனங்களிலிருந்து மரபணு ரீதியாக வேறுபட்டவையாகும்.
- இவற்றிற்கு 'லெப்டெஸ்தீரியா சாளுக்யே' மற்றும் 'லெப்டெஸ்தீரியா கோமந்தகி' என்று பெயரிடப் பட்டுள்ளது.

- லெப்டெஸ்தீரியா சாளுக்கியே இனத்திற்கு சாளுக்கிய வம்சத்தின் பெயரால் பெயரிடப் பட்டுள்ளது.
- லெப்டெஸ்தீரியா கோமந்தகி இனத்திற்கு கோவாவின் பெயரால் பெயரிடப்பட்டுள்ளது.
- வெள்ளை இறால்கள் மட்டி இனம் அல்ல, ஆனால் அவற்றின் உடல் இருமுகப்பு ஓடு அல்லது ஓட்டினுள் (காரபேஸ்) இருப்பதால் அவற்றைப் போலவே இருக்கும்.
- அண்டார்டிகாவைத் தவிர உலகெங்கிலும் உள்ள தற்காலிக நன்னீர் நிலைகளில் இவை காணப்படுகின்றன.
- அவற்றின் அலகு போன்ற பகுதியின் (ரோஸ்ட்ரம்) நுனியில் முதுகெலும்பு இருப்பது மற்ற ஓடுகளை உடைய மீன் இனங்களின் குடும்பங்களிலிருந்து வெள்ளை இறால்களை வேறுபடுத்திக் காட்டுகிறது.
- இது தலையின் அலகு போன்ற ஒரு மீட்சியாகும்.




## சௌரோனா வகுப்பு

- லண்டனில் உள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தின் விஞ்ஞானிகள் ஒரு புதிய பட்டாம்பூச்சி தொகுதிக்கு லார்ட் ஆஃப் தி ரிங்ஸ் நாவலில் இடம் பெற்றுள்ள வில்லன் சாரோன் எனும் பெயரைச் சூட்டியுள்ளனர்.
- புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள இரண்டு பட்டாம்பூச்சி இனங்கள் இந்த சௌரோனா வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.
- சௌரோனா ட்ரையாங்குலர் மற்றும் சௌரோனா அவுரிகேரா ஆகிய இரண்டும் இக்குழுமத்தின் தொடக்க உறுப்பினர்களின் பெயராகும்.
- இவை சௌரோனின் பெயரிடப்பட்ட முதல் உயிரினங்கள் அல்ல.
- இந்த வில்லனின் ஒளிரும் கண்ணின் பெயர் ஏற்கனவே சாண வண்டு, தவளை, டைனோசர் போன்ற உயிரினங்களுக்கு இடப்பட்டுள்ளது.



## மத்திய ஆசிய வலசைப் போக்கு வழித்தடம்


- மத்திய ஆசிய வலசைப் போக்கு வழித்தடத்தினுள் (CAF) எல்லை கொண்டுள்ள வலசைப் போகும் பறவைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களுக்கான பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்துவதற்காக ஒத்துழைப்பினை வழங்க முன்வந்துள்ளன.
- ஆர்க்டிக் பெருங்கடலில் இருந்து இந்தியப் பெருங்கடல் வரையிலான 30 நாடுகளை உள்ளடக்கிய மத்திய ஆசிய வலசைப் போக்கு வழித்தடம் பறவைகளுக்கான முக்கிய வலசைப் போகும் வழித் தடமாகும்.
- இது 400க்கும் மேற்பட்ட வலசைப் போகும் பறவையினங்களின் தாயகமாகும்.
- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் ஆனது, ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு/வலசைப் போகும் உயிரினங்களுக்கான உடன்படிக்கை (UNEP/CMS) உடன் இணைந்து சமீபத்தில் ஒரு சந்திப்பினை ஏற்பாடு செய்தது.
- மொத்தம் 370 வகையான வலசைப் போகும் பறவைகள் இந்திய துணைக் கண்டத்திற்கு ஆண்டுதோறும் வருகை தருகின்றன.




## பீட்டர்ஸ்பெர்க் பருவநிலை பேச்சுவார்த்தை

- பருவநிலை மாற்றம் குறித்த பீட்டர்ஸ்பெர்க் பேச்சுவார்த்தையானது பெர்லின் நகரில் நடைபெற்றது.
- இது ஜெர்மனி மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளால் நடத்தப்பட்டது.
- இந்தப் பேச்சுவார்த்தையில் 40 நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் ஒன்றிணைத்து COP28 மாநாடு நோக்கிய முன்னேற்ற நடவடிக்கை பற்றி விவாதிக்கப்பட்டது.

## பந்தவ்கர் புலிகள் காப்பகத்தில் சதுப்புநில மான்




- ❖ பாந்தவ்கர் புலிகள் காப்பகத்தின் மகதி மண்டலத்தில் கட்டமைக்கப்பட்டத் தனிப் பிரிவில் 19 சதுப்புநில மான்கள் விடப்பட்டுள்ளன.
- ❖ இதன் மூலம் பந்தவ்கர் புலிகள் காப்பகத்தில் சதுப்பு நில மான்களின் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது.
- ❖ பாந்தவ்கர் புலிகள் காப்பகத்தின் மகதி மண்டலத்தில் சதுப்பு நில மானுக்காக என்று கட்டமைக்கப் பட்ட தனிப்பிரிவிற்கு 'பாரசிங்க இல்லம்' (சதுப்பு நில மான் இல்லம்) என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ சுமார் மூன்று வருடங்கள் அவை தனிப்பிரிவில் வைக்கப்பட்டு பின்னர் காட்டுக்குள் விடப் படும்.
- ❖ இந்தக் காப்பகமானது மத்தியப் பிரதேசத்தின் உமரியா மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- ❖ இவை கன்ஹா தேசியப் பூங்காவில் இருந்து கொண்டு வரப் பட்டன.


## புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டிற்குத் தடை

- ❖ புதிதாக கட்டமைக்கப்படும் பெரும்பாலான கட்டிடங்களில் இயற்கை எரிவாயு மற்றும் பல்வேறு பிற புதைபடிவ எரிபொருட்களைப் பயன்படுத்தச் செய்வதற்குத் தடை விதித்த அமெரிக்காவின் முதல் மாகாணமாக நியூயார்க் மாறியுள்ளது.

- பருவநிலை ஆர்வலர்களுக்கு இது ஒரு முக்கியமான வெற்றியாகும் என்றாலும் இந்த மாகாணமானது புதைபடிவ எரிபொருள் துறையில் இருந்து பின்னடைவைச் சந்திக்க நேரிடும்.
- 2026 ஆம் ஆண்டிற்குள், ஏழு மாடிகளுக்குக் கீழ் உள்ள அனைத்துப் புதிய கட்டிடங்களும் அனைத்து மின்சார வெப்பமூட்டும் மற்றும் சமையல் சாதனங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அதற்கும் மேற்பட்ட உயர்கட்டிடங்களுக்கு இதற்கான வரம்பு 2029 ஆம் ஆண்டாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.




### பாகிஸ்தானில் கரியல் (மீன் உண்ணும் முதலை)





- பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் 30 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக ஒரு கரியல் (கவியாலிஸ் கேஞ்செட்டிகஸ்) தென்பட்டுள்ளது.
- இது 2017 ஆம் ஆண்டில் ராட்கிளிஃப் கோட்டின் இந்தப் பகுதியில் மீண்டும் அறிமுகப் படுத்தப் பட்ட குழுவினைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

- ❖ எல்லையில் இருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ள ஹரிகே சதுப்பு நிலத்தில் இந்தியா கரியல் இன முதலைகளை மீண்டும் அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ 2017 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், பஞ்சாப் (இந்தியா) அரசாங்கத்தின் திட்டத்தின் மூன்று கட்டங்களின் கீழ் அமிர்தசரஸ், தர்ன் தரண் சாஹிப் மற்றும் ஹோஷியார்பூர் ஆகிய மாவட்டங்களில் பாயும் பியாஸ் ஆற்றில் சுமார் 94 கரியல்கள் விடப் பட்டன.
- ❖ இவை பெரும்பாலும் மத்தியப் பிரதேசத்தில் உள்ள சம்பல் ஆற்றுப் படுகையில் இருந்து கொண்டு வரப்பட்டன.

## அயலின விலங்குகளின் காப்பினப் பெருக்க ஒழுங்குமுறை

- ❖ மத்தியச் சுற்றுச்சூழல் அமைச்சகமானது, சமீபத்தில் 2023 ஆம் ஆண்டு உயிரினங்களின் இனப்பெருக்க உரிம விதிகளை அறிவித்துள்ளது.
- ❖ அயலின விலங்குகளின் காப்பினப் பெருக்கத்தினை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கான உரிம முறையை இந்தியா அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ அருகி வரும் நிலையில் உள்ள வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் (CITES) மீதான சர்வதேச வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கையின் கீழ் பாதுகாக்கப்பட்ட இனங்கள் இதில் அடங்கும்.
- ❖ இது காப்பக உரிமையாளர்கள் கரடிகள், பாண்டாக்கள், நாய்கள், பூனைகள், குரங்குகள், லெமூர் விலங்கு, பறவைகள் மற்றும் ஊர்வன போன்ற பல்வேறு விலங்குகளின் இனப் பெருக்கத்திற்கான உரிமங்களைப் பெற வழி வகுக்கிறது.
- ❖ இந்த விதிமுறைகள் CITES உடன்படிக்கையினை சிறப்பாகச் செயல்படுத்தவும், நாட்டில் வனவிலங்குப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தவும் முயல்கின்றன.
- ❖ இந்தப் புதிய விதிகளின் கீழ், 2022 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் IVவது பட்டியலின் முதலாவது பின் இணைப்பில் பட்டியலிடப்பட்டுள்ள, பாதுகாக்கப் பட்டுள்ள உயிரினங்களை இனப்பெருக்கம் செய்ய வைப்பதில் ஈடுபட்டுள்ள நபர்கள், இந்த சட்டம் தொடங்கப் பட்ட 90 நாட்களுக்குள் வளர்ப்பாளர் உரிமத்திற்கு என்று விண்ணப்பிக்க வேண்டும்.



## கெக்கோ மிசோரமென்சிஸ்

- மிசோரம் பல்கலைக் கழகம் மற்றும் ஜெர்மனியின் டூபிங்கன் நகரில் உள்ள மேக்ஸ் பிளாங்க் உயிரியல் கல்வி நிறுவனம் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள், இந்தோ-மியான்மர் எல்லையில் மிசோரம் மாநிலத்தில் ஒரு புதிய வகை மரப் பல்லியினைக் கண்டறிந்துள்ளனர்.
- உலகம் முழுவதிலும் இதன் வகையிலான 13 இனங்கள் உள்ளன.
- இவை தென்கிழக்கு ஆசியாவில் காணப்படுகின்றன.
- இவை மிசோரமில் காணப் படுவதாக கண்டறியப் பட்டுள்ளன.
- இது முன்னதாக வங்காளதேசம், மியான்மர், தாய்லாந்து மற்றும் கம்போடியா உள்ளிட்ட தெற்காசியாவின் சில பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்த மரப் பல்லிகள் அளவில் சிறியவையாகும் என்பதோடு, இந்த மாமிச உண்ணிப் பல்லிகள் உலகம் முழுவதும் வெப்பமானப் பருவநிலை கொண்ட பகுதிகளில் காணப் படுகின்றன.
- சுமார் 20 செ.மீ நீளம் கொண்ட இந்தப் புதிய இனமானது, மரங்களில் வாழும் ஒரு மரப் பல்லியாகும்.




## நவேகான் நக்சிரா புலிகள் வளங்காப்பகம்

- நவேகான் நக்சிரா புலிகள் வளங்காப்பகத்தில் உள்ள ஒரு புலியானது சமீபத்தில் நான்கு குட்டிகளை ஈன்றது.
- இது மகாராஷ்டிராவின் கோண்டியா மற்றும் ஷந்தாரா மாவட்டங்களில் அமைந்து உள்ளது.
- இது 1970 ஆம் ஆண்டில் வனவிலங்குச் சரணாலயமாக அறிவிக்கப்பட்டது.
- 2012 ஆம் ஆண்டில், மாநில அரசானது புலிகள் வளங்காப்புத் திட்டத்தில் சேர்ப்பதற்காக இந்தச் சரணாலயத்தினை மற்றொரு தேசியப் பூங்காவுடன் இணைக்கச் செய்வதாக அறிவித்தது.
- தற்போது இது நக்சிரா நவேகோன் புலிகள் வளங்காப்பகம் என்று அழைக்கப் படுகிறது.
- இது பென்ச், கன்ஹா, தடோபா அந்தாரி புலிகள் வளங்காப்பகம், இந்திராவதி புலிகள் வளங் காப்பகம் போன்ற பல புலிகள் காப்பகங்களுடன் இணைக்கப் பட்டுள்ளது.




## உலக நாடுகளில் உள்ள ஏரிகளின் நீர் சேமிப்பு கொள்ளளவுகளில் குறைவு


- இந்த ஆய்வானது, 1992 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான ஒரு காலக் கட்டத்தில் இந்த நீர்நிலைகளில் 53 சதவீத நீர்நிலைகளின் சேமிப்பு கொள்ளளவில் ஏற்பட்ட குறைவு குறித்த புள்ளியியல் ரீதியான தகவல்களைக் கண்டறிவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகின் மிகப்பெரிய ஏரிகள் மற்றும் பல நீர்த்தேக்கங்களில் பாதிக்கும் மேற்பட்டவை வறண்டு வருகின்றன.




- உலகின் நீரியல் பரப்பு சார்ந்த நன்னீர் நீரில் 87 சதவீதத்தினைக் கொண்டுள்ள இந்த ஏரிகளை பருவநிலை மாற்றம் மற்றும் மனிதச் செயல்பாடுகள் மிகப்பெரிய ஆபத்தில் ஆழ்த்துகின்றன.

- 53 சதவீத ஏரிகள் மற்றும் நீர்த்தேக்கங்களில், ஆண்டிற்கு சுமார் 22 ஜிகா டன்கள் என்ற வீதத்தில் நீர்ச் சேமிப்பு கொள்ளளவு குறைந்துள்ளதாக இந்த ஆய்வின் பல தகவல்கள் தெரிவிக்கின்றன.
- முழு ஆய்வுக் காலத்திலும், 603 கன கிலோமீட்டர் நீர் இழக்கப் பட்டுள்ளது.
- இது மீட் ஏரியில் உள்ள நீரின் அளவை விட 17 மடங்கு அதிகமாகும்.
- மீட் ஏரியானது, அமெரிக்காவின் மிகப்பெரிய நீர்த்தேக்கமாகும்.

## ஆப்பிரிக்கப் புளூம் வெப்ப அலை




- ஆப்பிரிக்கப் புளூம் எனப்படும் உயர் அழுத்தம் சார்ந்த நிகழ்வின் ஏற்பட உள்ளதாக வானிலை ஆய்வாளர்கள் கணித்துள்ளதால், ஐக்கியப் பேரரசு முன்னெப்போதும் இல்லாத அளவிற்கான வெப்ப அலை நிலையை எதிர் கொள்ள உள்ளது.
- இது இதுவரை பதிவாகாத அளவிற்கான வெப்பநிலையை ஏற்படுத்தும்.
- இந்த உயர் அழுத்த அமைப்பானது, மே மாத இறுதிக்குள் ஐக்கியப் பேரரசில் மிகவும் கடுமையான வெப்ப நிலைகளை ஏற்படுத்த உள்ளது.
- அந்த சமயங்களில் வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸ் வரை உயரும்.
- இந்த வானிலை நிகழ்வானது, சஹாரா பாலைவனத்திலிருந்து ஐரோப்பாவினை நோக்கி வெப்பமான காற்றின் திரளான நகர்வாக வகைப்படுத்தப் படுகிறது.
- இது அதிகபட்ச உயர் வெப்பநிலை நிலவும் நீண்ட காலகட்டத்தினைப் பல நாட்கள் அல்லது வாரங்களுக்கு நீடிக்கச் செய்கிறது.
- வளிமண்டலச் சூழ்நிலைகளைப் பொறுத்து ஒவ்வொரு ஆண்டும் இதன் தீவிரம் மாறு படும்.

## ஐரோப்பிய ஒன்றிய உமிழ்வுப் பட்டியலில் நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் முதலிடம்

- குளோபல் எனர்ஜி திங்க் டேங்க் எம்பர் என்ற நிறுவனம் ‘மறுபடியும் மீறுபவர்கள் : நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் ஐரோப்பிய ஒன்றிய உமிழ்வுப் பட்டியலில் முதலிடம்’ என்ற தலைப்பில் ஒரு அறிக்கையினை வெளியிட்டது.
- 2022 ஆம் ஆண்டில்  ஐரோப்பிய ஒன்றிய உமிழ்வு வர்த்தக அமைப்பில் முதல் பத்து பெரிய உமிழ்வுகள் அனைத்தும் நிலக்கரி ஆலைகள் ஆகும்.

- ஜெர்மனி மற்றும் போலந்து ஆகியவை இந்தப் பட்டியலில் ஆதிக்கம் செலுத்துகின்றன.
- இருப்பினும் நிலக்கரி மின் உமிழ்வின் நீண்ட காலப் போக்கு சரிவையே காட்டுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் இதன் மதிப்பு முந்தைய ஒரு தசாப்தத்தை விட 40 சதவீதம் குறைந்து உள்ளது.
- நிலக்கரி மின் உமிழ்வு 2021 ஆம் ஆண்டு உடன் ஒப்பிடப் படும் போது 6 சதவீதமாக உயர்ந்துள்ளது, எனினும் 2019 ஆம் ஆண்டின் அளவை விட குறைவாக இருந்தது.

| Power Plant | Owner | Fuel | Position | Emissions 2022 (Mt CO2e) |
|---|---|---|---|---|
| Bełchatów | PGE | Lignite | 1 | [illegible] |
| Neurath | RWE | Lignite | 2 | [illegible] |
| Boxberg | EPH | Lignite | 3 (▲2) | [illegible] |
| Niederaußem | RWE | Lignite | 4 (▼1) | 17 |
| Kozienice | ENEA | Hard Coal | 5 (▼1) | [illegible] |
| Jänschwalde | EPH | Lignite | 6 | [illegible] |
| Weisweiler | RWE | Lignite | 7 | [illegible] |
| Lippendorf | EPH/EnBW | Lignite | 8 (▲1) | [illegible] |
| Turów | PGE | Lignite | 9 (▲2) | [illegible] |
| Maritsa East 2 | BEH | Lignite | 10 (▲7) | [illegible] |

## பக்கமலை மலையில் புதிய இனம் கண்டுபிடிப்பு


- பாறையில் வாழும் பெரிய உடல் கொண்ட புதிய வகை பல்லி (கெக்கோ) இனத்தை ஆராய்ச்சியாளர்கள் குழு பக்கமலைப் பகுதியில் கண்டறிந்துள்ளது.
- தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சிக்கு அருகில் இது உள்ளது.
- இந்த புதியப் பல்லி இனமானது முதன்முதலில் கண்டறியப்பட்டு பதிவு செய்யப்பட்ட மலையின் பெயரால் ஹெமிடாக்டைலுஸ் பக்கமலையென்சிஸ் என்று இதற்குப் பெயரிடப் பட்டது.
- பெரிய உடல் அளவைக் கொண்டுள்ள (101-109 மிமீ) இது கெக்கோ ஹெமிடாக்டைலஸ் இனத்தைச் சேர்ந்தது ஆகும்.



## சர்வதேசப் போக்குவரத்து மன்றத்தின் போக்குவரத்துக் கண்ணோட்ட அறிக்கை 2023

- 2015 ஆம் ஆண்டு பாரீஸ் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுப் காட்டப்பட்ட பல இலக்குகளை அடைவதில் போக்குவரத்தின் கார்பன் நீக்கம் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- OECD அமைப்பில் உள்ள சர்வதேசப் போக்குவரத்து மன்றம் (ITF) ஆனது அதிகளவில் எதிர் பார்க்கப்பட்ட அதன் ITF போக்குவரத்துக் கண்ணோட்டம் (2023) என்ற அறிக்கையினைச் சமீபத்தில் வெளியிட்டது.
- போக்குவரத்தில் நிலையானத் தெரிவுகளை மேம்படுத்துவதற்கான கொள்கைகளின் கலவை நுட்பத்தினை ஏற்றுக் கொள்வதன் முக்கியத்துவத்தை இது எடுத்துரைக்கிறது.
- தற்போதைய கொள்கைகளுடன் ஒப்பிடச் செய்கையில் முக்கிய உள் கட்டமைப்புகளில், போக்குவரத்துத் துறையினை கார்பன் நீக்கம் செய்வதற்காக வேண்டி இலட்சியமிக்க கொள்கைகளைச் செயல்படுத்துவதற்கு, 5% குறைவான முதலீடு தேவைப்படும்.


## உலகப் பசுமை இல்ல வாயுக் கண்காணிப்பு (G3W)




- உலக வானிலையியல் மாநாட்டு அமைப்பானது, ஒரு புதியப் பசுமை இல்ல வாயு (GHG) கண்காணிப்பு முன்னெடுப்பிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- உலகப் பசுமை இல்ல வாயுக் கண்காணிப்பு (G3W) என்பது உலக வானிலையியல் அமைப்பு (WMO) மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- UNFCCC அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பிறப் பங்குதாரர் நாடுகளுக்கான விதி முறைகளை ஆதரிப்பதற்காக பசுமை இல்ல வாயு உமிழ்வுகளின் (உயர்மட்டம் முதல் அடிமட்டம் வரை) சர்வதேச அளவிலான ஒருங்கிணைந்த கண்காணிப்பை நிறுவுவதை G3W நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதிய உலகளாவிய GHG கண்காணிப்பு அமைப்பானது, முக்கியமான தகவல் பரவலில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதோடு ஒரு ஒருங்கிணைந்த மற்றும் செயல்பாட்டுக் கட்டமைப்பை வழங்கும்.

- ❖ இந்த அமைப்பானது, 100க்கு 100 கிமீ என்ற ஒரு தெளிவுத் திறனில், வளிமண்டலத்தில் மற்றும் அதற்கு வெளியே உள்ள சில நிகர GHG உமிழ்வுகளின் மாதாந்திர உலகளாவிய மதிப்பீடுகளை நிலையான முறையில் வழங்கும்.

## 2023-2033 ஆம் ஆண்டு அமலாக்கத் திட்டம்





- ❖ உலக வானிலையியல் அமைப்பானது (WMO) உலகச் சுகாதார அமைப்புடன் இணைந்து பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தை மேலாண்மை செய்வதற்கான சேவைகள் மற்றும் பருவநிலை, சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார அறிவியல் ஆகியவற்றினை மேம்படுத்தச் செய்வதற்கான 2023-2033 ஆம் ஆண்டு அமலாக்கத் திட்டத்தையும் வடிவமைத்துள்ளது.
- ❖ இந்தத் திட்டமானது "தற்போதுள்ள மற்றும் அதிகரித்து வரும் தீவிர வானிலை நிகழ்வுகள், பருவநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் அபாயங்களை எதிர்கொள்ளும் மக்களுக்குச் சிறந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வினை வழங்குதல்" என்ற ஒரு இலக்கினை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது பருவநிலை, வானிலை, காற்று மாசுபாடு, புற ஊதாக் கதிர்வீச்சு, தீவிர மோசமான நிகழ்வுகள் மற்றும் பிற சுற்றுச்சூழல் காரணிகளின் ஆரோக்கியத்தின் மீதான ஒரு தாக்கத்தை மேலாண்மை செய்வதற்காக என்று ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையை உருவாக்க முயல்கிறது.
- ❖ 2022 ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் கடுமையான வெப்பத்தினால் குறைந்தது 15,000 பேர் உயிரிழந்தனர்.
- ❖ 2030 முதல் 2050 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில், பருவநிலை மாற்றமானது ஆண்டிற்குச் சுமார் 250,000 அளவில் கூடுதல் இறப்புகளை ஏற்படுத்தும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.
- ❖ இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் சுமார் 8.4 பில்லியன் மக்கள், நோய்க் கடத்திகளால் ஏற்படுகின்ற மலேரியா மற்றும் டெங்கு ஆகிய இரண்டு பெரிய நோய்களால் பாதிக்கப் படக் கூடும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பொருளாதாரச் சுதந்திரக் குறியீடு


- வாஷிங்டன் D.C. நகரத்தில் அமைந்துள்ள தி ஹெரிடேஜ் ஃபவுண்டேஷன் என்ற ஒரு சிந்தனைக் குழுவினால் இந்தக் குறியீடானது வெளியிடப்பட்டுள்ளது.
- சட்டத்தின் ஆட்சி, அரசாங்கத்தின் அளவு, ஒழுங்குமுறைச் செயல்திறன் மற்றும் தடை அற்றச் சந்தைகள் ஆகியவை இந்தக் குறியீட்டின் நான்கு முக்கியத் தூண்கள் ஆகும்.
- இந்தப் பட்டியலில் சிங்கப்பூர் முதலிடத்திலும், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, சுவிட்சர் லாந்து மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.
- இதில் இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் 121வது இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ள நிலையில் பூட்டான் சிறந்த செயல்திறனைக் கொண்டு இதில் 109வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்தியாவிற்கு கீழே உள்ள தரவரிசையினைப் பெற்ற இதர மற்ற அண்டை நாடுகள் இலங்கை (131), ஆப்கானிஸ்தான் (146), பாகிஸ்தான் (152), சீனா (154), நேபாளம் (157) ஆகியனவாகும்.




## உலக மேம்பாட்டு அறிக்கை 2023: புலம்பெயர்ந்தோர், அகதிகள் மற்றும் சமூகங்கள்

- உலக வங்கி “உலக மேம்பாட்டு அறிக்கை 2023: புலம்பெயர்ந்தோர், அகதிகள் மற்றும் சமூகங்கள்” என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இலக்கு இடங்கள், போக்குவரத்து மற்றும் இடப் பெயர்வு தொடக்க நாடுகளில் சிறந்த இடம்பெயர்வு நிர்வாகத்திற்கான அவசியத்தினை குறிப்பிட்டுக் காட்டி அதற்கான கொள்கைகளை இந்த அறிக்கை முன்மொழிகிறது.
- "நிகர்- நோக்க கட்டமைப்பினை" பயன்படுத்தி இடம்பெயர்வு வர்த்தகம் பற்றி இந்த அறிக்கை ஆய்வு செய்தது.
- "நிகராக்கம்" என்ற அம்சமானது தொழிலாளர் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதோடு, அது புலம்பெயர்ந்தோரின் திறன்கள் மற்றும் தொடர்புடைய பண்புக் கூறுகள் இலக்கு நாடுகளின் தேவைகளுடன் எவ்வாறு பொருந்துகிறது என்பதில் கவனம் செலுத்துகிறது.

- "நோக்கம்" என்ற சொல் ஒரு நபர் வாய்ப்பைத் தேடி நகரும் சூழ்நிலைகளைக் குறிக்கிறது.
- 47 மில்லியன் மக்கள்தொகை கொண்ட ஸ்பெயின், 2100 ஆம் ஆண்டில் மூன்றில் ஒரு பங்காக சுருங்கும் என கணிக்கப் பட்டுள்ளது.
- மெக்சிகோ, தாய்லாந்து, துனிசியா மற்றும் துருக்கி போன்ற நாடுகளின் மக்கள் தொகை வளர்ச்சி பெறவில்லை என்பதால் அந்த நாடுகளுக்கு விரைவில் அதிக வெளி நாட்டுத் தொழிலாளர்கள் தேவைப் படக் கூடிய சூழல் ஏற்படலாம்.
- 37 மில்லியன் அகதிகள் உட்பட உலகளவில் சுமார் 184 மில்லியன் மக்கள் தாங்கள் வாழும் நாட்டில் குடியுரிமை இல்லாமல் உள்ளனர்.




## முதன்மை கண்காணிப்பு பட்டியல் 2023


| Priority Watch List | Watch List | |
|---|---|---|
| Argentina | Algeria | Guatemala |
| Chile | Barbados | Mexico |
| China | Belarus | Pakistan |
| India | Bolivia | Paraguay |
| Indonesia | Brazil | Peru |
| Russia | Bulgaria | Thailand |
| Venezuela | Canada | Trinidad and Tobago |
| | Colombia | Turkey |
| | Dominican Republic | Turkmenistan |
| | Ecuador | Uzbekistan |
| | Egypt | Vietnam |

- அமெரிக்காவின் வர்த்தகப் பிரதிநிதி (USTR) அலுவலகமானது, சீனா, ரஷ்யா மற்றும் நான்கு இதர பிற நாடுகளுடன் சேர்த்து இந்திய நாட்டினை மீண்டும் 'முதன்மை கண்காணிப்புப் பட்டியலில்' சேர்த்துள்ளது.

- அறிவுசார் சொத்துப் பாதுகாப்பு மற்றும் அமலாக்கம் தொடர்பான செயல்முறைகளில் உலகின் மிகவும் சவாலான நாடுகளாக விளங்கும் முக்கிய நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது.
- 2022 ஆம் நிதியாண்டில் அமெரிக்க எல்லையில் கைப்பற்றப்பட்ட போலி மருந்துகளின் மூல ஆதார நாடுகள் சீனா, இந்தியா மற்றும் துருக்கி ஆகியவையாகும்.

## உலகப் பொருளாதார மன்றம்: "வேலைவாய்ப்புகளின் எதிர்காலம்" அறிக்கை


- 10.2% வளர்ச்சி மற்றும் 12.3% சரிவு மூலம் 23% வேலைவாய்ப்புகளில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ஐந்தாண்டுகளில் ஒட்டு மொத்தமாக சுமார் 14 மில்லியன் அளவில் வேலைவாய்ப்புகள் குறையும் என உலகப் பொருளாதார மன்றம் கணித்துள்ளது.
- 673 மில்லியன் வேலைவாய்ப்புகளில் 83 மில்லியன் வேலைகள் மறையும் என்றும், 69 மில்லியன் வேலைகள் மட்டுமே உருவாக்கப் படும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.
- உலகச் சராசரியான 23% உடன் ஒப்பிடும் போது இந்தியா 22% வீழ்ச்சியைக் காணும்.




## எண்ணிம உலகில் நிலவும் பாலின இடைவெளியை நிரப்புதல்

- யுனிசெப் அமைப்பின் ஒரு அறிக்கையின் படி, உலகளவில் ஆண்களை விட சுமார் 327 மில்லியன் என்ற குறைவான அளவிலான பெண்களே திறன்பேசிகளை வைத்துள்ளனர் மற்றும் கைபேசி வழி இணையச் சேவையினை அணுகக் கூடிய நிலையில் உள்ளனர்.
- ஆண்களை விடச் சராசரியாக 26 சதவீதத்திற்குக் குறைவான அளவிலான பெண்களே திறன்பேசிகளை வைத்திருக்கின்றனர்.
- தெற்காசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் இந்த விகிதம் முறையே 70% மற்றும் 34% ஆக உள்ளது.

- ❖ உலக நாடுகளின் எண்ணிம உலகில் இணையப் பயன்பாட்டில் நிலவுகின்ற பாலின வேறுபாடு ஆனது 2013 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் கிட்டத்தட்ட 11% என்ற அளவில் மாறாமல் இருந்தது.
- ❖ பொருளாதார மற்றும் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகளில் உள்ள, 15 வயதிலான 5% சிறுவர்களுடன் ஒப்பிடுகையில், சராசரியாக 0.5% சிறுமிகள் மட்டுமே தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களாக மாற விரும்புகிறார்கள்.
- ❖ 2015 ஆம் ஆண்டில், ஆண்களை விட பெண்களே அதிகமாக உயர்நிலைக் கல்வியை நிறைவு செய்துள்ளனர்.
- ❖ பொறியியல், உற்பத்தி மற்றும் கட்டுமானத் துறையில் பட்டம் பெற்றவர்களில் 24% மட்டுமே பெண்கள் ஆவர் என்பதோடு, தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பத் துறையில் அவர்களின் பங்கு வெறும் 25% மட்டுமே ஆகும்.
- ❖ 2015 ஆம் ஆண்டில் சுமார் 120 மில்லியனாக இருந்த இந்தியாவின் இயங்கலை பயனர் அளவானது 2020 ஆம் ஆண்டில், 300 மில்லியனுக்கும் அதிகமாக அதிகரிக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.



## உலகப் பத்திரிகைச் சுதந்திரக் குறியீடு 2023

| POS. | COUNTRIES | GLOBAL SCORE | SCORE POL. | SCORE ECO. |
|---|---|---|---|---|
| 1 | Norway | 95.18 | 96.54 | 92.46 |
| 2 | Ireland | 89.91 | 93.91 | 82.11 |
| 3 | Denmark | 89.48 | 91.95 | 85.17 |
| 4 | Sweden | 88.15 | 92.58 | 86.08 |
| 5 | Finland | 87.94 | 91.56 | 83.8 |
| 6 | Netherlands | 87 | 88.93 | 80.08 |
| 7 | Lithuania | 85.79 | 88 | 77.65 |
| 8 | Estonia | 85.31 | 85.36 | 76.75 |
| 9 | Portugal | 84.6 | 96.32 | 71.02 |
| 10 | Timor-Leste | 84.49 | 81.88 | 74.51 |

- ரிப்போர்ட்டர்ஸ் வித் அவுட் பார்ட்டர்ஸ் (RSF) எனப்படும் சர்வதேச ஊடகக் கண்காணிப்பு அமைப்பானது இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தக் குறியீட்டில் இடம் பெற்ற 180 நாடுகளில் இந்தியா 161வது இடத்தில் உள்ளது.
- ஊடகச் சுதந்திரத்தினைப் பொறுத்தவரை சிறப்பானச் செயல்பாட்டுடன் பாகிஸ்தான் 150வது இடத்தில் வைக்கப்பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் இந்தியா 150வது இடத்தில் இருந்தது.
- 2022 ஆம் ஆண்டில் 146வது இடத்தில் இருந்த இலங்கை மிகப்பெரும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்துடன் இந்த ஆண்டு 135வது இடத்தைப் பெற்றுள்ளது.
- நார்வே, அயர்லாந்து மற்றும் டென்மார்க் ஆகியவை இந்தக் குறியீட்டில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளன.
- வியட்நாம், சீனா மற்றும் வடகொரியா ஆகியவை கடைசி மூன்று இடங்களைப் பெற்று உள்ளன.

## சமயச் சுதந்திரம் குறித்த வருடாந்திர அறிக்கை 2023


- அமெரிக்காவின் சர்வதேசச் சமய சுதந்திரத்திற்கான ஆணையமானது (USCIRF) இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ஈரான் மற்றும் பாகிஸ்தான் உட்பட 12 நாடுகளை, குறிப்பிட்ட அளவில் கவலை கொள்ள வைக்கும் நாடுகள் (CPCs) பட்டியலில் மீண்டும் வைக்கப்பட வேண்டி பரிந்துரைக்கப் பட்டு உள்ளதாக USCIRF தெரிவித்துள்ளது.
- மேலும், ஆப்கானிஸ்தான், நைஜீரியா, சிரியா, வியட்நாம் மற்றும் இந்தியா ஆகிய ஐந்து நாடுகளுக்குக் குறிப்பிட்ட அளவில் கவலை கொள்ள வைக்கும் நாடுகள் அந்தஸ்தினை வழங்க பரிந்துரைத்துள்ளது.
- முதன்முறையாக, இலங்கையினை இந்த "சிறப்புக் கண்காணிப்புப் பட்டியலில்" சேர்க்க வேண்டி USCIRF முன்மொழிந்துள்ளது.

- ❖ இந்தியாவில் சமயச் சுதந்திரத்திற்கான நிலைமைகள் 2022 ஆம் ஆண்டில் "தொடர்ந்து மோசமடைந்து வருகின்றன" என்று இந்த அறிக்கை கூறுகிறது.




## உணவு நெருக்கடிகள் பற்றிய உலக அறிக்கை 2023

- ❖ 2022 ஆம் ஆண்டில், 58 பிராந்தியங்களில் உள்ள சுமார் 258 மில்லியன் மக்கள் உணவு நெருக்கடி அல்லது மோசமான உணவுப் பாதுகாப்பின்மை நிலையான 3 ஆம் நிலை அல்லது அதற்கு மேற்பட்ட நிலை அல்லது அதற்கு சமமான நிலையில் இருந்ததாக இந்த அறிக்கை கூறுகிறது.
- ❖ 41 நாடுகள் / பிரதேசங்களில் உள்ள 253 மில்லியன் மக்கள் நெருக்கடி நிலையில் இருந்தனர்.
- ❖ 19 நாடுகளில், உணவு நெருக்கடிக்கான ஒரு மிகப்பெரியப் பங்களிப்புக் காரணியாக மோதல் / பாதுகாப்பின்மை ஆகியவை இருந்தன.
- ❖ இதற்கிடையில், 12 நாடுகளில் நிலவும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மைக்கு வானிலை / மோசமான பருவநிலை ஆகியவை முதன்மைக் காரணமாக உள்ளன.
- ❖ பாகிஸ்தான் நாடானது, அதன் பகுப்பாய்வு செய்யப்பட்ட மக்கள்தொகையில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்பு நிலை வகைப் பாட்டின் 3வது நிலை அல்லது அதற்கு மேற்பட்ட நிலையில் இருந்த காலகட்டமான 2017 ஆம் ஆண்டு முதல் ஒரு ‘பெரிய’ உணவு நெருக்கடி கொண்ட நாடாக வரையறுக்கப் பட்டுள்ளது.
- ❖ 5 வயதிற்குட்பட்ட 35 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் நலிவுநிலையினால் பாதிக்கப் பட்டுள்ள நிலையில் அவர்களில் 9.2 மில்லியன் பேர் கடுமையான ஒரு நலிவு நிலையினால் துன்புறுகின்றனர்.



## "சுழிய அளவு உமிழ்தலை நோக்கிய பந்தயம்" அறிக்கை


- பாங்காக் நகரில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய மற்றும் பசிபிக் பகுதிக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையம் (ESCAP) சமீபத்தில் இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- பெரும்பாலான ஆசிய-பசிபிக் நாடுகள், தீவிர வானிலை நிகழ்வுகள் மற்றும் இயற்கைப் பேரழிவுகளை எதிர்கொள்ள "போதுமான அளவில் தயாராக இல்லை" என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இப்பகுதிகளானது பருவநிலை மாற்றத்தின் மோசமான விளைவுகளை எதிர்கொண்டு வரும் அதே வேளையில், அவற்றின் தூண்டுதலுக்கான முக்கியப் பங்களிப்பாளராகவும் உள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் எரிபொருள் எரிப்பினால் ஏற்படும் உலகளாவிய உமிழ்வுகளில் 57% இந்தப் பகுதியிலிருந்து மட்டுமே வெளியாகியுள்ளது.
- இந்தப் பேரழிவுகளால் அதிகம் பாதிக்கப்பட்ட முதல் 10 நாடுகளில் ஆறு நாடுகள் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ளன.
- இந்தப் பிராந்தியம் முழுவதிலும் இயற்கை மற்றும் உயிரியல் அபாயங்களால் ஏற்படும் சராசரி வருடாந்திரப் பொருளாதார இழப்புகள் 780 பில்லியன் டாலர்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது.




## உலக நிலங்கள் கண்ணோட்ட அறிக்கை

- இரண்டாவது உலக நிலங்கள் கண்ணோட்ட அறிக்கையானது பாலைவனமாக்கலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை அமைப்பினால் (UNCCD) வெளியிடப் பட்டுள்ளது.
- ஒன்பது கிரக எல்லைகள் தான் சுற்றுச்சூழல் எல்லைகளின் வரம்புகளாகும் என்ற நிலையில் அவை மனிதகுலத்திற்கானப் பாதுகாப்பான நடவடிக்கை மேற்கொள்ளும் பகுதியினை வரையறுக்கின்றன.
- இவற்றுள் பருவநிலை மாற்றம், பல்லுயிர்ப் பெருக்க இழப்பு, நிலப் பயன்பாட்டில் மாற்றம் மற்றும் புவி வேதியியல் சுழற்சிகள் ஆகியவற்றின் வரம்புகள் ஏற்கனவே மீறப் பட்டுள்ளன.
- இந்த வரம்பு மீறல்கள் மனித நடவடிக்கைகளால் தூண்டப்பட்டப் பாலைவனமாக்கல், நிலச் சீரழிவு மற்றும் வறட்சி ஆகியவற்றுடன் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளன.

- பூமியின் நிலப்பரப்பினுடைய இயற்கையான நிலையில் இருந்து, 70 சதவீதத்திற்கும் அதிகமான நிலப்பரப்பினை மனிதர்கள் ஏற்கனவே மாற்றியமைத்துள்ளனர்.
- இது புவி வெப்பமடைதல் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவுக்கு குறிப்பிடத்தக்க அளவிலான பங்களிப்பினை அளித்துள்ளது.
- இது வறுமை, பசி, சமத்துவமின்மை, விலங்கு வழியே பரவும் நோய்கள் போன்றவற்றின் அதிகரிப்புக்கு வழி வகுத்தது.
- பயன்மிக்க விளைவுகளை அடைவதற்காக என்று நில மறுசீரமைப்புப் பணிகளுக்கான உலகளாவிய வருடாந்திரச் செலவினமானது 2030 ஆம் ஆண்டிற்குள் குறைந்தது 300 பில்லியன் டாலராக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு டாலரும் 7 டாலர் முதல் 30 டாலர் வரையிலான பொருளாதாரப் பலனாக திரும்பக் கிடைக்கப் பெறும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- உலகளவில், 80% காடழிப்புக்கும், 70% நன்னீர்ப் பயன்பாட்டிற்கும் உணவு முறைகள் தான் காரணமாக உள்ளன.
- நிலம் சார்ந்த பல்லுயிர்ப் பெருக்கத்தின் இழப்பிற்கு இது மிகப்பெரிய காரணமாகும்.
- வெள்ளம், வறட்சி மற்றும் காட்டுத்தீ ஆகியவை நிலச் சீரழிவிற்கான சில பொதுவான சுற்றுச்சூழல் சார்ந்த சவால்கள் ஆகும்.
- நிலம் மற்றும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பானது புவி வெப்பமடைதல் செயல் முறையினைக் காலம் தாழ்த்த உதவுவதோடு வறட்சி, வெள்ளம் போன்ற பேரழிவுகளின் அளவையும், அவை மீண்டும் மீண்டும் உருவாகக் கூடிய வாய்ப்பினையும் குறைக்கும்.




## Defending Creative Voices அறிக்கை


- யுனெஸ்கோ அமைப்பானது, சமீபத்தில் Defending Creative Voices (படைப்புத் திறன் மிக்கவர்களைப் பாதுகாத்தல்) என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ஆயுத மோதல்கள், அரசியல் உறுதித் தன்மை மற்றும் இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப் பட்ட கலைஞர்களுக்குப் பாதுகாப்பினை மிகவும் அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை இது எடுத்துக் காட்டுகிறது.
- 2021 ஆம் ஆண்டில், 12 வெவ்வேறு நாடுகளில் 39 கலைஞர்கள் கொல்லப் பட்டதோடு, 24 நாடுகளில் 119 பேர் சிறையில் அடைக்கப் பட்டனர்.

- ஒரு வருடத்தில் உலகளவில் 1,200க்கும் மேற்பட்டக் கலைச் சுதந்திர மீறல்கள் பதிவாகி உள்ளன.
- கலாச்சார வெளிப்பாடுகளின் பன்முகத் தன்மை பற்றிய உடன்படிக்கையானது 2007 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- 152 நாடுகள் இந்த ஒப்பந்தத்தை அங்கீகரித்துள்ளன.
- இவற்றுள் 27% நாடுகள் மட்டுமே கலைஞர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கி உள்ளன அல்லது அவர்களை ஆதரிக்கின்றன.





## தலைமைப் பொருளாதார நிபுணர்கள் கண்ணோட்ட அறிக்கை

- இந்த அறிக்கையானது சமீபத்தில் உலகப் பொருளாதார மன்றத்தினால் வெளியிடப் பட்டது.
- இது தற்போதைய விநியோகச் சங்கிலி மாற்றங்களால் அதிகம் பயனடையக் கூடிய நாடுகளை அடையாளம் காட்டுகிறது.
- இந்தியா, வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேசியா, மெக்சிகோ, துருக்கி மற்றும் போலந்து ஆகியவை ஒரு குறிப்பிடத் தக்க பலன்களைப் பெறக்கூடிய நாடுகளின் சில பட்டியல்களில் இடம் பெற்றுள்ளன.
- 45% தலைமைப் பொருளாதார வல்லுநர்கள் 2023 ஆம் ஆண்டில் உலகளாவிய மந்தநிலை ஏற்படக் கூடும் என்று கருதுகின்றனர், ஆனால் அதே சமயம் அதே அளவு சதவீதத்தினர் அது சாத்தியமில்லை என்றும் கருதுகின்றனர்.




## உலகளாவிய உள்நாட்டு இடப்பெயர்வு பற்றிய அறிக்கை 2023

- ❖ உள்நாட்டு இடப்பெயர்வு கண்காணிப்பு மையம் என்ற அமைப்பானது இந்த வருடாந்திர அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டின் இறுதியில் உலகம் முழுவதுமான உள்நாட்டில் இடம் பெயர்ந்த நபர்களின் எண்ணிக்கை (IDPs) 71.1 மில்லியனை எட்டியுள்ளது.
- ❖ இது முந்தைய ஆண்டை விட 20 சதவீதம் அதிகரித்துள்ளது.
- ❖ இந்தியாவில் 2.5 மில்லியன் இடப்பெயர்வுகளுடன் உலகின் நான்காவது அதிக அளவில் பேரிடர் சார்ந்த இடப்பெயர்வானது பதிவாகியுள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டில், 8.16 மில்லியன் பேரிடர் சார்ந்த இடப்பெயர்வுகளுடன் உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான இடப்பெயர்வானது பாகிஸ்தானில் பதிவாகியுள்ளது.
- ❖ 5.44 மில்லியன் இடப்பெயர்வுகளுடன் பிலிப்பைன்ஸ் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ❖ 3.63 மில்லியனுடன் சீனா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- ❖ 2.4 மில்லியனுடன் நைஜீரியா ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- ❖ உக்ரைனில் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக, வேகமாக கைமாறி வரும் பகுதிகளில் இருந்து மக்கள் மீண்டும் மீண்டும் வெளியேறியதால், கிட்டத்தட்ட 17 மில்லியன் இடப் பெயர்வுகளை அது தூண்டியது.
- ❖ மோதல் மற்றும் வன்முறை நிகழ்வானது, உலகளவில் 28.3 மில்லியன் உள்நாட்டு இடப் பெயர்வுகளைத் தூண்டியது.
- ❖ பேரழிவு சார்ந்த பல இடப்பெயர்வுகளின் எண்ணிக்கையானது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட 40 சதவீதம் அதிகரித்து, 32.6 மில்லியனை எட்டியுள்ளது.





## ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் அறிக்கை : Turning off the Tap

- இந்த அறிக்கையானது: 'Turn off the Tap: உலக நாடுகள் நெகிழி மாசுபாட்டினை எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வந்து ஒரு சுழற்சிமுறைப் பொருளாதாரத்தை உருவாக்கலாம்' என்று அதிகாரப் பூர்வமாக அழைக்கப்படுகிறது.
- உலக நாடுகளின் 80% நெகிழி மாசுபாடு ஆனது 2040 ஆம் ஆண்டிற்குள் குறைக்கப்படும் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இது முதலில் சிக்கலான மற்றும் தேவையற்ற நெகிழிப் பயன்பாட்டினை குறைப்பதற்கு முன்மொழிந்தது.
- இரண்டாவதாக, இந்த நெகிழிப் பொருட்களை மறுபயன்பாடு, மறுசுழற்சி மற்றும் மறு சீரமைத்தல் / பன்முகப் படுத்துதல் ஆகிய மூன்று முக்கியமானச் சந்தைச் சார்ந்த மாற்றங்களைச் செயல்படுத்த வேண்டும்.
- பயன்படுத்தப்பட்ட நெகிழிப் பொருட்களை வழங்கிப் பணம் பெறும் திட்டங்கள், மொத்தமாக வழங்குதல், நெகிழிப் பைகளைத் திரும்பப் பெறுதல் திட்டங்கள் மற்றும் மீண்டும் நிரப்பப்படும் வகையிலான குடுவைகள் போன்ற பல விருப்பத் தேர்வுகளை வழங்குவதன் மூலம் உலக நாடுகள் மறுபயன்பாடு என்ற ஒரு கருத்தாக்கத்தினை ஊக்குவிக்கலாம்.
- இந்த முறைகள் மட்டுமே 2040 ஆம் ஆண்டிற்குள் நெகிழி மாசுபாட்டின் அளவை 30% குறைக்க முடியும்.
- மறுசுழற்சிச் செயல்முறையை மிகவும் நிலையான மற்றும் இலாபகரமான வணிக வாய்ப்பாக மாற்றுவதன் மூலம் கூடுதலாக 20% மாற்றத்தை அடைய முடியும்.




## திறன்பேசிகள் பயன்பாட்டுப் பழக்கங்களுக்கு அடிமையாதல்




- 'முதல் திறன்பேசிகளின் காலம் மற்றும் மன நலன் சார்ந்த ஒரு விளைவு' என்ற தலைப்பிலான ஆய்வறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- அமெரிக்காவில் அமைந்துள்ள சேபியன் லேப்ஸ் என்ற லாப நோக்கற்ற நிறுவனமானது இந்த ஆய்வினை மேற்கொண்டது.
- இது 40க்கும் மேற்பட்ட நாடுகளில் 14 முதல் 18 வயது வகுப்பினைச் சேர்ந்த 27,969 வயது வந்தோர் மத்தியில் நடத்தப்பட்டது.
- இந்தியாவைச் சேர்ந்த 4,000 இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்கள் இதில் பங்கு பெற்றனர்.
- 6 வயதில் திறன்பேசிக்கான அணுகலைப் பெற்ற இளம் பெண்கள் இளம் பருவத்தினர் ஆகியோரைப் போலவே அதிக உணர்ச்சிகரமான சூழல்கள் மற்றும் "மனநலம் சார்ந்த கடுமையான சவால்களை" எதிர் கொண்டதாக கூறியுள்ளனர்.
- அதே சமயம், 18 வயதிற்குப் பிறகு தனது முதல் திறன்பேசிகளைப் பெற்ற நபர்களுக்கு மன உளைச்சலை எதிர் கொண்டதற்கான வாய்ப்பானது குறைவாக உள்ளது.

## வருடாந்திர வீட்டு விலை உயர்வு

- முன்னணி உலக நகரங்கள் குறியீடு என்பது உலகளவில் 46 நகரங்களில் உள்ள முதன்மை ரகக் குடியிருப்பு விலைகளின் ஏற்ற இறக்கங்களைக் கண்காணிக்கும் ஒரு மதிப்பீட்டு அடிப்படையிலான குறியீடு ஆகும்.

- இந்த அறிக்கையினை நைட் பிராங்க் இந்தியா எனப்படுகின்ற மனை விற்பனை ஆலோசனை வழங்கீட்டு நிறுவனமானது வெளியிட்டுள்ளது.
- '2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான முன்னணி உலக நகரங்கள் குறியீடு' என்ற தலைப்பில் இந்த அறிக்கையானது வெளியிடப்பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 38வது இடத்தில் இருந்த மும்பை அதன் நிலையிலிருந்து முன்னேறியுள்ளது.
- பெங்களூரு மற்றும் புது டெல்லி ஆகிய நகரங்களும் இந்தக் குறியீட்டுத் தரவரிசையில் முன்னேறியுள்ளன.

| Rank | City | 12-month % change (Q1 2022-Q1 2023) | 3-month % change (Q4 2022-Q1 2023) |
|---|---|---|---|
| 1 | Dubai | 44.2 | -3.3 |
| 2 | Miami | 11.0% | 0.0% |
| 3 | Zurich | 9.4% | 0.7% |
| 4 | Berlin | 5.7% | 1.0% |
| 5 | Singapore | 5.5% | 1.1% |
| 6 | Mumbai | 5.5% | 0.2% |
| 7 | Edinburgh | 5.1% | -0.2% |
| 8 | Shanghai | 5.1% | 3.3% |
| 9 | Lisbon | 4.6% | 0.9% |
| 10 | Nairobi | 4.5% | 2.0% |
| 11 | Paris | 4.3% | 2.0% |
| 16 | Bengaluru | 3.0% | 0.4% |
| 22 | New Delhi | 1.2% | 0.2% |


## உலக சுகாதாரப் புள்ளிவிவரங்கள் 2023

- பெருந்தொற்று காரணமாக உலகளவில் மொத்தம் 336.8 மில்லியன் ஆயுள் ஆண்டுகள் இழக்கப் பட்டுள்ளன.
- உலகளவில், 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 14.9 மில்லியன் அதிகமான இறப்புகள் கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்டிருக்கலாம்.
- முக்கிய சுகாதார குறிகாட்டிகளில் ஒன்றான சுகாதார ரீதியான முன்னேற்றத்தில், 2015 ஆம் ஆண்டு முதல் குறிப்பிடத்தக்க அளவில் தடைப்பட்டுள்ளது
- தொற்று நோய் அல்லாத நோய்கள் (NCD) மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவற்றின் அச்சுறுத்தலையும் உலக நாடுகள் எதிர்கொண்டு வருகிறது.
- 2000 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், உலகளாவிய பேறுகால இறப்பு விகிதத்தின் வருடாந்திர குறைவு விகிதமானது (ARR) 2.7 சதவீதமாக இருந்தது.
- 3.2 சதவீதமாக இருந்த (2000-2009) பச்சிளம் குழந்தை இறப்பு விகிதத்தின் வருடாந்திர குறைவு விகிதமானது 2.2 சதவீதமாக (2010-2021) குறைந்துள்ளது.
- 2000 ஆம் ஆண்டில், உலகளாவிய மோசமான உடல்நிலை, குறைபாடு மற்றும் முன் கூட்டிய இறப்பு ஆகியவை காரணமாக இழக்கப்பட்ட ஆயுட்காலங்களில் (1.3 பில்லியன் ஆயுள்

ஆண்டுகள்) 47 சதவீத இழப்புகள் ஆனது தொற்று நோய் அல்லாத நோய்கள் காரணமாக ஏற்பட்டுள்ளன.

- 2019 ஆம் ஆண்டிற்குள், தொற்று நோய் அல்லாத நோய்கள் 63 சதவீதம் இழப்பினை (1.6 பில்லியன் ஆயுள் ஆண்டுகள்) ஏற்படுத்தியது.

## தரவு மையத்தின் காலாண்டு அறிக்கை 2023





- சர்வதேசச் சொத்து ஆலோசகரான நைட் ஃபிராங்க் என்ற நிறுவனம் டி சி பைட் என்ற நிறுவனத்துடன் இணைந்து 'தரவு மையக் காலாண்டு 2023' என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- பாங்காக், ஹாங்காங், கோலாலம்பூர், மும்பை, சியோல், ஷாங்காய், சிங்கப்பூர், சிட்னி மற்றும் டோக்கியோ போன்ற வேகமாக வளர்ந்து வரும் ஒன்பதுச் சந்தைகளின் மீது ஆசிய-பசிபிக் பொருளாதாரக் கூட்டமைப்பின் (APAC) இந்த அறிக்கை பெரும் கவனம் செலுத்துகிறது.
- ஷாங்காய், டோக்கியோ மற்றும் மும்பை ஆகியவை ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் சிறந்த தரவு மையச் சந்தைகளாக உருவெடுத்துள்ளன.
- இந்த ஆய்வின் மூலம் 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சிறந்த வளர்ச்சிக் களமாக இந்தியாவில் இருந்து மும்பை மட்டுமே உருவெடுத்துள்ளது.

## WMO அமைப்பின் இயற்கை அபாயங்கள் தொடர்பான புள்ளிவிவரங்கள்

- சமீபத்தில் உலக வானிலை அமைப்பு (WMO) நிறுவனம் வானிலை, காலநிலை மற்றும் நீர் தொடர்பான ஆபத்துகளிலிருந்து இறப்பு மற்றும் பொருளாதார இழப்புகளின் மீதான புதுப்பிக்கப் பட்டத் தரவுகளை வெளியிட்டுள்ளது.
- வங்கதேசத்தில் 1970 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டுக்கு இடையில் அதிக கால நிலை தொடர்பான உயிரிழப்புகள் ஏற்பட்டன.
- வங்கதேசத்துக்கு அடுத்தபடியாக, ஆசியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான மனித உயிரிழப்புகளை இந்தியாவும் மியான்மரும் பதிவு செய்துள்ளன.
- உலகளாவிய அளவில் 1970 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டுக்கு இடையில் 11,778 பேரழிவுகள் நிகழ்ந்துள்ளன.

- இவை அனைத்திற்கும் தீவிர வானிலை, தட்பவெப்பநிலை மற்றும் நீர் தொடர்பான நிகழ்வுகளே காரணமாக உள்ளது.
- இந்த நிகழ்வுகள் 2 மில்லியனுக்கும் அதிகமான இறப்புகளையும் $4.3 டிரில்லியன் அளவிலான பொருளாதார இழப்பையும் விளைவித்தன.
- வானிலை, தட்பவெப்பநிலை மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய வகையில் அதிக எண்ணிக்கையிலான பேரழிவுகள் ஆசியாவில் பதிவாகியுள்ளன.
- ஆசியாவிற்கு அடுத்த படியாக, இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான பேரழிவுகள் வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா மற்றும் கரீபியன் பகுதிகளை உள்ளடக்கியப் பிராந்தியத்தில் பதிவாகியுள்ளது.




## நகரங்களைத் தட்பவெப்பநிலைக்குத் தயார்படுத்துதல்

- நகரங்களைத் தட்பவெப்பநிலைக்குத் தயார்படுத்துதல் என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையினை உலக வங்கி வெளியிட்டது.
- 1970 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கு இடையில் நகரங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கை 1.19 பில்லியனில் இருந்து 4.46 பில்லியனாக அதிகரித்துள்ளது.
- உலகளாவியப் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தில் தோராயமாக 70 சதவீதத்திற்கு இவை பொறுப்பாக உள்ளது.
- வட அமெரிக்காவில் உள்ள நகரங்கள் அதிகத் தனிநபர் உமிழ்வைக் கொண்டுள்ளன.
- துணை சஹாரா ஆப்பிரிக்காவில் உள்ள நகரங்கள் சராசரியாக குறைந்தத் தனிநபர் உமிழ்வைக் கொண்டுள்ளன.
- குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் உள்ள நகரங்கள், உலகளாவிய நகர்ப்புற $CO_2$ உமிழ்வுகளில் 14 சதவீத அளவை மட்டுமே வெளியிடுகின்றன.




# மாநிலச் செய்திகள்

## ராஜஸ்தானில் புதிய வனவிலங்கு வளங்காப்பகங்கள்



- ராஜஸ்தான் மாநில வனத்துறையானது, ராஜஸ்தானின் அரிய மற்றும் அருகி வரும் நிலையிலுள்ள வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்காக வேண்டி மூன்று புதிய வளங் காப்பகங்களை அறிவித்துள்ளது.
- பாரனில் உள்ள சோர்சன், ஜோத்பூரில் உள்ள கிச்சான் மற்றும் பில்வாராவில் உள்ள ஹமிர்கர் ஆகியவை இந்தப் புதிதாக அறிவிக்கப்பட்ட மூன்று புதிய வனவிலங்கு வளங் காப்பகங்கள் ஆகும்.
- பாரனில் உள்ள சோர்சன் பகுதியின் புல்வெளிகள் கான மயில்களுக்குப் பாதுகாப்பான இடமாக இருக்கும்.
- ஜோத்பூரில் உள்ள கிச்சான் என்பது, ஆயிரக்கணக்கான வலசை செல்லும் நெட்டை கொக்குகளுக்குப் புகலிடம் வழங்குகிறது.
- கிச்சான் நெட்டை கொக்குகளுக்கான இந்தியாவின் முதல் வளங்காப்பகமாகும்.
- புதிதாக அறிவிக்கப்பட்ட இந்த மூன்று வனவிலங்கு வளங்காப்பகங்களுடன், தற்போது 26 வனவிலங்கு வளங்காப்பகங்கள் உள்ளன.

## முத்தரப்பு தீர்வுசார் ஒப்பந்தம்

- மத்திய அரசு, அசாம் மாநில அரசு மற்றும் திமாசா தேசிய விடுதலை இராணுவம் / திமாசா மக்கள் உயர்நிலைச் சபை (DNLA/DPSC) பிரதிநிதிகளுக்கு இடையேயான ஒரு முத்தரப்பு தீர்வுசார் ஒப்பந்தமானது புது டெல்லியில் கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தத்தின் விளைவாக, 168க்கும் மேற்பட்ட DNLA பிரிவினர் அரசிடம் தங்கள் ஆயுதங்களைச் சமர்ப்பித்து இயல்பு வாழ்க்கையில் இணைகின்றனர்.
- இந்த ஒப்பந்தமானது அசாமின் திமா ஹசாவ் மாவட்டத்தில் நிகழ்ந்து வந்த ஆயுதக் கிளர்ச்சிகளை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வரும்.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ், அசாம் மாநில அரசினால் திமாசா நலன்புரி சபை அமைக்கப் படும்.
- இது ஒரு சமூக, கலாச்சார மற்றும் மொழி அடையாளத்தைப் பாதுகாத்து, பிறகு அதன் வளத்தினைக் காத்து மற்றும் அதனை ஊக்குவிக்கச் செய்யும்.
- இது, அவர்களின் அரசியல், பொருளாதார மற்றும் கல்வி சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அதன் தன்னாட்சிச் சபையின் அதிகார வரம்பிற்கு வெளியே உள்ள திமாசா மக்களின் மீது விரைவான மற்றும் அதிக கவனத்துடன் கூடிய வளர்ச்சியினை உறுதி செய்வதற்கும் உதவும்.

## பெண்களுக்கான சிறப்பு விடுமுறை

- புதுச்சேரி அரசானது, மாதத்தின் மூன்று வெள்ளிக்கிழமைகளில் தனது அரசுப் பெண் ஊழியர்களுக்கு இரண்டு மணி நேரம் சிறப்பு விடுமுறை அளித்துள்ளது.
- அவர்கள் வழக்கமாக காலை 8.45 மணிக்குப் பதிலாக 10.45 மணிக்குத் தங்களது வேலையைத் தொடங்கலாம்.
- அவர்கள் பூஜை செய்வதற்கும் வீட்டு வேலைகளை நிர்வகிப்பதற்கும் உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மருத்துவமனைகள், காவல் நிலையங்கள், கல்வி நிறுவனங்கள் போன்ற நேரடி பொதுச் சேவை/அத்தியாவசியப் பணிகளில் ஈடுபடும் பெண்களுக்கு இந்த விதிமுறை பொருந்தாது.

## ODF பிளஸ் தரவரிசை

- ODF (திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத) பிளஸ் என அறிவிக்கப்பட்ட நாட்டின் முதல் மாவட்டமாக வயநாடு மாறியுள்ளது.
- ஸ்வச் பாரத் திட்டத்தின் ODF பிளஸ் தரவரிசையில் மூன்று நட்சத்திரப் பிரிவில் இது முதலிடம் பெற்றுள்ளது.
- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிராவில் உள்ள மாஞ்சேரியல் மாவட்டமும், மத்தியப் பிரதேசத்தில் உள்ள அனுபூர் மாவட்டமும் இடம் பெற்றுள்ளன.
- முன்னதாக, துப்புரவு மற்றும் கழிவு மேலாண்மைத் துறைகளில் இந்த மாவட்டம் இரண்டு தேசிய விருதுகளை வென்றுள்ளது.

## மெய்தே சமூகத்தினரின் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் அந்தஸ்து

- மெய்தே சமூகத்தின் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் (ST) அந்தஸ்துக்கான கோரிக்கை சமீபத்தில் ஒரு ஊக்கத்தைப் பெற்றது.
- மணிப்பூர் உயர் நீதிமன்றமானது, இதற்கான பரிந்துரையை அனுப்புமாறு அம்மாநில அரசுக்கு உத்தரவிட்டதையடுத்து இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகிறது.
- இந்திய அரசானது, அதன் பல்வேறு உறுதிப்பாடு மிக்க செயல் திட்டத்தின் ஒரு பெரு நோக்கத்திற்காக 'பிற்படுத்தப்பட்டச் சமூகங்களின் மூன்று பட்டியல்களைப் பேணி வருகிறது.
- அனைத்துச் சாதிகள் மற்றும் பழங்குடியினர், இந்த மூன்று பட்டியல்களில் (பட்டியலிடப் பட்டப் பழங்குடியினர், பட்டியலிடப்பட்டச் சாதியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்) ஏதேனும் ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- 1950 ஆம் ஆண்டுகளில் இந்திய அரசினால் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பட்டியல் வரையறுக்கப்பட்ட போது பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் அந்தஸ்துக்கான அளவுருக்களை மெய்தே சமூகம் பூர்த்தி செய்யவில்லை.
- மணிப்பூர் மாநிலம் மெய்தே, நாகா மற்றும் குக்கி ஆகிய மூன்று முக்கிய இனக் குழுக்களைக் கொண்டுள்ளது.
- மணிப்பூர் மாநிலத்தில் 30க்கும் மேற்பட்டச் சமூகங்கள் பட்டியலிடப்பட்டப் பழங்குடி இனத்தவராக பட்டியலிடப்பட்டுள்ளன.
- இந்த இனத்தவர்கள், 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள்தொகையில் 40.88% உள்ள குக்கி அல்லது நாகா இனக்குழுக்களைச் சேர்ந்த மக்கள் ஆவர்.
- மெய்தே இனத்தவர்கள் பெரும்பாலும் பள்ளத்தாக்குப் பகுதியில் வாழ்கின்ற நிலையில் நாகா மற்றும் குக்கி பழங்குடியினர் பள்ளத்தாக்கைச் சுற்றியுள்ள மலைப் பகுதிகளில் வாழ்கின்றனர்.

- நாகாக்கள் மற்றும் குக்கி இனத்தவரின் ஒட்டு மொத்த மக்கள்தொகையை விட மெய்தே இனத்தவரின் மக்கள் தொகை அதிகமாகும்.
- இந்தப் பள்ளத்தாக்குப் பகுதியானது, சுமார் 10% புவியியல் பரப்பளவைக் கொண்டு இருந்தாலும், அந்த மாநிலத்தின் பெரும்பான்மையான மக்கள் அங்குதான் வாழச் செய்கின்றனர்.
- அம்மாநிலச் சட்டமன்றத்திலும் மெய்தே இனத்தவர் அதிக இடம் பெற்றுள்ளனர்.
- 60 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில், 40 சட்டமன்ற உறுப்பினர்கள் பள்ளத் தாக்குப் பகுதிகளிலிருந்துத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒரு நிலையில், 20 பேர் மலைப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.
- மெய்தே இனத்தவர்கள் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப் பட்டால் மணிப்பூரில் உள்ள அனைத்துச் சமூகங்களும் பட்டியலிடப்பட்டப் பழங்குடி மக்கள் அந்தஸ்தினைப் பெறுவர்.
- பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் அரசியலமைப்பின் 342வது பிரிவின் கீழ் அறிவிக்கப் படுகின்றது.




## 355வது சட்டப்பிரிவின் செயலாக்கம்

- மணிப்பூர் மாநிலத்தின் சுராசந்த்பூர் மாவட்டத்தில் உள்ள தோர்பங் பகுதியில் அனைத்துப் பழங்குடியின மாணவர் சங்கம் (ATSUM) ஏற்பாடு செய்திருந்த 'பழங் குடியினர் ஒற்றுமை அணிவகுப்பு' நிகழ்ச்சியின் போது வன்முறை வெடித்தது.
- பழங்குடியினரல்லாத மெய்தே இனத்தவர்களுக்குப் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு எதிராக இந்தப் போராட்டம் நடைபெற்றது.
- இதன் காரணமாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 355வது சட்டப்பிரிவானது அந்த மாநிலத்தில் செயலாக்கப்பட்டுள்ளது.
- இதன் அடைப்படையில் மத்திய அரசானது, மாநில அரசிற்காக என்று ஒரு பாதுகாப்பு ஆலோசகரை நியமித்துள்ளது.


- இந்திய அரசியலமைப்பின் XVIIIவது பகுதியில் உள்ள 355வது சட்டப் பிரிவானது மிகவும் அரிதான சூழ்நிலைகளில் பயன்படுத்தப்பட வேண்டிய சில அவசரகால விதிகளைக் கொண்டுள்ளது.
- வெளிப்புறத் தாக்குதல் அல்லது உள்நாட்டுக் கலவரங்களுக்கு எதிராக மத்திய அரசு தலையிட்டு ஒரு மாநிலத்தினைப் பாதுகாப்பதற்கான அவசரகால விதிகளை இது வழங்குகிறது.
- இதன்கீழ், ஒரு மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது மத்திய அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது என்று அதில் கூறப்பட்டுள்ளது.
- உட்பகுதி அல்லது வெளிப்பகுதி சிக்கல் என எந்த வகையான அச்சுறுத்தலில் இருந்தும் ஒரு மாநிலத்தினைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க இந்த சட்டப் பிரிவு மத்திய அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது.
- நாட்டின் அமைதி மற்றும் பாதுகாப்புக்கு ஏதேனும் இடையூறு அல்லது அச்சுறுத்தல் ஏற்பட்டால், அரசாங்கம் விரைவாகவும் தீர்க்கமாகவும் செயல்படுவதை உறுதி செய்யும் வகையில் இந்த விதிமுறை வடிவமைக்கப்பட்டுள்ளது.

| ARTICLE | PROVISION |
|---|---|
| Art. 352 | Proclamation of Emergency |
| Art. 353 | Effect of Proclamation of Emergency |
| Art. 354 | Application of provisions relating to distribution of revenues while a Proclamation of Emergency is in operation |
| Art. 355 | Duty of the Union to protect states against external aggression and internal disturbance |
| Art. 356 | Provisions in case of failure of constitutional machinery in states |

## இந்தியாவின் முதல் கடலடி இரட்டைச் சுரங்கப்பாதை

- தெற்கு மும்பையில் அமைக்கப்பட்டு வரும் கடலடி இரட்டைச் சுரங்கப்பாதைகள் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் திறந்து வைக்கப்படும்.
- இது இந்தியாவின் முதல் கடலடி இரட்டைச் சுரங்கப் பாதையாக விளங்கும்.
- 12.19 மீட்டர் விட்டம் கொண்ட இந்த சுரங்கப் பாதைகள், கடல் மட்டத்திற்குக் கீழே 17-20 மீட்டர் ஆழம் வரையில் அமைக்கப் பட்டு வருகிறது.
- இதில் ஆறு சாலை கடக்கும் பாதைகள், நான்கு பாதசாரித் தளங்கள் மற்றும் இரண்டு வாகன ஓட்டி வழித் தடங்கள் இடம்பெற உள்ளன.

- ஒவ்வொரு சுரங்கப் பாதையும் சுமார் 3.2 மீட்டர் அகலமுள்ள மூன்று வழித் தடங்களைக் கொண்டிருக்கும்.
- இந்த சுரங்கப்பாதையின் அதிக ஆழமானப் பகுதியானது மலபார் மலைக்கு அருகில் 72 மீட்டர் ஆழத்தில் அமைந்துள்ளது.




## பிற்படுத்தப்பட்டச் சமுகத்தின் மீதான சமூகம் மற்றும் கல்வி நிலை மீதான கணக்கெடுப்பு

- ஒடிசா மாநிலத்தில் உள்ள இதர பிற்படுத்தப்பட்டச் சமூகத்தில் உள்ள 210 சாதிகளைச் சேர்ந்த மக்களின் சமூகம் மற்றும் கல்வி நிலையைக் கண்டறிய ஒடிசா அரசு ஒரு கணக்கெடுப்பைத் தொடங்கி உள்ளது.
- பீகாரைத் தொடர்ந்து இக்கணக்கெடுப்பை நடத்தும் இரண்டாவது மாநிலமாக ஒடிசா உள்ளது.
- ஒடிசா அரசாங்கத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டச் சமூகத்தினருக்கு என்று கல்வித் துறையில் எந்த இட ஒதுக்கீடும் இல்லை.
- மொத்த மக்கள் தொகையில் 54% உள்ள இதர பிற்படுத்தப்பட்டச் சமூகத்தினருக்கு வேலை வாய்ப்புகளில் 11% சதவீதம் இட ஒதுக்கீடு உள்ளது.

## ராஜஸ்தானின் தேகானாவில் லித்தியம் இருப்பு

- இந்தியப் புவியியல் ஆய்வு மையமானது இந்தியாவின் இரண்டாவது லித்தியம் இருப்பு மையத்தை ராஜஸ்தானின் தேகானாவில் கண்டறிந்துள்ளது.
- சமீபத்தில் ஜம்மு காஷ்மீரில் கண்டுபிடிக்கப்பட்டதை விட தேகானாவில் லித்தியம் இருப்பு அதிகமாக உள்ளது.
- ஜம்மு காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் முதல் லித்தியம் இருப்பு கண்டுபிடிக்கப் பட்டது.

- இங்கு உள்ள 5.9 மில்லியன் டன்கள் லித்தியத்தின் மதிப்பு 410 பில்லியன் டாலர் என்று அறிக்கை தெரிவிக்கிறது.
- தென் அமெரிக்காவின் லித்தியம் முக்கோண பகுதியான அர்ஜென்டினா, பொலிவியா மற்றும் சிலி ஆகிய இடங்களில் மிக அதிகமான லித்தியம் இருப்புக்கள் குவிந்துள்ளன.
- லித்தியம் சுத்திகரிப்பில் 75% சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது.






## ஒரு நிமிடப் போக்குவரத்து விளக்குத் திட்டம்

- சிம்லா காவல்துறை 'ஒரு நிமிடப் போக்குவரத்து விளக்கு' எனும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.
- தனது மாநிலத் தலைநகரை நெரிசல் இல்லாததாக மாற்றவும், பயண நேரத்தைப் பாதிக்கு மேல் குறைக்கவும், முக்கிய இடங்களில் 10 போக்குவரத்து விளக்குகளை அமைக்கவும் இத்திட்டம் முன்மொழிகிறது.
- முன்மொழியப்பட்ட இந்த அமைப்பின் கீழ் ஒவ்வொரு நிமிடமும் 40:20 மற்றும் 30:30 வினாடிகள் என்ற விகிதத்தில் போக்குவரத்து சமிக்ஞை வெளியிடப்படும்.
- இதன் பொருள், உச்சக்கட்ட நெரிசல் நேரங்களின் போது வாகனங்கள் 40 வினாடிகள் நிறுத்தப் பட்டு பிறகு அடுத்த 20 வினாடிகளுக்கு விடுவிக்கப் படும்.
- சாதாரண நேரங்களில் அவை 30 வினாடிகள் நிறுத்தப்பட்டுப் பிறகு 30 வினாடிகள் விடுவிக்கப் படும்.
- புதிய போக்குவரத்து முறையின் கீழ் வாகனங்கள் நிறுத்தப்படும் குறைந்தபட்ச தூரம் 500 மீட்டராக இருக்கும்.



## கேரளக் கல்வி நிறுவனங்களின் தரவரிசைக் கட்டமைப்பு

- கேரள மாநில அரசானது, கேரளக் கல்வி நிறுவனங்களின் தரவரிசைக் கட்டமைப்பினை (KIRF) அதிகாரப் பூர்மாக அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது தேசியக் கல்வி நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பின் (NIRF) மாதிரியாகக் கொண்டு வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இது மாநிலத்தில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தினை மதிப்பிடுவதை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கேரள மாநில உயர்கல்விச் சபையானது (KSHEC) இந்த வருடாந்திரத் தரவரிசை நடவடிக்கையினைச் செயல்படுத்துவதற்கான ஒரு முகமையாக விளங்கும்.
- ஒரு மாநிலம் சார்ந்தத் தரவரிசைக் கட்டமைப்பினை நிறுவிய இந்தியாவின் முதல் மாநிலமாக கேரள மாநிலம் மாறியுள்ளது.

## பிஹான் மேளா

- ஒடிசாவின் நயாகர் மாவட்டத்தில் உள்ள கோந்த் பழங்குடியினர், விதைத் திருவிழா எனப்படும் பிஹான் மேளாவைக் கொண்டாடுகின்றனர்.
- இது இப்பகுதியில் உள்ள விவசாயிகளால் வளர்க்கப்படும் உள்நாட்டுப் பயிர்கள் மற்றும் பயிர் வகைகளைக் கொண்டாடுவதற்கான ஒரு விழாவாகும்.
- இந்த விழாவானது நிர்மான் எனப்படும் இலாப நோக்கற்ற அமைப்பினால் தொடங்கப் பட்டது.
- இது வன உரிமைகள் மற்றும் வேளாண்-சுற்றுச்சூழல் சார்ந்த வேளாண் முறைகளில் இந்தப் பழங்குடியினருடன் இணைந்து செயல்படுகிறது.

## இந்தியாவின் முதல் பெட்டக வடிவ வாடகை வாகனச் சேவை

- இந்தியா தனது முதல் பெட்டக வடிவ வாடகை வாகன (மின்சாரத்தில் இயங்கும் ஓட்டுநரில்லா வாகனம்) சேவையினை உத்தரப் பிரதேசத்தின் ஜேவாரில் உள்ள நொய்டா சர்வதேச விமான நிலையம் மற்றும் ஃபிலிம் சிட்டி இடையே இயக்க உள்ளது.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் விரைவான, பெட்டக வடிவ வாடகை வாகனச் சேவை என்பது மிகவும் மேம்பட்ட போக்குவரத்து முறைகளில் ஒன்றாகக் கருதப் படுகிறது.
- அவை ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டும் பல்வேறு பயணிகளைக் கொண்டு செல்லும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ள தானியங்கி மகிழுந்துகள் ஆகும்.



- இவை ஒரு குறிப்பிட்ட பாதை வழியே மின்சாரம் மூலம் இயக்கப் படுகிறது.
- இவற்றிற்கான வழித்தடங்கள் என்பவை பொதுவாக சாலைப் போக்குவரத்தைத் தவிர்க்கும் விதமாக, கம்பிகளில் தனித்தனியாக உருவாக்கப் படுகின்றன.

## டவ்கி நிலம் சார்ந்த துறைமுகம்

- மேகாலயாவின் மேற்கு ஜெயிந்தியா மலைகள் மாவட்டத்தில் அமைக்கப் பட்டுள்ள நிலம் சார்ந்த துறைமுகத்தினை மத்திய உள்துறை இணையமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.
- இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகியவற்றுக்கு இடையே வணிகம் மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வங்காளதேசத்தின் சில்ஹெட் மாவட்டத்தில் அமைந்துள்ள தமாபில் இது போன்று நிலத்தில் அமைந்த துறைமுகம் ஆகும்.
- அவை இந்தியாவிற்கும் வங்காளதேசத்திற்கும் இடையே ஒரு முக்கிய வர்த்தகம் மற்றும் போக்குவரத்து மையமாக செயல்பட்டு, இரு நாடுகளுக்கிடையேயான எல்லைப் பகுதியில் சரக்குகள், மக்கள் மற்றும் வாகனங்களின் இயக்கத்தினை எளிதாக்க உதவும்.

## மாநில எந்திரனியல் கட்டமைப்பு

- தெலுங்கானா மாநில அரசானது, மாநில எந்திரனியல் கட்டமைப்பினை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இது இந்தியாவில் இது போன்ற முதல் வகையானக் கொள்கையாகும்.
- இது ஒரு நிலையான எந்திரனியல் சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதையும், இந்தத் துறையில் மாநிலத்தினை ஒரு தலைமைத்துவம் கொண்டதாக நிலை நிறுத்தச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டது.
- இது வேளாண்மை, சுகாதாரம், தொழில்துறையினை ரோபோமயமாக்கல் மற்றும் நுகர்வோர் பயன்பாடு சார்ந்த எந்திரனியல் ஆகிய நான்கு முக்கிய களங்களில் கவனம் செலுத்துகிறது.
- இந்த மாநில அரசானது, முன்னதாக தொடர்ச் சங்கிலி தொழில்நுட்பம் (2018), ஆளில்லா விமானங்கள் (2019), செயற்கை நுண்ணறிவு (2020), மேகக் கணிம ஏற்பு சார்ந்த கட்டமைப்பு (2021), மற்றும் விண்வெளித் தொழில்நுட்பம் (2022) ஆகிய முக்கிய தொழில் நுட்பப் பகுதிகளை உள்ளடக்கிய ஐந்து கட்டமைப்புகளை அறிமுகப் படுத்தியுள்ளது.

## பஞ்சாப் - நடப்பதற்கான உரிமை

- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் 'நடப்பதற்கான ஒரு உரிமையை' அமல் படுத்துவதில் பஞ்சாப் மாநிலம் முன்னணியில் உள்ளது.
- எதிர்காலத்தில் அமைக்கப்பட உள்ள சாலைகள் விரிவாக்கம் மற்றும் புதிய சாலைகள் அமைப்புப் பணிகளின் போது நடைபாதை மற்றும் சைக்கிள்களுக்காக என்று வழித் தடங்களை நிறுவச் செய்வதை இந்தியத் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் உள்பட அனைத்துச் சாலை நிர்வாக நிறுவனங்களுக்கும் அரசு கட்டாயமாக்குகிறது.
- இது பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டுபவர்கள் மத்தியில் ஏற்படும் பெரும் சாலை விபத்துக்கள் தொடர்பான இறப்புகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் இம்மாதிரியான உரிமையினை வழங்கும் முதல் மாநிலம் பஞ்சாப் ஆகும்.

## குழந்தைகளுக்கான எண்ணிம சுகாதார அட்டைகள்

- நகர்ப்புற மேம்பாட்டுத் துறை மற்றும் லக்னோ திறன்மிகு நகரம் ஆகியவை இணைந்து "பள்ளிச் சுகாதாரத் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.
- இவ்வாறாக, இந்தியாவில் இந்த மாதிரியான வசதியினை அளித்த முதல் மாநிலமாக உத்தரப் பிரதேசம் ஆகியுள்ளது.
- இந்த முதன்மைத் திட்டத்தின் கீழ், லக்னோவில் உள்ள மூன்று பள்ளிகளில் லக்னோ திறன்மிகு நகரத்தினால் பள்ளிச் சுகாதாரத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் 1765 மாநகராட்சிப் பள்ளி மாணவர்களின் ஒரு ஒட்டு மொத்த உடல் மற்றும் மன நலன் குறித்த எண்ணிம சுகாதார அறிக்கை அட்டை தயாரிக்கப்படுகிறது.
- ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு தனிப்பட்ட அடையாள குறியீடு உருவாக்கப்பட்டு, பின் அதனைப் பயன்படுத்தி குழந்தையின் பெற்றோர், பள்ளி மற்றும் நிர்வாக அதிகாரிகள் அந்த சுகாதார அட்டையைப் பதிவிறக்கம் செய்யலாம்.
- இந்த எண்ணிம சுகாதார அட்டைகளின் மேற்பட்ட ஒரு ஆய்வானது, ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படுகிறது.
- ஒரு குழந்தை நோய் காரணமாக ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால், அந்தக் குழந்தைக்கு ரூ.25,000 மதிப்பிலான உதவிகளை வழங்கும் சுகாதார அட்டை மூலம் சிகிச்சை அளிக்க முடியும்.

## நிலையான மேம்பாட்டு இலக்குகளின் உள்ளூர்மயமாக்கல் - போபால்

- மத்தியப் பிரதேசத்தில் உள்ள போபால், ஐக்கிய நாடுகள் சபையின் கட்டாய நிலையான மேம்பாட்டு இலக்குகளின் (SDG) உள்ளூர்மயமாக்கலை ஏற்றுக் கொண்ட இந்தியாவின் முதல் நகரமாக மாறியுள்ளது.
- இந்த நகரமானது உள்ளாட்சி அமைப்புகளின் திறன் மற்றும் உறுதிப்பாடுகளை வெளிப் படுத்தும் தன்னார்வ உள்ளூர் மதிப்பாய்வுகளை (VLR) மேற்கொள்ளும்.
- அந்த மாநில முதலமைச்சர் 'நடவடிக்கைகளுக்கான செயல்பாட்டு நிரல்: நிலையான நகர்ப்புற மாற்றம்' என்ற செயல்திட்டத்தினைப் போபால் நகரில் தொடங்கி வைத்தார்.



- மக்கள், கிரகம் மற்றும் செழிப்புக்கானச் செயல்திட்டமாக 17 நிலையான மேம்பாட்டு இலக்குகள் மற்றும் 169 இலக்குகளை உள்ளடக்கியச் செயல்பாட்டு நிரல் 2030 என்ற ஒரு செயல்திட்டத்தினை ஐக்கிய நாடுகள் சபை 2015 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொண்டது.

## அதிக எண்ணிக்கையிலான புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகளைக் கொண்ட இரண்டாவது மாநிலம்

- உத்தரப் பிரதேசம் தேசிய அளவில் அதிக எண்ணிக்கையிலான புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகளைக் கொண்ட இரண்டாவது மாநிலமாக மாறியுள்ளது.
- சமீபத்தில் இந்த மாநிலம் மைன்புரி தர்காஷி, மஹோபா கவுரா கல்சார்ந்த கைவினைப் பொருள் மற்றும் இருவாச்சியின் கொம்பில் செய்யப்பட்ட கைவினைப் பொருட்கள் ஆகிய மூன்று கைவினைகளுக்கானப் புவிசார் குறியீடுகளைப் பெற்றுள்ளது.
- தற்போது தமிழ்நாடு அதிகபட்சமாக 55 புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகளையும், உத்தரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகியவை முறையே 48 மற்றும் 46 புவிசார் குறியீடு பெற்றத் தயாரிப்புகளையும் கொண்டுள்ளன.
- 36 கைவினைப் பொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெற்றதையடுத்து புவிசார் குறியீடு பெற்ற கைவினைப் பொருட்களின் எண்ணிக்கையில் உத்தரப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.
- புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ள 23 கைவினைப் பொருட்களில் வாரணாசி பகுதிக்கு மட்டும் இதே வகையைச் சேர்ந்த 18 தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு வழங்கப் பட்டு உள்ளது.





## இந்தியத் தொல்லியல் துறையின் கீழ் கபிலேஸ்வரர் ஆலயம்

- ஒடிசாவின் புவனேஸ்வரில் உள்ள கபிலேஸ்வரர் ஆலயம் ஆனது, இந்தியத் தொல்லியல் துறையின் (ASI) பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் பட்டியலில் சேர்க்கப்பட உள்ளது.
- இந்த முடிவானது ஆலயக் கட்டமைப்பின் சிறந்தப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 5 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த மிகப் பழமையான கபிலேஸ்வரர் ஆலயமானது, 14 ஆம் நூற்றாண்டில் கஜபதி கபிலேந்திர தேவ் என்பவரால் புதுப்பிக்கப் பட்டது.
- கபிலேஸ்வரர் ஆலயமானது கலிங்கக் கட்டிடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## குக்கிலாந்திற்கான கோரிக்கை

- குக்கி-ஜோமி பழங்குடியினருக்கு இடையே ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு, குக்கி-ஜோமி இடத்தினைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மணிப்பூரில் தனி நிர்வாகம் வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.
- தனி நிர்வாக "குக்கிலாந்து" கோரிக்கையானது 1980 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இருந்தே முன்வைக்கப்பட்டு வருகிறது.
- அந்தக் காலகட்டத்தில் தான், குக்கி-ஜோமி கிளர்ச்சிக் குழுக்களில் முதலாவது மற்றும் பெரிய குழுவான, குக்கி தேசிய அமைப்பு (KNO) உருவானது.
- 1993 ஆம் ஆண்டு நாகா-குக்கி மோதல்களுக்குப் பிறகு தனி “குக்கிலாந்து” கோரிக்கை வலுத்தது.
- 2012 ஆம் ஆண்டில், குக்கி மாநிலக் கோரிக்கைக் குழு (KSDC) என்ற குழு குக்கிலாந்து இயக்கத்தினை அறிவித்தது.
- மணிப்பூரின் 22,000 சதுர கி.மீ. பரப்பளவில் 60%க்கும் அதிகமான 12,958 சதுர கி.மீ. பரப்பினை "குக்கி இனத்தவருக்கான குக்கிலாந்து" என குக்கி மாநிலக் கோரிக்கைக் குழு உரிமை கோரியது.




## MGNREGS தொழிலாளர்களுக்கான நல சேவை நிதி

- மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் பணி ஆற்றும் தொழிலாளர்களுக்கான நலச் சேவை நிதியை உருவாக்கிய முதல் மாநிலமாக கேரளா மாறி உள்ளது.
- அய்யன்காளி நகர்ப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டப் பணியாளர்களும் இந்த நலச் சேவை நிதியின் ஒரு பகுதியாகப் பயன் பெறுவர்.
- இது தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், மருத்துவ உதவி, அவர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவி மற்றும் இதரச் சலுகைகளை வழங்கும் நலச் சேவை நிதியாகும்.
- இது 2021 ஆம் ஆண்டு கேரள வேலைவாய்ப்பு உறுதித் திட்டத் தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் படி உருவாக்கப் பட்டுள்ளது.

- 60 வயதை நிறைவு செய்து, இந்த நிதியில் தொடர்ந்துப் பங்களிப்பினைச் செலுத்தும் தொழிலாளர்களுக்கு இந்த நிதியின் பலன்கள் வழங்கப்படும்.

## குடும்பஸ்ரீ அமைப்பின் 25வது ஆண்டு நிறைவு

- இந்தியாவின் மிகப்பெரிய சுய உதவிக் குழு வலையமைப்பான குடும்பஸ்ரீ அமைப்பின் வெள்ளி விழாவிற்கானக் கொண்டாட்டங்களைக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தொடங்கி வைத்தார்.
- அப்போதைய E.K. நாயனார் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணியின் 1996 ஆம் ஆண்டு மக்கள் திட்டப் பிரச்சாரத்திற்கு எதிராக குடும்பஸ்ரீ அமைப்பானது கேரளாவில் தொடங்கப்பட்டது.
- இது மத்திய அரசு மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி ஆகியவற்றின் நிதியுதவியை ஏற்று உள்ளாட்சித் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது.
- இது தற்போது மற்ற 13 மாநிலங்களில் பெண்கள் அதிகாரம் குறித்த சில ஆலோசனை வழங்கீட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## கர்நாடக மாநிலத்தின் புதிய முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர்

- கர்நாடகா மாநிலத்தின் 24வது முதலமைச்சராக காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் சித்தராமையா பதவியேற்றுள்ளார்.
- 2013 ஆம் ஆண்டில் தனது முதலாவது ஐந்தாண்டு காலப் பதவிக்குப் பிறகு, இரண்டாவது முறையாக அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- கர்நாடகப் பிரதேச காங்கிரஸ் குழுத் தலைவர் D.K. சிவக்குமார் துணை முதல் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

## பஹல் முன்னெடுப்பு

- உத்தரப் பிரதேச மாநில அரசானது, 'பஹல்' எனப்படும் இயங்கலை கிராமப்புறக் கல்வி முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது, இடைநிலைக் கல்வித் துறை மற்றும் கான்பூரின் இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு கூட்டாண்மை மூலம் உருவாக்கப் பட்டது
- இது இயங்கலைத் தளங்கள் மூலம் கிராமப்புறச் சமூகத்தினருக்குக் கல்வியை வழங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள 10 அரசுப் பள்ளிகளில் இந்தக் கிராமப்புற இயங்கலைக் கல்வித் திட்டம் தொடங்கப்பட்டது.

## காசியாபாத்-அலிகார் விரைவுச்சாலை (உத்தரப் பிரதேசம்)

- காசியாபாத்-அலிகார் விரைவுச்சாலையில், 100 மணி நேரம் என்ற ஒரு சாதனைப் பதிவு நேரத்தில் 100 கிலோ மீட்டர் நீளம் கொண்ட சாலை அமைக்கப்பட்டுள்ளது.
- 118 கிலோமீட்டர் நீளமுள்ள காசியாபாத்-அலிகார் NH34 விரைவுச் சாலையானது ஒரு முக்கியமான வர்த்தக இணைப்புப் பகுதியாகும்.

- குளிர்ந்த நிலையிலான செயல்முறை மேற்கொள்ளும் மைய மறுசுழற்சி ஆலை (CCPR) என்ற தொழில்நுட்பத்தைச் செயல்படுத்துவதன் மூலம் இந்த சாலைக் கட்டமைப்பானது நிலைத் தன்மை மற்றும் குறைந்த செலவிலான அதிக செயல்திறனைக் கொண்டுள்ளது.

## அதிக சர்க்கரை உற்பத்தி

TOP SUGAR PRODUCING STATES

(IN LAKH TONNES)

| YEAR (OCT-SEP) | MAHARASHTRA | UTTAR PRADESH | KARNATAKA | GUJARAT | ALL-INDIA |
|---|---|---|---|---|---|
| 2013-14 | 76.85 | 64.87 | 41.77 | 11.77 | 243.60 |
| 2014-15 | 105.07 | 71.01 | 49.35 | 11.54 | 283.13 |
| 2015-16 | 84.24 | 68.55 | 40.49 | 11.68 | 251.25 |
| 2016-17 | 42.38 | 87.73 | 21.44 | 8.85 | 202.62 |
| 2017-18 | 107.05 | 120.50 | 36.58 | 10.67 | 323.28 |
| 2018-19 | 107.21 | 118.22 | 44.29 | 11.23 | 331.62 |
| 2019-20 | 61.70 | 126.37 | 35.00 | 9.30 | 273.85 |
| 2020-21 | 106.30 | 110.59 | 44.65 | 10.50 | 311.20 |
| 2021-22* | 138.00 | 104.00 | 60.00 | 12.00 | 355.50 |

*Projected

- உத்தரப் பிரதேச மாநிலமானது நடப்பு உற்பத்திப் பருவச் சர்க்கரை உற்பத்தியில் மகாராஷ்டிராவினை முந்தியுள்ளது.
- 2022-2023 ஆம் ஆண்டில் சர்க்கரைப் பருவத்தில், உத்தரப் பிரதேச மாநிலத்தில் மேற் கொள்ளப் பட்ட மொத்தச் சர்க்கரை உற்பத்தி 107.29 லட்சம் டன்கள் ஆகும்.
- மகாராஷ்டிரா 105.30 லட்சம் டன்களை உற்பத்தி செய்தது.
- உத்தரப் பிரதேசத்தில் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப் பட்டுள்ள நிலப்பரப்பானது 28.53 லட்சம் ஹெக்டேர் ஆகும்.

## முதல் நியோ மெட்ரோ

- நாட்டின் முதல் நியோ மெட்ரோ டெஹ்ராடூனில் இரண்டு வழித் தடங்களில் தொடங்கப் பட உள்ளது.
- மேலும் ஹரித்வாரில் நாட்டின் முதல் பாட் டாக்ஸி உள்ளது.
- மேல்நிலை மின்சாரக் கடத்தியிலிருந்து ஆற்றலைப் பெறுகிற நியோ மெட்ரோ என்பது ரப்பர் டயர் அடிப்படையிலான ஒரு வெகுஜனப் போக்குவரத்து அமைப்பாகும்.
- இது ஒரு பிரத்தியேக உயரமான பாதையில் இயங்குகிறது.
- Provide on Demand (Pod) டாக்சிகள் என்பவை சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பாதையில் நகரும் வகையில் ஓட்டுநர் இல்லாத மின்சார வாகனங்கள் ஆகும்.

**PROJECT DETAILS**

| Project | Commencing year | Fare per person (in Rs) | Estimated (in Rs crore) |
|---|---|---|---|
| Dehradun Neo Metro | 2026-27 | Yet to be decided | 1,663 |
| Pod Taxi Haridwar | 2026-27 | 20 to 90 | 1,330 |
| Chandi Devi ropeway | 2025 | 155 (for one side) | 161 |
| Neelkanth | 2027 | 330 (for one side) | 466 |

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பஞ்சாப் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் பிரகாஷ் சிங் பாதல்

- ❖ பஞ்சாப் மாநிலத்தின் முன்னாள் முதல்வரும், அகாலிதளத்தின் மூத்தத் தலைவருமான பிரகாஷ் சிங் பாதல் (95 வயது) காலமானார்.
- ❖ 1970-71; 1977-80; 1997-2002 மற்றும் 2007 முதல் 2017 ஆம் ஆண்டு வரை (தொடர்ந்து இரண்டு முறை) ஆகியவை பணியாற்றிய ஆண்டுகளாக இவர் ஐந்து முறை பஞ்சாபின் முதல்வராகப் பணியாற்றியுள்ளார்.
- ❖ இந்திய அரசானது இவருக்கு 2015 ஆம் ஆண்டில் இந்தியாவின் இரண்டாவது உயரிய குடிமை விருதான பத்ம விபூஷன் விருதினை வழங்கியது.
- ❖ 1970 ஆம் ஆண்டில், அவர் அந்த காலக்கட்டத்தில் ஒரு இந்திய மாநிலத்தின் இளம் முதல்வர் என்ற பெருமையினைப் பெற்றார்.
- ❖ முதன்முதலில் 1957 ஆம் ஆண்டில் பஞ்சாப் மாநிலச் சட்டசபைக்கு உறுப்பினராக இவர் தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- ❖ அதன் பிறகு இவர் ஒன்பது முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.

## 1959 ஆம் ஆண்டு ரமோன் மகசேசே விருது

- ❖ திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா அவர்களுக்கு 64 ஆண்டுகளுக்குப் பிறகு 1959 ஆம் ஆண்டிற்கான ரமோன் மகசேசே விருது வழங்கப்பட்டது.
- ❖ தலாய் லாமா 1959 ஆம் ஆண்டில் திபெத்தை விட்டு வெளியேறி இந்தியாவில் இருந்து தஞ்சம் புகுந்தார்.
- ❖ ரமோன் மகசேசே விருதானது, "ஆசியாவின் நோபல் பரிசு" என்று அழைக்கப் படுகிறது.
- ❖ இது பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் அதிபர் ரமோன் மகசேசே அவர்களின் புகழை நிலை பெறச் செய்வதற்காக நிறுவப்பட்ட ஒரு வருடாந்திர விருது ஆகும்.
- ❖ இந்த விருதானது 1957 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிறுவப்பட்டது.

## ரணஜித் குஹா மறைவு

- வரலாற்றாசிரியர் ரணஜித் குஹா சமீபத்தில் காலமானார்.
- தெற்காசியாவில் காலனித்துவத்திற்குப் பிந்தைய வரலாற்றின் ஆய்வின் மேம்பாட்டில் அவர் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளார்.
- இவர் பணியாற்றிய “சபால்டர்ன்” (விளிம்பு நிலைப் பார்வை) என்ற பதம் ஆனது தற்போது ஊடகங்களிலும் அன்றாட வாழ்க்கையின் உரையாடல்களிலும் நன்கு அறியப் பட்ட ஒன்றாகி விட்டது.
- “சபால்டர்ன்” என்ற ஒரு சொல் இத்தாலிய மார்க்சிஸ்ட் அறிஞரான அன்டோனியோ கிராம்சியின் படைப்பிலிருந்துப் பெறப்பட்டது.

## பத்திரிகைச் சுதந்திரத்திற்கான ஐக்கிய நாடுகளின் முதன்மைப் பரிசு

- சிறையில் உள்ள மூன்று ஈரானியப் பெண் பத்திரிகையாளர்கள், பத்திரிகைச் சுதந்திரத்திற்கான ஐக்கிய நாடுகளின் முதன்மைப் பரிசிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளனர்.
- நிலூஃபர் ஹமீதி, எலாஹே முகமதி மற்றும் நர்கஸ் முகமதி ஆகியோர் அந்த மூன்று வெற்றியாளர்கள் ஆவர்.
- ஹமேதி, ஷார்க் எனப்படும் சீர்திருத்தவாத செய்தித்தாள் நிறுவனத்தில் பணி புரிகின்ற நிலையில், ஹம்-மிஹான் எனப்படுகின்ற சீர்திருத்தவாத செய்தித் தாள் நிறுவனத்தில் முகமதி பணி புரிகிறார்.
- ஈரானில் மிகத் தளர்வாக தலையங்கி அணிந்ததற்காக 22 வயது சிறுமி ஒருவர் அறநெறி காவல்துறையினரால் தாக்கப்பட்ட போது உயிரிழந்ததை நிலௌபர் ஹமேதி செய்தி ஆக வெளியிட்டார்.
- இலாஹே முகமதி அவரது இறுதிச் சடங்கு பற்றி எழுதினார்.
- நர்கேஸ் முகமதி, பல வருடங்களாகப் பத்திரிகையாளராகப் பணியாற்றியவர் மற்றும் ஈரானின் முக்கியச் செயல்பட்டாளர்களில் ஒருவர் ஆவார்.

## 50வது கேப் டு ரியோ பந்தயம்

- இந்தியக் கடற்படையின் ஒரு பாய்மரப் படகான ஐஎன்எஸ்வி தாரிணி என்ற படகு தென்னாப்பிரிக்காவின் கேப் டவுனுக்குப் பயணம் செய்யப் புறப்பட்டு உள்ளது.
- 2023 ஆம் ஆண்டுக்கான கேப் - ரியோ பந்தயத்தின் 50வது பதிப்பில் இது பங்கேற்கிறது.
- 2017 ஆம் ஆண்டு ‘நவிகா சாகர் பரிக்ரமா’ என்ற வரலாற்றுப் பயணத்தில் அனைத்துப் பெண் அதிகாரிகளுடன் உலகைச் சுற்றி வந்ததன் மூலம் ஐஎன்எஸ்வி தாரிணி மிகப் பெருவாரியாக அறியப்பட்டது.

## புலிட்சர் பரிசுகள் 2023

- போரினால் முற்றுகையிடப்பட்ட உக்ரேனிய நகரமான மரியுபோல் குறித்த பல்வேறுத் தகவல்களை போர்க்கால அடிப்படையில் வெளியிட்டதற்காகப் பொதுச் சேவைக்கான 2023 ஆம் ஆண்டின் புலிட்சர் பரிசை அசோசியேட்டட் பிரஸ் பத்திரிக்கை வென்றது.
- அமெரிக்காவினைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளர் அல்லது அமைப்பு பெறக் கூடிய மிக உயர்ந்த கௌரவமாக புலிட்சர் பரிசு கருதப்படுகிறது.

- இந்த வருடாந்திர புலிட்சர் விருதுகள் முதன்முதலில் 1917 ஆம் ஆண்டில் வழங்கப் பட்டது.
- புலிட்சர் பரிசானது புத்தகங்கள், இசை மற்றும் நாடகம் ஆகியவற்றிற்கு எட்டு முக்கியப் பிரிவுகளில் வழங்கப் படுகிறது.

| Category | Winner |
|---|---|
| Public Service | Associated Press, for the work of Mstyslav Chernov, Evgeniy Maloletka, Vasilisa Stepanenko and Lori Hinnant |
| Breaking News Reporting | Staff of the Los Angeles Times |
| Investigative Reporting | Staff of The Wall Street Journal |
| Explanatory Reporting | Caitlin Dickerson of The Atlantic |
| Local Reporting | Anna Wolfe of Mississippi Today, Ridgeland, Miss. |
| National Reporting | Caroline Kitchener of The Washington Post |
| International Reporting | Staff of The New York Times |
| Feature Writing | Eli Saslow of The Washington Post |
| Commentary | Kyle Whitmire of AL.com, Birmingham |
| Criticism | Andrea Long Chu of New York magazine |
| Editorial Writing | Nancy Ancrum, Amy Driscoll, Luisa Yanez, Isadora Rangel and Lauren Costantino of the Miami Herald |
| Illustrated Reporting and Commentary | Mona Chalabi, contributor, The New York Times |
| Breaking News Photography | Photography Staff of Associated Press |
| Feature Photography | Christina House of the Los Angeles Times |
| Audio Reporting | Staff of Gimlet Media, notably Connie Walker |

## அதிக ஊதியம் பெறும் விளையாட்டு வீரர்கள் 2023




- ஃபோர்ப்ஸ் இதழின் கூற்றுப்படி, கிறிஸ்டியானோ ரொனால்டோ உலகின் மிகவும் அதிக சம்பளம் பெறும் விளையாட்டு வீரர் என்ற பெருமைக்குரியவரானார்.
- ரொனால்டோ, லியோனல் மெஸ்ஸி, கைலியன் எம்பாப்பே, லெப்ரான் ஜேம்ஸ் மற்றும் கனெலோ அல்வாரெஸ் ஆகியோர் 2023 ஆம் ஆண்டில் மிகவும் அதிக வருமானம் ஈட்டும் விளையாட்டு வீரர்களாக மாறியுள்ளனர்.

- இவர்கள் இப்பட்டியலில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளனர்.

## ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் ராட்கிளிஃப் புத்தாய்வு அங்கத்தினர் அந்தஸ்து

- உயிரியலாளர் சத்யபாமா தாஸ் பிஜு, ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் மதிப்புமிக்க ராட்கிளிஃப் புத்தாய்வு அங்கத்தினர் அந்தஸ்திற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- அவர் 'இந்தியாவின் தவளை மனிதன்' என்று பிரபலமாக அறியப்படுகிறார்.
- மூன்று தசாப்தங்களாக நீடித்த அவரது பணியில் அவர் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இனங்களைக் கண்டுபிடித்துள்ளார்.
- 2023-24 ஆம் ஆண்டிற்கான ஹார்வர்ட் ராட்கிளிஃப் நிறுவனத்தின் புத்தாய்வு அங்கத்தினர் அந்தஸ்து பெற்ற 50 அறிஞர்களில் இந்த டெல்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியரும் ஒருவர் ஆவார்.
- அறிவியல் துறையில் அவரது சிறந்தப் பங்களிப்புகளுக்காக வேண்டி கேரள அரசால் நிறுவப்பட்ட கேரள ஸ்ரீ விருதானது சமீபத்தில் அவருக்கு வழங்கப்பட்டது.

## எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் முதல் தமிழ் பெண்

- தமிழகத்தைச் சேர்ந்த முத்தமிழ்ச் செல்வி 8,848 மீட்டர் உயரமுள்ள உலகின் மிகவும் உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் முயற்சியில் உள்ளார்.
- எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் முதல் தமிழ் பெண் இவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.
- ஏசியன் ட்ரெக்கிங் இன்டர்நேஷனல் என்ற தனியார் நிறுவனத்தின் ஒரு குழுவுடன் இணைந்து இவர் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிக் கொண்டுள்ளார்.
- எவரெஸ்ட் சிகரத்தை அடையும் தனது பயணத்தில் 7200 மீட்டர் உயரத்தினை இவர் வெற்றிகரமாக அடைந்துள்ளார்.

## அபிலாஷ் டோமி - கோல்டன் குளோப் பந்தயம்

- அபிலாஷ் டோமி கோல்டன் குளோப் பந்தயத்தில் இரண்டாவது இடத்தைப் பிடித்து உள்ளார்.
- இவர் தனியே யாருடைய உதவியுமில்லாமல் உலகம் முழுவதும் இடை நில்லாமல் சுற்றி வரும் வகையிலான சுமார் 30000 மைல் தொலைவிலான கோல்டன் உலகை சுற்றி வரும் பந்தயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார்.
- 236 நாட்களில் இதனை நிறைவு செய்த இவர், கோல்டன் குளோப் பந்தயத்தை நிறைவு செய்த முதல் இந்தியர் மற்றும் முதல் ஆசியர் என்ற பெருமையினையும் பெற்றுள்ளார்.
- இதற்கு முன்னதாக, மற்றொரு கடற்படைத் தலைவரான திலிப் டோண்ட் உதவியின்றி ஆனால் இடை நிறுத்தங்களுடன் உலகைச் சுற்றி வரும் பந்தயத்தினை நிறைவு செய்து உள்ளார்.

## ரய்யானா பர்னாவி

- ரய்யானா பர்னாவி என்ற பெண் விண்வெளிக்குச் சென்ற முதல் அரேபியப் பெண் என்ற ஒரு வரலாற்றைப் படைத்துள்ளார்.

- ஆக்சியம் ஸ்பேஸ் நிறுவனத்தின் இரண்டாவது தனியார் ஆய்வுப் பயணத்தில் இடம் பெற்றுள்ள இரண்டு சவூதி நாட்டவர்களில் இவரும் ஒருவர் ஆவார்.
- திருமதி பர்னாவி அவரது சக சவுதி ஆய்வுத் திட்ட நிபுணர் அலி அல்கர்னியுடன் இணைந்து ஆக்ஸியம் ஆய்வுத் திட்டம் 2-இல் பயணிக்க உள்ளார்.
- வளைகுடா நாட்டில் இருந்து விண்வெளிக்குச் சென்ற இரண்டாவது ஆண் விண்வெளி வீரர் இவர் ஆவார்.
- மற்ற இரண்டு விண்வெளி வீரர்கள் அமெரிக்க தளபதி பெக்கி விட்சன் மற்றும் விமானி ஜான் ஷோஃப்னர் ஆகியோர் ஆவர்.

## பிஜியின் உயரியக் குடிமை விருதுகள்

- பப்புவா நியூ கினியா, பிஜி மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதமர்களுடன் இந்தியப் பிரதமர் சந்திப்பு நடத்தினார்.
- பப்புவா நியூ கினியா சென்ற முதல் இந்தியப் பிரதமர் மோடி ஆவார்.
- பப்புவா நியூ கினியா கவர்னர் ஜெனரல் பாப் தாடே மோடிக்கு ‘கிராண்ட் கம்பேனியன் ஆஃப் ஆர்டர் ஆஃப் லோகோஹு’ என்ற விருதை வழங்கினார்.
- இது அந்த நாட்டின் ஒரு உயரியக் குடிமை விருது ஆகும் என்பதோடு இந்த விருதைப் பெறுபவர்களுக்கு "தலைவர்" என்று பட்டப் பெயர் சுட்டப்பட்டும்.

## சர்வதேச புக்கர் பரிசு 2023

- ஜார்ஜி கோஸ்போடினோவின் நாவலான "டைம் ஷெல்டர்" ஆனது 2023 ஆம் ஆண்டிற்கான சர்வதேச புக்கர் பரிசைப் பெற்று ள்ளது.
- இந்தப் புகழ்பெற்ற இலக்கிய விருதானது முதல் முறையாக ஒரு பல்கேரிய நாவலுக்கு வழங்கப்படுகிறது
- இது முதலில் 2020 ஆம் ஆண்டில் பல்கேரிய மொழியில் வெளியிடப்பட்டது.
- இது ஏஞ்சலா ரோடெல் என்பவரால் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது ஆகும்
- அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு நம்பிக்கைக்குரியச் சிகிச்சையை வழங்குவதைப் பற்றி டைம் ஷெல்டர் நாவல் குறிப்பிடுகிறது.

## ஹரி புத்த மகர்

- ஹரி புதா மகர் என்பவர், செயற்கைக் கால்களைப் பயன்படுத்தி எவரெஸ்ட் சிகரத்தை வெற்றிகரமாக ஏறி வரலாறு படைத்துள்ளார்.
- பிரிட்டிஷ் அரசின் கீழ் ஆப்கானிஸ்தானில் கூர்க்கா பணியில் ஈடுபட்டிருந்த போது அவர் தனது கால்களை இழந்தார்.
- பல்வேறு இன்னல்களைத் தொடர்ந்து கடந்த பத்தாண்டுகளில், மகர் பல குறிப்பிடத் தக்க சிகரங்களின் உச்சிகளை வெற்றிகரமாக ஏறியுள்ளார்.
- அவற்றுள் பென் நெவிஸ், பிளாங்க் சிகரம், கிளிமஞ்சாரோ, மேரா சிகரம் மற்றும் டூப்கல் சிகரம் உள்ளிட்டவை அடங்கும்.

## ஜஸ்வந்த் சிங் பேர்டி

- ஐக்கியப் பேரரசின் மேற்கு மிட்லாண்ட்ஸில் உள்ள கோவென்ட்ரி நகரமானது, அதன் புதிய லார்ட் மேயராக ஜஸ்வந்த் சிங் பேர்டியை நியமித்துள்ளது.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சீக்கிய கவுன்சிலராக பேர்டி நியமிக்கப்பட்டது, அந்த நகரத்தின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.
- பஞ்சாபில் பிறந்த அவர் மேற்கு வங்காளத்தின் கல்கத்தாவில் குழந்தைப் பருவத்தில் சில காலம் இருந்தார்.

## டாக் ஹம்மர்ஸ்க்ஜோல்ட் பதக்கம்

- ஐநா தலைமையகத்தில் நடைபெறும் ஒரு விழாவில் இந்திய அமைதிப் படை வீரர்கள் மூவருக்கு டாக் ஹம்மர்ஸ்க்ஜோல்ட் பதக்கம் வழங்கப் பட உள்ளது.
- கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படை மேற்கொண்ட பணிகளில் ஈடுபட்டிருந்த 103 இராணுவ வீரர்கள், காவல்துறை மற்றும் பொதுமக்களில் இம்மூவர் பணியின் போது உயிரிழந்தனர்.
- காங்கோவில் பணியிலிருந்த ஷிஷுபால் சிங் மற்றும் சன்வாலா ராம் விஷ்னோய் மற்றும் ஈராக் நாட்டில் பணியிலிருந்த ஷபர் தாஹர் அலி ஆகிய மூன்று இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் தலைமைக் காவலர்கள் இதில் அடங்குவர்.

## 57வது ஞானபீட விருது

- புகழ்பெற்ற கொங்கணி மொழிப் புதின எழுத்தாளரும், ஒரு சிறுகதை எழுத்தாளருமான தாமோதர் மௌசோ 57வது ஞானபீட விருதினை வென்றுள்ளார்.
- ஞானபீட விருதானது ஆண்டுதோறும் வழங்கப்படும் பழமையான மற்றும் மிக உயரிய இந்திய இலக்கிய விருது ஆகும்.
- புது தில்லியினை மையமாகக் கொண்ட ஒரு இலக்கிய மற்றும் ஆராய்ச்சி நிறுவனமான பாரதீய ஞானபீடம் என்ற அமைப்பால் இது வழங்கப் படுகின்றது.
- மௌசோ 1983 ஆம் ஆண்டில் சாகித்ய அகாடமி விருதினைப் பெற்றுள்ளார்.
- 2006 ஆம் ஆண்டில் ரவீந்திர கெலேகர் என்பவர் இந்த இலக்கிய விருதை வென்ற முதல் கொங்கணி எழுத்தாளர் என்ற பெருமையினைப் பெற்றார்.
- அசாமிய மொழி கவிஞர் நில்மணி பூகன் 56வது ஞானபீட விருதை வென்றார்.
- ஞானபீட விருதைப் பெற்ற மூன்றாவது அசாமிய எழுத்தாளர் பூகன் ஆவார்.

## கேன்ஸ் திரைப்பட விழா 2023

- 76வது ஆண்டு கேன்ஸ் திரைப்பட விழா பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற ஒரு திரைப்பட விருது விழாவாகும்.
- கேன்ஸ் விழாவில் பால்ம் டி'ஆர் விருதினைப் வென்ற ஒரு மூன்றாவது பெண்மணியாக ஜஸ்டின் ட்ரைட் மாறியுள்ளார்.
- இதில் விருது பெற்ற மற்ற நபர்களின் விவரம் பின்வருமாறு

| Category | Winner | Director |
|---|---|---|
| Palme d'Or | Anatomy Of A Fall | Justine Triet |
| Grand Prix | The Zone Of Interest | Jonathan Glazer |
| Jury Prize | Fallen Leaves | Aki Kaurismaki |
| Best Director | Tran Anh Hung for The Pot-Au-Feu | - |
| Best Screenplay | Monster | Yuji Sakamoto |
| Best Actress | Merve Dizdar | |
| Best Actor | Kōji Yakusho - Perfect Days | |
| Camera d'Or | Inside the Yellow Cocoon Shell | Thien An Pham |
| Short Film Palme d'Or | 27 | Flóra Anna Buda |
| Queer Palm | Monster | |
| Honorary Palme d'Or | Michael Douglas | |

# விளையாட்டுச் செய்திகள்

## உலக ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டி

- பெல்ஜியத்தின் லூகா ப்ரெசெல் உலக ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்ற ஐரோப்பா கண்டத்தினைச் சேர்ந்த முதல் வீரர் பெருமையினைப் பெற்றுள்ளார்.
- இவர் கனடா நாட்டினைச் சேர்ந்த கிளிஃப் தோர்பர்ன் (1980), அயர்லாந்தின் கென் டோஹெர்டி (1997) மற்றும் ஆஸ்திரேலிய நீல் ராபர்ட்சன் (2010) ஆகியோர் அடங்கிய ஒரு பட்டியலில் இணைந்துள்ளார்.
- இவர் ஐக்கியப் பேரரசினை சாராத நான்காவது நவீன கால உலகச் சாம்பியன் ஆவார்.

## மும்முறை தாண்டுதல் போட்டியில் தேசியச் சாதனை

- இந்திய வீரர் பிரவீன் சித்திரவேல் மும்முறை தாண்டுல் போட்டியில்17.37 மீட்டர் தூரம் தாண்டி புதிய தேசிய அளவிலான சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.
- இதற்கு முன்பு ஆடவர் மும்முறை தாண்டுதல் போட்டியில் 17.30 மீட்டர் தாண்டி ரெஞ்சித் மகேஸ்வரி தேசிய அளவிலான சாதனை ஒன்றைப் படைத்திருந்தார்.
- தமிழகத்தைச் சேர்ந்த 21 வயதான இவர் ஏற்கனவே 2023 ஆம் ஆண்டுக்கான ஆசிய விளையாட்டுப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

## லாரஸ் விருதுகள்

- லியோனல் மெஸ்ஸி, 2023 ஆம் ஆண்டின் லாரஸ் உலக விளையாட்டு வீரருக்கான விருதினை வென்றுள்ளார்.
- ஃபார்முலா ஒன் கார் பந்தய வீரர் லூயிஸ் ஹாமில்டனுடன் 2020 ஆம் ஆண்டின் விருதைப் பகிர்ந்து கொண்டதையடுத்து, தற்போது மெஸ்ஸி இரண்டாவது முறையாக ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரருக்கான இந்த விருதினை வென்றுள்ளார்.

- ஆன் ஃப்ரேசர்-பிரைஸ் 2023 ஆம் ஆண்டின் லாரஸ் உலக விளையாட்டு வீராங்கனை விருதினை வென்றுள்ளார்.
- இந்த விருதிற்காக ஆறாவது முறையாகப் பரிந்துரைக்கப்பட்ட இவர், முதல் முறையாக ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனை விருதினை வென்றுள்ளார்.
- எலைன் தாம்சன்-ஹேராவுக்குப் பிறகு இந்த விருதினை வென்ற ஜமைக்கா நாட்டினைச் சேர்ந்த இரண்டாவது தடகள வீரர் ஃப்ரேசர்-பிரைஸ் ஆவார்.
- சீன ஃப்ரீஸ்கியர் எலைன் கு இந்த ஆண்டின் அதிரடி விளையாட்டு வீரர் என்ற விருதினை வென்றுள்ளார்.
- ஸ்பெயின் நாட்டினைச் சேர்ந்த டென்னிஸ் வீரர் கார்லோஸ் அல்கராஸ் ஆண்டிற்கான சிறந்த திருப்புமுனை ஆட்டக்காரர் என்ற விருதை வென்றுள்ளார்.
- சுவிட்சர்லாந்து நாட்டினைச் சேர்ந்த பாராலிம்பிக் சாம்பியனான சக்கர நாற்காலிப் பந்தய வீராங்கனை கேத்தரின் டெப்ரன்னர், ஆண்டின் சிறந்த மாற்றுத் திறனாளி விளையாட்டு வீராங்கனை என்ற விருதினை வென்றுள்ளார்.

## தேசிய விளையாட்டுப் போட்டிகளில் கட்கா தற்காப்புக் கலை

- பஞ்சாபின் பாரம்பரியத் தற்காப்புக் கலையான கட்கா, 2023 ஆம் ஆண்டிற்கான 37வது தேசிய விளையாட்டுப் போட்டியில் அதிகாரப் பூர்வமாக சேர்க்கப்பட்டுள்ளது.
- கட்கா என்பது ஒரு நவீன விளையாட்டுத் துறையாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு இடையே நடத்தப்படும் ஒரு கம்புச் சண்டையின் தரமுறைப் படுத்தப்பட்ட ஒரு பாணியாகும்.
- இந்திய ஒலிம்பிக் சங்கமானது கோவாவில் நடைபெற உள்ள இந்த தேசிய நிகழ்வின் போது மொத்தம் 43 பிரிவுகளுக்கான போட்டிகளை நடத்த உள்ளது.

## ஐபிஎல் போட்டி 2023

- டாடா இந்தியன் பிரீமியர் லீக் போட்டியின் இறுதிப் போட்டியில் குஜராத் டைட்டன்ஸ் அணியை வீழ்த்தி சென்னை சூப்பர்கிங்ஸ் அணி சாம்பியன் பட்டம் வென்றது.
- இதன் மூலம் சென்னை சூப்பர்கிங்ஸ் அணி 5 சாம்பியன்ஷிப் பட்டங்களை பெற்றுள்ளது
- 2023 ஆம் ஆண்டு ஐபிஎல் போட்டித் தொடரின் மிகவும் மதிப்புமிக்க வீரராக ஷுப்மன் கில் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- அவர் 17 ஆட்டங்களில் எடுத்த 890 ரன்களுக்காக ஆரஞ்சு தொப்பி அங்கீகாரத்தினைப் பெற்றார்.
- யஷஸ்வி ஜெய்ஸ்வால் ஆண்டின் சிறந்த வளர்ந்து வரும் வீரராகத் தேர்வு செய்யப் பட்டு உள்ளார்.
- டெவோன் கான்வே ஆட்ட நாயகன் விருதை வென்றார்.
- போட்டித் தொடரின் அதிரடி ஆட்டக்காரர் (சூப்பர் ஸ்ட்ரைக்கர்) : கிளென் மேக்ஸ்வெல் (ஸ்டிரைக் ரேட் 183.49) ஆவார்.
- போட்டித் தொடரின் ஆட்டப் போக்கினை மாற்றிய வீரர்: ஷுப்மான் கில் ஆவார்.
- போட்டித் தொடரின் அற்புதமான கேட்ச்: ரஷித் கான்.
- ஊதா தொப்பி: முகமது ஷமி (28 விக்கெட்).
- நேர்மையான ஆட்டக்காரர் விருது: டெல்லி கேபிடல்ஸ் அணி.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச தொழிலாளர் தினம் – மே 01

- மே தினம் அல்லது தொழிலாளர் தினம் என்றும் அழைக்கப்படும் தொழிலாளர் தினமானது, மே 01 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது.
- இது தொழிலாளர் வர்க்கத்தின் விலைமதிப்பற்றப் பங்களிப்புகளை அங்கீகரிக்கச் செய்து அவர்களைப் பாராட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அமெரிக்காவில் தொழிலாளர் தினம் என்ற கருத்தாக்கமானது, 1886 ஆம் ஆண்டில் எட்டு மணி நேர வேலை நேரம் கோரி நடைபெற்ற நாடு தழுவிய வேலைநிறுத்தத்தினை அடுத்து முன்வைக்கப் பட்டது.
- இந்தியாவில், முதல் தொழிலாளர் தினமானது 1923 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதியன்று, மதராஸ் மாகாணத்தில் சிங்காரவேலர் என்பவரால் ஆரம்பிக்கப் பட்ட இந்துஸ்தான் தொழிலாளர் கிசான் என்ற கட்சியால் கொண்டாடப்பட்டது.

## குஜராத் மற்றும் மகாராஷ்டிரா தினம் – மே 01




- குஜராத் மாநிலமானது 1960 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதியன்று உருவாக்கப்பட்டது.
- அதே நாளில், மராத்தி மொழி பேசும் மக்களின் ஒரு கோரிக்கையை நிவர்த்தி செய்யும் வகையில் மகாராஷ்டிரா மாநிலம் உருவாக்கப்பட்டது.
- பம்பாய் மாநிலத்தில் இரண்டு மொழிவாரிக் குழுக்கள் தங்களுக்கென்று தனித்தனி மாநிலங்களைக் கோரி வந்த நிலையில் இந்த இரண்டு மாநிலங்களும் பம்பாய் மாநிலத்தில் இருந்து பிரிக்கப்பட்டன.
- இந்த மொழிவாரிக் குழுக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக, 1960 ஆம் ஆண்டு பம்பாய் மறுசீரமைப்புச் சட்டத்தின் மூலம் இந்த மாநிலங்கள் உருவாக்கப் பட்டன.

## உலக துனா மீன் தினம் – மே 02

- இந்த மீன்களின் இறைச்சிக்கான அதிகப்படியான தேவை நிலவுவதால், அழிவு நிலையை எட்டும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள துனா மீன்கள் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.
- அனைத்து கடல் மீன்வளத்தின் மதிப்பில் 20% மற்றும் உலகளவில் வர்த்தகம் செய்யப் படும் அனைத்து கடல் உணவுகளில் 8 சதவீதத்திற்கு மேலானவை துனா மீன் இனங்கள் ஆகும்.
- இதில் ஒமேகா-3, புரதங்கள், தாதுக்கள், வைட்டமின் பி12 மற்றும் இதர பல ஊட்டச் சத்துக்கள் உள்ளன.
- 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை இந்த நாளினை அறிவித்தது.




## உலக ஆஸ்துமா தினம் - மே 02

- ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தின் முதல் செவ்வாய்க் கிழமையன்று இந்தத் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- இது உலகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், சிறந்த ஆஸ்துமா மேலாண்மை மற்றும் பராமரிப்பினை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது, உலக ஆஸ்துமா முன்னெடுப்பு அமைப்பினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'அனைவருக்குமான ஆஸ்துமா பராமரிப்பு' என்பதாகும்.

## உலகப் பத்திரிகைச் சுதந்திரத் தினம் - மே 03

- இந்தத் தினமானது, பத்திரிகைச் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தையும் சமூகத்தின் சீரான மற்றும் பயன்மிகுச் செயல்பாட்டில் அதன் பங்கையும் குறிக்கிறது.
- 2023 ஆம் ஆண்டு உலகப் பத்திரிகைச் சுதந்திரத் தினமானது, இந்த தினத்தின் 30வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

- இது 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் அறிவிக்கப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உரிமைகளின் எதிர்காலத்தை மாற்றி அமைத்தல்: மற்ற அனைத்து மனித உரிமைகளுக்குமான ஓர் இயக்கியாக விளங்கும் கருத்துச் சுதந்திரம்" என்பதாகும்.

## நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் தினம் - மே 04

- நிலக்கரியைப் பிரித்தெடுப்பதில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் அயராத முயற்சிகள் மற்றும் அவர்களின் குறிப்பிடத்தக்கப் பெரும் பங்களிப்பு ஆகியவற்றை அங்கீகரித்து கௌரவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நிலக்கரிச் சுரங்கம் என்பது புவியின் கண்ட மேலோட்டின் ஆழ்பகுதியில் மேற் கொள்ளப் படும் தோண்டுதல், சுரங்கம் மற்றும் பிரித்தெடுத்தல் ஆகியவற்றை உள் அடக்கிய ஓர் அபாயகரமான மற்றும் கடினமானப் பணியாகும்.
- முதல் நிலக்கரிச் சுரங்கமானது 1575 ஆம் ஆண்டில் ஸ்காட்லாந்தில் தொடங்கப்பட்டது.
- இந்தியாவின் முதல் நிலக்கரிச் சுரங்கமானது 1774 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.




## சர்வதேச தீயணைப்பு வீரர்கள் தினம் - மே 04

- இந்தத் தினமானது, நமது சமூகங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக தங்கள் உயிரைக் கொடுத்தத் துணிவு மிக்க தீயணைப்பு வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக நாடுகளின் தீயணைப்பு வீரர்களின் தியாகம் மற்றும் துணிச்சலைப் போற்றும் வகையில் 1999 ஆம் ஆண்டில் இந்தத் தினமானது நிறுவப்பட்டது.
- காட்டுத் தீயில் உயிரிழந்த ஐந்து ஆஸ்திரேலிய தீயணைப்பு வீரர்களின் நினைவாக இந்த வருடாந்திர நினைவேந்தலானது மேற்கொள்ளப்படுகிறது.

## சர்வதேச மருத்துவத் தாதிகள் தினம் - மே 05

- இந்த நாள் மருத்துவத் தாதிகள் (தாய் சேய் செவிலியர்) செய்யும் பணிகளைப் போற்றவும், தாய்மார்கள் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றுவதில் அவர்களின் பங்கினை அங்கீகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- 1987 ஆம் ஆண்டில், நெதர்லாந்து நாட்டில் நடைபெற்ற சர்வதேச மருத்துவத் தாதிகள் கூட்டமைப்பு (ICM) மாநாட்டில் இந்தத் தினத்திற்கான கருத்தாக்கம் தோன்றியது.
- இந்தத் தினமானது முதன் முதலில் 1991 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Together again: from evidence to reality' என்பதாகும்.

## உலக கை சுகாதார தினம் - மே 05

- தொற்று பரவுவதைத் தடுப்பதிலும், நல்ல ஆரோக்கியத்தை மேம்படுத்துவதிலும் கை சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த நாளானது 2009 ஆம் ஆண்டிலிருந்து அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஒன்றாக இணைந்து, கை சுகாதாரத்தில் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தலாம்" என்பதாகும்.

## உலக கேலிச் சித்திர வரைவோர்களின் தினம் - மே 05

- 1990 ஆம் ஆண்டுகளில், தேசிய கேலிச் சித்திர வரைவோர் சங்கமானது, இந்தத் தொழில் துறையில் உள்ள ஒவ்வொரு கேலிச் சித்திர வரைவோர்களையும் கொண்டாடுவதற்காக இந்த நாளினை அறிவித்தது.
- சமுதாயத்தில் கேலிச் சித்திரங்களின் முக்கியத்துவத்தை ஊக்குவிப்பதற்காகவும், கலைத் திறன் மற்றும் வாசிப்பை ஊக்குவிப்பதற்காகவும் வேண்டி இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- 1946 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் தேசிய கேலிச் சித்திர வரைவோர் சங்கம் (NCS) நிறுவப் பட்டது.
- "தி யெல்லோ கிட்" என்ற குறும்புக்கார கேலிச் சித்திரக் கதாபாத்திரத்தின் முதல் தோற்றத்தை அங்கீகரிக்கும் விதமாக இந்தத் தேதியானது தேர்ந்தெடுக்கப் பட்டது.
- இது 1895 ஆம் ஆண்டு மே 05 ஆம் தேதியன்று நியூயார்க் வேர்ல்டு என்ற செய்தித்தாளில் வெளிவந்தது.

## உலகப் போர்த்துகீசிய மொழி தினம் - மே 05

- இத்தினமானது, போர்த்துகீசிய மொழி பேசும் நாடுகளின் சமூகத்தினால் (CPLP) 2009 ஆம் ஆண்டு மே 05 ஆம் தேதியன்று அதிகாரப் பூர்வமாக நிறுவப்பட்டது.
- இது 2000 ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோ அமைப்புடன் அலுவல்சார் கூட்டாண்மையில் உள்ள ஒரு அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- 2019 ஆம் ஆண்டில், யுனெஸ்கோ அமைப்பின் பொது மாநாட்டின் 40வது அமர்வானது இந்த நாளினை அறிவித்தது.


## கட்டுப்பாடான உணவுமுறை சர்வதேச இல்லாத தினம் - மே 06

- இந்தத் தினமானது முதன்முதலில் 1992 ஆம் ஆண்டில் மேரி எவன்ஸ் என்பவரால் தொடங்கப் பட்டது.
- உலகெங்கிலும் உள்ள ஆண்களும் பெண்களும் தங்களுக்கெனச் சொந்தமாக பல்வேறு உணவுமுறைகளை மேற்கொள்ள உதவுவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- உணவுமுறை மற்றும் உடல் பற்றிய விழிப்புணர்வு தொடர்பான பல்வேறு கடினமான பிரச்சினைகளைக் கையாள்வதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலகத் தடகள தினம் - மே 07

- முதல் உலகத் தடகள தினமானது 1996 ஆம் ஆண்டு மே 15 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது.
- ஒரு விளையாட்டாக தடகளத்தின் முக்கியத்துவத்தை ஊக்குவிக்கச் செய்வதையும், இளம் மற்றும் பள்ளி மாணவர்களைத் தடகளத்தில் ஈடுபட ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'அனைவருக்குமானத் தடகளம் - ஒரு புதிய ஆரம்பம்' என்பதாகும்.

## சர்வதேச சிறுத்தை தினம் - மே 03




- இந்தத் தினமானது, சிறுத்தைகளின் முக்கியத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வினை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிறுத்தைகள் என்பது தென்படுவதற்கு அரிதான மற்றும் இரவு நேர விலங்குகள் என்ற நிலையில், அவற்றின் அளவு மற்றும் நிறம் அதன் வாழ்விடத்தைப் பொறுத்ததாகும்.
- சிறுத்தைகள் ஆசியா, ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகள், தெற்கு ரஷ்யா மற்றும் இந்தியத் துணைக் கண்டம் ஆகிய பகுதிகளில் வாழ்கின்றன.


- இவை IUCN பட்டியலில் அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளன.
- உலகளவில் சிறுத்தைகளின் எண்ணிக்கையினை அதிகரிக்கச் செய்யவும் அவற்றினை பெருமளவில் கொண்டாடுவதற்காகவும் கேப் சிறுத்தை அறக்கட்டளை (CLT) ஆனது, அதற்காக பிரத்தியேகமாக செயல்படுகின்ற ஓர் இணைய தளத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.

## உலக செஞ்சிலுவை தினம் - மே 08

- இது ஹென்றி டுனான்ட் என்பவரின் பிறந்த நாளினைக் கொண்டாடும் விதமாக அனுசரிக்கப் படுகின்றது.
- இவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் (ICRC) நிறுவனர் ஆவார் என்பதோடு இவர் முதலாவது அமைதிக்கான நோபல் பரிசினைப் பெற்றவரும் ஆவார்.
- 1863 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண வழங்கீட்டிற்கான ஒரு சர்வதேசக் குழு நிறுவப் பட்டது.
- இது பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என அழைக்கப்பட்டது.
- 1933 ஆம் ஆண்டில் ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்ற செஞ்சிலுவைச் சங்கத்தின் 20வது சர்வதேச மாநாட்டின் போது இந்த நாள் அதிகாரப்பூர்வமாக நிறுவப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "நாம் செய்யும் அனைத்தும் #உளம் சார்ந்து மேற்கொள்ளப் படுகிறது" என்பதாகும்.

## உலக தலசீமியா தினம் - மே 08

- தலசீமியா சர்வதேசக் கூட்டமைப்பு (TIF) என்ற அமைப்பானது உலக தலசீமியா (இரத்த அழிவு சோகை) தினத்தினை அனுசரித்தது.
- பனோஸ் இங்கிலிஸோஸ் என்பவர் 1994 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான் தலசீமியா சர்வதேசக் கூட்டமைப்பினை நிறுவினார்.
- தலசீமியா என்பது ஒரு மரபுவழி நோயாகும் என்பதோடு, இந்த நிலையில் ஆக்ஸிஜனை எடுத்துச் செல்லும் ஹீமோகுளோபின் மற்றும் இரத்த சிவப்பணுக்கள் ஆனது இயல்பை விட குறைவாக இருக்கும்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'நோய் பற்றி அறிந்து கொள்ளுதல். பகிர்தல். நலசேவை' என்பதாகும்.



## வெற்றி தினம் - மே 09

- இரண்டாம் உலகப் போரில் நாஜி ஜெர்மனியை வென்றதன் ஆண்டு நிறைவினை ரஷ்யா கொண்டாடுகிறது.
- 1941-45 ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாம் உலகப் போரில் சோவியத் ஒன்றியம் செய்த மாபெரும் தியாகங்களை இந்த நாள் நினைவு கூருகிறது.
- சோவியத் அரசாங்கமானது, பெர்லின் நகரில் ஜெர்மானிய சரணடைதல் ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு 1945 ஆம் ஆண்டு மே 09 ஆம் தேதியன்று தனது வெற்றியை அறிவித்தது.

## சர்வதேச ஆர்கானியா தினம் - மே 10




- மொராக்கோ மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவை இணைந்து சர்வதேச ஆர்கானியா தினத்தினைக் கொண்டாடுகின்றன.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உள்ளூர் சமூக-பொருளாதார மேம்பாடு மற்றும் ஆர்கான் சுற்றுச்சூழல் அமைப்பின் நிலைத்தன்மை" என்பதாகும்.
- சமூக மேம்பாடு மற்றும் நிலைத்தன்மையில் ஆர்கன் மரத்தின் பங்கினை முன்னிலைப் படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கொண்டாட்டமானது, ஆர்கான் மரத்தினை அந்த நாட்டினைத் தாயகமாகக் கொண்ட ஒரு மரமாக மேம்படுத்துவதற்காக மொராக்கோ நாட்டு அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளை முன்னிலைப் படுத்துகிறது.
- ஆர்கான் மரம் சார்ந்தத் தயாரிப்புகளுக்கான உலகின் முக்கிய ஒரு ஏற்றுமதியாளராக விளங்குவதால், ஆர்கான் மரங்கள் மொராக்கோ மற்றும் மொராக்கோ கலாச்சாரத்தில் ஒரு சிறப்பு இடத்தினைப் பெற்றுள்ளன.
- மொராக்கோ நாட்டின் வருடாந்திர ஆர்கன் எண்ணெய் உற்பத்தி 4,000 முதல் 6,000 டன்கள் வரை இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பானது 2014 ஆம் ஆண்டில் மனிதகுலத்தின் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியத்தின் பிரதிநிதித்துவப் பட்டியலில் ஆர்கான் மரத்தினைச் சேர்த்தது.

## தேசிய தொழில்நுட்ப தினம் - மே 11

- 1998 ஆம் ஆண்டில் ராஜஸ்தானின் பொக்ரானில் நடத்தப்பட்ட ஆபரேஷன் சக்தி எனப்படும் வெற்றிகரமான அணுகுண்டுச் சோதனையை இந்த நாள் குறிக்கிறது.
- நாட்டின் மேம்பாட்டிற்காக வேண்டிப் பங்களிப்பு செய்த அறிவியலாளர்கள் மற்றும் பொறியாளர்களைக் கௌரவிப்பதற்கான வாய்ப்பாக இந்த நாள் விளங்குகிறது.
- பொக்ரான்-II சோதனையின் வெற்றியைத் தொடர்ந்து, 1998 ஆம் ஆண்டு மே 11 ஆம் தேதியை தேசியத் தொழில்நுட்ப தினமாக அரசாங்கம் அறிவித்தது.
- முதல் அணுகுண்டுச் சோதனையானது 1974 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடத்தப்பட்டது.
- 1998 ஆம் ஆண்டில், இந்தியா உலகின் ஆறாவது அணுசக்தி கொண்ட நாடாக மாறியது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு என்பது, 'பள்ளி முதல் புத்தொழில் நிறுவனங்கள் வரை புத்தாக்கம் படைப்பதற்காக இளம் திறன்களைத் தூண்டுதல்' என்பதாகும்.

## சர்வதேச செவிலியர் தினம் - மே 12

- சர்வதேச செவிலியர் தினமானது புளோரன்ஸ் நைட்டிங்கேல் அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- இது சுகாதாரத் துறையில் செவிலியர்களின் பங்களிப்பினை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1974 ஆம் ஆண்டில், சர்வதேச செவிலியர் சபையானது, புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்த நாளை சர்வதேச செவிலியர் தினமாகக் கொண்டாட அறிவித்தது.
- இந்த ஆண்டு சர்வதேச செவிலியர் தினத்தின் கருத்துரு, “நமது செவிலியர்கள், நமது எதிர்காலம்” என்பதாகும்.

## சர்வதேச தாவர ஆரோக்கிய தினம் - மே 12

- சர்வதேச தாவர ஆரோக்கியத் தினமானது 2022 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையினால் நிறுவப்பட்டது.
- ஜாம்பியா நாட்டினால் முன்வைக்கப்பட்ட இந்தக் கருத்தாக்கமானது, பின்னர் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு “சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான தாவர ஆரோக்கியம்” என்பதாகும்.

## உலக வலசைப் போக்குப் பறவைகள் தினம் - மே 13

- உலக வலசைப் போக்குப் பறவைகள் தினமானது தற்போது ஆண்டிற்கு இரண்டு முறை, மே மற்றும் அக்டோபர் மாதங்களின் இரண்டாவது சனிக்கிழமையன்று கொண்டாடப் படுகிறது.
- இந்நாளைக் கடைப்பிடிப்பது விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, வலசைப் போக்குப் பறவைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகிறது.

- 1993 ஆம் ஆண்டில், அமெரிக்க மீன் மற்றும் வனவிலங்குச் சேவை அமைப்பு, ஸ்மித்சோனியன் வலசைப் போக்குப் பறவை மையம் மற்றும் கார்னெல் பறவையியல் ஆய்வகம் ஆகியவை இந்த நாளைக் கொண்டாடத் தொடங்கின.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'தண்ணீர் மற்றும் வலசைப் போக்குப் பறவைகளுக்கு அதன் முக்கியத்துவம்' என்பதாகும்.
- உலகளவில், குறைந்தது 4,000 வகையான பறவைகள் வழக்கமான வலசைப் போக்கு செய்யும் பறவைகளாக உள்ள நிலையில் இது உலகின் மொத்தப் பறவைகளில் 40 சதவீதம் ஆகும்.

## சர்வதேச குடும்பங்கள் தினம் - மே 15

- குடும்பங்களின் முக்கியத்துவம் மற்றும் சமூகத்தில் அவற்றின் பங்கு பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- நமது சமூகத்தில் குடும்பங்கள் வகிக்கும் முக்கியப் பங்கை இந்த நாள் கவனம் செலுத்துவதோடு, அவை எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் முன்னிலைப் படுத்தச் செய்கிறது.
- ஐக்கிய நாடுகள் சபையானது, இந்த சர்வதேச தினத்தினை நிறுவுவதற்கான ஒரு தீர்மானத்தினை 1994 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொண்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, ‘மக்கள்தொகைப் போக்குகள் மற்றும் குடும்பங்கள்’ என்பதாகும்.

## ஐக்கிய நாடுகள் சபையின் உலக சாலைப் பாதுகாப்பு வாரம் - மே 15 முதல் 21 வரை

- ஒரு குறிப்பிட்ட சாலைப் பாதுகாப்புச் சவாலில் கவனம் செலுத்துவதற்காகவும் அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய சாலைப் பாதுகாப்பு வாரங்கள் நடத்தப்படுகின்றன.
- 2021-2030 ஆகிய ஆண்டுகளுக்கான சாலைப் பாதுகாப்பு மீதான ஒரு பத்தாண்டு நடவடிக்கை குறித்த உலகளாவியத் திட்டத்திற்கான ஆதரவினை வழங்குவதில் இவை முக்கியப் பங்காற்றுகின்றன.
- இந்த வழிகாட்டும் கட்டமைப்பானது 2030 ஆம் ஆண்டிற்குள் சாலைப் போக்குவரத்து மூலம் ஏற்படும் இறப்புகள் மற்றும் காயங்களை 50% வரையில் குறைக்கச் செய்திட செய்வதற்கான ஒரு இலட்சிய இலக்கினைப் பிரதிபலிக்கிறது.
- ஒவ்வோர் ஆண்டும் உலக சாலைகளில் ஏற்படும் சாலை விபத்துக்கள் 1.3 மில்லியன் இறப்புகளுக்கும் 50 மில்லியன் காயங்களுக்கும் வழி வகுத்தன.

## அன்னையர் தினம் - மே 15

- இது ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமையன்று கொண்டாடப் படுகிறது.
- இந்த நாள் ஆனது தாய்மார்கள் மற்றும் தாய்மையைப் போற்றுவதோடு, தாய்வழி பந்த பிணைப்புகளின் முக்கியத்துவத்தைக் கொண்டாடுகிறது.

- மேலும் இது தாய்மார்கள் மற்றும் குடும்பங்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்த கவனத்தினை ஈர்க்கும் வகையிலான அழைப்பினை விடுக்கிறது.
- தனது தாயைக் கௌரவிக்க விரும்பிய அன்னை ஜார்விஸ் என்பவரால் இந்தத் தினம் தொடங்கப்பட்டது.
- 1914 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் 28வது அதிபர், உட்ரோ வில்சன், மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையை அன்னையர் தினமாக அறிவிக்கும் பிரகடனத்தில் கையெழுத்திட்டார்.

## சர்வதேச ஒளி தினம் - மே 16

- 1960 ஆம் ஆண்டில் தியோடர் மைமன் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட முதல் லேசர் செயல்பாட்டின் வெற்றியின் நினைவாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- இத்தினமானது அறிவியல், கலாச்சாரம் மற்றும் நிலையான மேம்பாடு உள்ளிட்ட நமது வாழ்வின் பல்வேறு அம்சங்களில் ஒளியின் முக்கியத்துவத்தைக் கொண்டாடுவதற்காக யுனெஸ்கோ அமைப்பினால் நிறுவப்பட்டது.
- யுனெஸ்கோ அமைப்பின் சர்வதேச அடிப்படை அறிவியல் திட்ட அமைப்பானது ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் இந்தத் தினத்திற்கான ஒரு கொண்டாட்டத்தினை மேற் கொள்கிறது.

## அமைதியுடன் ஒன்றிணைந்து வாழ்வதற்கான சர்வதேச தினம் - மே 16

- பல்வேறு பின்னணியில் உள்ள மக்களிடையே அமைதியான சகவாழ்வு, பரஸ்பர மரியாதை மற்றும் நல்லிணக்கத்தை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதே இந்த நாளின் நோக்கமாகும்.
- 1997 ஆம் ஆண்டில், பொதுச் சபை 2000 ஆம் ஆண்டினை "அமைதிக் கலாச்சாரத்திற்கான சர்வதேச ஆண்டாக" அறிவித்தது.
- அடுத்த ஆண்டில் 2001 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை, "உலக குழந்தைகளுக்கான அமைதி மற்றும் அகிம்சை கலாச்சாரத்திற்கான ஒரு சர்வதேச தசாப்தமாக" கடைபிடிக்கப் படும் என்று அறிவித்தது.
- 1999 ஆம் ஆண்டில் அமைதிக் கலாச்சாரம் குறித்தப் பிரகடனம் மற்றும் செயல் திட்டத்தினை ஏற்றுக் கொண்ட நிகழ்வானது, நீடித்த அமைதி மற்றும் அகிம்சையின் அவசியத்தை மேலும் வலியுறுத்தியது.

## தேசிய டெங்குக் காய்ச்சல் தினம் – மே 16

- நோய்க் கடத்திகளால் பரவும் இந்த நோய் மற்றும் அதைத் தடுப்பது பற்றி ஒரு விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- டெங்கு வைரஸ் வகைகளான DENV, 1-4 குருதி நுண்ணுயிர் வகைகள் DEN-1, DEN-2, DEN-3 மற்றும் DEN-4 ஆகியவற்றினால் இந்த வைரஸ் காய்ச்சல் ஏற்படுகிறது.
- இது பெண் ஏடிஸ் எஜிப்தி என்ற கொசு கடிப்பதன் மூலம் பரவுகிறது.

- இந்தியாவில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையில் சுமார் 1,10, 473 டெங்குப் பாதிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "டெங்குவை எதிர்த்துப் போராடுதல், மற்றும் உயிர்களைக் காத்தல்" என்பதாகும்.

## ஹோமோஃபோபியா, பைபோபியா மற்றும் டிரான்ஸ்ஃபோபியா ஆகியவற்றுக்கு எதிரான சர்வதேச தினம் – மே 17

- இது LGBT உரிமை மீறல்கள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் சர்வதேச நிகழ்வுகளை ஒருங்கிணைப்பதையும், உலகளவில் LGBT உரிமைகள் சார்ந்த பணிகளில் ஆர்வத்தைத் தூண்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1990 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பின் (WHO) சர்வதேச நோய்கள் வகைப் பாடுகளில் இருந்து ஓரினச் சேர்க்கையை நீக்குவதற்கான ஒரு முடிவை நினைவு கூரும் வகையில் இந்த தேதியானது தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இந்த நாளானது, 2004 ஆம் ஆண்டில் ஒரு கருத்தாக்கமாக உருவாக்கப்பட்டது.
- 2005 ஆம் ஆண்டு மே 17 ஆம் தேதியன்று ஓர் பாலின ஈர்ப்புடையவர்கள் மீதான வெறுப்பு காட்டுதலுக்கு எதிரான முதல் சர்வதேச தினம் கொண்டாடப்பட்டதிலிருந்து ஓர் ஆண்டு காலப் பிரச்சாரம் உருவானது.

## உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் – மே 17

- இந்தத் தினமானது 1969 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் மே 17 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
- இது 1865 ஆம் ஆண்டில் சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியம் நிறுவப்பட்டதையும், முதலாவது சர்வதேச தந்தி உடன்படிக்கை கையெழுத்தானதையும் குறிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் மூலம் குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளை மேம்படுத்துதல்" என்பதாகும்.

## சர்வதேச அருங்காட்சியக தினம் – மே 18

- இந்த தினமானது, 1977 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது ஒரு சர்வதேச அருங்காட்சியகச் சமூகத்திற்கான தனித்துவமான தருணத்தைப் பிரதிபலிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அருங்காட்சியகங்கள், நிலைத் தன்மை மற்றும் நல்வாழ்வு" என்பதாகும்.

## உலக உயர் இரத்த அழுத்தம் தினம் - மே 17

- உயர் இரத்த அழுத்தத்தினை ஒரு பொது சுகாதாரப் பிரச்சினையாக முன் வைப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களில் 46% பேருக்கு இந்த நிலை பற்றியத் தகவல்கள் தெரியாது.
- உலக உயர் இரத்த அழுத்தம் தினம் ஆனது முதன்முதலில் 2005 ஆம் ஆண்டு மே 14 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- இது உலக உயர் இரத்த அழுத்தக் கழகத்தினால் அறிமுகப் படுத்தப் பட்டது ஆகும்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு என்பது, "உங்கள் இரத்த அழுத்தத்தை துல்லியமாக அளவிட்டு, அதைக் கட்டுப்படுத்தி, நீண்ட காலம் வாழ்தல்" என்பதாகும்.

## உலக எய்ட்ஸ் தடுப்பு மருந்து தினம் - மே 18

- 1997 ஆம் ஆண்டு மே 18 ஆம் தேதியன்று, அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பில் கிளிண்டன் மேரிலாந்தில் உள்ள மோர்கன் மாகாண பல்கலைக் கழகத்தில் HIV தடுப்பு மருந்து குறித்து உரை நிகழ்த்தினார்.
- அதிபரின் அந்த உரைக்கு மதிப்பளிக்கும் விதமாக, மே 18 ஆம் தேதியானது உலக எய்ட்ஸ் தடுப்பு மருந்து தினமாகக் கொண்டாடப்பட்டது.
- முதல் சர்வதேச எய்ட்ஸ் தடுப்பு மருந்துச் சோதனையானது 1997 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது.
- இந்தச் சோதனைக்கு RV144 என்று பெயரிடப்பட்டது.
- இரண்டு தடுப்பு மருந்துகளின் ஒரு கலவையான, HIV தொற்றிற்கு எதிரான முதல் தடுப்பு மருந்துச் சோதனை, HIV நோய்த் தொற்றின் அபாயத்தை 31% குறைத்தது.
- ஒரு வருடம் கழித்து 1998 ஆம் ஆண்டில் இந்த நாள் முதன்முதலில் அனுசரிக்கப் பட்டது.
- HIV தொற்றினால் இதுவரை 40.1 மில்லியன் மக்கள் உயிரிழந்துள்ளனர்.
- உலக சுகாதார அமைப்பின் பல்வேறு தரவுகளின் படி, 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 38.4 மில்லியன் மக்கள் இந்த வைரஸ் பாதிப்புடன் வாழ்கின்றனர்.

## உலகத் தேனீ தினம் - மே 20

- மக்களையும் கிரகத்தையும் ஆரோக்கியமாக வைத்திருப்பதில் தேனீக்கள் மற்றும் மகரந்தச் சேர்க்கை உயிரினங்கள் வகிக்கும் இன்றியமையாதப் பங்கு மற்றும் இன்று அவை எதிர்கொள்ளும் பல சவால்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக தேனீ தினமானது முதன் முதலில் 2018 ஆம் ஆண்டு மே மாதத்தில் அனுசரிக்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தேனீ மகரந்தச் சேர்க்கை இனங்களுக்கு உகந்த வேளாண் உற்பத்தியில் ஈடுபடுதல்" என்பதாகும்.


## உலக அளவியல் தினம் - மே 20

- இந்தத் தினமானது, 1875 ஆம் ஆண்டில் மீட்டர் ஒப்பந்தம் கையெழுத்தானதன் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

- மீட்டர் ஒப்பந்தம் என்பது பாரீஸ் நகரில் கையெழுத்தான ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "உலகளாவிய உணவு முறையை ஆதரிக்கும் அளவீடுகள்" என்பதாகும்.

## பேச்சுவார்த்தை மற்றும் மேம்பாட்டிற்கான கலாச்சார பன்முகத்தன்மைக்கான உலக தினம் - மே 21

- பேச்சுவார்த்தை, புரிதல் மற்றும் நிலையான மேம்பாட்டினை உலக அளவில் மேம்படுத்துவதில் கலாச்சாரப் பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தை இது எடுத்து உரைக்கிறது.
- 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதல் மற்றும் ஆப்கானிஸ்தானில் உள்ள பாமியான் புத்தர் சிலை அழிக்கப் பட்ட நிகழ்விற்குப் பிறகு யுனெஸ்கோ இந்த நாளினை ஏற்றுக் கொண்டது.





## சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மை தினம் - மே 22

- சர்வதேச உயிரியல் பன்முகத் தன்மைத் தினத்தைக் கொண்டாடுவதற்கான ஒரு உண்மையான தேதி டிசம்பர் 29 ஆகும்.
- 1993 ஆம் ஆண்டில் உயிரியல் பன்முகத் தன்மை தொடர்பான உடன்படிக்கையின் ஆண்டு விழாவான டிசம்பர் 29 ஆம் தேதியானது, உயிரியல் பன்முகத் தன்மைக்கான சர்வதேச தினமாக நியமிக்கப்பட்டது.
- இருப்பினும், 2000 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையினால் இந்த தேதியானது மே 22 என மாற்றப்பட்டது.
- இந்த தினமானது, பல்லுயிர்த்தன்மை தொடர்பான பிரச்சனைகள் பற்றிய புரிதலையும் விழிப்புணர்வையும் அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "ஒப்பந்தம் முதல் நடவடிக்கை வரை: பல்லுயிர்ப் பெருக்கத்தை மீண்டும் உருவாக்குதல்" என்பதாகும்.

## உலக ஆமை தினம் - மே 23

- இது கடல் ஆமைகள் மற்றும் நிலவாழ் ஆமைகள் பற்றிய கவனத்தை ஈர்ப்பது மற்றும் அவை குறித்த தகவல் பரவலை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- கடல் ஆமைகள் மற்றும் நிலவாழ் ஆமைகளுக்கான உதவி வழங்கல் மற்றும் உயிர் வாழ்விற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மக்களை ஊக்குவிக்கிறது.
- இந்த வருடாந்திரக் கொண்டாட்டமானது, அமெரிக்க நிலவாழ் ஆமை மீட்பு என்ற ஒரு அமைப்பினால் 2000 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகிறது.




## தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினம் - மே 21

- இந்த நாள் தீவிரவாதத்தினை ஒழித்து அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தச் செய்வதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது.
- முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் 1991 ஆம் ஆண்டில் இதே நாளில் தான் படுகொலை செய்யப்பட்டார்.
- இந்த ஆண்டு தீவிரவாத எதிர்ப்பு தினத்தில், ராஜீவ் காந்தியின் 32வது நினைவு தினத்தை இந்தியா நினைவு கூருகிறது.
- 40 வயதில் பதவிக்கு வந்த அவர் இந்தியாவின் இளம் பிரதமர் ஆவார்.
- இந்தத் தினமானது 1991 ஆம் ஆண்டு மே 21 ஆம் தேதியன்று அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப் பட்டது.
- 10வது உலகப் பயங்கரவாதக் குறியீட்டின் படி தீவிரவாதத்தினால் அதிகம் பாதிக்கப் பட்ட 25 நாடுகளில் இந்தியா இடம் பெற்றுள்ளது.
- உலகளவில், 2022 ஆம் ஆண்டில் தீவிரவாதத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9% குறைந்து 6,701 ஆகக் குறைந்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் 5,463 ஆக இருந்த தீவிரவாத தாக்குதல்கள் 2022 ஆம் ஆண்டில் சுமார் 28% குறைந்து 3,955 ஆக குறைந்துள்ளது.

## மகப்பேறின் போது பிறப்புறுப்பில் ஏற்படும் காயத்தினைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - மே 23

- இந்த நாள் மகப்பேறின் போது பிறப்புறுப்பில் ஏற்படும் காயம் போன்ற பல்வேறுப் பிரச்சனைகளைத் தடுப்பது மற்றும் அதற்குச் சிகிச்சை செய்வது பற்றி ஒரு விழிப்பு உணர்வைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 2003 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியமானது, 'மகப்பேறின் போது பிறப்புறுப்பில் ஏற்படும் காயத்தினைத் தடுப்பதற்கான ஒரு பிரச்சாரத்தை' தொடங்கியது.
- ஐக்கிய நாடுகள் சபையானது இந்தத் தினத்தினை 2013 ஆம் ஆண்டில் கொண்டாடத் தொடங்கியது.
- குறைந்த வருமானம் உள்ள பகுதிகளில் உள்ள பெண்களை பெருமளவில் பாதிக்கிற வகையில் மகப்பேறின் போது பிறப்புறுப்பில் ஏற்படும் ஒரு காயம் என்பது குழந்தை பிறப்பின் போது உண்டாகும் காயம் ஆகும்.




## காணாமல் போன குழந்தைகளுக்கான சர்வதேச தினம் - மே 25

- குழந்தைக் கடத்தல் பிரச்சினை தொடர்பான ஒரு கவனத்தை ஈர்ப்பது, குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்துப் பெற்றோருக்குக் கற்பிப்பது ஆகியவை இந்த நாளின் நோக்கமாகும்.
- இந்தத் தினமானது 1983 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் முதன்முறையாக அனுசரிக்கப் பட்ட நிகழ்வாக மேற்கொள்ளப்பட்டது.
- 2001 ஆம் ஆண்டில், இதே தேதியானது ஒரு சர்வதேச நிகழ்வாக அனுசரிக்கத் தொடங்கப் பட்டது.


## இந்திய காமன்வெல்த் தினம் 2023 - மே 24

- சர்வதேச காமன்வெல்த் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 13 தேதி அன்று கொண்டாடப் படுகிறது.
- ஆனால் இது இந்தியாவிலும் வேறு சில நாடுகளிலும் மே மாதம் 24 தேதி அன்று அனுசரிக்கப் படுகிறது.
- விக்டோரியா மகாராணி 1901 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் தேதி அன்று காலமானதைத் தொடர்ந்து, 1902 ஆம் ஆண்டில் காமன்வெல்த் தினம் முதன்முதலில் அவரைக் கௌரவிக்கும் விதமாகக் கொண்டாடப் பட்டது.
- இந்த முக்கியமான நாளின் முதல் நினைவு நாள் 1902 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் தேதி அன்று நடந்தது.

- இந்த ஆண்டிற்கான கருப்பொருள் "ஒரு நிலையான மற்றும் அமைதியான பொதுவான எதிர்காலத்தை உருவாக்குதல்" என்பதாகும்.


## உலக மனச்சிதைவு தினம் - மே 24

- பிரான்சு நாட்டினைச் சேர்ந்த டாக்டர் பிலிப் பினெலைக் கௌரவிக்கும் வகையில் இந்த தினம் அறிவிக்கப்பட்டது.
- இவ்வகை மனநோயாளிகளுக்கு மனிதாபிமானப் பராமரிப்பு மற்றும் சிகிச்சை அளிக்க அவர் பாடுபட்டார்.
- மனநலக் கோளாறு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஸ்கிசோஃப்ரினியா என்ற நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்தச் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு அளிக்கவும் இந்த நாள் அனுசரிக்கப்பட்டது.
- இந்த நோயானது மனிதர்களின் மன உணர்வை மாற்றி மாயத் தோற்றங்கள், சில விசித்திரமான எண்ணங்கள் மற்றும் வேறு உலகில் இருப்பது போன்ற உணர்வுக்கு வழி வகுக்கிறது.




## உலக தைராய்டு விழிப்புணர்வு தினம் - மே 25

- ஆரோக்கியமான தைராய்டு சுரப்பியைப் பராமரிப்பதன் முக்கியத்துவம் மற்றும் நல்வாழ்வில் தைராய்டு கோளாறுகளின் தாக்கம் குறித்து மக்களுக்குக் கற்பிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- செப்டம்பர் 2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐரோப்பியத் தைராய்டு சங்க (ETA) வருடாந்திரப் பொதுக் கூட்டத்தின் போது இது அதிகாரப் பூர்வமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இந்தத் தேதி 1965 ஆம் ஆண்டில் ஐரோப்பியத் தைராய்டு சங்கம் (ETA) உருவாக்கப்பட்ட நாளைக் குறிக்கிறது.




## உலக மாதவிடாய் சுகாதார தினம் 2023 - மே 28

- இந்த நாள் சிறந்த மாதவிடாய் மீதான சுகாதார நிர்வாகத்தின் ஒரு முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.
- இது 2013 ஆம் ஆண்டு ஜெர்மனியில் உள்ள வாஷ் யுனைடெட் என்ற ஒரு அரசு சாரா தொண்டு நிறுவனத்தால் தொடங்கப்பட்டது.
- இது 2014 ஆம் ஆண்டு மே மாதம் 28 தேதி அன்று முதல் முறையாக அனுசரிக்கப்பட்டது.
- இந்த வருடத்திற்கான இதன் கருப்பொருளானது 2030 ஆம் ஆண்டிற்குள் மாதவிடாய் வாழ்வை இயல்பான ஒன்றாக மாற்றுவது என்பதாகும்.

## உலகப் பட்டினி தினம் - மே 28

- இது பட்டினி தொடர்பான பிரச்சினைகள் குறித்துப் பொதுமக்களிடையே ஒரு விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2011 ஆம் ஆண்டில் பட்டினி திட்டம், உலகளாவியப் பட்டினியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு முன் முயற்சியாக உலகப் பட்டினித் தினத்தை முதன் முதலில் அறிமுகப் படுத்தியது.
- இந்த ஆண்டின் கருப்பொருள் “பசி மற்றும் வறுமைக்கான நிலையான தீர்வுகளைக் கொண்டாடுவது” என்பதாகும்.

## ஐக்கிய நாடுகளின் அமைதிப்படை வீரர்களுக்கான சர்வதேச தினம் - மே 29

- இந்த ஆண்டின் ஐநா அமைதி காப்பு வீரர்களுக்கான சர்வதேச தினம் அது தொடங்கப் பட்ட 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இது 2002 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் நிறுவப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் நடவடிக்கைகளில் பணியாற்றும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அஞ்சலி செலுத்துவது மற்றும் அமைதிக்காக உயிர் நீத்தவர்களைக் கௌரவிப்பது ஆகியவை இதன் நோக்கமாகும்.
- இந்த ஆண்டிற்கான கருப்பொருளானது 'அமைதி என்னில் இருந்து தொடங்குகிறது' என்பதாகும்.

## சர்வதேச எவரெஸ்ட் தினம் - மே 29

❖ 1953 ஆம் ஆண்டில் நியூசிலாந்தைச் சேர்ந்த சர் எட்மண்ட் ஹிலாரி மற்றும் நேபாளத்தினைச் சேர்ந்த டென்சிங் நோர்கே ஷெர்பா ஆகியோர் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் ஏறிய தினத்தினை இந்த நாள் நினைவு படுத்துகிறது.

❖ டென்சிங் நோர்கே, தனது 7வது முயற்சியில் தான் இச்சிகரத்தின் உச்சியை அடைந்தார்.

❖ இறுதியாக டென்சிங்கின் பிறந்த நாளான 1953 ஆம் ஆண்டு மே 29 ஆம் தேதியன்று எட்மண்ட் ஹிலாரி மற்றும் டென்சிங் நோர்கே ஆகிய இருவரும் இந்தச் சாதனையை நிகழ்த்தினர்.

❖ எட்மண்ட் ஹிலாரி 2008 ஆம் ஆண்டில் உயிரிழந்ததையடுத்து இந்த நாள் நிகழ்கால நடைமுறைக்கு வந்தது.

❖ நேபாள நாட்டினரால் சாகர்மாதா என்று அழைக்கப்படும் எவரெஸ்ட், பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் நில அளவையாளராக இருந்த சர் ஜார்ஜ் எவரெஸ்டின் நினைவாக இவ்வாறு பெயரிடப்பட்டது.

❖ திபெத்தில், இதற்கு சோமோலுங்மா அல்லது புனித தாய் என்று பெயர் வழங்கப் பட்டு உள்ளது.

## உலகப் புகையிலை எதிர்ப்புத் தினம் - மே 31

❖ இது புகையிலை உட்கொள்வதால் ஏற்படும் உடல்நலப் பாதிப்பு அபாயங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ 1987 ஆம் ஆண்டில் உலகச் சுகாதார அமைப்பானது, உலகளவில் இந்தத் தினத்தினை அனுசரிப்பதற்கான ஒரு தீர்மானத்தினை ஏற்றுக் கொண்டது.


❖ முதலாவது உலகப் புகையிலை எதிர்ப்புத் தினமானது 1988 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதி அன்று அனுசரிக்கப்பட்டது.

❖ 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நமக்கு தேவை உணவு, புகையிலை அல்ல" என்பதாகும்.



# இதரச் செய்திகள்

## பட்டணம் மர்மம்





- பட்டணம் தென்மேற்கு கடற்கரையில் கேரளாவின் எர்ணாகுளம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு தொல்பொருள் ஆய்வுத் தளமாகும்.
- இது முசிரிஸ் (முசிறி) எனப்படும் பண்டையத் துறைமுக நகரத்தின் ஒரு பகுதியாக வரலாற்றாசிரியர்களால் நம்பப் படுகிறது.
- இந்தியா மற்றும் மத்திய கிழக்கு, வடக்கு ஆப்பிரிக்கா மற்றும் மத்தியத் தரைக்கடல் பகுதிகளுக்கு இடையேயான வர்த்தக மற்றும் கலாச்சாரப் பரிமாற்றங்களில் பண்டைய முசிரிஸ் ஒரு முக்கியப் பங்கினை வகித்தது.
- முதலில் பழங்குடியினர் மற்றும் 'பெருங்கற்கால' (இரும்பு காலம்) மக்கள் இப்பகுதியில் வாழ்ந்ததாக அகழ்வாராய்ச்சிகள் கூறுகின்றன.
- அவர்கள் முற்கால வரலாற்றுக் காலத்தில் ஒரு ரோமானியத் தொடர்பைக் கொண்டு இருந்தனர்.
- இந்தப் பகுதியில் குறைந்தது கி.மு. 2 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து மக்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது.
- 12 பண்டைய கால எலும்புக்கூடு மாதிரிகளின் மைட்டோகாண்ட்ரியல் DNA ஆனது, தெற்காசிய மற்றும் மேற்கு யூரேசியம் சார்ந்த மரபுகள் காணப் பட்டதைக் காட்டுகிறது.
- பட்டணம் அகழ்வாராய்ச்சியில் சுமார் 45 லட்சத்துக்கும் அதிகமான சில்லுகள் (பீங்கான் துண்டுகள்) கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- மத்தியத் தரைக் கடல், நைல் நதி, செங்கடல், மேற்கு மற்றும் கிழக்கு இந்தியப் பெருங் கடல்கள் மற்றும் தென் சீனக் கடல் ஆகியவற்றின் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த தோராயமாக 1.4 லட்சம் சில்லுகள் இதில் அடங்கும்.
- சமீபத்திய கண்டுபிடிப்புகளில் பண்டைய கிரேக்க நகரமான தெபஸைப் பூர்வீகமாகக் கொண்ட இசுபிங்க்ஸின் (சிங்க உடலும் மனித தலையும் கொண்ட ஒரு உருவம்) ஒரு முத்திரையும் அடங்கும்.

- ❖ பண்டைய காலப் பட்டணத்தில் நிறுவன மயமாக்கப்பட்ட சமயம் இருந்ததற்கான எந்த ஆதாரமும் இன்று வரை கிடைக்கவில்லை.
- ❖ இந்த இரும்புக் காலம் மற்றும் பிற்கால இரும்புக் காலத் தளத்தில் பெரும்பாலும் ஆயுதங்களின் பயன்பாடும் இருந்தது இல்லை.

## ஆரோக்கியமான உணவு முறைகளில் இறைச்சி

Figure A1. Progress towards World Health Assembly global nutrition targets




- ❖ உணவு மற்றும் வேளாண் அமைப்பானது சமீபத்தில் "மேம்பட்ட ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியப் பயன்களுக்கான ஆரோக்கியமான உணவுகளில் பல்வேறு நிலம்வாழ் விலங்குகளிலிருந்து பெறப்படும் உணவின் ஒரு பங்களிப்பு" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ ஊட்டச்சத்துக் குறிகாட்டிகளின் போக்குகள், 2025 ஆம் ஆண்டிற்குள் அடைவதெற்கென உலக சுகாதார அமைப்பால் நியமிக்கப்பட்ட பல உலகளாவிய ஊட்டச்சத்து இலக்குகளை அடைவதற்கான ஒரு பாதையில் உலகம் தற்போது இல்லை என்பதைக் காட்டுகிறது.
- ❖ ஆரோக்கியமான உணவு முறைகளுக்குள், நிலவாழ் விலங்குகளிலிருந்துப் பெறப்படும் உணவினைச் சேர்ப்பது (TASF) என்பது 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய ஊட்டச் சத்து இலக்குகளை அடைவதற்கான பல முயற்சிகளுக்கு முக்கியப் பங்களிப்பினை வழங்கும்.

- புரதம், கொழுப்புகள், கார்போஹைட்ரேட்டுகள் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் போன்ற பேரூட்டச் சத்துக்களின் வளமான ஆதாரமாக நிலவாழ் விலங்குகளிலிருந்து பெறப் படும் உணவு உள்ளது.
- நிலவாழ் விலங்குகளிலிருந்துப் பெறப்படும் உணவினை உட்கொள்ளுவது இரும்பு மற்றும் வைட்டமின் A போன்றவற்றில் ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யக் கூடும்.
- உலகளவில், மொத்தக் கலோரி வழங்கீட்டில் 21 சதவீதம் ஆனது பல்வேறு நிலம்வாழ் விலங்குகளிலிருந்துப் பெறப்படும் உணவிலிருந்து பெறப்படுகிறது.
- இந்த அளவானது, ஐரோப்பாவில் (37 சதவீதம்) மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் (30 சதவீதம்) அதிகமாக உள்ளது, ஆனால் ஆப்பிரிக்காவில் இது 11 சதவீதமாக மட்டுமே உள்ளது.

## விஸ்தாரா - நிலைத்தன்மை மிக்க விமான எரிபொருள்

- ஒரு மிகப்பெரிய விமானத்தினை நீண்ட தூர விமானப் பயணத்தில் இயக்குவதற்கான நிலைத் தன்மை மிக்க ஒரு விமான எரிபொருளை (SAF) பயன்படுத்திய முதல் இந்திய விமான நிறுவனம் என்ற பெருமையை விஸ்தாரா பெற்றுள்ளது.
- விஸ்தாரா என்பது சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் மற்றும் டாடா குழுமத்தின் கூட்டு நிறுவனம் ஆகும்.
- தென் கரோலினாவின் சார்லஸ்டன் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திற்குச் சிறப்பு விமானம் இயக்கப்பட்டது.
- நிலைத்தன்மை மிக்க விமான எரிபொருள் என்பது வழக்கமான ஜெட் எரிபொருளுக்கு ஒரு தூய்மையான மாற்றாக அமையும்.
- இது எரிபொருளின் பயன்பாட்டுச் சுழற்சி முழுவதுமான கார்பன் வெளியேற்றத்தை 80 சதவீதம் வரை குறைக்கக் கூடியதாகும்.

## இங்கிலாந்தில் ப்ளியோசர் எச்சங்கள் கண்டுபிடிப்பு



- இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டுஷையரின் அபிங்டன் கவுண்டி ஹால் என்ற ஒரு அருங் காட்சியகத்தில் ப்ளியோசர் உயிரினத்தின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- முதுகுத் தண்டில் மேற்கொள்ளப்பட்ட ஊடறிதல் ஆய்வில் இந்த ஊர்வன இனமானது 9.8மீ (32அடி) மற்றும் 14.4 (47அடி) வரை நீளமாக இருப்பதாகக் கண்டறியப்பட்டது.
- ப்ளியோசர் இனங்கள் ஒரு வகை குறுகிய கழுத்து கொண்ட ப்ளேசியோசர் இனமாகும்.


- இந்தக் கடல் ஊர்வன இனங்களானது நீண்ட கழுத்து கொண்ட தங்கள் சக உயிர் இனங்களுடன் ஒப்பிடும் போது வேகமாக நீந்தும் வகையில் கட்டமைக்கப் பட்டுள்ளன.
- அவை 220 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய (ட்ரையாசிக் காலம்) மற்றும் 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய (கிரெட்டேசியஸ் காலம்) காலத்தில் வாழ்ந்தன.
- அவை பெரும்பாலும் நவீன ஐரோப்பியப் பகுதிகளை உள்ளடக்கிய வரலாற்றுக்கு முந்தைய காலகட்ட கடல்பரப்புகளில் காணப்பட்டன.

## கூகுள் கடவுக் குறியீட்டு விசைகள்

- கூகுள் தனது கணக்குகளில் உள்நுழைவதற்கான கடவுச் சொல்லுக்கான ஒரு மாற்றாக கடவுக் குறியீட்டு விசைகளை வெளியிடத் தொடங்கியுள்ளது.
- பல்வேறு செயலிகள் மற்றும் இணையதளங்களில் உள்நுழைவதற்கான எளிய மற்றும் பாதுகாப்பான வழியாகக் கடவுக் குறியீட்டு விசைகள் கருதப்படுவதோடு, மேலும் இது பயனரின் உயிரியளவுக் கூறுகளைச் சார்ந்துள்ளது.
- வெவ்வேறு இணைய தளங்களுக்கான நீண்ட கடவுச் சொற்களை இனிமேல் நினைவில் வைத்திருக்க வேண்டிய ஒரு அவசியமில்லை என்பதால், கடவுக் குறியீட்டு விசைகள் பயனர்களுக்கு இடையூறு இல்லாத உள்நுழைவு அனுபவத்தை வழங்குகின்றன.
- கடவுச்சொற்களைப் போலன்றி, கடவுக் குறியீட்டு விசைகள் தகவல் திருடும் நிரல்கள் போன்ற இயங்கலைத் தாக்குதல்களுக்கு எதிராக அதிக எதிர்ப்புத் திறன் கொண்டவை ஆகும்.

## ஆசியாவின் முதல் ஆழ்கடல் ஆய்வுக் கூடம்

- புனேவில் உள்ள மகாராஷ்ட்ரா தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் உலக அமைதி பல்கலைக் கழகமானது (WPU) ஆசியாவிலேயே முதன்முறையாக கடலுக்கு அடியில் ஒரு ஆராய்ச்சிக் கூடத்தை உருவாக்கியுள்ளது.
- இது உலக நாடுகளின் எண்ணெய் மற்றும் எரிவாயுத் தொழில்துறையில் பல்துறைத் திறன்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆழ்கடல் கடல்சார் பெட்ரோலிய நடவடிக்கைகளின் ஒரு செயல்முறை முன்மாதிரியை காட்சிப் படுத்தச் செய்கின்ற இந்த ஆய்வகம் எதிர்காலத் தொழிலாளர்களை எரிசக்தித் துறையில் பயிற்றுவிக்கும் விதத்தில் புரட்சியை ஏற்படுத்துகிறது.



## 5,000 ஆண்டுகள் பழமையான ‘பழம்பெரும் முது’ மரங்கள்

- தெற்கு சிலியில் உள்ள ஒரு காட்டில், ஒரு பெரிய மரம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உயிர் வாழ்ந்து வருகிறது.
- இந்த மரமானது, "பழம்பெரும் முதுமரம்" என்று அழைக்கப்படுகிறது.
- ஃபிட்ஸ்ரோயா கப்ரெசோய்ட்ஸ் எனப்படும் இந்த மரம் தென் அமெரிக்கக் கண்டத்தின் தெற்குப் பகுதிகளில் உள்ள ஒரு வகை சைப்ரஸ் மரமாகும்.
- இந்த மரத்தின் தண்டு நான்கு மீட்டர் (13 அடி) விட்டம் மற்றும் 28 மீட்டர் உயரம் கொண்டது.
- பிரித்தெடுக்கப்பட்ட மாதிரி மற்றும் பிற கால கணிப்பு முறைகளானது, இந்த மரம் 5,484 ஆண்டுகள் பழமையானது என்று கூறுகின்றன.
- இதன் மதிப்பிடப்பட்ட வயதானது, அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள 4,853 ஆண்டுகள் பழமையான ப்ரிஸ்டில்கோன் பைன் மரமான மெதுசெலஹாவை விட 500 ஆண்டுகளுக்கும் மேலான ஆண்டுகள் வித்தியாசத்தில் அதன் தற்போதைய ஒரு சாதனையை முறியடிக்கிறது.



## இந்தியாவின் அதி உயர் நிகர சொத்து மதிப்பு கொண்ட தனி நபர்கள்

- நைட் ஃபிராங் அமைப்பின் சமீபத்திய அறிக்கையானது, இந்தியாவின் அதி உயர் நிகர சொத்து மதிப்பு கொண்ட தனி நபர்களின் (UHNWI) எண்ணிக்கையில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்படும் என்று குறிப்பிடுகிறது.
- 30 மில்லியனைத் தாண்டிய நிகரச் சொத்து மதிப்பு கொண்ட அதி உயர் நிகரச் சொத்து மதிப்பு கொண்ட தனிநபர்களின் 58.4% அதிகரிப்பினை இந்த ஆய்வு மேற்கோளிட்டுக் குறிப்பிடுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் 161 நபர்களாக இருந்த இந்தியாவின் பில்லியனர்களின் எண்ணிக்கையானது 2027 ஆம் ஆண்டில் 195 நபர்களாக உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில் 12,069 ஆக இருந்த அதி உயர் நிகரச் சொத்து மதிப்பு கொண்ட தனி நபர்களின் எண்ணிக்கையானது 2027 ஆம் ஆண்டில் 19,119 ஆக உயரும்.




## ஓநாய்-நாய் கலப்பினம்

- ❖ நாட்டில் ஓநாய்-நாய் கலப்பினத்திற்கான முதல் ஆதாரத்தினை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ❖ இவற்றின் முடி மாதிரிகள் டிஎன்ஏவைப் பிரித்தெடுக்கப்பதற்காக பயன்படுத்தப்பட்டு, அதன் வகையாக்கம், அடையாளம் காணல், ஆவணமாக்கல் மற்றும் பிற அறிவியல் நெறிமுறைகளுக்காவும் செயலாக்கப்பட்டன.
- ❖ இந்த ஆய்வின் முடிவுகள் ஒரு F2 கலப்பினத்தின் முதல் மரபணு ஆதாரத்தை வழங்கச் செய்வதோடு (F1 கலப்பினத்திலிருந்து வந்த சந்ததிகள்), மற்றவை நாய்கள் மற்றும் ஓநாய்களுக்கு இடையேயான ஒரு சிக்கலான கலப்பினமாக இருக்கலாம் என்று கருதப் படுகின்றன.
- ❖ உடற்கூறாக்கம் சாராத வகையில் பெறப்பட்ட மாதிரிகளுக்கான அடுத்தத் தலைமுறை மரபணுப் பிரித்தெடுத்தல் (NGS) முறையின் திறனைக் கலப்பினங்களைக் கண்டறியச் செய்வதற்கான ஒரு திறன்மிக்க கருவியாக இந்த முடிவுகள் குறிப்பிடுகின்றன.



## திப்பு சுல்தானின் வாள் ஏலம்

- லண்டனில் நடந்த ஏலத்தில் 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மைசூர் ஆட்சியாளரான திப்பு சுல்தானின் வாள் 14 மில்லியன் பவுண்டு விலைக்கு ($17.4 மில்லியன் அல்லது ₹ 140 கோடி) விற்கப்பட்டது.
- திப்பு சுல்தான் புகழுக்குக் காரணம் அவர் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடந்த போர்களில் பெற்ற வெற்றியாகும்.
- 1775 ஆம் ஆண்டு மற்றும் 1779 ஆம் ஆண்டு ஆகியவற்றுக்கு இடையில் பல முறை மராட்டியர்களுக்கு எதிராக இவர் போரிட்டார்.
- இந்த வாள் திப்பு சுல்தானின் அரண்மனையில் ஒரு தனிப்பட்டத் தங்கும் பகுதியில் இருந்து கண்டெடுக்கப் பட்டது.
- திப்பு சுல்தான் தனது அரசை மிகவும் தைரியமாகப் பாதுகாத்ததால் அவருக்கு "மைசூர் புலி" என்று பட்டப் பெயர் அவருக்கு வழங்கப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★